# புதுமலர்

புதுமலர் பதிப்பகம்
ஈரோடு

| | | |
|---|---|---|
| **புதுமலர் - 4** | | அக்டோபர் - திசம்பர் 2023<br>திருவள்ளுவர் ஆண்டு 2054 |
| ஆசிரியர் | : | **கண.குறிஞ்சி** |
| இதழ் முகவரி : | : | 6, முதல் வீதி, சக்தி நகர் மேற்கு,<br>திண்டல் (அஞ்சல்), ஈரோடு 638 012. |
| இதழ் தொடர்பு எண் | : | **94433 07681** |
| மின்னஞ்சல் | : | gana.kurinji@gmail.com |
| வடிவமைப்பு | : | புதுமலர் |
| தனி இதழ் | : | ரூ. 100 |
| ஆண்டுக் கட்டணம் | : | ரூ. 400 |
| மூன்றாண்டுக் கட்டணம் | : | ரூ. 1000 |
| புரவலர் கட்டணம் | : | ரூ. 5000 |


இதழுக்கான கட்டணம் அனுப்பியவர்கள் உரிய தொகை அனுப்பிய பிறகு, மறவாமல் கீழ்க்காணும் தொடர்பு எண் மூலம் அதன் விவரத்தைத் தெரிவிக்குமாறு கனிவுடன் வேண்டுகிறோம் இல்லாவிடின், இதழை அனுப்புவதில் சிரமம் ஏற்படும்.

**புலனம் (வாட்ஸ்அப்) மூலம் தகவல் தெரிவிப்பதை உறுதியாகத் தவிர்க்கவும்**

ஆண்டுக்கட்டணம் குறித்துத்தகவல் தெரிவிக்க வேண்டிய தொடர்பு எண்: 94433 07681

**முன் அட்டையில் உள்ள கவிஞர் தமிழ்ஒளி ஓவியத்தை வரைந்து உதவிய ஓவியர் இனிய நண்பர் சுந்தரன் அவர்களுக்கு மிக்க நன்றி**

புதுமலர் இதழுக்கு ஆண்டுக் கட்டணம் செலுத்த வேண்டிய வங்கிக் கணக்கு விவரம்

G. SHANMUGA SUNDARAM

INDIAN BANK, THINDAL BRANCH, ERODE

S/B A/C no. 7390 144 253 IFSC NO. IDIB000T202

**G Pay – 94433 07681 – G. Shanmuga Sundaram**

# உள்ளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| (1) | இதழின் குரல் | 04 |
| (2) | பேராசிரியர். வீ. அரசு பேட்டி | 08 |
| (3) | தமிழ்ஒளி நூல் பட்டியல் | 28 |
| (4) | தோழர் தமிழ்ஒளி: காலமும் கருத்தும் - **பேராசிரியர். வீ. அரசு** | 29 |
| (5) | தமிழ்ஒளியின் தாகமும் தவிப்பும் - **ஈரோடு தமிழன்பன்** | 56 |
| (6) | புதுமைத் தமிழ்ஒளி பொதுமைச் செவ்வொளி! - **தோழர். தியாகு** | 59 |
| (7) | கவிஞர் தமிழ்ஒளியின் சிறுகதைகள் - **ச. தமிழ்ச்செல்வன்** | 67 |
| (8) | தமிழ்ஒளியின் கட்டுரை இலக்கியம் - ஒரு பார்வை - **பேராசிரியர் க. பஞ்சாங்கம்** | 75 |
| (9) | கவிஞர் தமிழ்ஒளி: சமூகப் பார்வையின் பரிணாமம் - **மயிலைபாலு** | 81 |
| (10) | கவிஞர் தமிழ்ஒளியின் தோழமைக்கட்டளை - **பு.பா. பிரின்சு கஜேந்திரபாபு** | 88 |
| (11) | கவிஞர் தமிழ்ஒளியின் கருத்துலகம் - **கண. குறிஞ்சி** | 91 |
| (12) | இடதுசாரி திராவிட தமிழியக்க முன்னோடி கவிஞர் தமிழ்ஒளி - **ஜமாலன்** | 107 |
| (13) | தமிழ்ச் சமூகம் குறித்த தமிழ்ஒளியின் பார்வை - **சதீஷ்குமார்** | 127 |
| (14) | உங்கள் மனஓசை | 133 |
| (15) | புத்தகப் பேழை | 135 |
| (16) | புதுமலர் இதழுக்கு ஆதரவு நல்கியோர் | 136 |

# இதழின் குரல்

காலவெள்ளத்தில் நமது தொடர்பு எல்லைக்கு அப்பால் போய்விட்ட கவிஞர் தமிழ்ஒளியின் ( 1924-1965 ) நினைவைப் போற்றும் வகையில் புதுமலர் இதழ், கவிஞரின் சிறப்பிதழாகத் தற்பொழுது மலர்கிறது. வாழ்நாள் முழுவதும் மக்களுக்காகச் சிந்தித்து, செயலாற்றி வந்த ஓர் அற்புதக் கவிஞனுக்குக் கிடைத்திருக்க வேண்டிய மதிப்பு, அங்கீகாரம் அவரது வாழ்நாளிலும், அதற்குப் பிறகும் கிடைக்காமல் போனது வரலாற்றுச் சோகம்.

இருப்பினும், கவிஞர் தமிழ்ஒளியின் முக்கியத்துவத்தை உணர்ந்து அவரைத் தமிழ்ச் சமுதாயத்திற்கு அடையாளம் காட்டி, அவரது நூற்றாண்டு விழாவைச் சிறப்புறக் கொண்டாடி வரும் **தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கவிஞர்கள் சங்கம்** மிகுந்த பாராட்டிற்கு உரியது.

கவிதை, சிறுகதை, குறுநாவல், காவியம், ஓரங்க நாடகம், மேடை நாடகம், இலக்கிய ஆய்வு, சிறுவர் பாடல்கள், உருவகக் கதைகள், குழந்தைகளுக்கான குட்டிக் கதைகள், விமர்சனக் கட்டுரைகள் என இலக்கியத்தின் அனைத்துக் கூறுகளிலும் தனது படைப்பு முத்திரையைப் பதித்துச் சென்ற மாபெரும் இலக்கிய ஆசான் தமிழ்ஒளி அவர்கள்.

பாரதி, பாரதிதாசன் ஆகிய இருவரது கவிதைகளால் கவரப்பட்ட தமிழ் ஒளி, அவர்களது வழித்தோன்றலாக விளங்கினார். பாவேந்தர் பாரதிதாசன் அவர்களிடம் நேரடியாகப் பழகி, அவரது கவிதைச் சிறப்பை விதந்தோதியவர். "உயிரில் உணர்வில் கலந்த கவிஞன் என்/ உயிரில் உயிர் கொண்டு உலவுகின்றான்! வெறும்/ துயரில் நான் மூழ்கிக் கிடக்கவில்லை அவன்/ தொண்டு சிறந்திடத் தொண்டு செய்வேன்!" என அவரைப் பற்றிய கவிதையில் தனது திசைவழியைப் பறை சாற்றியவன்.

மிக எளிய குடும்பத்தில் பிறந்து, போதிய வருவாய் இல்லாத வாழ்க்கையில் வருந்தி, பிறரைச் சார்ந்தே வாழ வேண்டிய சித்திரவதைக்கு உள்ளாகி மறைந்த தமிழ் ஒளியின் வாழ்வு, ஒரு துன்பியல் காவியமாகும். கரந்தைத் தமிழ்க் கல்லூரியில் "தாழ்த்தப்பட்ட சாதிக்காரர்" எனச் சக மாணவர்களால் இழிவு படுத்தப்பட்டு, அதன் விளைவாக ஏற்பட்ட மன உளைச்சலில் கல்வியையும் துறக்க நேர்ந்தது.

தமிழ்ஒளி எழுத்தையே நம்பி வாழ முயன்றார். அந்த நம்பிக்கை, எவ்வளவு கொடூரமாக அவரைப் பழிவாங்கியது என்பது சமகால வரலாறு. "தமிழ்நாட்டில் எழுத்தை நம்பி வாழ்வது, தற்கொலைக்கு இணையானது" எனும் புதுமைப்பித்தனின் கூற்றுக்குத் தமிழ்ஒளியின் வாழ்வே மிகச்சிறந்த சான்று. இதே போன்றுதான் எழுத்தாளர் பிரபஞ் சனும் குறிப்பிட்டார். மூன்று வேளை உணவுக்கு உத்தரவாதம் இருந்திருந்தால், இன்னும் சில நல்ல படைப்புக்களைத் தன்னால் படைத்திருக்க முடியும் என்ற பிரபஞ்சனின் கூற்று நம்மை இன்றளவும் வாட்டுகிறது.

திரைப்படத்திற்குச் சென்ற ஒருசில தமிழ்ப் படைப்பாளிகளைத் தவிரப் பொருளாதார வகையில் தமிழ் எழுத்தாளர்கள் நிலை இன்னும் சொல்லிக் கொள்ளும் வகையில் முன்னேற்றம் அடையவில்லை என்பதுதான் மெய்நடப்பாக உள்ளது.

" இருவேறு உலகத்து இயற்கை திருவேறு / தெள்ளியராதலும் வேறு" என வள்ளுவர் காலத்திலிருந்து, அறிவுக்கும் செல்வத்திற்கும் இடையிலான இந்த ஒவ்வாமை, இன்றும் தொடர்கிறது. எனவேதான் எழுத்தை முழு நேரமாக வரித்துக் கொள்ளாமல், பகுதி நேர வேலையாக வைத்துக் கொள்ளும் புத்திசாலித்தனமான வழிமுறையை எழுத்து உலகில் இன்று பலரும் மேற்கொண்டுள்ளனர்.

நிரந்தர வேலை இல்லாத கவிஞர் தமிழ் ஒளிக்கு அந்த வாய்ப்பும் இல்லாமல் போனது மிகவும் கொடுமையானதாகும். எவ்வளவு ஏழ்மை நிலையில் உழன்றாலும், வறுமை வாட்டினாலும், பொதுவுடைமை எனும் அவரது உயிர்க் கொள்கையினின்றும் அவர் சற்றும் பிறழ்ந்திடவில்லை; சமரசம் செய்து கொள்ளவில்லை என்பதே அவரது வாழ்வு நமக்குத் தரும் செய்தியாகும்.


பொதுவுடைமை, சமூகநீதி, தமிழியம், சாதி ஒழிப்பு, தேசிய இனங்களின் இறையாண்மை, வல்லரசிய எதிர்ப்பு என இன்று பேசு பொருளாக இருக்கும் கருத்தாக்கங்களை அவர் பல்லாண்டுகளுக்கு முன்பே தொலைநோக்கோடு சிந்தித்துச் செயல்பட்டுள்ளார் என்பது அவர் மீதான நமது மதிப்பை மென்மேலும் உயர்த்துகிறது.

இத்தகைய மாபெரும் படைப்பாளியின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும் வகையில் தமிழ்நாடு அரசு சில அறிவிப்புகளை வெளியிட்டுள்ளது. கவிஞர் தமிழ் ஒளி அவர்களுக்குத் தஞ் சாவூரிலுள்ள தமிழ்ப் பல்கலைக்கழகத்தில், தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பில், மார்பளவு சிலை அமைக்கப்படும் எனவும், பள்ளி மாணவர்களின் தமிழ் ஆர்வத்தினை ஊக்குவிக்கும் வகையில் 50 இலட்சம் ரூபாய் வங்கியில் வைப்புத் தொகையாகச் செலுத்தி, அதனால் கிடைக்கப் பெறும் வட்டித் தொகையிலிருந்து ஆண்டுதோறும் தமிழ் வளர்ச்சித் துறையின் மூலம் தமிழ் சார்ந்த போட்டிகள் நடத்திக் கவிஞர் தமிழ்ஒளி பெயரில் பரிசுகள் வழங்கப்படும் எனவும் வெளியாகியுள்ள தமிழ்நாடு அரசின் அறிவிப்பு போற்றத் தக்கது.

இதற்கிடையில் கவிஞர் தமிழ் ஒளியின் படைப்புகள் நாட்டுடைமை ஆக்கப்பட வேண்டும் எனப் பலரும் வலியுறுத்தி வருகின்றனர். அது நல்ல பரிந்துரைதான்.

அதைக் காட்டிலும், **தமிழ்நாடு பாடநூல் கழகம்** சார்பாகத் தமிழ்ஒளியின் படைப்புகளைச் சிறந்த முறையில் அச்சிட்டு, மிக மலிவான விலைக்குத் தமிழக அரசே மக்களிடம் கொண்டு செல்வது மேலும் சிறப்பாக இருக்கும் எனத் தோன்றுகிறது. தமிழக அரசு இதைக் கருத்தில் கொள்ள வேண்டும் எனவும் வேண்டுகிறோம்.

இத்தருணத்தில் கவிஞர் தமிழ்ஒளி அவர்களோடு பழகி, வாழ்நாள் முழுவதும் அவருக்கு உறுதுணையாக இருந்து, தனது புகழ் புத்தகாலயம் மூலம் அவரது படைப்புக்களை அச்சிட்டு, கவிஞரின் புகழ் பரப்பிய பெருமதிப்பிற்குரிய **செ.து. சஞ்சீவி** ( 17/10/1929 20/05/2023) அவர்களுக்குத் தமிழ் கூர் நல்லுலகு பெரிதும் கடமைப் பட்டுள்ளது.



சஞ்சீவி அவர்கள் இல்லை என்றால், இன்று தமிழ்ஒளி காணாமல் போயிருப்பார் என்பது மறுக்க முடியாத உண்மை.

எட்டாவது வகுப்பு வரை மட்டுமே படித்த

சஞ்சீவி அவர்கள், பெரியாரின் கொள்கைகளாலும், பொதுவுடைமைத் தத்துவத்தாலும் ஈர்க்கப்பட்டவர். புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் கவிதைகள் மூலம் பெரிதும் கவரப்பட்டவர். அவர் வழி கவிஞர் தமிழ்ஒளி அறிமுகமாகி, தமிழ்ஒளியின் புகழ் பரப்புவதையே தன் வாழ்நாள் பணியாக ஆக்கிக் கொண்டவர். தமிழ் ஒளி அவர்கள் மறைந்த பொழுது அவரது கவிதைகள் முழுத் தொகுப்பாக வெளியாகி இருக்கவில்லை. சஞ்சீவி அவர்கள்தான்

"தமிழ்ஒளி கவிதைகள்" என முதல் தொகுப்பையும், அவரது கவிதைகளின் இரண்டாவது தொகுப்பையும் அச்சிட்டு வெளி யிட்டார். கவிஞரின் படைப்புகளை ஏறக்குறைய 13 தொகுப்புகளாக வெளிக் கொண்டு வந்தார்.

புதுச்சேரி முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கம் மற்றும் கலை இலக்கிய பெருமன்றம் ஆகியவற்றின் உறுதுணையோடு கவிஞரின் பிறந்தநாள் / நினைவு நாள் ஆகியவற்றை ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடி வந்தார். புதுச்சேரி முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கத்தின் உதவியுடன் தமிழ் ஒளி அவர்களின் பிறந்தநாளை அரசு விழாவாக நடத்த வழி வகுத்தார். அது இன்றுவரை ஆண்டுதோறும் தொடர்வது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்.

**"தமிழ் ஒளி கவிதையும் வாழ்வும்",**

**"தமிழறிஞர் பார்வையில் தமிழ்ஒளி"** ( தொகுப்பு நூல்)

இந்திய இலக்கியச் சிற்பிகள் வரிசையில் **"தமிழ்ஒளி"** பற்றிய நூல் (சாகித்திய அகாதமி)

**"தமிழ்ஒளி காவியங்கள்"** ஓர் அறிமுகம்,

**"தமிழ்ஒளி நினைவாகச் சில பதிவுகள்"**

ஆகிய நூல்களை எழுதி, தமிழ் ஒளியின் முழுமையான பரிமாணத்தை வெளிக் கொணர்ந்தார்.

சில ஆண்டுகளுக்கு முன் நான் அவரைத் தேடிச்சென்று அவரது இல்லத்தில் சந்தித்த பொழுது, கவிஞர் தமிழ்ஒளி பற்றியே அவரது பேச்சு மையங்கொண்டிருந்தது. அவரிடமிருந்து விடைபெறும்பொழுது, தமிழ்ஒளியின் சில நூல்களைப் பரிசாக அளித்து வழி அனுப்பினார். இதுதான் பெரியவர் சஞ்சீவி அவர்களின் பாணி.

தமிழ்ஒளி படைப்புக்களின் பல்வேறு கூறுகளை வெளிச்சமிட்டுக் காட்டும் சில கட்டுரைகள், தமிழ்ஒளி குறித்த இச்சிறப்பிதழில் வெளியாகி உள்ளன. இவை போதாது. இன்னும், இன்னும் நுணுக்கமாகக் கவிஞர் தமிழ் ஒளியைப் பயின்று, தமிழ்ஒளியைக் கொண்டாட வேண்டியது தமிழ் மக்களின் வரலாற்றுக் கடமையாகும்.

**கண. குறிஞ்சி**

செப்டம்பர், 2023

❖❖❖

**இடமின்மை காரணமாகக் கவிஞர் தமிழ்ஒளி குறித்த சில கட்டுரைகள் அடுத்த புதுமலர் இதழில் வெளியாகும்**

## சிறப்புப் பேட்டி

# பேராசிரியர். வீ. அரசு

**கண.குறிஞ்சி - உங்களது இளமைப் பருவம் / கல்வி/ குடும்பம் பற்றிக் குறிப்பிடவும்.**

**வீ.அரசு** - தஞ்சாவூர் மாவட்டம் வடக்கூர் என்னும் சிற்றூரில் சிறு விவசாயி குடும்பத்தில் பிறந்த முதல் தலைமுறைப் பட்டதாரி நான். தந்தை அடிப்படையான கல்வியறிவு பெற்றவர். பொதுநல ஈடுபாடு உடையவர். எனது கல்விப் பட்டங்களை தஞ்சையின் அருகிலுள்ள பூண்டி குப்பம் கல்லூரியில் முடித்தேன். ஆய்வுப் பட்டங்களை சென்னை பச்சையப்பன் கல்லூரியிலும், உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்திலும் முடித்தேன். 1985 முதல் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத் துறையில் ஆசிரியராகப் பணியாற்றி 2014இல் பணி நிறைவு பெற்றேன். எனது வாழ்க்கை இணையர் **அ.மங்கை**யும் நானும் சாதி மறுப்பு காதல் திருமணம் செய்துகொண்டோம். அவர் மொழி பெயர்ப்பாளராகவும் நாடக இயக்குனராகவும் செயல்பட்டு வரும் ஆங்கிலப் பேராசிரியர். பாலினச் சமத்துவத்திற்கான அரசியல் போராட்டத்தில் அவர் பல்வேறு நிலைகளிலும் செயல்பட்டு வருகிறார். **மகள் பொன்னி** பால் புதுமையர் (queer) கருத்து நிலை சார்ந்துசெயல்படுபவர். இலங்கை மட்டக்களப்பில் போரால் பாதிக்கப்பட்ட பெண்களுடன் பணியாற்றி வருகிறார். அவர்களுக்கான ஆளுமைப் பயிற்சி அளித்து வருகிறார். அவர் ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் முதுகலை வரலாறு, பெங்களூரில் சட்டப் பயில்வு மற்றும் டொரோண்டோ (கனடா) பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றுள்ளார். **மகன் சிபி** இதழியல் துறையில் செயல்பட்டு வருகிறார். சுற்றுச் சூழல் இதழியல் ஈடுபாடு கொண்டவர். அசாமியப் பழங்குடியினப் பெண்ணைத் தனது வாழ்க்கைத் துணையாகக் கொண்டுள்ளார். அசோசியேட் பிரஸ் நிறுவனத்தில் தற்போது வேலை செய்கிறார். எங்கள் குடும்பம் சாதி மறுத்த வாழ்வு முறையைக் கொண்டுள்ள குடும்பமாகும்.

● **- சென்னைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றிய பொழுது நீங்கள் மேற்கொண்ட தனித்துவமான**

**பணிகள் குறித்துத் தெரிவிக்கவும்.**

○ - பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய 29 ஆண்டுகளில் முழுமையாக மாணவர்களோடு சேர்ந்து நான் வாழ்ந்தேன் என்றே சொல்ல முடியும். ஒடுக்கப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட பகுதிகளில் இருந்து வரும் மாணவர்களுக்கு இடமளிப்பது, குறிப்பாக முனைவர் பட்டம் பெறுவதற்கு வாய்ப்பளிப்பது போன்ற பணிகளைத் திட்டமாகவே கொண்டிருந்தேன். அந்த வகையில் 49 முனைவர் பட்ட மாணவர்களில் சுமார் 40 பேர் மேற்குறித்தப் பின்புலத்தைச் சார்ந்தவர்கள்.

புதிய பாடத்திட்டத்தைப் பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்களோடு இணைந்து உருவாக்கினேன். அந்தப் பாடத்திட்டம் வெறுமனே தமிழ் மொழி இலக்கியப் படிப்பாக இல்லாமல், தமிழ்ச் சமூக மற்றும் பண்பாட்டு வரலாற்றை அடிப்படையாகக் கொண்டதாக உருவாக்கி நடைமுறைப்படுத்தினேன். இதுவரை தமிழ்ப் படிப்பில் இடம்பெறாத ஊடகங்கள் குறித்த விரிவான படிப்பு, பயிற்சி, நடைமுறை என்ற அளவில் மாணவர்களைக் கட்டமைத்தோம். இதனால், தமிழ் இலக்கியத்துறை மாணவர்கள் வெளி உலகில் தனித்த அடையாளத்தோடு செயல்படுவதாகப் பலரும் இன்று கூறுவதைக் கேட்கிறேன்.

மேலும் **'மேடை'** என்ற அமைப்பின் மூலம் மாணவர்களிடம் உள்ள தனித் திறமைகளைக் கண்டறிந்து ஊக்கப்படுத்த முடிந்தது. இதில் பல மாணாக்கியர் நல்ல கவிஞர்களாக உருப்பெற்றுள்ளனர். துணிவாகப் பொது மேடைகளில் பேசும் பயிற்சியும் அவர்களுக்குக் கிடைத்தது. ஆண்டுதோறும் இந்திய அளவிலான சுற்றுப் பயணத்திற்கு ஏற்பாடு செய்தோம். அது மாணக்கியரிடம் ஏற்படுத்திய தாக்கம் குறிப்பிடத்தக்கது. சென்னையைச் சுற்றியுள்ள வரலாற்று இடங்கள் அனைத்தையும் பார்வையிடும் வாய்ப்பை உருவாக்கினோம். கல்வெட்டு, நாட்டார் வழகாற்றியல், வெகுசன ஊடகம், மொழியியல், சுவடியியல்,ஒப்பிலக்கியம் ஆகிய துறைகள் சார்ந்து பட்டயப்படிப்புகளையும் அது தொடர்பான ஆய்வேட்டு உருவாக்கங்களையும் நடைமுறைப்படுத்தினோம். கருத்தரங்குகள், அறக்கட்டளைச் சொற்பொழிவுகள், புத்தொளிப் பயிற்சிகள் எனப் பல நடைமுறைகளை மேற்கொண்டோம். இதுகுறித்துப் பெரிய புத்தகமே எழுத முடியும். எம் மாணவர் **அ.மோகனா** அவர்கள் அப்படியொரு புத்தகம் **(தமிழியல் ஆய்வுவெளி வீ.அரசு: ஆசிரியம் ஆய்வு)** எழுதியுள்ளார். அடுத்த ஆண்டு எனது எழுபது அகவை நிறைவையொட்டி நான் பல்கலைக்கழகத்தில் செய்த பல்வேறு பணிகள் குறித்து எம் மாணவர்கள் பதினைந்து தலைப்புகளில் விரிவான பேட்டி என்னிடம் எடுத்துள்ளனர். அது நூல் வடிவம்

பெறும்போது எனது பல்கலைக்கழகத் தனித்துவமான பணிகளை அறிந்துகொள்ள முடியும்.

● - **தமிழ் ஊடக வரலாறு /தமிழ்ச் சமூக வரலாறு / தமிழ் ஆராய்ச்சி வரலாறு குறித்து விரிவாக எழுத வேண்டும் என்ற விருப்பத்தோடு இருப்பவர் நீங்கள். அதற்கான உங்களது திட்டங்கள் யாவை?**

○ - நான் பல்கலைக்கழகத்தில் பணியாற்றியபோது இந்தப் பொருண்மைகளில்தான் விரிவாக மாணவர்களிடம் பேசினேன், நிறைய கட்டுரைகளும் எழுதியிருக்கிறேன். அவைகளைத் தொகுத்து வைத்திருக்கிறேன், நூல் வடிவம் பெறவில்லை. இந்த ஒவ்வொரு துறை குறித்தும் விரிவாக என்னால் பேச முடியும். ஆனால், அவற்றை நூல் வடிவாக்கும் முயற்சியில் நான் ஈடுபட வேண்டும். எஞ்சிய காலத்தில் செய்துவிடுவேன் என்ற நம்பிக்கை இருக்கிறது.

● - **உங்களது நூல் தொகுப்புப் பணிகள் குறித்து விரிவாகத் தெரிவிக்கவும்.**

○ - நவீன கணிப்பொறி வளர்ச்சியால் தமிழில் பெரிய பெரிய தொகுதிகளாக நூல்களை வெளியிடும் மரபு உருப்பெற்றுள்ளது. **தோழர் ப.ஜீவானந்தம்** அவர்களின் நூற்றாண்டு நிறைவின்போது அவரது ஆக்கங்கள் அனைத்தையும் இரு தொகுதிகளாக **(சுமார் 3000 பக்கங்கள்)** உருவாக்கினேன். 1970கள் தொடங்கி இடதுசாரி மரபு தொடர்பான சிறு வெளியீடுகள், புத்தகங்கள் ஆகியவற்றைப் பழைய புத்தகக் கடைகள் தொடங்கி பல்வேறு இடங்களிலும் திரட்டும் பணியை நான் மேற்கொண்டிருந்தேன். அவ்வகையில் சிறு சிறு வெளியீடாக வந்திருந்த ஜீவாவின் எழுத்துக்களைத் தொகுப்பது எனக்கு எளிதாயிற்று. அந்த அடிப்படையில்தான் ஜீவா நூற்றாண்டைக் கொண்டாட அவரது ஆக்கங்களைத் தொகுத்தேன்.

சென்னையில் வாழ்ந்த மார்க்சிய கம்யூனிஸ்டுக் கட்சியைச் சேர்ந்த தோழர் ருக்மணி அம்மாள் ஜனசக்தி நாளிதழ்களை சேகரித்து வைத்திருந்தார். அதில் 1943 தொடக்கம் 1948 வரை 4 தொகுதிகள் கிடைத்தன. தஞ்சாவூரில் பேராசிரியர் பா. மதிவாணன் அவரது தொகுப்பில் ஜனசக்தி தொடக்க ஆண்டு 1937இன் தொகுதி கிடைத்தது. இவற்றையும் மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகமான பாலன் இல்லத்தில் இருந்த நூலகத்தில் கிடைத்த ஜனசக்தி இதழையும் கணிப்பொறி வழியாகப் படியெடுத்து அதில் தலையங்கங்களை மட்டும் தொகுத்தோம். ஜீவாவுடையதும் தொகுத்தோம். ஜீவாவின் ஆக்கங்களை ஜீவா முழுத்திரட்டில் இணைத்தேன். ஜனசக்தி தலையங்கங்கள் தனியாக இரண்டு தொகுதிகளாகத் தொகுத்தோம். கிடைத்த ஜனசக்தி இதழ்களின்

காலவரிசை சார்ந்து தொகுப்பைச் செய்தோம். இடையில் பல ஆண்டுகள் ஜனசக்தி இதழ்கள் கிடைக்கவில்லை. அதைப்போல ஜீவாவின் ஆக்கங்களும் முழுமையாகக் கிடைத்தது என்று சொல்ல முடியாது.

1937 **ஜனசக்தி** தொடங்கியது முதல் 1963 ஜீவா மறையும் வரை உள்ள ஜனசக்தி இதழ்களை முதன்மையாகக் கொண்டு இரண்டு பெரும் தொகுதிகளைத் தொகுத்தோம். அதனை என்.சி.பி.எச். நிறுவனம் வெளியிட்டது. **மொத்தம் நான்கு தொகுதிகள், சுமார் 7500 பக்கங்கள்**. அத்தொகுதிகள் தமிழ்நாட்டுக் கம்யூனிஸ்டுக் கட்சியின் வரலாறு குறித்து அறிவதற்கு அரிய ஆவணமாக அமைந்திருப்பதாக ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் ஆய்வு செய்யும் மாணவர்கள் என்னிடம் கூறினர். நான் தொகுத்த ஜீவாவின் ஆக்கங்களை இப்பொழுது தனித்த சிறு சிறு தொகுதிகளாகப் பலர் வெளியிட்டு வருவதை அறிய முடிகிறது. நான் தொகுத்துக் கொடுத்த அந்த வேலையை அவர்கள் குறிப்பிடுவதும் கூட இல்லை. ஜீவா குறித்த ஒரு நல்ல ஆவணத்தைச் செய்த திருப்தி எனக்கு உண்டு. அத்தொகுதிகளை மீண்டும் இப்பொழுது விடுபடல்களையெல்லாம் தேடி முழுமைப் படுத்த வேண்டும். அது இயலும்.

சென்னையில் உள்ள பேராசிரியர் அன்பழகன் நூலகத்தில் பணியாற்றிய நூலகர் சுந்தரராஜன் என்பவர் என்மீது அன்பு கொண்டவர். ஒருமுறை நான் நூலகத்திற்குச் சென்றபோது பழைய இதழ் தொகுப்பு ஒன்றை என்னிடம் காண்பித்தார் . அத்தொகுப்பு இளமுருகு பொற்செல்வி என்ற திராவிட முன்னேற்ற கழக அன்பர் ஒருவரது நூலகத்திலிருந்து அன்பளிப்பாக கொடுக்கப்பட்டிருந்தது. அதில் பாவேந்தர் பாரதிதாசனுடைய கையெழுத்து இருந்தது. அந்த இதழின் பெயர் **தத்துவவிவேசினி. சென்னை இலௌகீக சங்கம் என்ற நாத்திக இயக்கம்** 1878-1888 ஆம் ஆண்டுகளில் நடத்திய இதழ். அதனோடு இணைந்து அவர்கள் ஆங்கிலத்தில் நடத்திய The Thinker என்ற தொகுப்பும் இருந்தது. இவ்விதழ்ச் செய்திகளை எனது ஆய்வு மாணவர் இருவர் வழிப் பொருண்மை வாரியாகத் தொகுத்தேன். பின்னர் அய்யா ஆனைமுத்து அவர்களிடம் இவ்விதழ்த் தொகுப்புகள் இருப்பதாக அறிந்து, தமிழ்மண் பதிப்பக உரிமையாளர் இளவழகன் உதவியோடு அவற்றைப் பெற்றேன். அனைத்தையும் சேர்த்துத் தமிழில் நான்கு தொகுதிகளாகவும் ஆங்கிலத்தில் இரண்டு தொகுதிகளாகவும் தொகுத்து ஆறு தொகுதிகளாக அச்சிட்டோம். இது தமிழகத்தின் அறியப்படாத வரலாறுகளில் ஒன்று. பின்னர் சென்னை இலௌகீக சங்கம் தொடர்பாக இலண்டன் பிரித்தானிய நூலகத்தில் விரிவான பல்வேறு

தகவல்களையும் மூன்றுமுறை தொகுத்தேன். இவற்றையெல்லாம் அடிப்படையாகக் கொண்டு சென்னை இலௌகீக சங்கம் என்று ஒரு பெரும் நூலை உருவாக்குவதற்கான தரவுகளைக் கோப்புகளாக வைத்திருக்கிறேன். அவை என்றைக்கு நூல் வடிவம் பெறும் என்பதை நான் அறியேன். விரைவில் செய்து விடுவேன். இப்பொருள் பற்றி விரிவாகப் பல தளங்களில் பேசியுள்ளேன். குறு நூல்களும் பல வெளிவந்துள்ளன.

தத்துவவிவேசினி இதழில் **அத்திப்பாக்கம் வெங்கடாசல நாயகர்** என்பவர் பல்வேறு கடிதங்களை எழுதியிருப்பதைப் பார்த்தேன். இவர் குறித்துச் சிறு தொகுப்பு ஒன்றை **அய்யா ஆனைமுத்து** அவர்கள் வெளியிட்டிருந்தார்கள். இவர் எழுதிய '**இந்துமத ஆசார ஆபாச தரிசினி**' என்ற நூல் 1878 இல் வெளிவந்தது. இந்து மதம் பற்றிய விரிவான விமர்சன நூல். பாடல் வடிவில் அமைந்தது. இவரது அனைத்து ஆக்கங்களையும் தொகுத்து **அத்திப்பாக்கம் வெங்கடாசலனார் ஆக்கங்கள் திரட்டு** என்ற நூலையும் பதிப்பித்துள்ளேன்.

வ.உ.சி அவர்கள் வெளியிட்ட சிறு சிறு நூல்கள் பழைய புத்தகக் கடைகளிலும், வ.ரா. வீட்டிலும் எனக்குக் கிடைத்தன. **தோழர் பொ.வேல்சாமி** அவர்களோடு தொடர்பு கொண்டபோது அவரிடம் இருந்த வ.உ.சி சிறு நூல்கள் சிலவற்றை எனக்கு அனுப்பி வைத்தார். மொத்தம் 13 நூல்கள் கிடைத்தன. இவற்றையெல்லாம் தொகுத்து **வ.உ.சி நூல் திரட்டு** எனும் பெயரில் 2001 இல் பதிப்பித்தேன். அவரது திருக்குறள் பணி, தொல்காப்பியப் பணி, சைவ சமயம் தொடர்பான பணி, சொந்த வாழ்க்கை வரலாறு, மொழியாக்கங்கள் எனப் பல பரிமாணங்களில் அவை அமைந்தன. விடுதலைப் போராட்ட வீரர் என அறியப்பட்டிருந்த அவரின், தமிழ்ப் பணிகளைத் தமிழ்ச் சமூகம் அறிந்ததாகக் கூற முடியவில்லை. அவ்வகையில் எனது பதிப்புப் பணி அவருடைய இன்னொரு முகத்தைத் தமிழ்ச் சமூகத்திற்கு வெளிப்படுத்தியது. கால ஒழுங்கில் அவரது சிந்தனைகளை வெளிப்படுத்துவதற்கும் வாய்ப்பாக அமைந்தது. இப்போது அந்தத் தொகுதியைச் சில புதிய இணைப்புகளோடு, **வ.உ.சி பன்னூல் திரட்டு** என்னும் பெயரில் **தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம்** வெளியிட்டுள்ளது. வ.உ .சி.க்கு செய்த நன்றிக்கடனாக இதனைக் கருதுகிறேன்.

மேற்குறித்த வகையில் சங்கரதாஸ் சுவாமிகளின் நாடகங்கள் மயிலை சீனி வெங்கடசாமியின் ஆக்கங்கள், பேராசிரியர் ச.வையாபுரிப் பிள்ளையின் ஆக்கங்கள், புதுமைப்பித்தனின் இதழ் வழிச் சிறுகதைகள் ஆகிய பல பணிகளையும் நான் செய்துள்ளேன். இவை பற்றி விரிக்கின் பெருகும். இப்பொழுது **வ.ரா.**விற்கு

(வ.ராமசாமி) 1930-1951 காலங்களில் பலர் எழுதிய கடிதங்களை சாகித்திய அகாடமிக்காக பதிப்பித்துக் கொண்டிருக்கிறேன்.

● - **திராவிடக் கருத்தியல் பாதையில் உங்களது பயணம் குறித்துப் பகிர்ந்து கொள்ள முடியுமா?**

○ - நான் பள்ளி இறுதி வகுப்புப் படிக்கிற காலம் முதலே பெரியார் குறித்த ஈடுபாடு கொண்ட மாணவனாகவே வளர்ந்தேன். எங்கள் பகுதி திராவிட இயக்கக் கருத்து செல்வாக்குள்ள பகுதி. திராவிடக் கட்சிகளே இன்றும் நடைமுறையில் உள்ளது. பட்ட வகுப்பில் சேர்ந்தபொழுது பெரியார் கருத்து மரபுகளோடு இடதுசாரிக் கருத்து மரபில் ஈடுபாடு உடையவனாக செயல்படத் தொடங்கினேன். பட்ட வகுப்பில் மார்க்சியம், பெரியாரியம் ஆகியவற்றின் பரிமாணங்கள் குறித்து எனது வகுப்புத் தோழரும் இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் முழுநேர ஊழியராக இருந்த ஒரு தோழரின் மகனுமாகிய **அ.இரவிச்சந்திரன்** அவர்களுடன் தொடர்ந்து உரையாடல் நடத்தும் வாய்ப்பு கிடைத்தது. அதைபோலவே இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியை சேர்ந்த எனது வகுப்புத் **தோழர் சி.அய்யப்பன்** அவர்களுடனும் தொடர்ந்து உரையாடல் நிகழ்த்தினேன். இத்தோழர்களின் உறவால் நான் முழுமையாக மார்க்சியத் தத்துவத்தின்பால் ஈடுபாடு உடையவனாக என்னை ஆக்கிக்கொண்டேன். மார்க்சியத் தத்துவ மரபு சார்ந்தே பெரியாரிய சிந்தனைகளை உள்வாங்குவதாக கருதுகிறேன். அந்த மரபே இன்றைக்கும் என்னுள் செயல்படுவதாகக் கருதுகிறேன். அதனால் பெரியாரியத் தோழர்கள் என்னை கம்யூனிஸ்டுக் என்றும், மார்க்சியத் தோழர்கள் என்னைப் பெரியாரிஸ்ட் என்றும் அடையாளப்படுத்துவதை உணர்கிறேன். இதனை நான் எப்படி புரிந்துகொள்வதென்று தெரியவில்லை. இதனால் பெரியாரியத் தோழர்களிடம் ஒரு வகையான மனநிலையையும் மார்க்சியத் தோழர்களிடம் ஒரு வகையான ஏளனப் பார்வையையும் நான் அனுபவித்திருக்கிறேன். ஆனால், அண்மைக் காலங்களில் அந்த நிலை பெரிதும் மாறியிருப்பதாகவே கருதுகிறேன்.

● - **திராவிட இயக்கங்கள் தமிழகத்திற்கு ஆற்றிய பணிகளைத் தொகுத்துக் கூற முடியுமா?**

○ - 1920 தொடங்கித் தமிழ்ச் சமூகத்தில் செயல்படத் தொடங்கிய திராவிட இயக்கம் ஆற்றிய பணிகளை இரண்டு வகைகளில் சொல்ல முடியும். **பொருளாதார மாற்றங்கள் பற்றியது ஒரு துறை. பண்பாட்டு மாற்றங்கள் பற்றியது பிறிதொரு துறை**. பொருளாதார மாற்றங்களின் மூலம் தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சி பற்றி விரிவாகப் பல்வேறு புள்ளி விவரங்களைத் தருகிறார்கள். ஆனால்,

அத்தொழிற்சாலைகளில் பணியாற்றும் தொழிலாளர்கள் பற்றிய புள்ளி விவரங்கள் விரிவாக நமக்கு கிடைக்கவில்லை. அவர்களது ஊதியம் மற்றும் பிற வசதிகள் எவ்வாறு உள்ளன என்பது பற்றிய ஆய்வுகள் செய்ய வேண்டும். உற்பத்தி பெருகலாம் உற்பத்தி செய்பவரின் வாழ்க்கை எப்படி இருக்கிறது என்பது முக்கியம். அந்த வகையில் தொழிலாளர்கள் மத்தியிலேயே முழுமையான மன நிறைவு இருப்பதாகச் சொல்ல முடியாது.

பண்பாட்டுத் தளத்தில், குறிப்பாகக் கல்வி பெறுபவர்களுடைய எண்ணிக்கை வளர்ந்துள்ளது. படிக்கும் பெண்கள் எண்ணிக்கை அதிகமாகியுள்ளது. சமூகத் தளத்தில் வெளிப்படையான சாதிய உரையாடல்கள் முன்பைவிடக் குறைந்துள்ளது. ஆனால், சாதியச் செயல்பாடுகளின் தன்மைகள் மாறியுள்ளன. சாதி ஒழிந்துவிடவில்லை. ஆனால், மறைந்திருப்பதாகவே எனக்குத் தோன்றுகிறது. சாதியைப் பெயர்களோடு இணைக்காமல் இருக்கும் நடவடிக்கைகள் இந்தியாவில் தமிழ்நாட்டில்தான் இருப்பதை அறிகிறோம். சாதி குறித்துப் பெரியார் மேற்கொண்ட பரப்புரைகள் இவ்வகையான மாற்றத்திற்கு அடிப்படையாகச் சொல்லலாம். தமிழ்நாட்டின் பண்பாட்டு முகம் இந்திய அளவில் வேறுபட்டதாகக் கணிக்கப்படுவது திராவிட இயக்கத்தின் சாதனையே.

● - **திராவிடம் × தமிழ்த் தேசியம் என்பதாகப் பொதுவெளியில் தீவிரமான கருத்துக்கள் அலைமோதுகின்றன. இது குறித்த உங்களது பார்வை?**

திராவிடம், தமிழ் என்பது ஒருபொருள் குறித்த இரு சொற்களே. திராவிடம் என்பது தனியாக செயல்படுவதுபோல் ஒரு பொய்மை இங்கு கட்டமைக்கப்படுகிறது. தமிழ் என்று பயன்படுத்தும் இடங்களில் எல்லாம் திராவிடம் என்ற சொல்லைப் பயன்படுத்த முடியும். வரலாற்றில் ஒவ்வொரு காலத்திலும் உருவாகும் சொற்கள், கால மாற்றத்தில் வெவ்வேறு பொருள்களாக மாற்றம் பெற்றிருந்தாலும், அதன் அடிப்படையான அணுகுமுறை ஒன்றே. தமிழ்த் தேசியம் பேசுபவர்கள் திராவிடம் என்பது தமிழ்த்தேசியத்திற்கு எதிரானது என்று கட்டமைக்கிறார்கள். இது தமிழகத்தின் வரலாறு குறித்தப் புரிதலற்றப் பார்வையே. தமிழ்த் தேசியம் பேசுபவர்களின் சாதிய அணுகுமுறை, கடவுள் பற்றியப் புரிதல் ஆகியவை திராவிடக் கருத்தியல் பேசுபவர்களில் இருந்து வேறுபடுகிறது. அதனால்தான் தங்களை நியாயப்படுத்திக் கொள்ளத் திராவிடத்தைத் தமிழ்த்தேசியத்திற்கு எதிராக நிறுத்துகிறார்கள். ஒரு தேசிய இனம் ஒடுக்கப்படும்போது அதற்கெதிரான போராட்டம் என்பது வேறு. தேசிய இனத்தின் தற்பெருமை பேசி அதனையே வாழ்வு முறையாகக் கொள்வது என்பது வேறு. இத்தன்மைகளை

நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

● - **திராவிட இயக்க எழுத்தாளர்களின் படைப்புகளில் கலை நேர்த்தி இல்லை எனும் விமர்சனம் குறித்த உங்களது கருத்து என்ன?**

○ - திராவிட இயக்க எழுத்துக்கள் என்பவை 1940 தொடக்கம் 1960 வரை வளமாக உருப்பெற்றன. இந்தக் காலங்களில் உருவான நவீன எழுத்துத் தன்மை அந்தப் பிரதிகளிலும் உண்டு. அவை நேரடியான சமூக நிகழ்வுகளை எழுத்தில் கொண்டுவந்தவை. அம்முறையைப் பிரச்சாரம் என்று மிகுந்த செல்வாக்கு பெற்ற அன்றைய ஆதிக்கச் சாதியைச் சார்ந்த எழுத்தாளர்கள் பதிவு செய்தனர். அவற்றில் பேசப்படும் செய்திகளுக்கு உடன்பாடற்றவர்களின் குரலே அது. அகிலன், ஜெக சிற்பியன், தீபம் நா.பார்த்தசாரதி போன்றவர்களின் எழுத்து முறைமைகளும் டி.கே.சீனிவாசன், அண்ணா, சிற்றரசு,கலைஞர் போன்றவர்களின் எழுத்து முறைமைகளும் ஒரே மரபில் அமைந்தவையே. ஆனால், அகிலன் போன்ற எழுத்தாளர்களை அங்கீகரித்தவர்கள், திராவிட எழுத்தாளர்களைப் புறக்கணிப்பதற்குக் கண்டுபிடித்த முறையே பிரச்சார இலக்கியம் என்ற பெயரிடல். திராவிட மரபு சார்ந்த எழுத்தாளர்களின் மொழியும் பாடுபொருளும் வேறு வடிவில் இருப்பதால், அதனை அம்மரபு சாராதவர்களின் எழுத்துக்களோடு ஒப்பிடுவது சரியாக இருக்காது. திராவிட எழுத்துக்களின் அழகியலை நாம் தனித்துப் புரிந்துகொள்ள வேண்டும்.

● - **தனித்தமிழ் இயக்க ஈடுபாடு மற்றும் அதில் தொடர்புடைய ஆளுமைகள் குறித்த உங்களது நினைவுகள்.**

○ - நான் கல்லூரியில் முதலாண்டு படிக்கும் காலத்தில் தனித்தமிழ் இயக்க ஈடுபாட்டோடு இருந்தேன். அதன் விளைவாக என் அப்பா வைத்த ராஜு என்ற பெயரை தனித்தமிழ் இயக்க நண்பர்கள் அரசு என்று மாற்றினார்கள். அதையே நிலையான பெயராகச் சட்ட வடிவில் வைத்துக் கொண்டேன். தஞ்சையில் பணியாற்றிய பேராசிரியர் இரா.இளவரசு தமிழியக்கம் என்ற அமைப்பை உருவாக்கி செயல்பட்டார். அந்த அமைப்பு தனித்தமிழ் இயக்க நடைமுறைகளைக் கொண்டது. அதில் தோழர்கள் செந்தலை கவுதமன், மு.இளமுருகன், சி.அறிவுறுவோன் ஆகியோர் தஞ்சையில் செயல்பட்டனர். அவர்களோடு நானும் இருந்தேன். ஆனால், அவர்களைப்போல் தீவிர செயல்பாட்டாளராக நான் இல்லை. நான் சென்னைக்கு வந்த பின், **அய்யா பெருஞ் சித்திரனார்** அவர்களைத் திருவல்லிக்கேணியில் உள்ள அவரது வீட்டில் சந்தித்து பேசியிருக்கிறேன். ‘**தென்மொழி**’ இதழைத் தொடர்ந்து படித்து வந்திருக்கிறேன். அவரது வாழ்க்கையின்

இறுதிக் காலங்களில் அவர் எதிர்கொண்ட நெருக்கடிகள் சார்ந்து அவர்மீது மிகுந்த மரியாதை உருவானது. அவரது இறுதிச் சடங்கில் முழுமையாகப் பங்கேற்றேன். அவரது கவிதை மரபு என்பது தமிழ்ச் செவ்விலக்கிய மரபிற்கு இணையானது. பெயரைப் போடாமல் அவரது கவிதையை யாரிடமாவது படிக்கச் சொன்னால் அது புறநானூற்று பாடல் என்று சொல்லும் தன்மையை என்னால் உணர முடிந்தது. தமிழ்ச் சமூகத்தின் முக்கியமான ஆளுமைகளில் அவர் ஒருவர் என்ற கருத்தும் எனக்கும் உண்டு.

● - **ஈழப்போராட்டத்தில் உங்களது பங்களிப்புப் பற்றிக் கூறுங்கள்.**

○ - ஆய்வு மாணவனாக இருந்த காலத்திலேயே சென்னையில் இருந்த பல ஈழப் போராளிகள் அறிமுகமாகியிருந்தனர். நான் தங்கி யிருந்த இடத்திலேயே ஈழப் போராட்டத்தில் ஈடுபட்ட பல்வேறு குழுக்களின் தலைவர்கள் இருந்தனர். நண்பர் அரணமுறுவல், பேராசிரியர் இளவரசு ஆகியோர் ஈழப் போராளிகளோடு நெருங்கிய தொடர்பில் இருந்தனர். அந்த வகையில் அவர்கள் தொடங்கிய தமிழ் ஈழ நட்புறவுக் கழகம் என்ற அமைப்பில் இருந்தேன். தோழர் அரவிந்தன், தோழர் பத்மநாபா ஆகியவர்களோடு நேரடித் தொடர்பு இருந்தது.

இப்போது லண்டனில் இருக்கும் நாடகக் கலைஞர் தாசீசியஸ் அவர்கள் 1996 வாக்கில் ஈழம், தமிழ்நாடு, புலம்பெயர்ந்த நாடுகள் ஆகியவற்றில் வாழும் நாடகக் கலைஞர்களை ஒருங்கிணைத்து, தமிழகத்தில் பல்வேறு இடங்களிலும் ஈழத்தின் அவலநிலையை வெளிப்படுத்தும் நாடகங்களை நடத்துவதற்காக ‘நாராய்... நாராய்’ என்ற ஒரு நாடக பயணத்திற்கு திட்டமிட்டார். அதனைத் தமிழகத்தில் நடைமுறைப் படுத்துவதற்காக நானும் மங்கையும் வேறு சில தோழர்களும் பொறுப்பெடுத்துக் கொண்டோம்.

இராசீவ் காந்தி கொலை செய்யப்பட்டதால் தமிழகத்தில் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவே இருக்காது என்ற ஒரு பிரச்சாரம் வலுப்பட்ட காலத்தில், ஈழ நாடகக் கலைஞர்களை அழைத்துத் தமிழகம், பாண்டிச்சேரி, பெங்களூர் மற்றும் பல்கலைக்கழகங்கள், பல தனிப்பட்ட கல்வி நிறுவனங்கள், தமிழ் அமைப்புகள் ஆகியவற்றின் உதவியோடு சுமார் இருபதுக்கும் மேற்பட்ட இடங்களில் ‘நாராய்... நாராய்’ நாடகத்தைக் கொண்டு சென்றோம். ஈழத் தமிழர்களின் அவலங்களை கொண்டிருந்த அந்த நாடகங்களைத் தமிழ்நாட்டு மக்கள் பார்த்துக் கண்ணீர் சிந்தியது எங்களுக்கு உந்துதலைத் தந்தது. காவல்துறை என்னைக் கண்காணித்தது. உளவுத்துறை யினர் என்னிடம் பலமுறை வந்து பேசினர். இந்தத் தொடர்பில் ஈழத் தமிழர்கள் வாழும் கனடா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்குப்

பல முறை பயணம் செய்யும் வாய்ப்புக் கிடைத்தது. 25 ஐரோப்பிய நாடுகளில் வாழும் ஈழத் தமிழர்களை ஒருங்கிணைத்து சுவிட்சர்லாந்தில் ஒரு கூட்டம் நடத்தினோம். அதன் விளைவாகக் **'கட்டியம்' என்ற உலகத் தமிழர் அரங்க இதழ்** ஒன்றை கொண்டு வந்தோம். ஏழு இதழ்களைக் கொண்டுவர முடிந்தது. இதழ்களைக் கொண்டு செல்வதில் ஏற்பட்ட சிக்கல் தொடர்பாக அதனைத் தொடர முடியாமல் போய்விட்டது. இன்னும் விரிவாகச் சொல்ல முடியும். வேறு வாய்ப்பில் பேசலாம்.

● - **ஈழத்துத் தமிழறிஞர்கள் கைலாசபதி, சிவத்தம்பி போன்ற ஆளுமைகள் குறித்த உங்களது மதிப்பீடு?**

○ - பேராசிரியர் கைலாசபதி அவர்களை ஐந்தாவது உலகத் தமிழ் மாநாடு மதுரையில் நடந்தபோது சந்தித்தேன். அவர் பின்பு மறைந்துபோனார். ஆனால் பேராசிரியர் சிவத்தம்பி அவர்களோடு 1987 முதல் மறையும் வரை நெருங்கிய தொடர்பில் இருந்தேன். சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத் துறைக்கு வருகைதரு பேராசிரியராக அவர் இருந்த காலத்தில், அவரைப் பயன்படுத்தி பல்வேறு கல்விப் பணிகளைச் செய்தேன். பேராசிரியர் சிவத்தம்பி குறித்துச் சில கட்டுரைகளை எழுதியுள்ளேன். இவ்விரு பேராசிரியர்களும் ஈழத்தில் கல்விப் புலத்தில் மார்க்சியக் கண்ணோட்டத்தோடு செயல்படும் முறையினை வளர்த்தெடுத்தவர்கள். 1950களின் இறுதி முதல் தமிழ்நாட்டில் இருந்த இடசாரி அமைப்புகள் மற்றும் பல்கலைக்கழகங்களோடு, இவர்கள் கொண்ட தொடர்பால் தமிழ்ச் சூழலில் மார்க்சியக் கருத்துநிலை சார்ந்த ஆய்வாளர்கள் பலர் உருவாயினர். பேராசிரியர் கைலாசபதி அவர்களின் ஆய்வு முறையால் எவ்வாறு தாக்கமுற்றேன் என்பதை மார்க்சிய ஆய்வாளார் கோ.கேசவன் விரிவாகப் பதிவு செய்துள்ளார். இவ்விரு பேராசிரியர்களும் தமிழில் மிக வளமான ஆய்வு மரபு உருவாவதற்கு அடிப்படையாக அமைந்தவர்கள்.

பேராசிரியர் கைலாசபதி அவர்கள் மாவோயிசக் கருத்து மரபில் செயல்பட்டவர். அதனால், அவர் குறித்த விமர்சனங்கள் உண்டு. மார்க்சியத்தை அதன் பல பரிமாணங்களோடு செயல்படுத்தும் முறையியலை அவர் கையாளவில்லையென்பது அந்த விமர்சனம். பேராசிரியர் சிவத்தம்பியைப் பொறுத்தவரை அவர் அவ்வப்போது உருவாகும் புதிய மார்க்சிய போக்குகளை விரிவாகப் படித்து ஆய்வுகளை நிகழ்த்தியவர். அவரது ஆய்வு கறார் தன்மையற்ற போக்கினைக் கொண்டது என்ற விமர்சனமும் உண்டு. இவ்விரு பேராசிரியர்களின் எழுத்துக்களின் மூலம் தாக்கம் பெற்றவன் நான் என்று சொல்ல முடியும். சிவத்தம்பியை எனது ஆசானாகக்

கருதிக்கொள்கிறேன்.

● - **புலம்பெயர் இலக்கியம் பற்றிய உங்களது கண்ணோட்டம்?**

○ - 1983 கருப்பு சூலை தமிழர் இனவழிப்புக் கலவரத்திற்குப் பின்பு ஈழத்தமிழர்கள் பெருமளவில் உலக நாடுகளில் குடியேறினர். இவர்கள் 1990-கள் தொடங்கி ஏறக்குறைய இரண்டாயிரம் வரை ஏராளமான இதழ்களை நடத்தினர். நிறைய தொகுப்புக்களை வெளியிட்டனர். இவற்றின் வழியாக உருவான கலை இலக்கியச் செயல்பாடுகளைப் புலம்பெயர் இலக்கியம் என்றழைப்பது மரபாயிற்று. இவற்றில், ஈழத்தில் வாழும் தமிழ் மக்களின் அவலங்கள் பல பரிமாணங்களில் பதிவாயின. அதைப் போல குடிபெயர்ந்த தமிழர்கள் வாழுமிடங்களில் எதிர்கொள்ளும் அவலம் பாடுபொருளாக வடிவம் பெற்றன.

ஈழத்தில் உருவான கவிதை மரபு என்பது புறநானூற்று மரபைப் போல போர் சார்ந்த மரபாக இருக்கிறது. இது புலம்பெயர் நாடுகளிலும், ஈழத்திலும் இருந்த கவிஞர்களாலும் உருவாக்கப்பட்ட, போர் சார்ந்த இலக்கியப் பிரதிகள் என்று நாம் வாசிக்க முடிகிறது. தமிழ் இலக்கிய மரபில் பல்வேறு புதிய தன்மைகள் உருப்பெற ஈழப் போர் காரணமாகியது. புதிய நாடகப் பிரதிகளும் உருவாகின. தமிழ் இலக்கியம் சமகாலத் தன்மையோடு இருப்பதை இவ்வகை ஆக்கங்களின் மூலமாகவே நாம் உணர்ந்துகொள்கிறோம். இது தமிழின் தனித் தன்மை என்றும் சொல்ல முடியும். இந்த வகையில் தமிழ்நாட்டில் உருவான இலக்கிய மரபிலிருந்து முற்றிலும் மாறானதாக, ஈழ இலக்கிய உருவாக்கம் செயல்பட்டது என்பதை நாம் பதிவு செய்யலாம். இது இப்போது தொடர்வதாகச் சொல்ல முடியவில்லை. ஆனால், அந்தப் பின்புலத்தில் ஷோபா சக்தி போன்ற பல முக்கியமான எழுத்தாளர்கள் உருவாகி இருக்கிறார்கள். ஈழத்திலும் புலம்பெயர் நாடுகளிலும் உருவான இந்த மரபைப் போர் சார்ந்த இலக்கியம் என்றும் சொல்லலாம்.

● - **ஆய்வியல் நிறைஞர் படிப்பிற்காகச் சிறுகதை எழுத்தாளர் விந்தன் அவர்களைக் குறித்து ஆய்வு மேற்கொண்டீர்கள். விந்தன் அவர்கள் பற்றிய உங்களது மதிப்பீடு என்ன?**

○ - சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் ஆய்வியல் நிறைஞர் படிப்பை முடித்தேன். அப்போது சென்னையில் இருந்த பேராசிரியர் இரா.இளவரசோடு நெருக்கமான தொடர்பில் இருந்தேன். அவர்தான் விந்தன் பற்றி ஆய்வு மேற்கொள்ள எனக்கு அறிவுறுத்தினார்.

விந்தன் உதிரிப் பாட்டாளி மக்களைத் தமது ஆக்கத்தில் கொண்டுவந்த முதல் தமிழ் எழுத்தாளர் என்று சொல்ல முடியும். மிகவும் சாதாரண உழைக்கும் குடும்பத்தில் பிறந்து கல்கி

பத்திரிக்கையில் அச்சுக் கோப்பாளராக வேலைக்குச் சேர்ந்தவர். கல்கி அவர்களின் ஊக்க முயற்சியால் எழுத்தாளராக செயல்பட்டவர். அவர் எழுதியுள்ள சுமார் 100 சிறுகதைகள், ஐந்தாறு நாவல்கள் ஆகியவை தமிழ்ப் புனைவுலகில் அவருக்கான இடத்தைக் கொண்டிருக்கிறது. ஆனால், தமிழ்ப் புனைவு வரலாறு எழுதிய பேராசிரியர் கா.சிவத்தம்பி மற்றும் சிகரம் செந்தில்நாதன் தவிர்த்து வேறு யாரும் அவரைத் தமிழ்ப் புனைகதை எழுத்தாளராகப் பதிவு செய்யவில்லை.

அவர் கார்க்கி மீது மிகுந்த ஈடுபாடு தனக்கு உண்டு என்று எழுதியிருக்கிறார். 'மனிதன்' (1954) என்ற இதழை நடத்தினார். மனிதன் என்ற பெயரை கார்க்கியின் தாக்கத்தால்தான் இதழுக்கு வைத்தேன் என்று அவர் பதிவு செய்துள்ளார். இடதுசாரி இயக்கங்களில் நேரடியாக அவருக்குத் தொடர்பில்லாவிட்டாலும் அவர் ஓர் இடதுசாரிக் கருத்து நிலையாளர்தான். 'வேலை நிறுத்தம் ஏன்?' (1949) என்று அவர் எழுதிய சிறு நூல் அன்றைய தொழிலாளர் போராட்டங்கள் பற்றியான அரிய ஆவணம். அவரைக் கம்யூனிஸ்டு என்று தமிழ்ச் சமூகம் அங்கீகரிக்காவிட்டாலும் அவர் ஒரு கம்யூனிஸ்டுதான். இவர் குறித்து விரிவான நூல் ஒன்று எழுதும் ஆசை எனக்கு இருக்கிறது.

● - **புதுமைப்பித்தன்தான் நவீனச் சிறுகதை வரலாற்றைத் தொடங்கி வைத்தவர் எனத் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறீர்கள். அதற்கான விளக்கத்தைத் தரவும்.**

○ - தமிழில் புனைகதை உருவாக்கம் என்பது காலனிய தாக்கத்தால்தான். ஐரோப்பிய மொழிகளில் உருவான இந்தப் புனைகதை மரபைத் தமிழுக்குக் கொண்டுவரும் முயற்சி பத்தொன்பதாம் நூற்றாண்டிலேயே தொடங்கியது. அவ்விதம் தொடங்கியவர்கள் தமிழ் மரபில் உள்ள காவியங்கள், கதைகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டுதான் அதனைச் செய்யத் தொடங்கினார். ஒரு புதிதான கதை மரபு அதில் உருப்பெற்றது என்று சொல்ல முடியாது. அதற்குக் காரணம் புனைகதை உருவாவதற்கான இதழ்களும், வாசிப்பாளர்களும் 1930க்கு முன் உருவானதாகச் சொல்ல இயலாது. அவை நமது பழம் மரபுகளைப் பெரிதும் உள்வாங்கியவையே. நவீனத் தன்மைகள் அவற்றில் இடம்பெறவில்லை. நவீன வாசிப்பு மரபு அதில் இல்லை. ஆனால், 1930 களில் தமிழில் அச்சு ஊடகம், நவீனத் தன்மை பெற்றது. ஒரே நிறுவனமே பல இதழ்களை நடத்தும் சங்கிலித் தொடர் அமைப்பு உருவானது. அதற்கெனப் புதிய வாசகர்கள் உருவானார்கள். இந்தப் பின்புலமே நவீனத்துவக் கதை மரபுக்கான களம். இந்தக் களத்தைச் சரியாகப் பயன்படுத்தியவர் புதுமைப்பித்தனே.

அதனால்தான் புதுமைப்பித்தனிலிருந்து தமிழ்ப் புனைகதை மரபைப் புரிந்துகொள்ள வேண்டும் என்று நான் சொல்கிறேன். சமூக மாற்றங்களும் புதிய வடிவ உருவாக்கத்திற்குமான உறவைக் கவனத்தில் கொள்வது அவசியம்.

● - **ஆய்வறிஞர் கோ.கேசவன் அவர்களது படைப்புகள் குறித்த உங்கள் பார்வையைப் பதிவு செய்க!**

○ - ஈழத்தில் கைலாசபதி, சிவத்தம்பி, நுஃமான் ஆகிய அறிஞர்கள் மார்க்சியப் பின்புலத்தோடு செயல்பட்டதைப் போல, தமிழ்ச் சூழலில் செயல்பட்டவர் கோ.கேசவன். தமிழ்ச் சமூக வரலாற்றின் பல பரிமாணங்களையும் இவர் ஆய்வுக்கு உட்படுத்தியுள்ளார். ஒவ்வொரு பொருண்மை குறித்தும் விரிவான விவரணங்களைத் தருவது அவரது ஆய்வு முறை. பேசும் பொருள் குறித்து விரிவாகப் பேசுவதற்குப் பதிலாக அந்தப் பொருளோடு தொடர்புடைய முன் தன்மைகளை விரிவாகப் பதிவு செய்தார், பேசும் பொருளை விரிவாகப் பதிவு செய்யவில்லை என்பது அவர் மீது வைக்கப்பட்ட விமர்சனமாகும். அவரது அனைத்து ஆக்கங்களையும் அண்மையில் படித்து, சாகித்திய அகாடமிக்காக இந்திய இலக்கியச் சிற்பிகள் வரிசையில் ஒரு சிறிய நூலை உருவாக்கினேன். அதன் மூலம் கேசவன் குறித்துச் சொல்லக் கூடிய அந்த விமர்சனங்களை என்னால் முழுமையாக ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அதை அவருடைய ஒரு முறையியலாகவே பார்க்க முடிந்தது. கறாரான மார்க்சியக் கண்ணோட்டத்தை வெளிப்படுத்துவது அவருடைய ஆய்வு முறையின் அடிப்படையாகும். பிற்காலத்தில் உருவான மார்க்சியப் பார்வைகளை அவர் கவனத்தில் கொள்ளவில்லை என்ற விமர்சனம் அவர் எழுத்துக்கள் மீது உண்டு. தமிழில் பல துறைகள் சார்ந்தும் மார்க்சியக் கண்ணோட்டத்தில் ஆய்வுகளைச் செய்த பெருமை கேசவன் அவர்களைச் சாரும்.

● - **கவிஞர் இன்குலாப் அவர்களோடு நீங்கள் கொண்டிருந்த தோழமை அனுபவங்களைத் தெரிவிக்க இயலுமா?**

○ - தோழர் இன்குலாப் ஒர் அரிய மனிதர். அவரோடு இருக்கும் ஒவ்வொரு கணத்திலும் தோழமையை உணர முடியும். இன்குலாப் எழுதிய ஏறக்குறைய அனைத்து நாடகங்களையும் நெறியாள்கை செய்து மங்கை நிகழ்த்தினார். அந்தக் காலங்களில் இன்குலாப்போடு இணைந்து பல்வேறு கருத்துக்களையும் உரையாடக் கூடிய வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. மார்க்சியத் தத்துவ மரபு சார்ந்து, அன்பால் மனிதர்களை வென்றெடுப்பது என்பது அவருடைய அணுகுமுறையாக இருந்தது. அவருடைய அந்த அணுகுமுறையால் அவரை விமர்சனம் செய்ததையும் நான் அறிவேன். அவரது கவிதைகளைப் பற்றி அறிந்துள்ள தமிழ்ச்

சமூகம், அவருடைய நாடகங்களைப் பற்றி அறிந்துள்ளதாகக் கூற முடியாது. சிறந்த நாடகப் பிரதிகளை அவர் உருவாக்கியுள்ளார். அவை பெரும்பகுதி நிகழ்த்தப்பட்டது அவருக்குக் கிடைத்த அங்கீகாரம்.

● - **சங்க இலக்கியம் குறித்த வெங்கட் சாமிநாதனின் கண்ணோட்டம் பற்றி உங்களது மதிப்பீடு என்ன?**

○ - நவீன விமர்சகர்கள் என்று சொல்லப்படுகிற வெங்கட் சாமிநாதன் போன்றவர்கள் சமஸ்கிருதத்தில் உள்ள இலக்கியங்கள், நாடகப் பிரதிகள், நாட்டிய சாஸ்திரம் போன்ற கோட்பாட்டு நூல்கள் ஆகியவற்றை விதந்து பேசியதைப் போல, சங்க இலக்கியம், தொல்காப்பியம் ஆகியவைப் பற்றிப் பேசியதாக அறிய முடியவில்லை. தமிழ் தொல் மரபு, செவ்விலக்கிய மரபு, செவ்விலக்கண மரபு ஆகியவற்றைப் பகடி செய்து பேசுவதாகவே அவர் மொழி அமையும். அவருக்குள் தமிழ் பற்றியோ, தமிழர்கள் பற்றியோ நல்ல அபிப்பிராயம் இருந்ததாகச் சொல்ல முடியாது. தமிழ் படித்தவர்களைக் கேளிக்கையாகவும் கிண்டலாகவும் பதிவு செய்யும் மனநிலை உடையவராகவே வெங்கட் சாமிநாதன் இருந்தார். இவருக்குள் இருந்த இந்த மனநிலை என்பது பற்றி நாம் சிந்திக்க வேண்டும்.

● - **பெரும் எழுத்தாளராக முன்னிறுத்தப்படும் ஜெயமோகன் பற்றிய உங்களது மதிப்பீடு?**

○ - மனித சமூக வளர்ச்சியில் இயற்கை நிகழ்வுகளை, மனிதர்கள் புரிந்துகொள்வதில் பல பரிமாணங்கள் உண்டு. ஒவ்வொரு காலத்திலும் இயற்கையைக் கண்டறிந்து, புதிய புதிய புரிதலுக்கு மனிதன் ஆளாகிறான். அதில் சாதாரண மக்கள் இயற்கை நிகழ்வுகளை வியப்பு, பயம் ஆகிய உணர்வுகள் சார்ந்தே புரிந்துகொள்கின்றனர். அதனால் ஒரு வகையான புனிதத்தை உருவாக்கிக் கொள்கின்றனர். அது சார்ந்து நம்பிக்கைகளையும், நம்பிக்கைகளை வெளிப்படுத்தும் சடங்குகளையும் செய்யத் தொடங்குகிறார்கள். அவை வழிபாடுகளாக, மானுடவியல் துறை சார்ந்து பதிவு செய்யப்படுகிறது. இதனை அடிப்படையாகக்கொண்டே மதம், அதற்குத் தேவையான கடவுள் ஆகியவற்றை முடியரசுகள் தங்கள் அதிகாரத்தை பயன்படுத்தி நிறுவனமாக்குகிறார்கள். அவை ஆதிக்க சாதி மற்றும் ஆதிக்க அரசுகள் ஆகியவற்றுக்குத் துணைபோகும் வடிவங்களாக சமூகத்தில் கட்டமைக்கப்படுகிறது. இதில் மனித அன்பை முதன்மையாகக் கொண்ட அவைதீக மரபும், மனிதனைக் கவனத்தில் கொள்ளாது கடவுள் என்ற ஒரு பொருளைக் கட்டமைக்கும் வைதீக மரபும் மதங்களுக்குள் உருப்பெறுகிறது. வைதீக மரபு என்பது மக்களை ஏமாற்றுவது,

முட்டாள்களாக்குவது. அவர்களிடம் இருக்கக் கூடிய புரிதலின்மையை அடிப்படைச் சரக்காகக் கொண்டு செயல்படுவது. இது சமூகத்தின் அரசுருவாக்கம், நிறுவன உருவாக்கம், ஆதிக்க சாதி மரபு மற்றும் அதிகார மரபு ஆகியவற்றின் வடிவம். நண்பர் ஜெயமோகன் இந்த மதங்களையே, இவை சார்ந்த அதிகாரத் தன்மைகளையே கொண்டாடுகிறார். இதனால் கார்ப்பரேட் பெரு முதலாளிகளின் செல்லப் பிள்ளையாகவும் அவர்கள் உருவாக்கும் சினிமாக்களின் மூலமாக இலட்சக் கணக்கான அளவில் பணம் சம்பாதிப்பவராகவும் வாழும் ஒரு குட்டி முதலாளிய மனநிலையாளர். இந்தச் சமூகத்தில் வாழும் ஒடுக்கப்படும் மக்கள் குறித்த எந்தப் புரிதலும் அற்றவர். மத நிறுவனத்தின் ஓர் அங்கம் அவர். அதனால்தான் கார்ப்பரேட்டு முதலாளிகளைக் கொண்டாடுபவராகவும், சாதாரண மனிதர்களை, குறிப்பாக, பெண்களை இழிவுபடுத்திப் பேசுபவராகவும் வாழ்கிறார். அவரது நிலைப்பாட்டில் சரியாகவே செயல்படுகிறார். அவரை ஆதிக்க சாதி மற்றும் அதிகார மரபு கொண்டாடும். விரைவில் ஞானபீடப் பரிசு அவருக்கு வழங்கப்படும்.

● - **விடுதலைப் போராளி வ.உ.சி அவர்களைப் பற்றிய உங்களது கண்ணோட்டத்தைப் பதிவிடுக.**

○ - வ.உ.சி தூத்துக்குடியில் இருந்தபொழுது அந்த ஊரில் இருந்த விவசாயிகள் மற்றும் தொழிலாளர்களுக்கான அமைப்பை உருவாக்கிய பெருமகன். **அவரது கோரல் மில் தொழிலாளர் போராட்டம் ஆசியப் பகுதியிலேயே நடந்த முதல் தொழிற்சங்கப் போராட்டம் என்பதை பலரும் பதிவு செய்துள்ளார்கள்.** விவசாயிகளுக்காக அவர் உருவாக்கிய கூட்டுறவு சங்கம் முக்கியமானது. வழக்கறிஞராக பணியாற்றியபோதே இவ்வகையான அரசியல் செயல்பாடுகளில் அவர் இருந்தார். தொழிலாளர் போராட்டத்தின் எழுச்சியைக் கண்டு பயந்த வெள்ளையர்கள் அவரைச் சிறைப்படுத்தினர். சிறையில் அவர் நிறைய வாசிப்பையும், மொழியாக்கத்தையும் மேற்கொண்டிருந்தார். தொல்காப்பியமும், திருக்குறளும் அவருக்கு ஈடுபாடான நூல்கள். சிறையில் இருந்து வெளியே வந்த பிறகு அவர் சிறையில் மொழிபெயர்த்த, உரையெழுதிய நூல்களை அச்சுக்குக் கொண்டு வந்தார். அந்தக் காலங்களில் பொருளாதார ரீதியாக மிகுந்த துன்பத்திற்குள்ளானார். காங்கிரஸ் இயக்கத்தில் உருவான பார்ப்பனர்-பார்ப்பனர் அல்லாத முரண்பாடுகளில் வ.உ.சி.க்கு முக்கிய இடமுண்டு. இந்தப் பின்புலத்தில் அவர் பெரியாரோடு நெருக்கமான உறவு கொண்டிருந்தார். வ.உ.சி.யின் இந்தப் பரிமாணங்களை தமிழ்ச் சமூகம் முழுமையாக உள்வாங்கிக் கொண்டிருக்கிறது என்று சொல்லமுடியாது. இப்போது அதுகுறித்த உரையாடல்கள் தமிழ்ச்

சூழலில் உருபெற்றுள்ளது. அவரை, அவர் பிறந்த சாதிக்காரர்கள் சாதியை அடையாளப்படுத்தி கொண்டாடுவது தமிழ்ச் சூழலின் அவலம்.

● - **தொல்லியல் துறையில் ஆர்வம் மிக்க நீங்கள் ஐராவதம் மகாதேவன், புலவர் செ.இராசு போன்ற ஆய்வாளர்கள் குறித்த உங்களது பார்வையைப் பதிவிடுக.**

○ - அறிஞர் ஐராவதம் மகாதேவன் அவர்களிடம் நேரடியான தொடர்பு எனக்கு இருந்தது. அவரது 'சிந்து சமவெளிக் குறியீடுகள்' குறித்த ஆய்வு முக்கியமானது. தொல் தமிழ் எழுத்து மரபை 'பிராமி' என்று பெயரிட்டு, ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாகக் கள ஆய்வு செய்து, நூற்றி இருபதுக்கும் மேற்பட்ட கல்வெட்டுகளை வெளியிட்டுள்ளார். தொண்ணூறுக்கும் மேற்பட்டவை பிராமிக் கல்வெட்டுகளாகும், எஞ்சியவை வட்டெழுத்து கல்வெட்டுகளாகும். ஐராவதம் அவர்களின் தொல் பழம் கல்வெட்டுகள் குறித்தான ஆய்வு, தமிழ்ச் சமூக வரலாற்றுக்குப் புதிய பங்களிப்புச் செய்துள்ளது. தமிழ்த் தொல்லியல் எழுத்து வரலாறு (Paleography) என்னும் துறைக்கு அவர் செய்த பங்களிப்பு மிக முக்கியமானது. அந்தக் கல்வெட்டுகளை வாசித்து, அதில் இருக்கக் கூடிய பாலி, பிராகிருதம் ஆகிய மொழிச்சொற்கள் சமண மதத்தோடு எவ்வகையில் தொடர்புடையதாக இருக்கிறது என்பதைப் பதிவு செய்துள்ளார். இதன் மூலம் வரலாற்றுக்கு முந்தையகாலத் தமிழ்ச் சூழலில் அவைதீகச் சமயச் செயல்பாடுகள் குறித்த குறிப்புகளைப் பெற முடிகிறது. சங்க இலக்கியப் பிரதிகளில் காணப்படும் பல பெயர்ச்சொற்கள் இவர் கண்டுபிடித்த பிராமி எழுத்துக்களில் இருப்பதை வெளிக்கொண்டு வந்தார். இதன் மூலம் சங்க இலக்கியப் பிரதிகளின் வரலாற்று முக்கியத்துவம் கூடியது. அவர் கண்டுபிடித்த தொண்ணூறுக்கும் மேற்பட்ட பிராமி எழுத்து கல்வெட்டுக்கள் மதுரையைச் சுற்றியுள்ள பகுதிகளில் கிடைத்தவை. மிக அதிகமாக மண் பாண்டங்களில் பொறிக்கப்பட்டவையாகவும் உள்ளன. அவை அமைந்திருக்கும் இடக்கிடக்கையை (topography) அடிப்படையாக வைத்து, வரலாற்றுக்கு முந்தைய காலத் தமிழ்ச் சமூகத்தின் சாதாரண மக்கள் எவ்வகை எழுத்தறிவுடையவர்களாக இருந்திருக்கிறார்கள் என்பதை ஆய்வு செய்து எழுதியுள்ளார். இதில் உலகின் பழம் நாகரிகங்களில் காணப்படும் எழுத்தறிவு மரபோடு ஒப்பிடும்போது தமிழ்ச் சூழல் மிகவும் வளர்ச்சி பெற்றதாக உள்ளது என்பது அவரது முடிவாகும்.

சிந்து சமவெளியில் கிடைத்த முத்திரைகளை ஆய்வு செய்து அவற்றில் உள்ள குறியீடுகளுக்கும் சங்க இலக்கியம் மற்றும் பிராமிக் கல்வெட்டுகள் ஆகியவற்றில் உள்ள செய்திகளுக்கும்

உள்ள தொடர்பை சுமார் 20 ஆய்வுக் கட்டுரைகள் வழி அவர் வெளிப்படுத்தியுள்ளார். ஐராவதம் அவர்களின் பிராமி எழுத்துக் குறித்தக் காலக் கணிப்பு மற்றும் அசோகன் பிராமியோடு தமிழ்நாட்டில் கிடைத்த பிராமி எழுத்துக்களை ஒப்பிட்டுப் பேசியமை ஆகியவை இன்றைய புதிய கண்டுபிடிப்புகளால், அவரது ஆய்வு மறு பரிசீலனைக்கு உட்பட்டு விட்டது. வரலாற்றுக்கு முந்தைய காலம் 250 தொடங்கி வரலாற்றுக்கு பிந்தைய காலம் 100 என்ற அவருடைய கணிப்பு இன்று வரலாற்றுக்கு முந்தைய காலம் 700 தொடங்கி பிந்தைய காலம் 100 என்று அண்மைக்காலத் தொல் ஆய்வுகள் மூலம் உறுதியாக்கப்பட்டுள்ளது.

புலவர் செ. ராசு அவர்கள் மண் சார்ந்த மரபுகளைக் குறிப்பாக இனக்குழு மரபு சார்ந்து, மக்களிடம் உள்ள பல்வேறு செய்திகளைக் கல்வெட்டு மற்றும் ஓலைச் சுவடிகளில் எவ்விதம் கண்டறிய முடிகிறது என்ற ஆய்வில் மிகச் சிறப்பாகச் செயல்பட்டவர். கல்வெட்டுகள், சுவடிகள் ஆகியவற்றில் காணப்படும் செய்திகள் ஒரு வட்டார வரலாற்றை உருவாக்குவதற்கு எவ்வகையில் ஆதாரங்களாக அமைகின்றன என்பதைத் திறம்பட ஆய்வு செய்தவர் செ. இராசு அவர்கள். இவரது ஆய்வுகள் மூலம் கொங்கு நாட்டுப் பகுதியின் பல்வேறு வட்டார வரலாறுகளை நாம் அறிந்துகொள்ள முடிகிறது.

● - **இருபத்தியோரம் நூற்றாண்டிலும் திருக்குறள் பொருத்தப்பாடு மிக்கதாக உள்ளதா?**

○ - திருக்குறள் தமிழ் மரபில் உருவாகிய, வேறு எதனுடனும் ஒப்பிட்டுச் சொல்ல முடியாத அரிய பிரதியாகும். அவைதீகச் சமய மரபுகள் உருவான காலங்களில் அம்மதங்கள் அறம் போதிப்பதை அடிப்படையாக கொண்டிருந்தன. அவ்வகையில் அவைதீக மரபை வலிமையாகப் பதிவு செய்தது திருக்குறள். இன்றைய சமூக வளர்ச்சி என்பது சமய மரபுகளைப் புறந்தள்ளி ஒரு புதிய சார்பற்ற மரபை (secular) முன்னெடுக்கும் சமூகமாக உருவாகி வருகிறது. மனித சமூகத்தின் இக்கருத்து மரபிற்கு, திருக்குறள் வலுவான சான்றுகளைத் தரும் பிரதியாக உள்ளது. இச் சமூகத்தின் மேல் வளர்ச்சிகளில் திருக்குறள் மேலும் மேலும் வாசிக்கக் கூடியப் பண்புகளைக் கொண்டிருக்கிறது. அது சமகாலத்தின் சார்பின்மைத் (secularism) தத்துவத்தை முன்னெடுக்கும் பிரதியாகும். இதில் பெண்கள் குறித்த சில பதிவுகள் சநாதன மரபு சார்ந்தவையாகவே இருப்பதைக் காண்கிறோம். அவற்றை விமர்சனத்திற்கு உட்படுத்தும் தேவையும் நமக்குண்டு.

● - **சமஸ்கிருத மேலாதிக்கம் தமிழ்ப் பண்பாட்டிற்குப் பெரும் கேடு விளைவிப்பதாகக் கருதுகிறீர்களா?**

○ - சமஸ்கிருத மொழியின் நேரடித் தாக்கம் என்பது

தமிழ்ச் சமூகத்தில் வரலாற்றுக் காலம் ஐநூறாம் ஆண்டு முதல் உருவாகிறது. இந்த ஆதிக்கம் முடியரசர்களால் தமிழ்ச் சூழலில் வளர்த்தெடுக்கப்பட்டது. அரசர்களோடு உடன் இருந்த பார்ப்பனர்கள் இதற்குக் காரணம். அந்தக் காலம் தொடங்கி தமிழகப் பக்தி மரபு, கலை இலக்கிய மரபுகள், வாழ்க்கையின் பல்வேறு சடங்குகள், நம்பிக்கைகள் ஆகிய அனைத்தும் சமஸ்கிருத மயமான சூழல் உருப்பெற்றது. இது தமிழில் புதிய மணிப்பிரவாள மொழி நடையைக் கட்டமைத்தது, புதிய கர்நாடக இசை மரபை உருவாக்கியது, புதிய பரத நாட்டியத்தை உருவாக்கியது. சங்க இலக்கியம், தொல்காப்பியம், சிலப்பதிகாரம் ஆகியவற்றில் இருந்த மரபுகள் மடைமாற்றம் பெற்றன. இந்த வகையில் தமிழ்ப் பண்பாட்டின் சீர்குலைவிற்குச் சமஸ்கிருத மொழி ஆதிக்கம் மூலமாகியது. இதற்கு எதிரான போர் 1920களின் இறுதிக்காலம் தொடங்கி நடைமுறைக்கு வந்தது. தனித்தமிழ் இயக்கம், தமிழிசை இயக்கம், இந்தி எதிர்ப்பு இயக்கம் போன்ற பல்வேறு பண்பாட்டு இயக்கங்கள் சமஸ்கிருத மரபிற்கு எதிரான போரை நிகழ்த்தத் தொடங்கின. அதில் சுயமரியாதை இயக்கம் முக்கியப் பங்காற்றியது. இராமாயண எதிர்ப்பு என்பதை அதன் குறியீடாகப் பார்க்கலாம். இப்போது நடைபெறும் சனாதன எதிர்ப்புப் போரும் அதன் தொடர்ச்சிதான்.

● - **தமிழகக் கல்விப் புலம் என்பது வணிகமயமாகிவிட்டதா? இந்த விரும்பத்தகாத சூழலிலிருந்து மீள உங்களது பரிந்துரைகளைக் குறிப்பிடவும்.**

○ - 1990களில் தாரளமயம் மற்றும் தனியார்மயம் என்பது சமூகத்தின் பல்வேறு தரப்புக்களிலும் நடைமுறைபடுத்தப்பட்டது. இதன் விளைவாகக் கல்வியில் தனியார்மயத்தின் ஆதிக்கம் கூடியுள்ளது. இதன் விளைவுகள் ஈராயிரம் ஆண்டுகள் தொடங்கி அரசு சார்ந்த கல்வி நிறுவங்கள் ஒரு மடங்கு என்றால் தனியார் கல்வி நிறுவனங்கள் நான்கு மடங்காக உருப்பெற்றுள்ளது. இது பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழகம் எனப் பல வடிவங்களிலும் உருவாகியுள்ளது. இங்கு பயிலும் மாணவர்களிடம் பெரும் தொகை கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. பணியாற்றும் ஆசிரியர்களுக்கு மிகக் குறைந்த ஊதியம் கொடுக்கப்படுகிறது. இவ்வகையில் குறைந்த செலவில் பெரும் கொள்ளையடிக்கும் வணிகமாக உருப்பெற்றுவிட்டன. இதனைத் தடுக்க வேண்டியது அரசின் கடமை. மாறாக, அரசு நிறுவனங்களும் வணிக நோக்கில் செயல்படக் கூடிய அவலம் ஏற்பட்டுள்ளது. இதற்கான புரிதல் அண்மையில் உருப்பெற்று வருகிறது. வலிமையான போராட்டத்தின் மூலமே இதனை எதிர்கொள்ள முடியும்.

● - **பொதுவுடைமைக்கு இனி எதிர்காலமில்லை எனும் பரப்புரை குறித்து உங்களது எதிர் வினை**

○ - இது ஒரு வழக்கமான, எவ்வித அடிப்படையுமற்ற மார்க்சியத் தத்துவத்தின் மீது ஒவ்வாமை உள்ளவர்களின் கூக்குரல். மார்க்சியம் இப்படியெல்லாம் மறைந்துபோகிற ஒரு மதம் போன்ற கருத்தியல் இல்லை. அது சமூகத்தின் ஒவ்வொரு கால மாற்றங்களைப் புரிந்துகொள்ளவும் அதற்கேற்றவாறு செயல்படவும் கற்பிக்கும் மிக நுண்ணிய தத்துவ அறிவியல். அதைப் புரியாதவர்கள் இவ்வகையான பரப்புரையில் ஈடுபடுவது இயல்பு. மார்க்சியக் கருத்து நிலை கொண்டவர்கள் ஆட்சி அதிகாரத்திலிருந்து வெளியேறுவதை இவர்கள் மார்க்சியம் அழிந்துபோனதாகக் கருதும் அறியாமை உடையவர்களாக இருக்கிறார்கள்.

● - **உங்கள் நூலகத்தைப் பற்றிச் சொல்லுங்கள்.**

○ - சிறு வயது முதல் புத்தகங்கள் மீது ஈடுபாடு கொண்டே வளர்ந்தேன். பள்ளியில் படிக்கும்போதே அருகில் உள்ள சிறு நகரமான தஞ்சாவூருக்குச் சென்று தீப்பெட்டித் திருக்குறள் போன்று நிறைய வாங்கியிருக்கிறேன். கல்லூரி வந்தபொழுது இடதுசாரி மனநிலைமைக்கு ஆட்பட்ட இளைஞனாக இருந்ததால், நியூ செஞ்சுரி புத்தகக் கடைகளில் கிடைக்கும் சிவப்புப் புத்தகங்கள் மீது தீராத ஆர்வம் ஏற்பட்டது. அவை விலை மிகவும் குறைவு. அவற்றை வாங்கி சேகரித்துப் படிக்கும் பழக்கம் 1970 களில் எனக்குள் வந்து சேர்ந்தது. அந்தக் காலம் தொடங்கி தமிழில் வெளிவரும் மாற்று மரபான சிறு பத்திரிக்கைகளைத் தேடி, படிக்கும், சேகரிக்கும் பழக்கம் உருவானது. 1978 இன் இறுதியில் இருந்து சென்னையில் வசிக்கும் வாய்ப்பு பெற்றதானால், இங்கிருக்கும் அனைத்து பதிப்பகங்கள், பழைய புத்தகக் கடைகள் ஆகியவற்றைத் தொடர்ச்சியாக பார்க்கும் பழக்கமும் ஒட்டிக்கொண்டது. 1985 முதல் சென்னைப் பல்கலைக் கழகத்தில் ஆசிரியனாகச் சேர்ந்ததால் பொருளாதார ரீதியாகவும் புத்தகம் வாங்குவதற்கு சிக்கல் இல்லாமலும் இருந்தது. இப்படித்தான் எனது புத்தகச் சேகரிப்பு மற்றும் வாசிப்பு நிகழ்ந்து கொண்டிருந்தது. 1980 தொடக்கம் 2004 வரை இவைகளைப் பாதுகாப்பதில் பெரும் சிரமம் ஏற்பட்டது. பலமுறை புத்தகங்கள் மழையில் நனைந்து வீணாகின. நல்லவேளையாக 2004ஆம் ஆண்டு பல்கலைக்கழக நிதி உதவியின் மூலம் ஒரு தனித்த வீடு உருவாக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. அதனால் புத்தகங்களுக்கான ஓர் இடம் கிடைத்தது. நான் வாங்கும் சிறு பத்திரிக்கைகளை அவ்வபோது கட்டடம் செய்து வைப்பதற்கு திருவல்லிக்கேணியில் கோவிந்தன் என்ற ஒரு பெரியவர் உதவினார். பின்னர் என் மாணவர் பஞ்சாட்சரம்

உதவினார். இப்படித்தான் 1970 முதல் இன்றையக் காலம் வரை சுமார் இரண்டாயிரம் சிறு பத்திரிக்கைகளின் தொகுப்பு என் நூலகத்தில் இடம்பெறும் வாய்ப்பைப் பெற்றுள்ளது. 1977 முதல் சென்னையில் நடைபெறத் தொடங்கிய புத்தகக் கண்காட்சியில் முதல் இரண்டு ஆண்டுகள் தவிர பிற அனைத்துக் கண்காட்சியிலும் கலந்து கொள்ளும் வாய்ப்பைப் பெற்றவன் நான். அதன் மூலம் ஒவ்வொரு ஆண்டும் வரும் புதிது புதிதான நூல்களை தெரிவுத் செய்து வாங்கும் வாய்ப்புக் கிடைத்தது. எனக்குக் கிடைத்த ஊதியம் அதற்கு உதவி செய்தது. பழைய புத்தகக் கடைகளில் கிடைத்த மிக அரிய நூல்கள், பெரும்பாலான முதல் பதிப்புகள் என் சேகரிப்பில் உள்ளன. இப்படி உருவான **சுமார் இருபதாயிரம் நூல்கள், இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட சிற்றிதழ்கள், ஐநூறுக்கும் மேற்பட்ட மையொற்றுப் படி நூல்கள் ஆகியவை நூலகத்தில் இடப்பெறத் துவங்கியது.** 2014 இல் நான் பணி நிறைவு பெற்றபோது சுமார் முப்பது இலட்சம் ரூபாய் எனக்குக் கிடைத்தது. எனது குழந்தைகளின் படிப்புச் செலவிற்கான வங்கிக் கடன்களில் பாதித் தொகை தீர்ந்தது. எஞ்சியுள்ள தொகையில் எங்கள் வீட்டில் உள்ள நால்வரும் நூலகத்தை உருவாக்குவது என்று முடிவு செய்தோம். திறந்த வெளியாக இருந்த வீட்டின் இரண்டாவது தளத்தை நவீனக் கட்டிடக் கலைஞர் மகேஷ் அவர்கள் உதவியோடு ஐரோப்பியப் பாணியிலான நூலகத்தை உருவாக்கினோம். மகேஷ் மிக நுண்ணிய அழகியல் மிக்க கட்டக் கலைஞர். நூலகத்திற்கான ஒரு கட்டட வரைவை உருவாக்கி அதை அமைத்துத் தந்தார். இதனால் தொடர்ச்சியாக வாசிப்பதற்கான மனநிலைமை எனக்குக் கிடைக்கிறது. மங்கையும் இந்த நூலகத்தை மிகச் சிறப்பாகப் பயன்படுத்துகிறார். அரங்கம் தொடர்பான நூல்கள் ( theatre) நூலகத்தில் உள்ளன. தமிழ் இலக்கியம், இலக்கணம் ஆகியவற்றின் காலவரிசையிலான பதிப்புகளும் எங்கள் நூலகத்தில் இருக்கிறது. தமிழின் மிக முக்கியமான ஆளுமைகளின் அனைத்து நூல்களும் இடம்பெற்றிருக்கின்றன என்று சொல்ல முடியும். தமிழ்ச் சமூக வரலாறு தொடர்பான ஆங்கில நூல்கள், தொல்காப்பியத்துறை சார்ந்த நூல்கள், மார்க்சியம், பெரியாரியம், அம்பேத்கரியம் சார்ந்த மூல நூல்கள், இலங்கையில் வெளியிடப்படும் நூல்கள், அகராதிகள் எனப் பல நிலை சார்ந்த நூல்கள் உள்ளன. இவ்வகையில் **சுமார் இருபத்தியைந்தாயிரம் பிரதிகளோடு இந்த நூலகம் இருக்கிறது.** நானும், மங்கையும் எனது மாணவர்களும் இதனை மிக அதிகமாக நுகர்பவர்களாக இருக்கிறோம். வரும் காலத்தில் இதன் நுகர்வோர் பரப்பை விரிவுபடுத்தும் வேலையை எனது மகள் பொன்னி அவர்கள் செய்வார்கள் என்ற நம்பிக்கை உண்டு.

◆◆◆

# தமிழ்ஒளி நூல் பட்டியல்

| இலக்கியப் படைப்புகள் | எழுதப்பட்ட ஆண்டு | பதிப்பித்த ஆண்டு |
|---|---|---|
| **காவியங்கள்** | | |
| கவிஞனின் காதல் | 1944 | 1947 |
| நிலைப்பெற்ற சிலை | 1945 | 1947 |
| வீராயி | 1947 | 1947 |
| மேதின ரோஜா | 1952 | 1952 |
| விதியோ? வீணையோ? | 1954 | 1961 |
| மாதவி காவியம் | 1957-58 | 1995 |
| கண்ணப்பன் கிளிகள் | 1958 | 1966 |
| புத்தர் பிறந்தார் | 1958 | 1966 |
| **கவிதைகள்** | | |
| நீ எந்தக் கட்சியில் | 1948 | 1948 |
| மேதினமே வருக! | 1948 | 1952 |
| தமிழ்ஒளியின் கவிதைகள் | 1954-64 | 1966 |
| மக்கள் கவிதைகள் | 1954-58 | 1987 |
| **சிறார் பாடல்கள்** | | |
| பாடு பாப்பா | 1948-62 | 1967 |
| பாப்பா பாட்டு | 1950 | 1950 |
| அந்தி நிலா | 2001 | |
| (சிறார் பாடல்கள் அந்திநிலா என்பதாகத் தொகுக்கப்பட்டுள்ளது) | | |
| **ஆய்வுகள்** | | |
| சிலப்பதிகாரம் நாடகமா? காவியமா? | 1959 | 1959 |
| திருக்குறளும் கடவுளும் | 1959 | 1959 |
| தமிழும் சமஸ்கிருதமும் | 1950 | 1960 |
| தமிழர் சமுதாயம் | 1951 | 1962 |
| **சிறுகதைகள்** | | |
| சாக்கடைச் சமுதாயம் | 1948-49 | 1952 |
| மாமாவின் சாகசம் (குறுநாவல்) | 1952 | 1952 |
| அறிவூட்டும் 100 | 1960 | 1961 |
| **அற்புதக் கதைகள் (இக்கதைகள் வனமலர்கள் என்பதாகத் தொகுக்கப்பட்டுள்ளது)** | | |
| குருவிப்பட்டி | 1954-60 | 1961 |
| உயிரோவியம் | 1948-49 | 1989 |
| **நாடகங்கள்** | | |
| கவிஞர் விழா (ஓரங்க நாடகம்) | 1947 | 1947 |
| சிற்பியின் கனவு | 1944 | 1945 |
| சேரன் செங்குட்டுவன் | 1946 | .... |
| தோழர் ஸ்டாலின் | 1950 | .... |

கவிஞர் தமிழ்ஒளி வாழ்ந்த காலத்தில் அவரின் படைப்புகளை வெளியிட்டவர்கள்:

திரு. மா.சு. சம்பந்தன், முத்தமிழ் நிலையம், திரு. மே. சக்கரவர்த்தி நயினார், புதுயுக நிலையம், திரு. த. கோவிந்தன்.. முதலானோர்.

கவிஞர் தமிழ்ஒளியின் படைப்புகளில் சில ஒன்றுக்கும் மேற்பட்ட பதிப்பகங்களால் வெளியிடப்பட்டுள்ளது.

கவிஞர் தமிழ்ஒளியின் படைப்புகள் பல அச்சில் வராதவையும் உள்ளன.

# தோழர் தமிழ்ஒளி: காலமும் கருத்தும்

**பேராசிரியர் வீ.அரசு**

மார்க்சியத் தத்துவத்தின் மீது ஈடுபாடு கொண்டு செயல்பட்ட ம.சிங்காரவேலர் (1860-1946), ப.ஜீவானந்தம் (1908-1963) ஆகிய தமிழ்நாட்டு மனிதர்களின் வரிசையில் விதந்து பேச வேண்டிய மனிதர்களில் ஒருவர் கவிஞர் தமிழ்ஒளி என அறியப்படும் தோழர் தமிழ்ஒளி ( 1924-1965) ஆவார். இந்தத் தோழர் பற்றிய விரிவான அறிமுகம் மற்றும் புரிதல் தமிழ்ச் சூழலில் இருக்கிறது என்று கூற முடியவில்லை. அந்தக் கண்ணோட்டத்தில், அவரது 'காலமும் கருத்தும்' எவ்வாறு தொழிற்பட்டது என்பது குறித்த பதிவாக இதனைக் கருதுகிறேன். தமிழ்ஒளியைப் புரிந்துகொள்ள அவரது நாற்பது ஆண்டுகால வாழ்க்கை நிகழ்வுகளையும் அதனை அவர் எவ்வாறு எதிர்கொண்டார் என்ற விவரங்களையும் பதிவு செய்வது அவசியம். அவர் சமூகத்தை எதிர்கொண்ட முறைமைகளை, அவரது பல்வேறு ஆக்கங்களின் மூலமே அறிந்து கொள்ள முடிகிறது. அவரது தன்விளக்கக் குறிப்பாக, தமது இறுதிக் காலத்தில் (1961) எழுதி வெளியிட்ட எட்டு பக்கக் குறிப்பான **"போராடும் மனிதனின் புதிய உண்மைகள்"** என்ற பதிவும் நமக்கு உதவுகிறது. அவரது இந்தக் குறிப்பு மற்றும் அவரது ஆக்கங்களைக் கால ஒழுங்கில் வாசிக்கும்போது கிடைக்கும் விவரணங்களைக் கொண்டு தோழர் தமிழ்ஒளியைப் பேச இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்கிறேன்.

தோழர் தமிழ்ஒளி வாழ்க்கையைப் பின்கண்ட வகையில் பதிவு செய்யலாம். தமிழ்ஒளி தான் பிறந்த ஆண்டு 1925 என்று பதிவு செய்துள்ளார். ஆனால், பெரியவர் செ.து.சஞ்சீவி (1929-2023) அவர்களின் குறிப்பு சார்ந்து 1924 என்றே அறியப்பட்டுள்ளது. தமிழ் ஒளி நினைவு மறதியால் அவ்வாறு பதிவு செய்திருக்கலாம்.

முதல் கட்ட அவரது வாழ்க்கையை 1924-1944 என்று வரையறை செய்யலாம். பாண்டிச்சேரி குக்கிராமத்தில் பிறந்து வளர்ந்த ஒடுக்கப்பட்ட சமூக இளைஞன்; பாரதிதாசனோடு தொடர்புகொண்டு வாழ்ந்த காலம்; மற்றும் அவரது அரசியல் ஈடுபாடு என்பதாக இந்தக் காலம் அமைகிறது.

இரண்டாம் கட்ட வாழ்வாக 1945-1954 என்ற காலப்பிரிவைச் சொல்லமுடியும். இந்தக் காலம் முழுவதும் பொதுவுடைமை இயக்கத்தில் தொண்டனாக இருந்து செயல்பட்ட காலம்.

இறுதிக் கட்ட வாழ்க்கை என்பது 1955-1965 என்று கணிக்கலாம். சுதந்திர மனிதனாக வாழ்ந்து பல்வேறு ஆக்கங்களையும் உருவாக்கிய காலமாக இதனைக் கருத்தில் கொள்ள முடிகிறது.

♦♦♦

மேற்குறித்த காலப்பாடு சார்ந்து தோழர் தமிழ்ஒளி அவர்களின் வாழ்க்கையை, அவரது செயல்களை சற்று விரிவாகப் பதிவு செய்வோம். அவர் தன்னைப் பற்றிப் பதிவு செய்துள்ள குறிப்பு கீழ் வருமாறு அமைகிறது.

“1949 இல் **“ஜனயுகம்”** என்ற மார்க்சிய தத்துவ மாதப் பத்திரிக்கை (Theoritical Monthly) ஒன்றை என் பெயரிலேயே தொடங்கி நடத்தினேன். அப்பத்திரிக்கையில் பதிந்துகொண்டபோது நான் கொடுத்துள்ள வாக்குமூலத்தை, இன்று மீண்டும் தெரிவிக்கும் நிலையில் உள்ளேன். நான் பிறந்த ஊர்: ஆடூர், குறிஞ்சிப்பாடி, தெ.ஆ.மாவட்டம்; பெற்றோர்: சின்னசாமி, செங்கேணி அம்மாள்; பிறந்த ஆண்டு: 1925; பெற்றோர் இட்ட பெயர். விஜயரங்கம். என் நூற்களில் பதிவான பெயர் தமிழ்ஒளி (என்ற) கவிஞர் தமிழ்ஒளி.” (போராடும் மனிதனின் புதிய உண்மைகள்: (24.2.1961:6-7)

இவ்வாறு இன்றைய பாண்டிச்சேரி ஒன்றியப் பகுதியில் பிறந்து வளர்ந்த தமிழ் ஒளி அவரது பள்ளிப்படிப்பை அருகில் உள்ள சிற்றூரிலும் உயர்நிலைப் பள்ளிப் படிப்பை பாண்டிச்சேரி நகரத்திலும் முடித்திருக்கிறார். அந்தக் காலம் என்பது பாவலர் பாரதிதாசன் (1891-1964) புகழ்பூத்து வாழ்ந்த காலம் (1928-1948). அவரது ஆக்கங்களை வளர்ந்து வந்த சுயமரியாதை இயக்க இளைஞர்கள் வாசித்து, எழுச்சி பெற்ற காலம். சுயமரியாதை இயக்கம் திராவிடர் கழகமாக (1944) அடையாளம் பெற்ற காலம். இக்காலங்களில் சுயமரியாதை இயக்கக் கருத்துநிலைகளில் ஈடுபாடு கொண்ட இளைஞனாகவே தமிழ்ஒளி தமது பொதுவாழ்க்கையைத் தொடங்கி யிருக்கிறார். பாரதிதாசனோடு நெருங்கிய தொடர்பில் இருந்தார் என்றும் அவர் குறித்தப் பதிவுகளில் பலரும் குறிப்பிட்டுள்ளனர். பாரதிதாசனின் பாடுபொருள், கவிதைமொழி ஆகியவை தமிழ் ஒளியின் ஆக்கங்களில் ஆழமான தாக்கம் செலுத்தியுள்ளதை வாசிக்கும் எவரும் எளிதில் அறியலாம். பாரதிதாசனுக்கும் தமக்கும் உள்ள உறவு குறித்து, தமிழ்ஒளி வகுப்புத் தோழராக இருந்த பாவலர் ச.பாலசுந்தரம் (1924-2007) அவர்களிடம் பகிர்ந்து கொண்டதை, அவர் தாம் எழுதிய நினைவலைகள் (2008) எனும் தமது வாழ்க்கை வரலாற்று நூலில் பின்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

“முதலாவது ஆண்டில் என் உடன் படித்து வந்தவர்களுள் புதுச்சேரியிலிருந்து வந்த விஜயரங்கம் என்பவர் ஒருவர். தமிழ்ஒளி என்று புனைபெயர் வைத்துக்கொண்டு கிழமை இதழ்களுக்குக் கவிதை கட்டுரை எழுதி வந்தார். தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர். எளிய குடும்பத்தவர். கையெழுத்து மிக அழகாக எழுதுவார். எப்பொழுதும் ஏதாவது கவிதை எழுதிக்கொண்டிருப்பார்.

ஆசிரியர்கள் பாடம் நடத்தும்போது அதில் அவ்வளவு ஈடுபாடு இருக்காது. புதுமைப்பித்தன், ரகுநாதன் போன்ற எழுத்தாளர்களின் கவிதைகளை விமர்சிப்பார். என்னிடத்தில் ஈடுபாடும் அன்பும் கொண்டார். எனக்கு அவரிடத்தில் வியப்புக் கலந்ததொரு ஈடுபாடு. ஒரு நாள் கேட்டேன், “உங்களுக்கு இவ்வளவு தமிழ் உணர்வும் கவிதைத் திறனும் எப்படி வந்தன?” அவர் உடனே, “பாரதிதாசனால்தான். நான் அவரிடம் அவர் எழுதும் கவிதை கட்டுரைகளைப் படியெடுக்கும் உதவியாளராக இருந்தேன். அவற்றைப் படிக்கும்போது அதைப் போலக் கற்பனை செய்து எழுதிப் பார்ப்பேன். அதே மெட்டில், அதே பாவில் எழுதிப் பார்ப்பேன். அவர் என்பால் ஒரு மகனைப் போல் அன்பு செலுத்தினார். நான் எழுதியதைப் படித்துப் பார்த்துள்ளார். ஒரு நாள் ‘விசயரங்கம் உன்னிடம் கவிதை உணர்வும், திறனும் உள்ளன. போதிய தமிழறிவு பெற்றால் ஒரு நல்ல கவிஞனாக எழுத்தாளனாக வரலாம். உன்னைத் தமிழ்ப் படிக்க வைப்பது என் பொறுப்பு. தஞ்சாவூர் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தில் உள்ள புலவர் கல்லூரிக்கு உன்னை அனுப்பி வைக்கிறேன்’ என்று தாளாளருக்கு அறிமுகக் கடிதம் கொடுத்து அனுப்பி வைத்தார்” என்றார். எங்கள் நட்பு நெருக்கமாயிற்று. அவர் எழுதுவதைப் பார்த்து நானும் எழுத முற்பட்டேன். தமிழ்ஒளி இசைப்பாட்டும் எழுதுவார். எண்சீர் விருத்தம் சரளமாக எழுதுவார். பாட்டு எழுதுவதற்குச் சிந்தனை தான் முக்கியம். அரசியலாக இருந்தாலும் சமூகம் பற்றியதாக இருந்தாலும் அவற்றிலுள்ள குறை, நிறைகளை ஆய்ந்து பார்க்க வேண்டும். வாழ்த்துப்பா பாடுவது பெரிய திறமையாகாது என்பார். நான் சிலவற்றை எழுதிக்காட்டும் போது மகிழ்ச்சியடைவார்.”

இவ்வகையில் 1943-44 வாக்கில் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தில் வித்வான் படிப்பிற்கான நுழைவு ஆண்டில் (Preliminary Class) மட்டும் படித்துள்ளார். பின்னர் சென்னைக்கு வந்துவிட்டதை அறியமுடிகிறது. ‘தமிழ்ஒளி கவிதைகள்’ (2018) எனும் முழுத்தொகுப்பு நூலில் 1944 முதல் அவரது கவிதைகள் தொகுக்கப்பட்டுள்ளன. தொடக்க காலத்தில் அவரது கவிதைகள், திராவிடநாடு, குடியரசு, பிரசண்ட விகடன், தமிழ் முரசு, கவிமலர், புது வாழ்வு ஆகிய திராவிட இயக்கச் சார்பான இதழ்களில் வெளிவந்துள்ளதைக் காண்கிறோம். பின்னர் பொதுவுடைமை இயக்கத்தில் அவர் செயல்பட்ட போதும், போர்வாள் என்ற திராவிட இயக்க இதழ்களிலும் தமது கவிதைகளை வெளியிட்டுள்ளார். பாவேந்தரின் குயில் இதழிலும் இக்காலங்களில் எழுதியுள்ளார். திராவிடநாடு (1944) இதழில் வெளிவந்துள்ள இவரது கவிதை பின்வருமாறு பேசுகிறது.

**“தமிழனுக்கே தமிழ்நாடு இதைத்**
**தடுக்க யார் செய்தாலும் கேடு**
**சமர்செய்து வீழ்த்துவீ ரின்றே மேலும்**
**சாடுந் திறல்கொண்டு நின்றே!”** (2018:17)

இவ்வகையில் அன்றைய திராவிடர் கழகம் முன்னெடுத்த குறிப்பாக, தந்தை பெரியார் பேசிய ‘தமிழ்நாடு தமிழருக்கே’ எனும் முழக்கத்தை தமது கவிதைகளில் வெளிப்படுத் துவதைக் காணலாம். இவ்வகையில் 194447 காலங்களில் அவர் எழுதிய கவிதைகளில், சுயமரியாதை இயக்கச் சிந்தனைகளும் பொதுவுடைமை இயக்கச் சார்பான கருத்துக்களும் வெளிப்படுத்துவது இயல்பாக இருந்த காலம் அது. இந்தப் பின்புலத்தில் சுயமரியாதை இயக்கக் கருத்து மரபில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு, படிப்படியாக இடதுசாரி இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டவராகத் தமிழ்ஒளி அவர்களை நாம் இனம் காணமுடியும். திராவிட இயக்க இதழான ‘போர்வாள்’ (1947) இதழில் தமிழ்ஒளியின் “வந்த விடுதலை யாருக்கடா?” எனும் தலைப்பில் எழுதிய கவிதையின் ஒருபகுதி.

**பார்ப்பானின் கொட்டம் அடங்கவில்லை கவி**
**பாரதி எண்ணமும் கூடவில்லை நல்ல**
**தீர்ப்பினை மக்கள் அடையவில்லை வட**
**தேச விடுதலை யாருக்கடா?**

**வெள்ளையன் ஓடும் நேரத்தில் அவன்**
**விட்டுச்செல்லும் ஆட்சி மேடையிலே பகல்**
**கொள்ளைக் கடைக்காரர் ஏறுகிறார் இந்தக்**
**குருட்டு விடுதலை யாருக்கடா?**

**பஞ்சைத் தொழிலாளர் ஓங்கவில்லை அவர்**
**பார்வையில் சோகமும் நீங்கவில்லை தமிழ்**
**நெஞ்சந்துடிக்குது நீதியில்லை எனில்**
**நேர்ந்த விடுதலை யாருக்கடா?**

**பொதுவில் உடைமைகள் ஆகிடவும் பணப்**
**பூதங்கள் ஆட்சியில் ஏகிடவும் இருள்**
**மதங்கள் எலாம்ஓடி பட்டிடவும் எழில்**
**வாய்ந்த விடுதலை வேண்டுமடா!** (2018:39-40)

இந்தக் கவிதை மூலம் தமிழ்ஒளி எனும் மனிதர் கொண்டிருந்த கருத்து நிலைபாடுகளைப் புரிந்து கொள்ள முடியும்.

♦♦♦

தமிழ்ஒளி 1946-47 ஆம் ஆண்டுகளில் பொதுவுடைமைக் கட்சியோடு தன்னை இணைத்துக் கொள்கிறார். இந்தப் பின்புலத்தில் தமிழ்ஒளி ஆக்கங்களில் அதற்கான விரிவான பதிவுகள் இடம்பெற்றுள்ளதைக் காணமுடிகிறது. அந்த நிகழ்வுகள் குறித்து ஜெயகாந்தன்(1934-2015) பதிவு பின்வருமாறு அமைகிறது.

பாரதிதாசனிடம் ஒரு மாணாக்கனாய் நேர்முகப் பயிற்சி பெற்றவர். பாரதிதாசனின் மகன் மன்னர்மன்னனுக்கு விளையாட்டுத் தோழர். கரந்தைத் தமிழ்ச் சங்கத்தில் பயின்றவர்; பெரும் புலவர். தமிழ் மொழியில் அவர் அறியாத் துறை இல்லை. 1945இல் திராவிடர் கழகத்தின் தீவிரக் கருஞ்சட்டை வீரராய்த் திகழ்ந்த உறுப்பினர்.

1947ஆம் ஆண்டு சுதந்திர தினத்தன்று கம்யூனிஸ்டுக் கட்சி ஆபீசுக்குக் கவிஞர் தமிழ் ஒளியும் கவிஞர் குயிலனும் வந்தபோது முதலில் நான் அவர்களைச் சந்தித்தேன்.

கவிஞர் தமிழ் ஒளி பெரியார் அவர்கள் ‘சுதந்திர நாளைத் துக்க நாளா’கக் கொண்டாடுமாறு கூறிய கூற்றை ஏற்க முடியாதவராய் தி.க.வுடன் பிணக்கம் கொண்டு, ஜீவாவிடம் வந்தார். அதனடியாக அவர் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினராகவும் மாறினார். இக்காலத்தில் நான் கட்சி அலுவலகத்தில் வாழ்ந்துகொண்டிருந்தபடியினால் அடிக்கடி கவிஞரைச் சந்தித்துப் பழக நேர்ந்தது”.

1947 ஆம் ஆண்டு ‘தாய்நாடு’ எனும் இதழில் எழுதிய கவிதை இந்தியாவில் இடதுசாரி இயக்கம் எவ்வாறு கால்கொண்டுள்ளது, அதன் வரலாற்றுப் பின்புலங்கள் எவையெவை? என்பவற்றையெல்லாம் கவிதையாகப் படைக்கிறார். அந்தப் பகுதி பின்வருமாறு அமைகிறது.

**தஞ்சையிலே நெல்லையிலே கோவை தன்னில்**
**தலைநிமிர்ந்த கோனேரி வத்தி ராவில்**
**வெஞ்சமரில் இறங்கிவிட்ட தொழிலா ளர்கள்**
**விடுக்கின்ற அறிக்கையிது! தமிழ்நாட் டாரின்**
**நெஞ்சத்துக் குமுறல்மேல் ஆணை வைத்தே**
**நிகழ்த்துகிறோம்! இப்போதே நடையைக் கட்டு!**
**அஞ்சிடுவோம் எனநினைத்தா சுட்டுக் கொன்றே**

**அடக்குமுறை நடத்துகிறாய்? துச்ச மன்றோ?.......**

....................................

**திருவாங்கூர், சிரக்கலிலே, குருதி தோய்ந்த**
**சிவப்புநிறக் கொடியேற்றிப் போராட்டத்தை**
**உருவாக்கி விட்டவர்மேல் ஆணை வைத்தே**
**உலகறியச் சொல்கின்றோம்! ஆங்கிலேய**
**துருப்பிடித்த ஏகாதிபத்தியத்தின்**
**சுரண்டுதலை, உள்நாட்டு முதலாளித்வ**
**கருங்காலிக் கூட்டத்தை ஒழிப்போ மென்றே**
**கங்கணத்தைக் கட்டுகிறோம்! முழங்கு சங்கே!** (2018:29)

இதன்மூலம் தஞ்சை, நெல்லை, கோவை, மற்றும் ஆந்திரப் பகுதிகளில் செங்கொடி இயக்கம் செயல்பட்ட வரலாற்றைத் தமது கவிதையில் பதிவுசெய்திருக்கிறார். இப்பகுதிகளில் இடதுசாரி இயக்கம் வலுவாக செயல்பட்டது என்பது வரலாறு. அந்த வரலாற்றின் இலக்கியப் பதிவாகவே தமிழ்ஒளியின் கவிதைகள் உருப்பெற்றுள்ளன. இவ்வகையில் சுயமரியாதை இயக்க மரபிலிருந்து விடுபட்டு இடதுசாரி இயக்கத்திற்குள் தம்மை ஈடுபடுத்திக்கொண்ட தமிழ்ஒளியை அவரது கவிதைகள் காட்டுகின்றன.

1947 ஆம் ஆண்டில் கம்யூனிஸ்டு கட்சித் தோழராகச் செயல்பட்டவர் தோழர் ஊ.கோவிந்தன். அவர் புதுயுகநிலையம்எனும் பதிப்பகத்தைத் தொடங்கினார். அதன் முதல் வெளியீடாக ‘நிலைபெற்ற சிலை’ எனும் தமிழ்ஒளியின் குறுங்காவியத்தை வெளியிட்டார். தமிழ்ஒளியின் ‘வீராயி’ எனும் குறுங்காவியத்தைப் பெரியவர் மா.சு.சம்பந்தம் அவருடைய தமிழர் பதிப்பகத்தின் மூலம் வெளியிட்டார். அவைதீக மரபில் செயல்பட்டுச் சமண சமய ஈடுபாடு உடையவராக வாழ்ந்தவர் பேராசிரியர் மே.சக்கரவர்த்தி நயினார். அவர் தமது முத்தமிழ்ப் பதிப்பகம் மூலம் “கவிஞனின் காதல்” எனும் குறுங்காவியத்தை வெளியிட்டார். இவை மூன்றும் 1947 இல் வெளிவந்தவை. இந்த மூன்று காவியங்களும் சாதிய ஒடுக்குமுறை, அதிகார வெறி, பொதுவுடைமைக் கருத்துநிலை ஆகிய பொருண்மைகளைக் கொண்டவை. ஒடுக்கப்பட்ட மக்களைக் கதைப் பாத்திரங்களாகக் கொண்டவை ‘வீராயி’ போன்ற ஆக்கங்கள். இவ்வகையில் இவரது தொடக்ககால ஆக்கங்கள் என்பது, இடதுசாரி இயக்கத் தோழர்களாலும் சுயமரியாதை இயக்கச் சார்பாளர்களாலும் வெளி யிடப்பட்டதை அரசியல் கருத்துநிலை சார்ந்த செயல்களாகவே புரிந்துகொள்ள முடிகிறது. இந்தக் காலத்தில்தான் “ஜனசக்தி பிரசுரம்” கம்யூனிஸ்டுகளால் உருவாக்கப்பட்ட காலம். வெ.நா.

திருமூர்த்தி அவர்களின் **'கம்யூனிஸ்ட் பாடல்கள்'** எனும் சிறுவெளியீடு 1946இல் வெளியிடப்பட்டது. அதற்கு வ.ரா. முன்னுரை எழுதியுள்ளார். இதில் 25 பாடல்கள் 32 பக்கங்களில் இடம்பெற்றுள்ளது. இடதுசாரிக் கவிஞர்களின் அச்சிடப்பட்ட முதல் கவிதை நூல் இது என்று சொல்லலாம். 1930கள் முதல் ஜீவா 'ஜனசக்தி' போன்ற இதழ்களில் பாடல்களை எழுதிவந்தாலும் 1962 இல் தான் தொகுத்து நூல் வடிவம் பெற்றது. இந்தக் காலங்களில் உருவான 'சோவியத் கழகம்' என்ற அமைப்பிற்கு திரு.வி.க. தலைமையேற்றார். இச்சூழலில் இடதுசாரி மரபுசார்ந்த ஆக்க முயற்சிகளில் தமிழ்ஒளி அவர்களின் முன்னோடி முயற்சிகளை இனம் காண முடிகிறது. தமிழ்ச் சமூக ஆக்க இலக்கிய உருவாக்க மரபில் தமிழ்ஒளியின் இடம் எவ்வாறு உள்ளது என்ற புரிதல் தமிழ்ச் சமூகத்தில் இருப்பதாகக் கூற முடியவில்லை. கம்யூனிஸ்டு இயக்கத் தோழர்களின் பாடல்கள், இடதுசாரிக் கருத்துப் பிரச்சாரம் நோக்கிய மேடைப் பாடல்கள் மரபில் இருந்து வந்த காலம் அது. அதில் ஜீவாவிற்கும் வெ.நா. திருமூர்த்தி அவர்களுக்கும் முக்கியமான இடமுண்டு. இந்த மரபில் தமிழின் மரபான கவிதை வடிவத்தில், இடதுசாரி கருத்து சார்ந்து எழுதியவராக தமிழ்ஒளியை இனம் காணலாம். அதனால்தான் தமிழ்க் கவிதை உருவாக்கம், அரசியல் கருத்து மரபு சார்ந்து பாரதி, பாரதிதாசன், தமிழ்ஒளி என்ற வரிசையில் அமைகிறது. இதற்கு மாறாக பாரதி, பாரதிதாசன், பட்டுக்கோட்டை எனக் குறிப்பிடும் இடதுசாரி கட்சிகள் சார்ந்த இலக்கிய வரலாற்றுப் பார்வையை மறுபரிசீலனை செய்வது அவசியம் என்பதை பிறிதொரு கட்டுரையில் விரிவாகவே பதிவு செய்துள்ளேன். (பார்க்க: நூலறிவன். ரவிக்குமார் அகவை 60 நிறைவு விழா மலர். 2022:219)

தமிழ்ஒளியின் குறுங்காவியங்களை அரசியல் சார்ந்த கண்ணோட்டத்தோடு 1947 இல் வெளியிட்டதைப்போலவே அவரது சிறிய அளவிலான கவிதைத் தொகுதிகளைத் தோழர்கள் வெளியிட்டனர். தேவகோட்டையைச் சேர்ந்த தோழர் ஏகநாதன் தமது "உண்மை பிரசுரத்தின்" மூலம் 'நீ எந்தக் கட்சியில்?' என்ற தொகுப்பை வெளியிட்டார். இந்த வெளியீட்டில் தமிழ்ஒளி எழுதியுள்ள குறிப்பு கவனத்தில் கொள்ள வேண்டியதாகும்.

"பிற பதிப்பகங்கள் போலல்ல உண்மைப் பிரசுரம். உழுபவனுக்கே நிலம், உழைப்பவனுக்கே அதிகாரம், என்ற உன்னத சமதருமத்தின் அடிப்படையிலே உயர்ந்த இலக்கியங்களை வெளியிட முன்வந்திருக்கும் தோழர் ஏகநாதன் உயரிய லக்ஷியத்திலே மலர்ந்த மலர். உண்மைப் பிரசுரம்! அதன் மணம் பாரெங்கும் வீசி, பாட்டாளித் தோழர்களின் பார்வையிலே புதிய

ஒளியையும், உள்ளத்திலே உணர்ச்சிகளையும் எழுச்சியையும் உண்டாக்குமாகுக! (1948:2)"

இந்தத் தொகுப்பில் நேரடியான அரசியலை முன்வைக்கிறார் தமிழ்ஒளி. குடிசையில் மற்றும் ஆலையில் வாழும் மனிதர்களின் வாழ்க்கையைப் பேசுகிறார். இப்படிக் கேட்கிறார்

**ஏ செந்தமிழா என்னுடைச் சோதரா**
**நீ யார் பக்கம்? நின்றிட வேண்டும் ?**
**கொள்ளையடித்திடும் கொடியவர் பக்கமா?**
**துன்பமுற்றிடும் தொழிலாளர் பக்கமா?**
.................................. **இப்போதே நீ**
**எவர்பக்கம்? என் றியம்பிடு வாயே!**

நான்கு நீண்ட கவிதைகளைக் கொண்ட 24 பக்கங்களில் அமைந்துள்ள கவிதைகள் தமிழ்ஒளியின் இடதுசாரி இயக்கச் செயல்பாட்டின் அடையாளத்தைப் பேசுவதாகவே அமைகிறது. கூலி விவசாயிகள், ஆலைத் தொழிலாளிகள் ஆகியோருக்கான அரசியல் எது என்பதாகவே இக்குறுநூல் கவிதைகள் பேசுகின்றன. தன்னை ஒரு 'செஞ்சட்டைக்காரர்' என்று கவிதையில் பதிவு செய்கிறார். தமிழனே கேள்! என்ற தலைப்பில் உள்ள ஆறு பத்திகளை உள்ளடக்கிய கவிதையில் இரண்டு பத்திகளை மட்டும் கீழே தருகிறேன்.

**தமிழனே நான் உலகின் சொந்தக் காரன்**
**தனிமுறையில் நான் உனக்குப் புதிய சொத்து!**
**அமிழ்தான கவிதைபல அளிக்க வந்தேன்**
**அவ்வழியில் உனைத்திருத்த ஓடி வந்தேன்**
**இமை திறந்து பார் ! விழியை அகலமாக்கு!**
**என் கவிதைப் பிரகடனம் உலகமெங்கும்**
**திமுதிமென எழுகின்ற புரட்சி காட்டும்**
**சிந்தனைக்கு விருந்தாகும் உண்ண வா நீ!**
.................................................
.................................................
**சீனத்தில் இருபத்துக் கோடி மக்கள்**

**செய்கின்ற புரட்சிப் போர் நமக்கு நல்ல**
**ஞானத்தை அளிக்கின்ற நிகழ்ச்சி யாகும்!**
**நமதருகில் தெலிங்கான வீர மக்கள்**
**கானத்து விலங்கனைய நைஜாம் தன்னைக்**
**கருவறுக்க எழுந்ததுவும் நமது நாட்டின்**
**ஈனநிலை ஒழித்துவிட நமக்குத் திட்டம்**
**இதுவென்று காட்டுகிற புதிய ஜோதி!** (1948:15)

பாரதிதாசனின் கவிதைகளைப் போலவே இருக்கும் இக்கவிதைகளில் தன்னை ஒரு தமிழன் என்றும்; நான் ஒரு கம்யூனிஸ்டு என்றும் பிரகடனம் செய்வதைப் பார்க்கிறோம். இப்படியான வடிவில் கவிதைகளை வேறு யாராலும் எழுதப்பட்டதாகக் கூற இயலாது.

தேவக்கோட்டைத் தோழர் ஏகநாதன் வெளியிட்ட 'நீ எந்தக் கட்சியில்?' (1948) என்ற சிறு வெளியீட்டைப்போல் மலேசியாவைச் சேர்ந்த தோழர் சாம்பசிவம் மற்றும் எஸ்.சங்கரன் ஆகிய இரு தோழர்கள் 'மே தினமே வருக' (1952) எனும் 12 கவிதைகள் அடங்கிய தொகுப்பை வெளியிட்டனர். நிலைபெற்ற சிலை (1947) வீராயி (1947) ஆகிய குறுங்காப்பியங்களின் சிறு பகுதிகளையும் இணைத்து வெளியிட்டனர். இது ஓர் அரசியல் செயல்பாடாகவே அமைந்தது. அதில் தோழர் தமிழ்ஒளி 'என்கருத்து' என்ற தலைப்பில் எழுதியுள்ள பதிவு முக்கியமானது.

''மே தினமே வருக' என்ற கவிதையை நான் 1948 இல் எழுதினேன். இப்பொழுது அதையே திருத்தியும் விரித்தும் எழுதியுள்ளேன். 'மே தின ரோஜா' என்பது சிறுகதைக் கவிதை................. தற்காலக் கவிஞர்கள் யாரும் மே தினத்தைப் பற்றி எழுதவில்லையென்றே நான் கருதுகிறேன். மே தினத்தைப் பற்றிய இக்கவிதைகள் தமிழுக்குப் புதிது; சுவை புதிது; பொருள் புதிது. பாரதி, தேசிய சர்வதேசிய பாரம்பரியத்தைத் தமிழில் நிலை நிறுத்தினான். அன்றும், இன்றும், என்றும் அதை வளர்ப்பதே என் இலக்கிய நோக்கம்.'' (23.4.1952)

'மே தினமே வருக' எனும் தொகுதியில் அமைந்துள்ள சில கவிதைகள் பின்வருமாறு அமைகிறது.

**"காடு நகராச்சு; காலம் பவுனாச்சு;**
**வீடு கலையகமாய் விண்ணகமாய் மின்னிற்று!**
**தொழிலாளர் சாதனையைத் தூக்கிக் கொடிபிடித்து**
**வாராய் மணிவிளக்கே வந்திடுவாய் மே தினமே."**

...............................................

**நீல நெடுந்திரையாய் நீள்கின்ற கைகளினால்**
**ஞாலத் தொழிலாளர் நல்லரசைத் தோற்றுவிப்போம்**
**என்ற சபதமொடும் எண்ணரிய வேகமொடும்**
**குன்றா உறுதியொடும் கொள்கையோடும் நீ வருக!**

...............................................

**உலகத் தொழிலாளர் ஒற்றுமையே, நல்லுணர்வே,**
**அன்பே, இருகடலின் ஆழந்திருந்து வந்த**
**முத்தே, முழுநிலவே, மேதினமே வாராய் நீ!**
**வாராய் உனக்கென்றன் வாழ்த்தை யிசைக்கின்றேன்!** (1952:8,11)

இவ்வகையில் கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கையின் கவிதை வடிவமாக இவை அமைந்திருப்பதைக் காண முடிகிறது. இந்த மரபைத் தொடர்ந்து, கதைப் பாடல் வடிவில் ‘மே தின ரோஜா’ (1952) எழுதியதைத் தமிழ்ஒளி குறிப்பிடுவதை முன்னர் பதிவு செய்தோம். கதைப் பாடல் வடிவம் என்பது, கண்ணன்ராதை என்ற காதலர்களைப் பற்றிப் பேசுவதாக உள்ளது. கண்ணன் சேரி மக்களுக்கு உதவச் செல்கிறான். ஆனால், ராதையின் பெற்றோர் வெறுப்படைகின்றனர். இந்த முரண்பாடுகளைப் பேசுகின்றது ‘மே தின ரோஜா’. சாதியத்தைச் சாடும் சிறு வடிவிலான கதைப்பாடலுக்கு ‘மே தின ரோஜா’ என்ற பெயரைச் சூட்டியிருப்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

1948 ஆம் ஆண்டுகளில், கம்யூனிஸ்டுக் கட்சி தடை செய்யப்பட்டிருந்த காலங்களில், அவ்வியக்கத்தின் இதழான ‘முன்னணி’யில் தமிழ்ஒளியும், குயிலனும் வேலை செய்தனர். இவ்விருவரும் கட்சியின் ஒத்துழைப்போடு அவ்விதழைக் கொண்டு வந்தனர். ‘மே தினமே வருக’ எனும் சிறு தொகுப்பில் உள்ள கவிதைகள் அனைத்தும் ‘முன்னணி’ இதழில் வெளிவந்தவையே. இவ்வகையில் இடதுசாரி இயக்கச் செயல்பாடுகள் என்பதாக அவரது கவிதை உருவாக்கம் அமைந்ததைக் காண்கிறோம். தமிழ்ஒளி எழுதியுள்ள சுமார் 118 கவிதைகளில் நான்கில் மூன்று பங்கு பொதுவுடைமைக் கருத்துக்களை வெளிப்படுத்தும் கவிதைகளே. 1946-1954 காலப்பகுதியில் அவரது ஆக்கங்கள் அனைத்தும் பொதுவுடைமைக் கருத்து சார்ந்த, கம்யூனிஸ்டுக் கட்சியில் பணியாற்றிய தொண்டரின் உணர்வுத் தளத்தைக் காட்டுவதாகவே அமைந்திருப்பதைக் காண்கிறோம். இவ்வாறு இயக்கம் சார்ந்து, ஜீவாவைப் போல், வெ.நா.திருமூர்த்தி போல் கவிதைகளை,

குறுங்காப்பியங்களைப் படைத்தவர் தமிழ்ஒளி.

'பொதுவுடைமைப் பொங்கல்' (1948), 'துறைமுகத் தொழிலாளி' (1948), 'திசையதிர நடக்கிறது சீனத்துச் செஞ்சேனை' (1948), 'சியாங்'குக்குப் பிரகடனம் (1949), 'புதுவைத் தொழிலாளிக்கு கோவைத் தொழிலாளியின் கடிதம்' (1949), 'தோழர் கணபதி தூக்கிலிடப்பட்டார்' (1949), 'ஜனசக்தி வாராய்' (1952) ஆகிய பல கவிதைகள் இடதுசாரி இயக்கச் செயல்பாடுகளைப் பற்றிப் பேசிய கவிதைகளே ஆகும். எனவே 1946-1954 காலம் என்பது தமிழ்ஒளி என்ற கலைஞன் கம்யூனிஸ்டாகச் செயல்பட்ட காலம். அனைத்து ஆக்கங்களிலும் இடதுசாரி மரபு சார்ந்த பொருண்மைகளையே அவர் பதிவு செய்திருப்பதை நம்மால் இனம் காண முடிகிறது. இப்படியொரு கவிஞரை இக் காலச் சூழலில் இனம் காண முடிகிறதா? என்ற கேள்வி எழுகிறது.

தமிழ்ஒளி ஆக்கங்கள் 'முன்னணி' இதழில் வெளிவந்தன. 1948-49 ஆண்டுகளில் 48 இதழ்கள் முன்னணி வெளிவந்தது. இதில் கவிதை, கட்டுரைகள், சிறுகதைகள், புத்தக விமர்சனங்கள் ஆகியவற்றை தமிழ்ஒளி எழுதினார். 1948இல் வெளிவந்த தொ.மு.சி.ரகுநாதனின் (1923-2001) 'இலக்கிய விமர்சனம்' நூலுக்கு மிக விரிவான விமரிசனத்தைத் தமிழ்ஒளி எழுதியுள்ளார். முன்னணி மூன்று இதழ்களில் தொடர்ச்சியாக வெளிவந்துள்ள அப்பதிவு, சமகால இலக்கிய நிகழ்வுகள் மீது தமிழ்ஒளி கொண்டிருந்த ஈடுபாட்டைக் காட்டுவதாக அமைகிறது. ரகுநாதன் நூல் பற்றிய எதிர்மறையான பதிவுகளை தமிழ்ஒளி செய்துள்ளார். அதில் ஒரு பகுதி பின்வருமாறு அமைகிறது.

ஒரு கலைஞன் அவன் உண்மையிலேயே மெட்டீரியலிஸ்டாக இருந்தால், விஞ்ஞானம் நிரூபித்த உண்மைகளைத்தான் போற்றி எழுதுவான். விஞ்ஞானத்தால் நிரூபிக்கப்பட்டு இதுவரையில் ஒப்புக்கொண்ட உண்மைக்குப் பிரதானமா? விஞ்ஞானத்தால் நிரூபிக்கப்படாத, இதுவரையில் நடந்தேறாத கற்பனாவாதத்திற்குப் பிரதானமா? லோகாயதவாதிக்கு முன்னதுதான் பிரதானம்.

நிரூபிக்கப்பட்ட அடிப்படை விஞ்ஞான உண்மை யொன்று, 'எப்போதோ மாறலாம்' என்ற ஒரு விதியேற்படுத்திக்கொண்டு, விஞ்ஞான உண்மைக்கு மாறுபட்டதையும் ஆதரியுங்கள் என்று ஆசிரியர் பகிரங்கமாகக் கூறுகிறார். இந்தக் கண்ணோட்டம் மெட்டீரியலிசத்தின் உட்பகை.

ஆசிரியர் இன்னும் ஒருபடி மேலே போகிறார்.

நிரூபணம் செய்யப்பட்ட விஷயங்களுக்கு அப்பாற்பட்ட விஷயங்களை லகுவில் ஒதுக்கிவிட முடியாது என்று அவசரப்பட்டு ஒரு முடிவுக்கு வந்துவிடுகிறார். இதற்கு என்ன அர்த்தம்? கடவுள்

என்ற ஒருபருப் பொருள் இருக்கிறது. அதை நாம் கண்டுபிடிக்க முடியாது என்றால் ஒதுக்கிவிடக் கூடாது என்பதுதான் ஆசிரியருடைய அபிப்பிராயம், அவருடைய மெட்டீரியலிசம்.

நிரூபணம் செய்யப்பட்ட விஷயங்களுக்கு அப்பாற்பட்ட விஷயங்களை விஞ்ஞான ஆராய்ச்சியால் கண்டுபிடிக்கும் போது மெட்டீரியலிஸ்ட் அவ்வுண்மையை ஏற்கத் தயங்க மாட்டான். அது மனித அறிவின் வளர்ச்சியைக் குறிக்கும். ஆனால், அதற்காக வெறும் ஊகத்தையெல்லாம் தலைமேல் தூக்கி வைத்துக்கொண்டு ஆஹா ஊஹு போட முடியுமா?'' (முன்னணி:1949)

ரகுநாதனின் இலக்கிய விமர்சனம், அன்றைய சூழலில் க.நா.சுப்பிரமணியம் (1912-1988) போன்றவர்களால் பெரிதும் விதந்து பேசப்பட்டது. மௌனி (1907-1985), லா.ச.ரா (1916-2007) போன்ற எழுத்தாளர்களை ரகுநாதன் மதிப்பீடு செய்திருந்த முறை இடதுசாரிகளால் ஏற்கத்தக்கதாக இல்லை. இந்த மரபில்தான் தமிழ்ஒளி ரகுநாதனை விமர்சனம் செய்திருப்பதைக் காண முடிகிறது. மேலும், விந்தன் (1916-1975) நடத்திய மனிதன் இதழில் ரகுநாதன் தொகுத்த 'புதுமைப் பித்தன் கவிதைகள்' குறித்தும் விரிவான விமர்சனத்தை தமிழ்ஒளி எழுதினார். புதுமைப்பித்தன் கவிதைகளை, கவிதை என்ற வடிவத்தில் சேர்க்க முடியாது என்று சொல்கிறார். இந்த தொகுப்பில் ரகுநாதன் எழுதியுள்ள முன்னுரையையும் கடுமையான சொற்களில் மதிப்பீடு செய்துள்ளார் தமிழ்ஒளி. இவ்வாறு, அன்றைய சூழலில் இடதுசாரிக் கருத்துநிலைச் சார்போடு செயல்பட்ட ரகுநாதனை, கம்யூனிஸ்டுக் கட்சித் தொண்டனாகச் செயல்பட்ட தமிழ்ஒளி செய்துள்ள விமர்சனங்களை, இன்றைய சூழலில் வாசிக்கும்போது, இடதுசாரி இயக்க மரபில் செயல்பட்டவர்களின் முரண்பட்ட பார்வைகளை கண்டறிய முடிகிறது. தமிழ்ஒளி சமகால இலக்கியப் போக்குகளை இனம் கண்டு பேசுபவராக இருந்திருக்கிறார். முன்னணி இதழில் அவர் எழுதியுள்ள 'பிரச்சார இலக்கியம்' எனும் கட்டுரை (31.10.1948) கவனத்திற்குரியது. இடதுசாரிகளின் ஆக்கங்களை பிரச்சாரம் என்று கூறுபவர்களுக்கு பதிலளிக்கும் வகையில் அந்த கட்டுரை அமைந்திருப்பதை பார்க்கிறோம்.

சில ஆண்டுகளுக்கு முன் நண்பர், பேரா.பா.மதிவாணன் அவர்களின் வீட்டில் உள்ள பழைய புத்தகங்களைப் பார்த்துக் கொண்டிருந்தபோது, 1937 இல் வெளிவந்த 'ஜனசக்தி' முதலாண்டு இதழின் தொகுப்பு இருந்தது. அதனைப் புரட்டும்போது அதற்குள்ளிருந்து அஞ்சல் உறை ஒன்று கீழே விழுந்தது. அதனை எடுத்துப் பார்த்தபோது, தமது வகுப்புத் தோழரான பாவலர் ச.பாலசுந்தரம் அவர்களுக்குத் தமிழ்ஒளி எழுதிய நீண்ட

கடிதம் அது. அந்தக் கடிதம் தமிழ்ஒளி குறித்த புதிய வரலாற்றுத் தகவல்களை நமக்குத் தருகிறது. 12.12.1949 இல் அந்த கடிதம் எழுதப்பட்டிருக்கலாம். தேதி உள்ளது. ஆண்டு இல்லை. தமிழ்ஒளி அகில இந்திய முற்போக்கு எழுத்தாளர் சங்கத் தமிழ்நாட்டுக் கிளையின் செயலாளர் என்பதை அக்கடிதம் சொல்கிறது. அந்தக் கடிதத்தை அவரது கையெழுத்து வடிவிலேயே வெளியிட்டோம் (2008). தமிழ்நாட்டில் செயல்பட்ட முற்போக்கு எழுத்தாளர் அமைப்பு குறித்து தோழர் ருக்மணி அம்மாள் அவர்கள் வீட்டில் திரட்டிய வேறு சில ஆவணங்களுடன் அதனை வெளியிட்டேன். இதன்மூலம் இந்திய அளவிலான முற்போக்கு அமைப்பில் தமிழ்ஒளி செயல்பட்ட வரலாற்றைப் பதிவு செய்ய முடிகிறது. அக்கடிதத்தில் தமிழ்ஒளி பதிவுசெய்துள்ள பின்வரும் பகுதிமூலம் அவரது மார்க்சியத் தத்துவ ஈடுபாட்டை அறிந்துகொள்ள முடிகிறது. மார்க்சியம் பற்றிய தத்துவ அடிப்படைகள்; மார்க்சியம் செயல்பட்ட வரலாறு என 18 புள்ளிகளை வரிசை எண் போட்டு தமிழ்ஒளி எழுதியுள்ளார். அதன் முதல் 5 புள்ளிகளை மட்டும் கீழே தருகிறேன்.

1) “உலகம் மாறாப்பொருளல்ல; அது மாறும் இயல்புடையது. கணத்திற்கு கணம் மாறியே வந்தேயிருக்கிறது; மனிதன் மற்றுமுள்ள உயிர்ப் பிராணிகள் யாவும் மாறும் இயல்புடையன. இதுதான் பரிணாம விதியென்று குறிக்கப்பெறுகிறது.

2) உலகின் தோற்றம்தான், கருத்தின் தோற்றம். உலகில்லாமல் கருத்தில்லை. அதாவது, பொருளில்லாமல் எண்ணமில்லை. ஜடப்பொருள்களின் பிரதிபலிப்பே நம் கருத்து. இது தர்க்க இயல் உலக ஞானம். ஆங்கிலத்தில் (dialectical materialism) ‘டைலக்டிகள் மெட்டீரியலிசம்’ என்பர். நாஸ்திகத்தின் அடிப்படை இதுதான்.

3) மாறும் உலகிற்கேற்ப, மாறும் ஜடப்பொருள்களுக்கேற்ப நம் எண்ணங்கள் மாற வேண்டும். மாற்றிக்கொள்ள வேண்டும்.

4) இதுவரையில் நிகழ்ந்துள்ள உள் அமைப்பின் மாறுதல்களைக் கணக்கிட்டு, இனி அது இவ்வாறு மாறும் என்று கண்டுபிடித்த விஞ் ஞானமே சோஷலிசம். இதனை சாதித்தவர் கார்ல் மார்க்ஸ்.

5) உயிர்ப்பிராணிகளின் (பரிணாம விதிப்படி) வளர்ச்சியில் வாலில்லாக் குரங்கிலிருந்து மனிதன் தோன்றினான் என்பதை டார்வின் கண்டுபிடித்தார். அந்தத் தத்துவ அடிப்படைகளின் மீது, மனித சமூக அமைப்பின் வளர்ச்சியைக் கண்டுபிடித்து இலக்கணம் வகுத்தவர் மார்க்ஸ். இதுவே சமூக விஞ்ஞானம்.”

தமது நண்பர் பாவலர் பாலசுந்தரம் அவர்களை, மார்க்சியத் தத்துவத்தின்பால் வென்றெடுக்க மேற்கொண்ட முயற்சியாக இக்கடிதம் அமைகிறது.

அகில இந்திய அமைப்பான முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் கிளை 13.11.1949 இல் தமிழகத்தில் உருவாக்கப்பட்டதாக எழுத்தாளர் பொன்னீலன் குறிப்பிடுகிறார். தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் வரலாற்றை 'ஜீவநதி' எனும் பெயரில் பொன்னீலன் பதிவு செய்துள்ளார். அந்நூலில் இந்த தகவலைச் சொல்கிறார்.(2003:19) தமிழ்ஒளி தமது நண்பருக்குக் கடிதம் எழுதியுள்ளது 12.12.49. ஆக, தமிழ்நாட்டில் அக்கிளை தொடங்கப்பட்ட அடுத்த மாதம் தமது நண்பருக்குத் தமிழ்ஒளி எழுதுகிறார். பாவலர் ச.பாலசுந்தரம் அவர்கள், தமிழகத்தின் புலமைத்துவப் பேராசான்களில் ஒருவர். தமிழ்ஒளி தனது தத்துவ மரபிற்குத் தனது நண்பரை அணிசேர்க்கும் முயற்சி மூலம் மார்க்சியத்தில் கொண்டிருந்த ஈடுபாட்டைக் காண முடிகிறது.

♦♦♦

1930களில் சுயமரியாதை இயக்க ஈடுபாடு உடைய இளைஞராக உருப்பெற்றிருக்கிறார். அவரது பதின்பருவம் தொடங்கி இருபதாம் வயதுவரை அக்கருத்து நிலையில் செயல்பட்டிருக்கிறார். பின்னர் படிப்படியாக மார்க்சியத் தத்துவ ஈடுபாடு சார்ந்தவராகச் செயல்பட்டிருக்கிறார். அது உத்தேசமாக 1944-1954 காலங்களாக அமைந்திருந்ததைக் கணக்கிட முடிகிறது. தமிழ்ஒளியின் இந்தக் காலமே அவரது சீர்மிகு சமூகச் செயல்பாடுகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட காலமாக அமைகிறது. 1953-1954 வாக்கில் அவர் இடதுசாரி அமைப்பின் நேரடிச் செயல்பாட்டிலிருந்து விடுபட்டிருக்க வேண்டும் என்று கருத முடிகிறது. 1954-1965 என்ற அவரது இறுதிக்காலம் வரையான வாழ்க்கையாக அமைகிறது. இக்கால அவர் வாழ்க்கையைப் புரிந்து கொள்ள அவரது ஆக்கங்களை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீடு செய்ய இயலுகிறது. அதனைப் பின்வருமாறு பகுத்துக்கொள்ளலாம்.

- விந்தன் நடத்திய 'மனிதன்' (1954-1955) இதழோடு தொடர்புகொண்டு அதில் தமிழ்ஒளி செயல்பட்ட வரலாறு சார்ந்த பதிவுகளைச் சொல்ல முடிகிறது. குறிப்பாக சிறுகதை எழுத்தாளராக அவரை இனம் காணுவதற்கான ஏதுக்கள் குறித்து உரையாட முடிகிறது.

- 1947 இல் குறுங்காவியங்களை எழுதியவர்; தொடர்ந்து சிலப்பதிகாரப் பாத்திரங்களைக் கொண்டு சிறிதும் பெரிதுமான காவியங்களை உருவாக்கியுள்ளதை அறிகிறோம்.

- காவியங்களின் தன்மைகள் குறித்தும் அறிவது அவசியம். காதல் எனும் பொருண்மை சார்ந்து உருவகக் காவியமாக 'கண்ணப்பர்

கிளிகள்' (1958) என்ற படைப்பையும் உருவாக்கியுள்ளார். புத்தம் சார்ந்து 'கோசலைக்குமாரி' (1962) 'புத்தர் பிறந்தார்' (1958) ஆகிய படைப்புகளை உருவாக்கியுள்ளார். 'புத்தர் பிறந்தார்' முழுமை பெறவில்லை.

• சிறார் இலக்கிய உருவாக்க மரபு, நவீன எழுத்தாளர்களிடத்தில் பரவலாக இருப்பதை அறிகிறோம். அந்த வடிவத்திலும் இக்காலங்களில் தமிழ்ஒளி செயல்பட்டிருப்பதைப் பார்க்கிறோம். இத்தன்மை குறித்த விரிவான உரையாடலை நிகழ்த்த வேண்டும்.

• 1940-1960 காலங்களில் 'வானொலி' எனும் ஊடகம் தமிழ்ச் சமூகத்தில் செல்வாக்கான இடத்தைப் பெற்றிருந்தது. நவீன எழுத்தாளர்கள் பெரும்பாலோர் வானொலிக்காக நாடகங்களை எழுதும் மரபைக் கொண்டிருந்தனர். அந்த வகையில் நாடகங்களை எழுதுவதில் ஆர்வம் கொண்டிருந்த தமிழ்ஒளி, சுமார் இருபது ஓரங்க நாடகங்களை பல்வேறு இதழ்களில் வெளியிட்டதையும் அறிய முடிகிறது. வானொலியில் நிகழ்த்தியதாக அறிய முடியவில்லை.

• சிலப்பதிகாரம், திருக்குறள் ஆகியவை குறித்த ஆய்வுகளைச் செய்திருக்கிறார். இவருக்கு மிகவும் ஈடுபாடு மிக்க இலக்கியங்களாகச் சிலப்பதிகாரம், திருக்குறள், சீவகசிந்தாமணி, கம்பராமாயணம் ஆகியவை என்பதைத் தமிழ்ஒளி பதிவு செய்திருக்கிறார்.எனவே அவரது 1954-1965 காலங்களில் கவிதைகள், காவியங்கள், சிறுகதைகள், சிறார் இலக்கியங்கள், நாடகங்கள், புனைவுகள் எனப் பல பரிமாணங்களில் செயல்பட்டிருக்கிறார். இத்தன்மைகள் குறித்து அவரது பதிவுகள் பின்வருமாறு அமைகிறது.

பணமோ, பக்கபலமோ அற்ற நிலையில், சமூகத்தின் தாழ்ந்த படியிலே வளர்ந்து, தலை நிமிர்ந்த என்னை, நிலப்பிரபுத்துவப் பிற்போக்கும் முதலாளித்துவ "முற்போக்கும்," இருட்டடிப்புச் செய்துள்ளன! அதன் காரணமாகவே மக்கள் மன்றத்தின் முன் மறைக்கப்பட்டிருந்த என்னை, நானே அறிமுகப்படுத்திக்கொள்ள முன்வந்தேன்.

உரை நடைத்துறை, கவிதைத்துறை ஆகியவற்றில், கடந்த பதின்மூன்று ஆண்டுகட்கு மேலாய்த் தமிழ் மொழியின் ஆக்கங்கருதித் தொண்டுபுரியும் என்னைத் தமிழறிஞர் சிலர் அறிவர்! எனினும், நாடு அறியாது!

"நிலைபெற்ற சிலை", "வீராயி", "கவிஞனின் காதல்", "நீ எந்தக் கட்சியில்", "மேதினமே வருக" கவிதை நூற்களும் கவிஞர் விழா, சாக்கடைச் சமுதாயம், ஸ்டாலின், (நாடகம் சிறு கதை, வாழ்க்கை வரலாறு) முதலிய நூற்களும் ஏற்கனவே என்னால் எழுதி, வெளி யிடப்பெற்ற நூற்களாகும்!

சிந்தனை, அமுத சுரபி, முன்னணி, (தற்போதைய “முன்னணி” அல்ல) கலாவல்லி, மனிதன், கலைமகள், உமா, கண்ணன், நல்லறம், சரஸ்வதி, சுதேசமித்திரன், தாமரை, ஜனசக்தி, கங்கை, சாட்டை, சக்தி, அணில் முதலிய இதழ்கள் என் எழுத்தைப் பரப்பப் பெரிதும் துணை செய்தன. எனினும் சமூகத்தில் நிலவிய தீயசக்திகள், மக்கள் கண்களினின்றும் என்னை அடியோடு மறைத்துவிட உலகினர் கண்களின் முன் நான் ஒரு கவிஞனாகவோ நூலாசிரியனாகவோ தோற்றமளிக்காமல் மறைந் தொழிய எத்தனையோ இடர்ப்பாடுகளைத் தோற்றுவித்தன!

தமிழ்ஒளி ‘முன்னணி’ இதழில் ‘சாக்கடைச் சமுதாயம்’ எனும் பெயரில் சிறுகதை ஒன்றை எழுதினார். வேறு சில கதைகளையும் எழுதியுள்ளார். இவை ‘சாக்கடைச் சமுதாயம்’ (1952) எனும் தொகுப்பாக வெளிவந்தது. சாக்கடைச் சமுதாயம் எனும் கதை நகர சுத்தி தொழிலாளர்களைப் பற்றியது. தமிழ்ச் சிறுகதை உலகில் 1930-1960 காலங்களில் வ.ரா போன்றவர்கள் உருவாக்கிய நடைச் சித்திரம், சிறுகதை வடிவத்திலான பத்திரிக்கை எழுத்து ஆகும். ‘மணிக்கொடி’ தொடங்கி அந்த மரபு இருந்தது. தமிழ்ஒளியின் சிறுகதை வடிவங்கள் தாம் நேரடியாகக் கண்ட உதிரிப் பாட்டாளி, ஒடுக்கப்பட்ட மக்களைப் பற்றியதாகவே இருந்தது. இந்த மரபில் சாதனை நிகழ்த்தியவர் விந்தன். அதுகுறித்த விரிவான பதிவுகளைச் செய்துள்ளேன். (பார்க்க: விந்தன் எனும் ஆளுமை: கருத்தரங்கக் கட்டுரைத் தொகுப்பு. 2014இல் தமிழ் இலக்கியத் துறையில் நடந்த கருத்தரங்கம்) விளிம்புநிலைப் பாட்டாளிகளைச் சிறுகதை வடிவில் பதிவு செய்து சாதனை படைத்தவர் ஜெயகாந்தன் (1934 -2015) என்பதும் அறிந்த செய்தி. இந்தப் பின்புலத்தில் வ.ரா. விந்தன், இஸ்மத் பாஷா, தொ.மு.சி.ரகுநாதன், ஜெயகாந்தன் ஆகிய படைப்பாளிகள் வரிசையில் (1930-1960) தமிழ்ஒளியும் இணைந்துகொள்கிறார். இவர்களுக்கு மாக்ஸிம் கார்க்கியின் (1868-1936) எழுத்துக்கள் ஆதர்சமாக அமைந்திருந்ததைக் காண முடியும். 1940-1960 காலங்களின் இடதுசாரிப் படைப்பாளர்களிடத்தில் கார்க்கி எழுத்துக்களின் தாக்கம் மிகுதியாகும். சுமார் இருபது சிறுகதைகளைத் தமிழ்ஒளி எழுதியிருக்கிறார். அவை ‘சாக்கடைச் சமுதாயம்’ (1952) ‘குருவிப்பட்டி’(1963,2007,2020), ‘உயிரோவியம்’ (1989,2007) ஆகிய பெயர்களில் வெளிவந்துள்ளன. இது தொடர்பான விரிவான பதிவுகளைச் செய்ய முடியும். வேறொரு வாய்ப்பில் அதனை விரிவாகச் செய்யவேண்டும்.

தமிழ்ஒளி அவர்களின் ஈடுபாடுடைய துறை என்பது காவியங்களை எழுதுவது என்று புரிந்துகொள்ளமுடியும். இதனைப் பாரதிதாசனின் நேரடித் தாக்கமாகவே புரிந்துகொள்ளலாம். 1947-1952 காலங்களில்

நான்கு குறுங்காப்பியங்களை அவர் எழுதினார். அதில் 1947 இல் மட்டும் மூன்று காவியங்கள். 1955-1965 காலங்களில் ஐந்து காவியங்கள் அவர் எழுதியிருக்கிறார். அவை அவரது கவித்திறனின் உச்ச வளர்ச்சியைக் காட்டுவதாக அமைந்துள்ளன. ‘விதியோ? வீணையோ?’ எனும் காவியம் 1954 இல் எழுதப்பட்டது. 1962 இல்தான் அச்சு வடிவம் பெற்றது. அதில் தமிழ்ஒளி எழுதியுள்ள விரிவான முன்னுரை இடம்பெற்றுள்ளது.

“உரையும் பாட்டும் செய்யுளும் பெற்று வருவதே இசை நாடகம் (opera). அது சில சமயங்களில் கூத்தைக் கொண்டு இயலும்” (1954:18) என்று குறிப்பிடுகிறார். சிலப்பதிகாரப் பாத்திரங்களைக் கொண்டு வேனிற் காதையை மட்டும் புதிய இசை நாடக வடிவத்தில் தாம் உருவாக்குவதாகப் பதிவு செய்கிறார். சிலப்பதிகாரம் பண்டைக்காலக் கூத்து வடிவம் என்றும் சொல்கிறார். இக்கருத்தைப் பின்னர் பேரா.முத்துசண்முகம் அவர்கள் சிலப்பதிகாரம் முப்பது நாட்களில் நிகழ்த்தப்பட்ட கூத்து என்று ஆய்வு செய்துள்ளார். இந்தக் கருத்துக்குத் தமிழ்ஒளி மூலமாக அமைகிறார். “திரிகூட ராசப்பரின் குற்றாலக் குறவஞ்சி, அருணாசலக் கவிராயரின் ராம நாடகம் முதலியவை, ‘நாடக’ மரபை உட்கொண்ட தெருக் கூத்துக்களாகும்” (1954:7) என்று கூறுகிறார் தமிழ்ஒளி. “பண்டைத் தமிழ் ‘ஆப்பெரா’க்களுக்கு ஒரு மாதிரியே சிலப்பதிகாரம். அதனை மேலும் வலுப்படுத்துவது மறைந்துள்ள நமது பழைய கலைக்குப் புத்துயிர் தருவதாகும் என்பது என்கருத்து” (1954:10). கேரளத்தில் நடைபெறும் “சாக்கையர் கூத்து” மரபோடு சிலப்பதிகாரத்தை இணைத்துப் பேசுகிறார். இவ்வகையில் இசை நாடகமாக ‘விதியோ? வீணையோ?’ எழுதிய தமிழ்ஒளி இதன் தொடர்ச்சியாகவே




‘மாதவி’ காவியத்தையும் (1957) படைத்தார். இக்காவியம் முப்பத்தெட்டு ஆண்டுகளுக்குப் பிறகு (1995) அச்சு வடிவம் பெற்றது. மாதவி பௌத்த துறவியாக இறுதிக் காலத்தில் மாறுவதாக இக்காவியத்தைப் படைத்துள்ளார். மூன்று காண்டங்களில் 27 பகுதிகளைக் கொண்ட இந்தப் படைப்பு, இருபதாம் நூற்றாண்டில் உருவான புதிய சிலப்பதிகாரம் ஆகும். இக்காவியத்தின் அமைப்பும் அதன் கவிப்பாங்கும் சிலப்பதிகார மரபை மீண்டும் தமிழுக்குக் கொண்டு வந்தது என்று கூற முடியும். நீண்ட நெடுங்காலம் கையெழுத்துப் பிரதியைப் பாதுகாத்துத் தமிழுலகிற்கு வழங்கிய பெரியவர் செ.து.சஞ்சீவி வணக்கத்திற்குரியவர்.

இவ்வகையில் சிலப்பதிகாரம் தொடர்பான நவீன காவிய உருவாக்கத்தில் தமிழ்ஒளி பங்கு குறிப்பிட்டுச் சொல்லத்தக்கது. இதன் தொடர்ச்சியாகவே 1959 இல் அவர் வெளியிட்ட ஆய்வான ‘சிலப்பதிகாரம் காவியமா? நாடகமா? எனும் நூல் அமைகிறது. சிலப்பதிகாரத்தை இசை நாடகப் பிரதியாகவும், காவியப் பிரதியாகவும் ஆய்வுசெய்த பெருமை தமிழ்ஒளிக்கு உண்டு. 1954 தொடங்கி 1957 ஆண்டு முடிய சிலப்பதிகாரத்தோடு வாழ்ந்திருக்கிறார் தமிழ்ஒளி. அதன் பல பரிமாணங்கள் குறித்த ஆக்க இலக்கியம் மற்றும் ஆய்வு நோக்கில் செயல்பட்ட அவரது உலகம் பற்றித் தமிழ்ச் சமூகம் கணக்கில் எடுத்துக் கொண்டதாகக் கூற முடியாது. இப்பொருண்மை குறித்து விரிவாகத் தனித்து எழுதிய வேண்டிய தேவையுண்டு.

பௌத்த மரபின் மீது ஈடுபாடு கொண்ட மனிதராகவே தமிழ்ஒளி இருந்திருக்கிறார். 1958 இல் ‘புத்தர் பிறந்தார்’ எனும் முடிவுறாத காவியத்தையும் 1962 வாக்கில் ‘கோசலைக்குமரி’ எனும் காவியத்தையும் அவர் படைத்திருக்கிறார். அவை அவரது மறைவிற்குப் பின் 1966 இல் அச்சு வடிவம் பெற்றன. மிக எளிய கவிதை மொழியில் புத்தர் வாழ்க்கையைப் பதிவு செய்யத் தமிழ்ஒளி திட்டமிட்டுள்ளார். அது முழுமை பெறாதது பெரும் இழப்பு. தமிழ்ஒளி எழுதியுள்ள ‘கோசலைக்குமரி’ (1962) 1966 இல் அச்சு வடிவில் வந்துள்ளது. அதற்கு தமிழ்ஒளி எழுதியுள்ள முன்னுரை பின்வருமாறு அமைகிறது.

‘‘உண்மை வரலாற்றை அடிப்படையாய்க் கொண்டு எழும் புனைவுகள், தருக்கவியலைப் பின்பற்றியும், காலத்தின் பண்பை வெளிப்படுத்தும் நோக்கத்துடனும் அமைந்துவிட்டால், அது வரலாற்றை விளக்கும் சிறந்த இலக்கியமாய் அமைதல் ஒருதலை. இத்தகைய சிறந்த இலக்கியமாய் விளங்குவதே ராகுல்ஜியின் ‘பிரபா’ என்ற சிறுகதை.

வால்காவிலிருந்து கங்கை வரை’ என்ற நூலிற் காணும் ‘பிரபா’ என்ற சிறுகதையைத் தழுவி, இச்சிறு காவியத்தைப் புனைந்துள்ளேன். என் கற்பனைக்கேற்பக் கதையில் மாறுதல்களைச் செய்து கொண்டேன்.

ஆரியர் மதமும் புத்த மதமும் ஒன்றை யொன்று கடுமையாய் எதிர்த்துப் போராடிய காலத்தில் வாழ்ந்து, புத்த மதத்தை ஏற்றுக் கொண்ட கவிஞன் என்ற முறையில் அசுவகோஷ் ஒரு ‘போராட்டக்காரனாய்’ விளங்குதல் இயல்பே.

அவ்வியல்புக் கேற்பவே என் கதையை அமைத்துக் கொண்டேன்.

இந்தக் கதையை உலகுக்குதவிய பேராசிரியர் ராகுல சாங்கிருத்தியாயன் அவர்கட்குத் தமிழ் நாட்டுக் கவிஞன் என்ற முறையில், என் உளமார்ந்த நன்றியைச் செலுத்துகிறேன்.

இந்தப் படைப்பின் மூலம் ராகுல சாங்கிருத்தியாயன் (1893-1963) மீது தமிழ்ஒளியின் ஈடுபாட்டைக் காண முடிகிறது. ராகுல்ஜி பற்றித் தமிழ்ஒளியின் பதிவு வருமாறு.

பேராசிரியர் ராகுல சாங்கிருத்தியாயன் அவர்கள், காளிதாசனைக் கவி அசுவகோஷுக்குப் பிற்பட்டவன் என்று காட்டுகிறார். வரலாற்றியலுக்குப் பொருந்தியுள்ள இம்முடிவு, உவந்து ஏற்றுக் கொள்ளக்கூடியதாகும். இக்கருத்தின் வழி நோக்கத் தமிழ் இலக்கியத் தொன்மை எத்தகையது என்று புலப்படும்.

"இராமன் கடவுள் அல்லன்; ஓர் ஆரிய மன்னனே என்றும், வால்மீகி, காளிதாசன், போன்றோர் ஆரிய மன்னர்கள் உதவிய செல்வங்களில் மதியையிழந்து, அம்மன்னர்களைப் புகழ்ந்து பாடிய "போகி" கள் என்றும், நமக்குக் கூறும் ராகுல சாங்கிருத்தியாயன் அவர்களை "உண்மையின் அருகே மிகத்துணிச்சலுடன் நிற்கும் இருபதாம் நூற்றாண்டின் வீரர்" என்று நாம் போற்றலாம்.

(கோசலைக்குமரி. முன்னுரை)

ராகுல்ஜியின் ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்டு உலகின் முதல் நாகரிகம் தொடங்கிய "காவிரியிலிருந்து கங்கைவரை சென்றால் உலகம் எத்தனையோ புதுமைகளைச் சந்திக்கும்" என்று இந்நூல் முன்னுரையில் தமிழ்ஒளி எழுதுகிறார். இன்றைய தொல்லியல் ஆய்வு முடிவுகள் சார்ந்து தெற்கிலிருந்து இந்திய வரலாற்றை எழுத வேண்டும் எனும் கருத்தை 1960களில் தமிழ்ஒளி பதிவுசெய்திருக்கிறார்.

1958 இல் உருவான 'கண்ணப்பன் கிளிகள்' (1966 இல் அச்சு வடிவம்) எனும் உருவக காவியத்தின் உருவாக்கம் பற்றி தமிழ்ஒளி கூறுகிறார்.




"விசித்திரமான ஆசைகளும் லட்சியங்களும் இலக்கியக் கர்த்தாவின் மனோ தர்மத்திற்கேற்றவாறு தோன்றி, இலக்கியக்காட்சிகளை ஏற்படுத்துகின்றன. அவையே இலக்கியக் கர்த்தாவின் இதய நிழல். அது மிகச்சிறிய வித்தினின்றும் கிளைத்து மிகப் பெரிய விருட்சமாக வளரும், ஆலின் நிழலைப் போன்றது. கிளிகள் முதல் இமகிரிகள் வரை, அவன் இதய நிழலுக்குள் அடங்கியே நிற்கின்றன. இவற்றினின்றும் 'கண்ணப்பன் கிளிகளின் உருவ விளக்கத்தைப் புரிந்து கொள்ள முடியும். இதுவே, 'கதை பிறந்த கதை !"

தமிழில் இப்படியான இன்னொரு உருவக வடிவ ஆக்கத்தைக்

காண்பது அரிது. அவ்வகையில் இந்நூல் விதந்து பேசும் தகுதியுடையது.

'மாசறு கற்பினள் அகலிகை' எனும் சிறுகாவியத்தைத் தமிழ்ஒளி படைத்துள்ளார். அதில் புதுமைப்பித்தன் படைத்த கதையே தமக்கு ஏற்புடையது என்பதைப் பின்வருமாறு பதிவு செய்கிறார்.

"கம்பன் ஒருபுறம் இருக்க அகலிகை கதையை எழுதிய திரு. வெ.ப.சு. அவர்கள், கம்பனுடைய அதே தர்மக்கண் அளித்த உக்கிரப் பார்வையால், இந்திரனைக் கடை கெட்ட போக்கிரியாய்க் காமவெறியனாய்ச் சித்தரித்துக் காட்டுகிறார். கம்பரில் கைக்கிளை யிலிருந்த இந்திரன் வெ.ப.சு. அவர்களில் பெருந்திணைக்கு வந்து விடுகிறான். திரு.ச.து.சு.யோகியும், வெ.ப.சு.அவர்களின் அதே தர்ம ஆவேசத்துடன் கிளம்பி இந்திரனைச் சாடுகிறார். "காமச்சிறுபுழு நீ" என்று இந்திரனைச் சுடுகிறாள் யோகியின் அகலிகை. யோகியின் ஆவேசத்திற்கு அச்சுடு சொல்லே எடுத்துக்காட்டு. ஆனால், யோகியின் கோதமன் வால்மீகி, கம்பர், வெ.ப.சு.ஆகியோர்களின் கோதமர்களினின்றும் வேறுபட்டவன். பலஹீனமுடையவன். எனினும், மேற்காட்டிய இரு சாராரும் ஒப்பும் கருத்து என்னவெனில், "இராமன் அறத்தின் நாயகன், இந்திரன் அறங்கொன்ற அற்பன்" என்பதே. இக்கருத்தே அவர்களை இணைக்கும் சங்கிலி. ஆனால், இவ்விரு சாராருடனும் இணையாத, ஓர் அபூர்வக் கருத்தையும் நாம் தமிழ் இலக்கியத்திற் காண்கிறோம். அக்கருத்திற்குரியவர், மோகன ஆற்றலைப் பெற்றுள்ள புதுமைப்பித்தன் என்பவர் ஆவார்.

யோகியின் கோதமனைப் போன்றே, புதுமைப் பித்தனின் கோதமனும் பலஹீனன்தான். ஆனால், புதுமைப்பித்தன், இன்னும் ஒரு படி மேலே போய், பக்குவமடையாத ஒருவனின் சபலங்களைக் காட்டுவது போன்று அவ்வளவு, தெளிவாகக் கோதமனைப் படம் பிடிக்கிறார்.அவர் மட்டுமே தொல்லாசிரியன்மார் அறத்தின் வேலியென்று காட்டிய இராமனைக் கேவலம், அவன் பாதத்தூளியால் உயிர்பெற்ற அகலிகையைக் கொண்டே தோற்கடித்தார். தர்க்கசாத்திரம் எதைக் கற்றுக்கொடுக்குமோ, எதைக் கற்றுக் கொடுத்தால் தர்க்க சாத்திரம் சரியென்று ஏற்றுக்கொள்ளப்படுமோ, அதே ஆயுதத்தைக் கொண்டு இராமதத்துவத்தைத் தகர்த்தெறிந்தார் புதுமைப்பித்தன். அவர் மட்டுமே, ஒரு சரித்திரக் கதாநாயகனைப் போன்று துணிவுடன் பிறர் நெருங்கவே அஞ்சும் அத்தாணி மண்டபத்தை அடைந்து அங்கே குருடாய்க் கிடந்த உண்மையின் கண்களைத் திறக்க முயன்றார். எனினும், உண்மையின் இருகண்களும் இன்னும் திறக்கப்படவில்லையென்றே நாம் கூறலாம். என்று பதிவு செய்து, இந்திரன் பற்றிய தமிழ் மரபில் உள்ள பதிவுகளை அடிப்படையாகக்

கொண்டு இதனை எழுதுகிறார்.

"தொல்காப்பியமும் குறளும் கூறும் இந்திரன் வேதங்களிற் புகழப்படும் இந்திரனே ஆவான். அந்நூற்களின் துணைகொண்டு, அகலிகையை அணுகும்போது, கோதமன் மின்மினிபோல் மினுக்கின்றான். அகலிகை, தாரகை போல் ஒளிர்கின்றாள். இந்திரனோ எட்ட முடியா அமரர் உலகில் ஞாயிறென மிளர்கிறான். எந்தத் தர்க்க சாத்திரம், புதுமைப்பித்தனைக் கிளறி, இராமனை எதிர்க்கத் தூண்டியதோ, அதே தர்க்க சாத்திரந்தான் என்னைக் கிளறிக் குயுக்திக்காரக் கோதமனை அம்பலப்படுத்தத் தூண்டியது. ஒரு முனிவனுக்கு இருக்க வேண்டிய புலனடக்கம், கோதமனுக்கு இல்லை. அவன் இல்லறத்தைக் கூடத் தாண்டவில்லை. அதற்குள், அவன் சாப ஆற்றலைப் பெற்று விட்டான் என்பது, தவம் என்கிற தத்துவத்திற்கு ஏற்பட்ட களங்கம். என் அகலிகை, அக்களங்கத்தை முதன் முறையாய்த் துடைத்தெறிகிறாள். இனி, கதையைப் படிக்கலாம்.

தமிழ்ஒளி சிறார் இலக்கியங்களை உருவாக்குவதில் ஈடுபாடு கொண்டிருந்ததைக் காணமுடிகிறது. அவை வெளிவந்த விவரங்கள்? யார் வெளியிட்டார்கள் என்ற விவரங்களைக் கண்டறிவது பெரும் குழப்பமாக இருக்கிறது. "பாடு பாப்பா" 1967 இல் வெளிவந்த நூல். இப்போது 'அந்தி நிலா பார்க்கவா' (இரண்டாம் பதிப்பு 2015) வெளியிடப்பட்டுள்ளது. 1960-1964 ஆம் ஆண்டுகளில் 'அறிவூட்டும் அற்புதக் குட்டிக்கதைகள் நூறு' என்பது "வன மலர்கள்" (2007) என்ற மறு உருவில் அச்சாகியுள்ளது. அவர் வாழ்ந்த காலத்தில் இவற்றை வெளியிட முயன்று இயலாமல் போனதை தமிழ்ஒளி குறிப்பிடுகிறார். தமிழ்ஒளி அவர்களின் "பாடு பாப்பா பாடு" என்ற முதல் சிறார் இலக்கியத்திற்கு தி.ஜ.ரங்கநாதன் (1901-1974) எனும் தி.ஜ.ர எழுதியுள்ள முன்னுரை, தமிழ்ஒளியைப் புரிந்துகொள்ள உதவும் அரிய ஆவணமாக உள்ளது. அப்பகுதி வருமாறு -

"கவிதையின் ஆணிவேரே குழந்தை உள்ளந்தான். குழந்தையின் மாசற்ற உள்ளத்திலே பிறக்கும் வியப்பு, ஆர்வம், ஆனந்தம், ஆத்திரம், கற்பனை, பொய் அறியாச் சொல் இவையெல்லாம் இணைந்த திரள்தான் கவிதையின் உயிர்க்கரு. ஒரு வகையில், கவிஞன் ஒரு குழந்தை; அறிவும் அனுபவமும் முதிர்ந்த குழந்தை. கவிஞர் தமிழ் ஒளி இத்தகைய 'குழந்தை' சிறந்த கவிஞர்."

தமிழ்ஒளி பற்றி தி.ஜ.ர. மேலும் எழுதுகிறார்.

"கவிஞர் தமிழ் ஒளியுடன் சிலகாலம் நேரில் பழகும் பேறு எனக்குக் கிட்டியது. அவர் பண்பிலே சிறந்தவர்; சித்த உறுதி கொண்டவர். உருவிலே அடக்கமானவர்; நெஞ்சிலே உரம் மிக்கவர் அவருடைய இந்த சிறப்புக்களெல்லாம் அவருடைய கவிதைகளில்

பிரதிபலிக்கின்றன.''

இவ்வகையில் சிறார் இலக்கியப் படைப்பாளியாகவும் இருந்த தமிழ்ஒளி குறித்தப் புரிதல் பொதுவெளியில் இருப்பதாகப் படவில்லை. முறையான வெளியீடும் அதனைப் பல தளங்களில் முன்னெடுக்கும் முயற்சிகளும் முறையாக மேற்கொள்ளாத நிலையாகவே இதனைப்புரிந்துகொள்ள முடிகிறது. அதனை முறைப்படுத்தும் தேவை நம்முன் இருக்கிறது. சிறார் படைப்புகள் 'சரஸ்வதி' (1954) 'தாமரை' (1959) 'அமுதா சுரபி' (1964) ஏடுகளில் வெளிவந்ததாக செ.து.சஞ்சீவி பதிவு செய்கிறார். சிறார் இலக்கிய வெளியீடு குறித்து, தமிழ்ஒளி செய்துள்ள பதிவு பின்வருமாறு அமைகிறது.

''சென்னை, தியாகராய நகரிலுள்ள ஒரு பதிப்பகம் என் நூறு குட்டிக் கதைகளை வெளியிட முன்வந்து, என்னிடமிருந்து கையெழுத்துப் பிரதியைப் பெற்றுக்கொண்ட பின், நேரிய ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொள்ள மறுத்தும், என் விருப்பத்திற்கு மாறான நிலையில் என் நூலைப் பயன்படுத்தக் கருதியும் செய்த சூழ்ச்சியை நான் நேரிற் கண்டறிந்தேன். எனவே, எனக்கெதிரான சூழ்ச்சி வலையில், அப்பதிப்பகம் மேலும் ஒரு கண்ணியாய் இடம் பெற்றதையும் அறிந்தேன்.

இவ்வாறு மறைமுகமாகவும், வெள்ளிடையாகவும் என் ஆற்றலை மறைக்க என் தமிழ்ப்புலமைக்குத் திரையிட, நான் ஒரு கவிஞன் என்பதை இருட்டடிப்புச் செய்ய நான் இயற்றியுள்ள நூற்களை ஆள் மாறாட்டம் செய்ய நடந்த முயற்சிகளைக் கண்டு துணுக்குற்றேன். (போராடும் மனிதனின் புதிய உண்மைகள். 1961) 1947 இல் 'கவிஞர் விழா' எனும் பெயரில் தமிழ்ஒளியின் ஓரங்க நாடகங்கள் அடங்கிய தொகுப்பு வெளிவந்துள்ளது. அவை மீண்டும் தனி நூலாக இல்லாமல், அவரது சிறுகதைத் தொகுப்போடு இணைந்து வெளியிடப்பட்டுள்ளது. 'உயிரோவியங்கள்' (2007) என்ற சிறுகதைத் தொகுப்பில் அவை இடம்பெற்றுள்ளன. பதினெட்டு நாடகங்கள் அச்சிடப்பெற்றுள்ளன. தமிழ்ஒளி நாடக முயற்சிகள் குறித்து பாவலர் ச.பாலசுந்தரம் அவர்களின் பதிவு பின்வருமாறு அமைகிறது.

ஒருநாள் பாலு சார் ''நான் ஒரு நாடகம் எழுதி சக்தி நாடகக் கம்பெனிக்கு அனுப்பியிருக்கிறேன். அனேகமாக அது அவர்களுக்குப் பிடிக்கும்'' என்றார். எனக்கு வியப்பாக இருந்தது. அவர் சொன்னதுபோலவே சக்தி நாடக சபா உரிமையாளர் கிருஷ்ணசாமி அவரைப் புறப்பட்டு வருமாறு எழுதியிருந்தார். மறுநாள் திண்டுக்கல்லுக்குப் புறப்பட்டுச் சென்று மறுநாள் திரும்பி வந்தார். பாலு சார் அவர்கள் நாடகத்தை ஏற்றுக் கொண்டார்கள். பயிற்சி கொடுத்து அடுத்த மாதம் அரங்கேற்றுவதாகக்

கூறியுள்ளார்கள் என்றார். அக்காலத்தில் ஒரு நாடகக் கம்பெனியார் ஒருவர் நாடகத்தை எடுத்துக் கொண்டால் எழுதிய ஆசிரியருக்கு முதல் நாள் வசூலாகும் தொகையை ஊதியமாகக் கொடுப்பது வழக்கம். தமிழ்ஒளி நாடகம் அரங்கேறிய நாளன்று சென்று வந்து முதல் நாள் வசூலான தொகையுடன் சிறிது சேர்த்து 700 ரூபாய் கொடுத்தார்கள். இன்றைய மதிப்பில் அத்தொகை 70,000 ஆகும். மறுநாள் ஊருக்குச் சென்று வருவதாகக் கூறி அவர் பெட்டியை என்னிடம் ஒப்பித்துவிட்டுச் சென்றார். திரும்பி வரவில்லை. (2008:64-60)

இவ்வகையில் 'ஸ்டாலின்' என்ற நாடகத்தையும் தமிழ்ஒளி எழுதியதைப் பதிவு செய்துள்ளார். (1947-1948) அந்தப் பிரதி கிடைக்காமலே போய்விட்டது. இந்தப் பின்புலத்தில் இவருடைய ஓரங்க நாடகங்கள் குறித்த அவரது பதிவு பின்வருமாறு அமைகிறது.

"இந்த ஓரங்க நாடகங்கள் படிப்பதற்கென்றே எழுதப்பட்டவை. நடிக்கவும் கூடும். விரும்புவோர் என் யோசனையையும் கேட்டுக்கொண்டால் சில திருத்தங்களுடன் அழகாக நடிக்கலாம்.

பெரிய நாடகங்களைவிட, ஓரங்க நாடகங்களின் மூலம் நாட்டில் நடக்கும் கொடுமைகளை எளிதில் சித்திரித்துக் காட்டி மக்களிடத்தில் எழுச்சியை உண்டாக்க முடியும் என்பது எனது நம்பிக்கை. (2007:97)

தமிழ்ஒளி 'சிற்பியின் கனவு' (1945), சேரன் செங்குட்டுவன் (1946) என்ற நாடகப் பிரதிகளை எழுதியதாகப் பதிவு உள்ளது. அவை இப்போது கிடைக்கவில்லை.

காவியப்படைப்பாளி, கவிஞர், நாடக ஆசிரியர், சிறார் இலக்கியப் படைப்பாளி, சிறுகதை ஆசிரியர் என்றெல்லாம் அறியப்பட்ட தமிழ்ஒளி, ஆய்வாளராகவும் செயல்பட்டிருக்கிறார்.

தமிழ்ச் சமூக வரலாறு குறித்த தனித்த பார்வைகளை முன்வைத்துள்ள பாங்கு

**சிலப்பதிகாரம் குறித்த விரிவான ஆய்வு**

**திருக்குறள் குறித்த அவரது பார்வை**

ஆகிய கோணங்களில் தமிழ் ஒளியின் ஆய்வுகளை இனம் காண முடிகிறது. 'தமிழும் சமஸ்கிருதமும்' எனும் தலைப்பில் 1960 இல் ஒரு நூலை வெளியிட்டிருக்கிறார். இதில் உள்ள முதல் கட்டுரை, தமிழ்நாட்டின் நிலப்பகுதிகள் எவ்வாறு இருந்தன என்பதை இலக்கிய மற்றும் தொன்மக் கதைகள் வழி பேசுகிறார். பின்னர் இந்நிலப் பகுதி எவ்வாறு துண்டாடப்பட்டது? அதன் விளைவால் சமசுகிருதமொழி எவ்வாறு தமிழ்ச் சமூகத்தில் கால் கொள்ளத் தொடங்கியது? இதனால் திராவிட மொழிகளில் ஏற்பட்ட மாற்றங்கள் எவையெவை? சமசுகிருதம் எவ்வாறு பேச்சு வழக்கிழந்த

‘செத்தமொழி’யாக மாறியது? அதன் வரலாறு, அதன் பரவல், திராவிட மொழிகளோடு உள்ள உறவு என்று பல பரிமாணங்களில் பேசுகிறார்.

சமசுகிருத மொழி பற்றிய விவரணங்களை முன்வைத்த நிலையில், தமிழின் தொன்மைகள் எவை? கால்டுவெல் (1814-1891) மூலம் தமிழுக்கு கிடைத்த அங்கீகாரம், அவரது ஒப்பிலக்கண ஆய்வுகள், தமிழக மன்னர்கள் காலத்தில் தமிழ் எவ்வாறு நடைமுறையில் இருந்தது? எனப் பலகோணங்களில் தமிழ்ச் சமூக வரலாற்றைச் சமசுகிருத மொழி சார்ந்த வரலாற்றோடு இணைத்துப் பேசுகிறார். மார்க்சியம் பேசும் மனித சமூக வரலாற்றைத் தமிழ்ச் சமூக வரலாற்றோடு எவ்வாறு இணைத்துப் பார்க்க முடியும் என்ற முயற்சியையும் மேற்கொண்டிருக்கிறார். சங்க இலக்கியம், தொல்காப்பியம் ஆகிய பிரதிகளின் வழி தமிழ்ச் சமூக வரலாற்றைப் பேசுவது குறித்தும் எழுதியுள்ளார். தமிழர்களின் திணைக்கோட்பாடு மக்கள் சமுதாய வரலாற்றைக் கண்டறிவதற்கு எவ்வாறு உதவுகிறது என்றும் எழுதுகிறார். முதலில் ‘தமிழும் சமசுகிருதமும்’ என்று வெளிவந்த நூல் பின்னர், ‘தமிழர் சமுதாயம்’(2006,2020), ‘வரலாற்றில் தமிழர் இனம்’ (2002), எனும் பெயர்களில் வெளி யிடப்பட்டுள்ளன. தமிழ்ச் சமூக வரலாறு தொடர்பான விரிவான ஆய்வுகளை அவர் செய்துள்ளார் என்று கூற முடியாது; மாறாக மார்க்சிய வரலாற்றுப் பொருள்முதல்வாதம் சார்ந்து தமிழ்ச் சமூக வரலாற்றை எவ்வாறு கட்டமைக்கலாம் என்பதற்கான முயற்சியைத் தமிழ்ஒளி முன்னெடுத்திருப்பதைக் காண முடிகிறது.

“சிலப்பதிகாரம் காவியமா? நாடகமா?” எனும் தலைப்பில் 1959 இல் அவர் ஒரு நூலை எழுதியிருக்கிறார். ‘விதியோ? வீணையோ?’, ‘மாதவி காவியம்’ ஆகிய காவியப் படைப்புகளை சிலப்பதிகாரம் சார்ந்த வழிநூல்களாகப் படைத்திருக்கிறார். சிலப்பதிகாரத்தை தமிழரின் இசை நாடகம் மற்றும் தமிழ் மரபுகளை உள்வாங்கியது என்ற கருத்துருக்களை முன்வைப்பதை முன்னர் உரையாடலுக்குட்படுத்தினோம். அவர் அந்த நூலுக்கு எழுதியுள்ள ‘அரங்குவாயில்’ எனும் பகுதியில் பின்கண்ட செய்தியை பதிவு செய்கிறார்.

“சிலப்பதிகாரம் காவியமா நாடகமா?’ எனும் இந்நூலில், அது காவியமுமன்று நாடகமுமன்று அஃதோர் ‘இசை நாடகமே’ என்பதனைத் தக்க சான்றுகள் காட்டி நிறுவியுள்ளேன்.

“சிலப்பதிகாரம் படிப்பதற்காக எழுதப்பட்டதென்று கருதி, அதைப் பள்ளிக்கூடங்களில் அடைத்துவைத்த பழங்கொள்கையைத் தகர்த்து, ‘அஃது பண்வகுத்துப் பாடவும் எண்வகுத்து ஆடவும் அரங்கில் நிகழ்த்தும் கதை’ என்பதனைத் திறனாய்வு கொண்டு

தெளிவாக்கியுள்ளேன்.

மன்னர் கலையாய்ப் பிறந்து, மக்கள் கலையாய் வளர்ந்து உலக வழக்கொழிந்து சிதையாமல் உயிர்பெற்றுத் திகழும் இசை நாடகத்தின் தாயகம் தமிழகமே என்பதனைத் தக்கார் அறியவும் தரணியோர் புரியவும் செய்துள்ளேன்.

சிலப்பதிகாரத்தில் விளங்காமற் கிடந்த பொருட்களை விளக்கியும், குழப்பங்களை அகற்றியும், கொள்கைகளை இணைத்தும் காட்டியுள்ளேன்.

சிலப்பதிகாரத்தை அரங்கில் ஏற்றிக் காண்பதே குழப்பங்களை அகற்றுதற்குரிய வழி, அதனை எவ்வாறு அரங்கில் ஏற்ற வேண்டும் என்பதனை இந்நூலைப் படிப்போர் எளிதிற் புரிந்துகொள்ளலாம்.''

இவ்வாறு சிலப்பதிகாரத்தை ஒரு நிகழ்த்துப் பிரதியாகக் கட்டமைக்க விரும்பிய தமிழ்ஒளியின் பார்வை கவனத்திற்குரியது. 'திருக்குறளும் கடவுளும்' எனும் தலைப்பில் 1959 இல் தமிழ்ஒளி ஒரு நூலை வெளியீட்டுள்ளார். திருக்குறள் பற்றிய ஆய்வாக அது அமைந்துள்ளது. இந்நூலை எதற்காக எழுதினேன் என்ற அவரது விளக்கம் முக்கியமானதாக அமைந்துள்ளது. அப்பகுதி பின்வருமாறு அமைகிறது.

''திருக்குறளிற் காணப்படும் தத்துவம் எது? என்று அறியப் புகுவர், அக் குறளிற் காணும் கடவுள் வாழ்த்தையும் அதற்குப் பரிமேலழகர் கண்ட உரையையும் படித்ததும் மயங்கிச் செய்வதறியாது திகைக்கின்றனர்.

திருவள்ளுவர் வாழ்த்தும் கடவுள் எக்கடவுள் ? என்று கேட்கக் கருதுமுன், பரிமேலழகர் தம் சைவாகமத்தை விரித்துக் காட்டிச் சிவன், பிரம்மா, விஷ்ணு ஆகிய மூவரையும் ஒன்றுபடுத்தி, மூவராகிய முதற் கடவுள் என்று கூறி, வாசகர்களை வழிமாற்றி அழைத்துச் சென்று விடுகின்றார்.

பரிமேலழகர் உரையை மறுத்து எழும் இவ்விளக்கம் வரலாற்றுண்மையும், இலக்கியச் சான்றும், இலக்கணத் தெளிவும் நிறைந்ததாகும்.''

திருக்குறள் பத்தொன்பதாம் நூற்றாண்டில் பரவலாக வாசிக்கப்பட்டபோது, பரிமேலழகர் உரைதான் விரிவாக அறியப்பட்டதாக இருந்தது. அதிக அளவில் மறு பதிப்பு பெற்ற நூலாகவும் பரிமேலழகர் உரையே இருந்தது. திராவிட இயக்கம் வளர்ச்சிபெற்ற நிலையில், பரிமேலழகர் உரையை மறுதலிக்கும் ஆய்வுகள் உருப்பெறத் தொடங்கின. அந்தப் பின்புலத்தில் தமிழ்ஒளி அப்பணியை மேற்கொண்டிருக்கிறார். தேசிய இயக்க ஈடுபாட்டில் இருந்த நாமக்கல் கவிஞர் இராமலிங்கரும் (1888-1972)

‘திருவள்ளுவர் திடுக்கிடுவார்’ எனும் தலைப்பில் பரிமேலழகர் உரையை மறுத்து எழுதியுள்ளார்.

♦♦♦

தமிழ்ஒளி சுயமரியாதை இயக்க மரபு சார்ந்த திராவிடக் கருத்தியலை, அவர் இடதுசாரி அமைப்பில் செயல்பட்டபோதும் நடைமுறைப்படுத்தியிருக்கிறார். அதனை உறுதிப்படுத்தும் செயல் என்பது, அவர் இறுதிக்காலம் வரை இந்தி எதிர்ப்பாளராகவே இருந்துள்ளார். இந்த நிலைப்பாடு, அவர் அன்றைய இடதுசாரி இயக்கத்தோடு முரண்பட்ட காரணமாக இருந்திருக்கலாம். இடதுசாரி இயக்கங்கள் அன்றைய சூழலில் ‘மும்மொழிக் கொள்கை’யை ஏற்றுக்கொண்டிருந்தன. இந்தப் பின்புலத்தில் கீழ்க்காணும் தமிழ்ஒளியின் பதிவு முக்கியமானது.

“திராவிட முன்னேற்றக் கழகத்திடம் எனக்குப் பல கருத்து வேற்றுமைகள் இருப்பினும் இந்தி எதிர்ப்புக் கொள்கையில் நான் அக்கழகக் கருத்துடன் முற்றும் இணைந்தவன். வடநாட்டுப் பெரு முதலாளித்துவத்தின் ஆதிக்கத்தாலேயே இந்தித் திணிப்பு நடைபெறுகின்றது என்பதை உணர்ந்தவன். எனவே. திரு. ஈ.வெ.கி.சம்பத் அவர்கள், “இந்தி எதிர்ப்புப்போர்” தொடங்கக் குரல் எழுப்பியபோது நான், “இந்தி எதிர்ப்புப் பரணி” என்ற பாடல்களை எழுதினேன். அப்பாடல்களை என்னிடமிருந்து, பெற்றுக்கொண்ட திரு.நா.வா. கலைமணி என்பவர், தாம் நடத்திய “தமிழர் நாடு” இதழில், என் பெயர் இன்றிப் பாடல்களை வெளியிட்டார். அவரும் தீயசக்திகளுடன் கையிணைத்து நின்றதை நான் கண்டேன்!

அதே பாடல்களைப் பின்னர் “தாய் நாடு” என்ற இதழில் வெளி யிட்டேன்.

(போராடும் மனிதனின் புதிய உண்மைகள். 1961)

தமிழ்ஒளியை ஒரு கவிஞனாக மட்டுமே அறிந்துள்ள தமிழ்ச்சமூகம் அவரது பல்வேறு பரிமாணங்களையும் அறிந்து கொண்டாடும் தேவை, அவரது நூற்றாண்டு கொண்டாடும் நேரத்தில் உருவாகி யிருப்பதாகக் கருதுகிறேன். தமிழ்ஒளி யார்? என்பதற்கு கீழ்க்காணும் பதிவுகளை முன்வைக்க முடியும்.

1925 ஆம் ஆண்டில் தந்தை பெரியார் அவர்களால் முன்னெடுக்கப்பட்ட சுயமரியாதை இயக்கம், தொடக்க காலங்களில், தோழர்கள் ம.சிங்காரவேலு, ப.ஜீவானந்தம் ஆகியோரின் ஈடுபாட் டோடு செயல்பட்டது. அவ்வமைப்பில் தமிழக இளைஞர்கள் தங்களை

இணைத்துக்கொண்டனர். அவ்வமைப்பு பின்னர் 'திராவிடர் கழகம்' (1944) என்று பெரியாரால் அடையாளப்படுத்தப்பட்டது. அந்த அமைப்பில் தன்னை இணைத்துக்கொண்ட இளைஞன் தமிழ்ஒளி. அதன் தாக்கம் அவரது வாழ்க்கை முழுவதும் இருந்திருப்பதைக் காண முடிகிறது.

1944-45 வாக்கில் தமிழ்ச் சூழலில் செயல்பட்ட கம்யூனிஸ்டுக் கட்சியோடு இணைந்து சுமார் பத்து ஆண்டுகளுக்கு மேலாக இடதுசாரித் தத்துவப் புரிதலோடு செயல்பட்டவர் தமிழ்ஒளி. கம்யூனிஸ்டுக் கட்சி தடை செய்யப்பட்டபோது தலைமைப் பொறுப்பில் இருந்த தோழர்கள் தலைமறைவு வாழ்க்கையில் இருந்தனர். அந்த காலத்தில் (1948-49) கம்யூனிஸ்டுக் கட்சி வார இதழான 'முன்னணி'யில் துணை ஆசிரியராகக் கவிஞர் குயிலன் அவர்களோடு இணைந்து செயல்பட்டவர். இக்காலங்களில் அவரது படைப்புக்கள், மார்க்சியக் கருத்துநிலை சார்ந்துதான் இருந்தது. பாரதி, பாரதிதாசன், தமிழ்ஒளி எனும் தமிழ்க் கவிதைப் பாரம்பரியத்தைக் கட்டமைக்கும் வகையில் அவர் செயல்பட்டார்.

1954 ஆம் ஆண்டுகளுக்குப் பிறகு, கம்யூனிஸ்டு இயக்கத்தில் நேரடியான செயல்பாட்டில் இல்லை. மாறாகச் சுதந்திர எழுத்தாளராகத் தாம் ஏற்ற மார்க்சியத்தோடு சுயமரியாதை மரபும் சார்ந்த கருத்து மரபோடு வாழ்ந்த வரலாற்றைக் காண முடிகிறது.

தமிழ்ஒளியின் நாற்பதாண்டு கால வாழ்வை அவரது ஆக்கங்களில் கண்டறிந்து கொண்டாட வேண்டிய கடமை தமிழ்ச் சமூகத்திற்குண்டு. மாறாக, அவரது இறுதிக்கால வாழ்க்கைப் போக்குகளை மட்டும் கவனத்தில் கொண்டு, அவரைக் கொண்டாட மறுத்த சுயமரியாதை இயக்கம் மற்றும் இடதுசாரிப் பார்வைகளை மறுபரிசீலனை செய்வோம். பாரதியைப்போல், பாரதிதாசனைப்போல் கொண்டாட வேண்டிய தோழர் தமிழ்ஒளி என்பதைப் புரிந்துகொள்வோம்.

**குறிப்பு:**

பெரியவர் செ.து.சஞ்சீவி தொகுத்து வெளியிட்ட 'தமிழ்ஒளி கவிதைகள்' முழுத் தொகுப்பு (2018), 'போராடும் மனிதனின் புதிய உண்மைகள்' (1961) எனும் தமிழ்ஒளியின் எட்டுபக்கச் சிறுவெளியீடு மற்றும் தமிழ்ஒளி அவர்களின் முதல்பதிப்பு நூல்கள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு மேற்குறித்த உரையாடலை நிகழ்த்தியுள்ளேன்.

❖❖❖

# தமிழ்ஒளியின் தாகமும் தவிப்பும்

ஈரோடு தமிழன்பன்

புரட்சிக்கவிஞர் பேராளுமைக்கு அவருடைய கவிதைகளே அல்லாமல் அவரைப் பின்பற்றிக் கவிதைகள் புனையும் பெரும்பட்டாளம் தமிழகத்தில் தலைதூக்கியதும் ஒரு சான்றாக இலக்கிய வரலாற்றில் இடம்பெற்றுள்ளது. கவிஞர்களை உருவாக்குவதில், வளர்த்தெடுப்பதில் அவர்காட்டிய ஆசையை அக்கறையை நானும் என் வாழ்வில் பெற்றிருக்கிறேன்.பெருமிதம் ததும்பப் பாரதிதாசனே தன்வாழ்வு குறித்த நெடிய அகவலில்

**என்நடை தம்நடை என்யாப்பத் தம்யாப்பென்று**
**இந்நாள் எழுந்துள பாவலர் தம்மை**
**எண்ணினால் இருப்பவர் தம்மில் நூற்றுக்குத்**
**தொண்ணூற் றொன்பது பேர்எனச் சொல்லுவர்.**

என்று குறிப்பிட்டுள்ளார். **பொன்னி** என்ற இலக்கிய ஏட்டின் வாயிலாகப் **பாரதிதாசன் பரம்பரை** இலக்கிய உலகிற்கு அறிமுகமாகியது. கவிஞர்கள் முடியரசன், வாணிதாசன், சுரதா என்று தொடரும் வரிசையில் இடம்பெற்றிருக்க வேண்டிய பெருங்கவிஞர் தமிழ்ஒளி. பாரதிதாசன் அழுத்தமாய்த் தம் கவிதைகளில் பதிவு செய்த பொதுவுடைமைக் கோட்பாட்டை அப்படியே பின்பற்றியவர் தமிழ்ஒளி. ஆயின் கூடுதலான திராவிட இயக்கப் பார்வையோடு,பொதுவுடைமைக் கோட்பாடு தழுவி எழுதிய கவிஞர்கள் வரிசையில் இடம்பெறாமல் போனாரோ தமிழ்ஒளி?

இப்படிப்பட்ட நிலை பாரதிதாசனுக்கும் உண்டு. பொதுவுடைமை இயக்கம் பெற்ற இடத்தினும் அதிகமான இடத்தை அவரிடம் திராவிட இயக்கம் பெற்று விட்டதாகக் கருதி அவரை அவ்வளவாகப் பொதுவுடைமை இயக்கம்,ஒப்புக்கொள்ளவில்லை. ஆயின் பொதுவுடைமை முரசு கொட்டிய பட்டுக்கோட்டைக் கலியாணசுந்தரத்துக்கும் தமிழ்ஒளிக்கும் ஆசானாக இருந்து அவர்களை வளர்த்தெடுத்தவரே பாரதிதாசன்தான். சென்னை மத்திய நூலகக்கட்டடத்தில் தோழர் வி.பி.சிந்தன் தலைமையில் நடந்த முற்போக்கு எழுத்தாளர் சங்கக் கூட்டத்தில் இதை எடுத்துப் பேசுகையில் பாரதிதாசனைப் பொதுவுடைமை இயக்கம் ஒதுக்குவது எவ்வகையில் ஏற்புடையது என்று கேட்டேன்.சிந்தன் என்று அவர் பெயரை மாற்றியவரே பாரதிதாசன்தான்.பொதுவுடைமைக் கட்சியின் சார்பில் புதுச்சேரியில் போராட்டம் நடந்தபோது

அவர் பாரதிதாசனோடு பழகியிருக்கிறார். அப்பொழுதுதான் சிண்டன் என்ற பெயரைப் பாரதிதாசன் சொற்படி சிந்தன் என்று மாற்றிக்கொண்டார். பாரதிதாசன், “நானா பொதுவுடைமைக்கு விரோதி?”என்ற தலைப்பில் கவிதை எழுதியிருப்பதையும் எடுத்துச்சொன்னேன்.ஒப்பற்ற கவிஞன் தமிழ்ஒளியை நினைக்கும் போது அலைஅலையாக எண்ணங்கள் என் இதயத்துள் எழுகின்றன.

அவர் தமிழ் படித்தால் மேலும் வளர்வார் என்று நம்பிக்கை கொண்டு அவரைத் தஞ்சைக் கரந்தைப் புலவர் கல்லூரிக்கு ஒரு பரிந்துரைக் கடிதம் கொடுத்து அனுப்பியவரே பாரதிதாசன்தான். கரந்தைப் புலவர் கல்லூரியில் நான் படித்தபோது பேராசிரியராக அங்கு விளங்கியவர் பாவலரேறு ச. பாலசுந்தரனார்.அவர் கரந்தையில் புலமைக் கல்வி பெற்றுவந்தபோது அவருடன் படித்து வந்தவர்தான் தமிழ்ஒளி. அப்போது அவர்பெயர் விஜயரங்கம். தன்வரலாறாகப் பாவலர் எழுதியுள்ள “நினைவலைகள்” என்னும் நூலில் தமக்கும் தமிழ்ஒளிக்கும் இடையேயான தொடர்பு பற்றி எழுதியிருப்பதை இங்கு எடுத்துக்காட்டுவதுபொருத்தமாக இருக்கும்.

“எப்பொழுதும் ஏதாவது எழுதிக்கொண்டிருப்பார்.ஆசிரியர்கள் பாடம் நடத்தும்போது அதில் அவ்வளவு ஈடுபாடு இருக்காது. புதுமைப்பித்தன் ரகுநாதன் போன்றோர் கவிதைகளை விமரிசிப்பார்.

என்னிடத்தில் ஈடுபாடும் கொண்டார். ஒருநாள் கேட்டேன் “உங்களுக்கு இவ்வளவு தமிழ் உணர்வும் கவிதைத் திறனும் எப்படி வந்தன? அவர்உடனே “பாரதிதாசனால்தான். நான்அவரிடம் அவர் எழுதும் கவிதை கட்டுரைகளைப் படி எடுக்கும் உதவியாளராக இருந்தேன். அவற்றைப் படிக்கும்போது அதைப்போல் கற்பனை செய்து எழுதிப்பார்ப்பேன். அதே மெட்டில் அதே பாவில் எழுதிப்பார்ப்பேன். அவர் என்பால் ஒரு மகனைப்போல் அன்பு செலுத்தினார்.” இப்படித் தம்முடைய கல்லூரி நாள்களைப்பற்றிப் பாலசுந்தரனார் எழுதுகையில் அவருக்கும் தமக்குமான நட்புப் பெருக்கைப் பதிவு செய்துள்ளார்.

ஆனால் தமிழ்ஒளிக்கு முறையான பாடத்திட்டத்தில் நம்பிக்கையோ ஈடுபாடோ இல்லை. இப்படிப்பட்ட கல்வி மூலம் கற்கிற கல்வி ஆசிரியர் பணிக்குப் போகப் பயன்படுமே தவிர மேன்மையான படைப்பாளியாக உதவாது என்பது தமிழ்ஒளியின் கருத்து. இந்நிலையில் கரந்தை வாழ்வு கசப்பதற்கான பிறிதொரு சூழலும் அவருக்கு நர்ந்தது. ஒடுக்கப்பட்ட விளிம்புநிலை மாணவராகிய அவர் அதுகாரணமாக அவமானங்களை எதிர்கொள்ள நேரிட்டது. வெறுத்துப்போய்ப் புதுவைக்கே திரும்பிப் போய்விட்டார். படிப்பை த்தொடராமல் திரும்பி வந்துவிட்ட தமிழ்ஒளியைக் கூப்பிட்டுக்காரணம் கேட்டார் பாரதிதாசன். உன்னை எவன்

மட்டமாகப் பேசியவன்? வா! என்னோடு புறப்படு! நான் சேலம் போகவேண்டியிருக்கிறது. உன்னைக் கரந்தையில் புலவர் கல்லூரியில் விட்டுவிட்டுப் போகிறேன் என்று தமிழ் ஒளியோடு பறப்பட்டார். அப்போது கரந்தைப் புலவர் கல்லூரி முதல்வராக இருந்தவர் பேராசிரியர் மீனாட்சிசுந்தரனார் என்று நினைக்கிறேன். அங்குப் பணியில்சேரும் முன்போ பின்போ சோவியத்து ஒன்றிய மாசுக்கோவில் தமிழ்ப்பணி. ஆற்றியவர். அவரிடம் தமிழ்ஒளியை ஒப்படைத்து ‘‘இவன் என் புள்ளாண்டான். மரியாதைக் குறைவா எவனும் நடத்தாதபடிப் பார்த்துக் கொள்ள வேண்டியது உங்கள் பொறுப்பு ‘‘என்று சொல்லியபின் சேலத்திற்குப் போனார்.

இவ்வாறு பாரதிதாசப் பாதுகாப்பு அரண் கிடைத்தும் அவர்மனம் தனக்கு வேண்டியது எதுவோ அது கிடைக்கவில்லையே. என்று தவித்துக் கொண்டிருந்தார். படைப்பிலக்கிய ஆர்வத்தை அடக்க முடியவில்லை. சக்தி நாடக சபாவுக்கென ஒரு நாடகம் எழுதி அனுப்பிவைத்தார். அதை அந்நாடக சபா ஏற்றுக் கொண்டது. அரங்கேற்றம் உறுதியானது. பறவை கல்லூரிக் கூண்டைவிட்டுப் பறந்துவிட்டது. இது குறித்து, பாலசுந்தரனார் எழுதியிருக்கிறார். தமிழ்ஒளி நாடகம் அரங்கற்றமாகிய அடுத்தநாள் கரந்தை திரும்பி யிருக்கார். அந்நாளைய வழக்கப்படி முதல்நாள் வசூலான தொகையோடு சிறிது சேர்த்து 700 உருபா கொடுத்திருக்கறார்கள். இன்றைய மதிப்பில் அத்தொகை ரூ. 70,000 ஆகும் என்று பாவலர் வியந்து எழுதகிறார்.அப்புறம் என்ன ? பெட்டி படுக்கை எல்லாம் பாவலர் பொறுப்பில் வைத்துவிட்டுப் போன தமிழ்ஒளி மீளவில்லை கரந்தைக்கு!

❖❖❖

# புதுமைத் தமிழ்ஒளி பொதுமைச் செவ்வொளி!

தோழர். தியாகு

இந்தியத் துணைக் கண்டத்திலேயே முதன் முதலாக மே நாள் கொண்டாடியவர் சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் எனும் பெருந்தமிழர். மே நாளைப் போற்றித் தமிழிலே முதல் கவிதை இயற்றியவர் பெருங்கவிஞர் தமிழ்ஒளி!

**“கோழிக்கு முன்னெழுந்து கொத்தடிமைப் போலுழைத்துக்**
**கண்ணீர் துடைக்க வந்த காலமே நீ வருக!”**
**என்று மே நாளை வாழ்த்தி வரவேற்றார்.**

**“மண்ணை இரும்பை மரத்தைப் பொருளாக்கி**
**விண்ணில் மழையிறக்கி மேதினிக்கு நீர்ப்பாய்ச்சி**
**வாழ்க்கைப் பயிரிட்டு வாழ்ந்த தொழிலாளி கையில் விலங்கிட்டுக்**
**காலமெலாம் கொள்ளையிட்ட**
**பொய்யர் குலம் நடுங்கப் பொங்கி வந்த மே தினமே!”**

**“தாழ்வைத் தகர்க்கத் தலைநிமிர்ந்த மேதினியில்**
**வாழ்வின் சமாதானம் வாய்ந்த நெடுந்திரையில்**
**ஜீவியமாய் நின்றதொரு சித்திரம் நீ; வானமரர்**
**காவியம் நீ; கற்பனை நீ; காணுமொரு காட்சியும் நீ!**
**தீரா இருளொழிந்து திக்கு விளங்க**
**இதோ வாராய் வளர்பொருளே**
**மே தினமே வாராய் நீ!”**
**“பொந்தில் உயிர்வாழ்ந்தார்;**
**போக்கற்றார்; இன்பமிலார்**
**கந்தல் மனிதரவர் கையில் அதிகாரம்**
**ஏற்றி வைத்த நின்பெருமை**
**என்னுயிர்க்கும் மேலன்றோ!**
**போற்றினேன் வையப் புரட்சியொடு நீ வருக!’**

“தமிழ்ஒளிக்குக் கிடைத்த சடையப்ப வள்ளல்” என்று தி க. சிவசங்கரன் அவர்களால் பாராட்டப் பெற்ற செ.து. சஞ்சீவி அவர்கள்தான் இதை எழுதும் எனக்குத் தமிழ்ஒளியின் பெயரையும் படைப்புகளையும் அறிமுகம் செய்தவர். தமிழ்ஒளி எழுதியவையும்,

அவரைப் பற்றி மற்றவர்கள் எழுதியவையுமான சில படைப்புகளின் வெளியீட்டு விழாவை செ.து. சஞ்சீவி சென்னை பெரியார் திடலில் நடத்திய போது என்னை அழைத்துத் தமிழ்ஒளியின் கவிதைகள் பற்றிப் பேசச் செய்தார். எப்போது என்று நினைவில்லை. 1990 வாக்கில் இருக்கக் கூடும். அதன் பிறகுதான் அவரிடம் ஆர்வம் கொண்டு படிக்கலானேன்.

பாரதி வழி வந்தவர், பாரதிதாசனின் மாணவர் என்றெல்லாம் அவர் பலவாறு அறியத் தரப்பெற்ற போதிலும் தூய பொதுமைப் பாவலராக விளங்கியதுதான் அவரது தனித் தன்மை என மதிக்கிறேன்.

விஜயரங்கம் எனும் இயற்பெயர் கொண்ட கவிஞர் தமிழ்ஒளி 1924 செப்டம்பர் 21ஆம் நாள் புதுவையில் பிறந்தார். சற்றொப்ப 41 ஆண்டு வாழ்ந்து 1965 மார்ச்சு 29ஆம் நாள் மறைந்தார். சற்றொப்ப 39 ஆண்டுகளே வாழ்ந்து மறைந்த பாரதியாரை விடவும், 72 ஆண்டுக்கு மேல் வாழ்ந்து மறைந்த பாரதிதாசனை விடவும் அரசியலில் தெளிவான முடிவுகளுக்கு வந்தவர் தமிழ்ஒளி என்பது என் துணிவு. யார் சிறந்த கவிஞர் என்பதன்று இந்த ஒப்பீடு. எல்லாவகையிலும் பாரதியார் மீது பாரதிதாசன் கொண்டிருந்த உயர் மதிப்பு சொல்லித் தெரிய வேண்டிய ஒன்றன்று. ஆனால் பாரதியார் அடிப்படையில் இந்தியத் தேசியப் பாவலராகவே விளங்கினார் எனபதும், பாரதிதாசன் தமிழ்த் தேசியத்தின் தலைப் பாவலர் என்பதும் மாற்றவொண்ணா வரலாற்று உண்மைகள். தமிழ்ஒளி தூயப் பொதுமைப் பாவலராக விளங்கினார் என்பது சொல்லால் மட்டுமன்று, செயலாலும் உறுதிப்படும்.

புதுவை முத்தியாலுப் பேட்டை நடுநிலைப் பள்ளியிலும் கலவைக் கல்லூரியிலும் படித்த தமிழ்ஒளி மாணவராய் இருந்த போதே பாரதியார், பாரதிதாசன் கவிதைகளில் ஈடுபாடு கொண்டார். நாள்தோறும் குயில் தோப்புக்குச் சென்று பாரதிதாசனிடம் தாம் எழுதிய கவிதைகளைப் படித்துக் காட்டிப் பாராட்டும் பெற்றார். திராவிடர் கழக மாணவர் மாநாட்டில் கலந்துகொண்டு பாரதிதாசன் கொடுத்தனுப்பிய வாழ்த்துக் கவிதையைப் படித்ததுதான் அவரது பொது வாழ்வின் தொடக்கமாக இருக்க வேண்டும்.

பாரதிதாசனின் பரிந்துரையின் அடிப்படையில் கரந்தைத் தமிழ்க் கல்லூரியில் மாணவராகச் சேர்ந்தார். திராவிடர் கழகத்தில் இருந்த போதே பொதுமைப் பாக்கள் புனையத் தொடங்கி விட்டார். மே நாள் வாழ்த்துப் பா குறித்துத் தொடக்கத்திலேயே பார்த்தோம்.

1949ஆம் ஆண்டில் 'புதுவைத் தொழிலாளிக்கு கோவைத் தொழிலாளியின் கடிதம்' என்னும் கவிதை எழுதினார். நிலை பெற்ற சிலை, வீராயி, மே தின ரோஜா ஆகிய மூன்று காவியங்கள்

படித்தார்.

பொதுமை இயக்கம் இன்று வரைக்கும் கூட சாதியச் சிக்கலுக்கு உரிய முகன்மை தரவில்லை என்ற குற்றாய்வு உண்டு. வகுப்பு (வர்க்கம்) அல்லாத குமுகக் கூறுகளை உரியவாறு அறிந்தேற்காத வகுப்புக் குறுக்கியத்தை (CLASS REDUCTIONISM) அப்போதே கடந்து நின்றார் தமிழ்ஒளி. வகுப்புச் சுரண்டலையும் சாதிய ஒடுக்குமுறையையும் இணைத்துச் சாடும் தெளிவு தமிழ்ஒளியின் எல்லாப் படைப்புகளிலும் காணக் கிடைக்கிறது.

தலித்து என்ற சொல் அப்போதே புழக்கத்துக்கு வந்து விட்டதா என்று தெரியவில்லை. ஆனால் தாழ்த்தப்பட்ட மக்களைக் குறிக்க தலித்து என்ற சொல்லை ஆள்வதில் பிழையில்லை என்றால், தமிழ்ஒளியைத் தலித்து இலக்கிய முன்னோடி என்று குறிப்பிடலாம்.

தமிழ்ஒளியின் மூன்று காவியங்களும் தலித்து மக்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளையும், தலித்து மக்களின் விடுதலையையும் முன்னேற்றத்தையும் பேசுகின்றன. வீராயி என்னும் காவியத்தில் கதைத் தலைவி வீராயி ஒரு தலித்துப் பெண்.

ஐந்து தொகுதிகளாக வந்துள்ள தமிழ்ஒளியின் சிறுகதைகளில் வரும் கதைமாந்தர்களில் பெரும்பாலார் தலித்துகள், தொழிலாளர்கள், போராளிகள் என அடித்தட்டு மக்களே.

அக்காலத்தில் இடதுசாரி இயக்கப் படைப்புகளில் நேராகச் சாதியச் சிக்கல்களைப் பேசுவதில் தயக்கம் காணப்பட்டது. சாதியை வெறும் மேற்கட்டுமானம் என்றும், கிழாரியச் சுரண்டல் ஒழிந்தால் சாதிய ஒடுக்குமுறையும் ஒழிந்து போகும் என்பதே பொதுமை இயக்கத்தின் பொதுவான பார்வையாக இருந்தது. போராட்டப் பட்டறிவுகள் இந்தப் பார்வையில் மாற்றம் கொண்டுவந்த நேர்வுகளும் உண்டு என்பதையும் மறுப்பதற்கில்லை.

அக்காலத்திலேயே தமிழ்ஒளி பாட்டாளியக் கண்ணோட்டத்தில் சாதிய எதிர்ப்பையும் தலித்து விடுதலையையும் பாடினார்.

மாணவப் பருவத்தில் திராவிட நாடு, குடியரசு, புதுவாழ்வு ஆகிய திராவிட இதழ்களிலும் கவிதைகளை எழுதினார்.

தாமரை இலக்கிய இதழில் வனமலர் என்னும் தலைப்பில் சில உருவகக் கதைகள் எழுதினார்.

தமிழ்ஒளி, விஜய ரங்கம் விஜயன் சி.வி.ர என்பன அவருடைய புனைப்பெயர்கள் ஆகும். முன்னணி, புதுமை இலக்கியம், சாட்டை போன்ற இதழ்களில் பணியாற்றினார். சனயுகம் என்னும் திங்கள் இதழைத் தம் சொந்த முயற்சியில் நடத்தி மார்க்கியக் கருத்துகளைப் பரப்பினார்.

அகவை இருபது வரை புதுவையில் வாழ்ந்து பாரதிதாசன்

இல்லத்திலேயே கிடையாய்க் கிடந்த தமிழ்ஒளி அக்காலத்தில் எழுதிய தம் கவிதைகள் அனைத்தையும் இரு தொகுதிகளாக்கி வெளியிடும் முயற்சியில் தோல்வி கண்ட பின் 1945இல் சென்னைக்குப் புறப்பட்டார்.

''கவிஞர் தமிழ்ஒளி தோற்றத்தில் எளியவர் ஆயினும் தெளிவானவர், மனத்திட்பம் மிக்கவர்'' என்பார் சஞ்சீவி. திடசித்தம் உடையவர். சென்னை வந்து ஈராண்டுக்குப் பின் கருப்புச் சட்டையைக் களைந்து பொதுமைக் கட்சியில் இணைந்தார். தடை செய்யப்பட்டுத் தலைமறைவான பிறகும் கம்யூனிஸ்டுக் கட்சியில் முழுநேரப் பணியாளராகி முனைப்புடன் உழைத்தார்.

தமிழ்ஒளியின் பொதுமை இயக்கச் செயல்பாட்டின் காலம் 1947 54 என்பார் ஷிகிழியிணிணிக்ஷிமிஹிசஞ்சீவி. அவர் பொதுமை இயக்க அனுதாபியாகவோ ஆதரவாளராகவோ அல்ல, ஒரு கம்யூனிஸ்டாகவே வாழ்ந்தார், உழைத்தார். 1947இல் தமிழ்ஒளி படைத்த மூன்று குறுங்காப்பியங்கள் வெளிவந்தன. அவற்றில் இரண்டு நூல்களின் அட்டைகளிலும் 'சுத்தி அரிவாள்' சின்னம் இடம் பெற்றிருந்தது.

இவை தவிர அவர் படைத்த தனிக் கவிதைகளின் திரட்டாக, 'நீ எந்தக் கட்சியில்?' 'மே தினமே வருக!' என்ற தலைப்புகளில் இரண்டு சிறு நூல்களும் வெளிவந்தன. மேற்கூறிய இரு காவியங்களும், இரு கவிதைத் திரட்டுகளும் கம்யூனிஸ்டுக் கட்சித் தோழர்களுக்கு அவர் செலுத்திய காணிக்கை என்றே கூறலாம்.

தமிழ்ஒளியின் புரட்சியமான வகுப்புப் போராட்ட(வர்க்கப் போராட்ட)க் கவிதைகள் உலகில் வகுப்புப் போராட்டம் உள்ளளவும் பொருந்தக் கூடியவை.

பாட்டாளியாகவும் தமிழனாகவும் இருப்பதில் தமிழ்ஒளியின் ஓர்மைக்கு எவ்விதச் சிக்கலும் முளைக்கவில்லை.

அவர் தான் யார் என்பதை ஓங்கிச் சொன்னார்:

**''தமிழனே நான் உலகின் சொந்தக்காரன்**
**தனிமுறையில் நான் உனக்குப் புதிய சொத்து!**
**அமிழ்தான கவிதைபல அளிக்க வந்தேன்!**
**அவ்வழியில் உனைத்திருத்த ஓடி வந்தேன்!"**

பன்னாட்டுலகியத்தில் (சர்வதேசியம்) ஊன்றிப் பாடும் போது தமிழ்ஒளியிடம் மற்றொரு பாவேந்தர் பாரதிதாசனைப் பார்க்கிறோம்:

**"இமை திறந்து பார்! விழியை அகலமாக்கு!**
**என் கவிதைப் பிரகடனம் உலகமெங்கும்**
**திமுதிமென எழுகின்ற புரட்சி காட்டும்!**
**சிந்தனைக்கு விருந்தாகும் உண்ண வா நீ!"**

1948 இறுதியில் ‘கம்யூனிஸ்ட் கட்சி’ இந்திய அரசாங்கத்தால் தடை செய்யப்பட்ட போது, கட்சியின் பரப்புரைப் பொறிகள் அனைத்தும் முடக்கப்பட்டன. அந்தச் சூழலில் ‘முன்னணி’ ஏடு மலர்ந்தது; கவிஞர் குயிலனும், தமிழ்ஒளியும் இணைந்து செயல்பட்டனர்.

அந்த ஏடு தமிழ்ஒளிக்கு நல் வாய்ப்பாய் அமைந்தது. உணர்ச்சிமயமான கவிதைகள், கதைகள், ஓரங்க நாடகங்கள் என இதழ்கள் தோறும் அவருடைய எண்ணங்கள் பதிவாகி வந்தன.

குறிப்பாக, சீனாவில் நடை பெற்று வந்த மக்கள் யுத்தம், மாசேதுங் தலைமையில் வெற்றி வாகை சூடியதை வரவேற்று அவர் படைத்த கவிதைகள் நான்கு. அத்துடன், உலகத் தொழிலாளி வர்க்கம் எட்டு மணி நேர வேலைத் திட்டத்தை வென்றெடுத்த வீர வரலாற்றை மே தினச் செய்தியை வீர காவியமாகப் படைத்துள்ளார் தமிழ்ஒளி.

இவை வரலாற்றுக் கருவூலங்கள்.

குடந்தையில் (1948) நகர் சுத்தித் தொழிலாளர்கள் கூலி உயர்வு கேட்டு நடத்திய போராட்டத்தில், காவலர்கள் கடுமையாக நடந்து கொண்டதைக் கண்டித்து கவிஞர் படைத்த கவிதை, அதே ஆண்டில், ஈரோடு நகர சுத்தித் தொழிலாளர் நடத்திய போராட்டத்தின் போதும் அச்சிட்டுப் பரப்பப்பட்டது.

இந்தக் காலகட்டத்தில், தலைமறைவு வாழ்க்கையை மேற்கொண்ட ஒரு தோழரைப் பற்றிக் கவிஞர் தமிழ்ஒளி படைத்த கவிதை ‘தாய் செய்த குற்றம்’ என்ற தலைப்பில் ‘அமுதசுரபி’ ஏட்டில் வெளி வந்தது. (1949).

தலைமறைவாக இருந்துவந்த தோழர் ஒருநாள் தாயைக் காண வீட்டிற்கு வருகிறார். இரு தினங்கள் இருந்து விட்டுச் செல்கிறார்.

இந்தச் செய்தி காவலர்களுக்கு எட்டி விடுகிறது. விரைந்து வந்த அவர்கள் வீட்டைச் சோதனையிட்டனர். தோழர் இல்லாததால் தாயிடம் வாக்குவாதத்தில் இறங்கினர்.

இதோ கவிஞர் தமிழ்ஒளியின் எழுத்தில்:

காவலர்: இங்குன் மகனும் ஒளிந்திருந்தான், எமை ஏமாற்றி நீயிங்கொளித்து வைத்தாய்; அந்தப் பயலுக்குச் சோறுமிட்டாய், மிக ஆபத்தான குற்றம் செய்துவிட்டாய்!

தாய் சீறுகிறாள்: மூச்சும் பேச்சும் அவன் எய்து முனம், ஒரு முந்நூறு நாளாக நான் அவனைப் பத்திரமாக ஒளித்து வைத்தேன், மண்ணைப் பார்க்க அவன் ஒருநாள் பிறந்தான்!

**“பாம்புக்குப் பாலிடும் மாந்தரையும் இங்குப்**
**பாதகர் என்பவர் யாரு மில்லை!**
**பாம்பல்ல, என்னுடை அன்பு மகன்; அவன்**

**பாயும் விலங்கல்ல, ஆசை மகன்!"**
**"பெற்று வளர்த்திட்ட என்மகனை, இங்குப்**
**பேணி வளர்ப்பது குற்றமென்றால்**
**தாய்க்குலம் மாண்டு மடிவதுவோ? அன்றி**
**தர்மம் தலைசாய்ந்து வீழ்வதுவோ?**
**என்னுடைப் பிள்ளைக்குச் சோறிடவும், அவன்**
**இளைப்பாறி நிற்க இடம் தரவும்**
**அன்னை யெனக்கிங் குரிமை யுண்டாம், இதை**
**ஆண்டவன் வந்தாலும் விட்டுக் கொடேன்!"**

தாயின் கோபம் அடங்கவில்லை, 'தாய் தன் மகனை அரவணைப்பது நீண்ட நெடுங்காலமாக இருந்துவரும் உறவு முறை. இதைக் குற்றமெனக் கூறுவது மனிதத் தன்மையற்ற செயல். இதுதான் சட்டம் என்றால் அதனை எதிர்ப்போம்' என்றும் கூறுகிறாள். காவலர்கள் மறு மொழி கூறாமல் சென்று விடுகின்றனர்.

பாட்டாளி மக்களின் வாழ்க்கை அவலங்களைக் கவிஞர் தமிழ்ஒளி உயிர்ச் சித்திரமாக வரைந்து காட்டினார்.

'உழவனின்' பொங்கல் கனவு, 'நெசவாளி' விரும்பாத தீபாவளி, துயரச் சுமை தூக்கும் 'துறைமுகத் தொழிலாளி' கடலைப்பார்த்து கண்ணீர் சிந்தும் 'மீனவர்', மீளாத் துயரில் ஆழ்ந்திருக்கும் 'சலவைத் தொழிலாளி', எப்போதும் ஏக்கப் பெருமூச்சுவிடும் 'அரிசன மக்கள்', வீதியில் நின்று கையேந்தும் 'கழைக்கூத்தாடி', விதியை நொந்து விடிவு காணாத விதவையர் பற்றிய கவிதைகள் அனைத்துமே தமிழ்ஒளியின் புரட்சிப் பாடல்கள்தாம். ஆனாலும் உவமைகள் ஒளி வீச, அணி நலன்கள் அலை புரள, கலை ஓவியமாகத் திகழும் கவிதை வடிவங்கள்.

தமிழ்ஒளி இயற்கை நிகழ்வுகளை வண்ணிக்கும் போதும் மக்கள் புரட்சிக்குத்தான் உவமையாக்குகின்றார் 'இயற்கை அன்னையின் கோபம்' என்ற தலைப்பில் அவர் பாடக் கேளுங்கள். பேய்க்காற்றும் பெருமழையும் இணைந்து இடியோசை எழுப்பி இப் புவியினை அதிர வைக்கிறது. இதனைக் காணும் நம் கவிஞருக்கு எண்ணம் எங்கே செல்கிறது தெரியுமா? கொடுங்கோலாட்சியை எதிர்த்து மக்கள் தொடுத்த யுத்தம் வெற்றி கொள்ளுவதையே நினைவூட்டுகிறது.

"கொட்டி கொட்டி எழுந்தாள் அன்னை
**கோபத்திலே மின்னல் தீயை யுமிழ்ந்தாள்!**
**கட்டிக் கிடந்திடும் மேகம் எனும்**
**கார்மலை யாம்குடம் எற்றிப் புரட்டிக்**
**கொட்டினாள் கால வெள்ளத்தை அவள்**

**கொக்கரித்தாள் திசை எட்டும் நடுங்க**
**தட்டி எழுப்பினள் காற்றை அது**
**தாவி யுருட்டுது மாமரக் காட்டை!"**
**முடிவில்,**
**"மக்கள் தொடுத்திடும் யுத்தம் என**
**வானமும் மண்ணும் இருண்டு நடுங்க**
**செக்கென ஆட்டுது காற்று பெருஞ்**
**செல்வர், மணிமுடி, சட்டம், சிறைகள்**
**பொக்கென வீழ்வது போலே யாவும்**
**போயின பொட்டென்று விட்டது காற்று!**
**செக்கச் சிவந்தது வானம்அன்னை**
**சேல்விழி காட்டினள் வந்தது காலை!"**

புயல் போன்றது மக்கள் புரட்சி! புரட்சியின் முடிவில் விடியல்! போதுமா?

தனிக் கவிதைகள் தவிர 'தமிழ்ஒளி' படைத்த காவியங்கள் ஒன்பது. அவற்றுள் 'மாதவி காவியம்' தவிர்த்த ஏனைய எட்டும் குறுங்காப்பியங்கள். இவற்றில் 'புத்தர் பிறந்தார்' துறவுக் காப்பியம்.

கவிஞர், புத்தர் வரலாற்றை முழுக்காவியமாகப் படைக்கவே விரும்பினார். எதிர்பாராத இடர்ப்பாடுகள் அடிக்கடி எழுந்து முயற்சியைத் தடைப்படுத்தி வந்தன. இதன் விளைவாக, புத்தர் ஜனனம் என்ற அளவில் காவிய முயற்சி நின்று போனது.

'புத்தர் பிறந்தார்' என்ற காவியப் பகுதியை "தமிழ்ஒளியின் கவிதைகள்" தொகுப்பில் கண்ட மு. வரதராசனார் "புத்தர் பிறந்தார்" என்ற அருமையான காவியம் முடிக்கப்படாமலே குறையாக நின்று விட்டது, தமிழிலக்கியத்தின் குறையாகவே ஆகி விட்டது' என்றார்.

'நிலைபெற்ற சிலை', 'வீராயி', 'மே தின ரோஜா' ஆகிய மூன்றும் புரட்சியமான தலித் இலக்கியங்கள் எனலாம்.

இவற்றுள் 'வீராயி' காவியத்திற்கும், பாரதியார் பாடிய 'கரும்புத் தோட்டத்திலே' என்ற பாடலே அடித்தளம். விவசாயக் கூலித் தொழிலாளர்கள் வாழும் பகுதிகளில் 'செங்கொடி' ஏற்ற வேண்டும் என்ற கருத்தினை வலியுறுத்தி எழுந்த நூல் 'மே தின ரோஜா'. கம்யூனிஸ்ட் கட்சியில் காலூன்றாத காலத்தில் எழுதப்பட்ட 'நிலை பெற்ற சிலை' பொதுவுடைமைப் பூங்காவாகிய சோவியத்து ஒன்றியத்தின் பெருமை பேசப்படுகிறது.

பேராசிரியர் ராகுல சாங்கிருத்தியாயன் படைத்துள்ள புகழ் பெற்ற நூல் 'வால்காவிலிருந்து கங்கை வரை'. அதில் இடம் பெற்றுள்ள 'பிரபா' என்ற கதையினை அடிப்படையாக வைத்து புனைந்த

புரட்சிகரமான குறுங்காப்பியம் ‘கோசலக்குமரி’.

தமிழ்ஒளி மக்களிடையே புகழ் பெறாத போதும் அறிஞர்களிடையே மதிக்கப்பெற்றார். மு. வரதராசனார், எழுத்தாளர்கள் பூவண்ணன், விந்தன், செயகாந்தன் போன்றோர் தமிழ்ஒளியைப் பாராட்டினார்கள். மா.சு. சம்பந்தம் தமிழ்ஒளியின் கவிதைகளை வெளியிட்டார். செ.து.சஞ்சீவி தமிழ்ஒளியின் கவிதைகளையும், காவியங்களையும் திரட்டித் தொகுத்து வெளியிட்டார்.

நெய்வேலியில் பழுப்பு நிலக்கரிச் சுரங்கம் தொடங்கி மின் உற்பத்தி நிலையம் அமைத்த போதும், சோவியத்து ஒன்றியம் ஸ்புட்னிக் என்னும் விண் கலத்தை ஏவிய போதும வரவேற்றுக் கவிதைகள் படைத்தார் தமிழ்ஒளி. அணுகுண்டு அச்சுறுத்தலை எதிர்த்தும் பாடினார்.

மக்கள் வாழ்வு உயர இலக்கியங்கள் பயன்படவேண்டும் என்பதுதான் அவர் கொள்கை. 'ஒரு கவிஞன் வாழ்ந்ததற்கு அடையாளமே அவனுடைய படைப்புகள்தாம்' என்று எழுதினார்.

தமிழ்ஒளியின் கவிதைகள் தமிழ்நாட்டு மக்களிடையே போதிய புகழ் பெறவில்லை என்ற குறை நமக்குண்டு. ஆனால் அவர் விதைத்து கீரையன்று உடனே முளைத்து உடனே பயன் தருவதற்கு. பனை நட்டுள்ளார், வளரக் காலமெடுக்கும், வளர்ந்த பின் நின்று பயன் தரும். மக்கள் வாழ்வு உயர இலக்கியங்கள் பயன்பட வேண்டும் என்பதுதான் தமிழ்ஒளியின் இலக்கியக் கொள்கையாம்! வாழ்வு உயருதல் என்பதைப் பொதுமை நோக்கில் புரிந்து கொண்டால் அது சட்டென்று தோன்றி சட்டென்று மறையும் உயர்வன்று என்பது தமிழ்ஒளிக்குத் தெரியாதா, என்ன?

“கவிஞன் வாழ்ந்ததற்கு அடையாளமே அவனுடைய படைப்புகள்தாம்!” சொன்னவர் தமிழ்ஒளி! அவர்தம் படைப்புகள் புதிய தமிழகத்தைப் படைக்கும் பணிக்குக் கருவியாகும் காலம் விரைவில் வரும். அப்போது தமிழ்ஒளியின் படைப்புகள் தமிழின வைப்பகத்திலிருந்து வெளிவந்து ஒளிவீசும்!

❖❖❖

# கவிஞர் தமிழ்ஒளியின் சிறுகதைகள்

**ச. தமிழ்ச்செல்வன்**

தமிழ் ஒளியின் கவிதைகளும் காவியங்களும் நாடகங்களும் பேசப்பட்ட அளவுக்கு அவருடைய சிறுகதைகள் இலக்கிய உலகில் பேசப்படவில்லை.எண்ணிக்கையில் குறைவாக எழுதியது ஒரு காரணமாக இருக்கலாம். இக்கட்டுரையை எழுதுவதற்காகத் தேடுகையில் எனக்கும் குருவிப்பட்டி என்கிற ஒரு தொகுப்பே வாசிக்கக்கிடைத்தது.இன்னொரு தொகுப்பும் உண்டு. அது கிடைக்கவில்லை.

குருவிப்பட்டி தொகுப்பில் எட்டுச் சிறுகதைகளும் பதினைந்து குறுங்கதைகளும் ஓர் ஓரங்க நாடகமும் தொகுக்கப்பட்டுள்ளன.




பிரபஞ்சன் ஒரு சுருக்கமான முன்னுரை வழங்கியுள்ளார்.''இலக்கியத்தில் எல்லாக் காலத்திலும் சிலராவது வன்முறைகளுக்கும் அமானுடத்துக்கும் எதிராகக் குரல் கொடுத்தே வந்திருக்கிறார்கள் என்று நினைக்க மகிழ்ச்சி தருகிறது. அந்தத் தெளிவு மிக்க படைப்பாளிகள் வரிசையில் நிமிர்ந்து நிற்கிறார் தமிழ் ஒளி'' என்று சரியாகக் கணிக்கிறார் பிரபஞ்சன், உருவகங்களைப் பின் தொடர்ந்து செல்லும் பாணி அவருடையது, ''அவள் பெயர் கறுப்பி. மெல்லியல் என்று கூறும் வர்ணனைக்குப் புறம்பானவளும், பெண் யானைபோல், அடிவைத்து மிடுக்குடன் நடப்பவளுமாகிய அவளுக்குப் புலவர் வர்ணனை ஒத்து வராது!வெடித்த குரலில் ,அடக்க ஒடுக்கமின்றி அதட்டிப் பேசும் அவளிடம் 'மென்மை' இல்லை என்று விமர்சிக்கலாம்.ஆனால் 'பெண்மை' இல்லை என்று கூற முடியாது.புலவர் வர்ணனைக்குப் பிடிபடாமல் திமிறி நிற்கும் ஆங்காரம் அவள் சொரூபம்'' இப்படித்தான் அறிமுகம் செய்கிறார் ''பற்றுக்கோடு'' கதையின் நாயகியை.''சரஸ்வதி'' இதழில் 1954 இல் இக்கதை வெளியாகியிருக்கிறது.சுந்தரராமசாமி,ஜெயகாந்தன் போன்ற தமிழின் முக்கிய சிறுகதையாளர்கள் அதே காலத்தில் அதே இதழில் எழுதிக்கொண்டிருந்தார்கள். அன்று எழுந்து வந்து கொண்டிருந்த யதார்த்தவாதக்கதைகளை நேரடியான மொழியில் எழுதும் பாணியைத் தமிழ்ஒளி பின்பற்றவில்லை.கருத்தைப் பிரதானமாகக் கொண்டு 'சொல்லும் விதம்' பற்றி அதிகம் கவலைப்படாத அன்றைய திராவிட இயக்கச் சிறுகதையாளர்களின்

பாணியைக் கைக்கொண்டு எழுதினாரோ என்று தோன்றுகிறது. எதிர்பாராத் திடீர்த் திருப்பங்கள் நிறைந்த கதைகள் இவருடையவை. கறுப்பிக்கும் திடீரென்று ஒரு இணை வந்து சேர்கிறான். கல்யாணமும் நடந்து குழந்தையும் பிறக்கிறது. உடனே கறுப்பியின் தாயும் செத்துப்போகிறாள். கணவர் கந்தசாமி வேறொரு பெண்ணை நாடுகிறான்.அவனை ஓங்கி அறைந்து ஊரைவிட்டே ஓட வைக்கிறாள் கறுப்பி.. குறுங்காட்டில் மரம் வெட்டப்போகிறாள். அப்போது புலி வருகிறது.மரக்கிளையால் அடித்துப் புலியைக் கொன்று போடுகிறாள்.முறத்தால் புலி துரத்திய தமிழ்ப்பெண்ணின் வாரிசாக அவளை வரைகிறார் தமிழ்ஒளி.அத்தனை வலுவான ஒரு பெண்ணையும் வறட்சியும் பஞ்சமும் நிலை தடுமாற வைக்கிறது. ஊரோடு பஞ்சம் பிழைக்கப் போகிறாள்.

“அந்தக் கும்பலில், கறுப்பி தன் குழந்தையை அணைத்தபடி செல்கிறாள்.அவள் கண்களில் கண்ணீர் துளிர்த்தது.வெயிலின் உக்கிரம் தாங்க முடியாமல் குழந்தை அழுதது. அதற்குப்பசி. பல நாட்கள் பட்டினி கிடந்ததால் கறுப்பிக்குப் பால் வற்றி விட்டது.அவளுடைய ஸ்தனங்கள் சுருங்கி விட்டன..குழந்தை முலைக்காம்புகளில் வாயை வைத்து மாறி மாறிச் சுவைத்தது. பால் இல்லாமற்போகவே வாயை எடுத்துவிட்டு அழுதது.ஆனால் அதற்கு அழுவதற்குக்கூட சக்தி இல்லை,வழி வளர்ந்தது.” என்று கதை வளர்கிறது.அடுத்த ஊரில் கைநீட்டிப் பிச்சை கேட்கிறார்கள் பஞ்சையின் மக்கள்.அந்த ஊர்க்காரர்கள் குழந்தைகளை விலை பேசுகிறார்கள்.ஒரு குழந்தையின் விலை எட்டணா “சாகக்கொடுப்பதை, எட்டணாவுக்குக் கொடுப்பதே மேல்..” பலரும் குழந்தைகளை விற்கிறார்கள். கறுப்பியின் குழந்தையையும் எட்டணாவுக்குக் கேட்க இவள் திகைத்து வாயடைத்து நிற்கிறாள்.”சரி ஒரு ரூபாய்க்குக் கொடு “ என்று கேட்டார் ஒருவர். கறுப்பி மயக்கம் வந்து தரையில் சய்கிறாள். அவள் மூளை சுழன்றது.

இப்போது கதை உருவகத்துக்குள் புகுந்து விடுகிறது.

அதோ அவள் குழந்தையுடன் ஓடுகிறாள்.. அந்த வழி நீண்டு செல்கிறது...

அது முடியும் இடம்.. அக்னி ஜ்வாலை... அதன் கூர் நாக்குகள் கொழுந்து விட்டெரிகின்றன.. அறுக்கப்பட்ட தலைகளை, அவை எரித்துச் சிரிக்கின்றன...

ஆம், அது யாக குண்டம், உயிர்ப் பலி...நரபலி...!

நாய் நரிகள் ஊளையிட்டுக் குதிக்கின்றன. குழந்தைகளின் இளம் தசை நார்களைக் கிழித்துக் குதறுகின்றன... தீ நாக்குகள் ரத்தங்குடித்து ஆடுகின்றன...

வழி, தொடர்கிறது..

அவள் திரும்பி ஓட எத்தனிக்கிறாள். அதோ தலை நொறுங்க அடிக்கப்பட்ட அந்தப்புலி, பழி வாங்கக் கருதி கர்ஜிக்கிறது.. இப்பொழுது அவள் கையில் எதுவுமே இல்லை. அவள் சுற்றுமுற்றும் பார்க்கிறாள்..

கடகடவென்ற சிரிப்பு அலைமோதுகிறது...

"குழந்தையைப் பறித்த நீலி ! அதைப்பலி கொடு.. பலிபீடம் அழைக்கிறது போ..." என்று அவன் கோரமாக நகைக்கிறான்.. அவன் கறுப்பியின் கணவன்.

அவளுக்கு ஆங்காரம் பிறந்தது. இருகைகளாலும் மார்பைப்பிளந்து குழந்தையை எடுத்து மார்பினுள் வைத்து மூடுகிறாள்...

"என் குழந்தையை யாரும் தொடமுடியாது...'

"நான் உன் மார்பைப் பிளந்து அவனைக் கொல்வேன்" என்று கர்ஜிக்கிறது புலி...

அவள் புலியின் மேல் பாய்கிறாள்.

நிலபுலம் அது அவள் மார்பில் ஓங்கி அறைகிறது... 'ஐயோ என்று அலறி விழிக்கிறாள்.

குழந்தை அவள் மார்பில் உறங்குகிறது. அதை அணைத்துக்கொண்டு அவள் எழுந்து நிற்கிறாள்...

இப்போது கதை மீண்டும் யதார்த்த உலகுக்கு வருகிறது.மயக்கம் தெளிந்த அவள் விலை கேட்டவரிடம் குழந்தையை விற்கிறாள் ஒரு ரூபாய்க்கு உடனே இன்னொரு திருப்பம்.அந்த ஒரு ரூபாயை அவள் அவரிடமே கொடுத்து பிள்ளை வளர்ந்த பிறகு அவனுக்கே தன் ஞாபகமாகக் கொடுக்கச் சொல்கிறாள்.அவன் தாயின் பெயர் கறுப்பி என்று சொல்லச் சொல்லிவிட்டு அப்படியே கீழே விழுகிறாள்.

இனி அவள் பற்றுக்கோடு எது?

அது அறுந்தது.

அவள் உயிர் பிரிந்தது,

என்று கதை முடிகிறது.

சிறுகதை அதன் வனப்புகளோடும் வடிவ நேர்த்தியோடும் வீறு கொண்டெழுந்த காலத்தில்தான் தமிழ் ஒளியும் எழுதியிருக்கிறார். ஆனாலும் புதுமைப்பித்தன்,ரகுநாதன்,கு.அழகிரிசாமி போன்றோர் தொடங்கி வைத்த வழியில் அவர் பயணிக்கவில்லை.

அடுத்த கதையான ‘குருவிப்பட்டி’யும் இதே பாணியில்தான் சொல்லப்படுகிறது. பொதுவாகப் பலராலும் கவனிக்கப்படாத குருவிக்காரர்கள் எனப்பட்ட மக்களைப் பற்றிய கதையாகும். குரங்காட்டிப் பிழைக்கும் குருவிக்கார அண்ணாமலையை அடித்து விரட்டும் சாதி இந்துக்களின் வெறியாட்டம் இக்கதையின்

உள்ளடக்கம். அண்ணாமலை ஒரு சாமியாராக மாறும்போது, அந்தச் சாதி ஆணவம், தன்னை மாற்றியமைத்துக் கொண்டு, காலம் காலமாகச் செய்கிற அவனைத் தனக்குள் இசைவித்துக் கொள்கிற தந்திரத்தைச் செய்து, தோற்கிறது.

பணக்கார ஆண்டைக்குப் பரம்பரையாக உழைத்து, உழைப்புக்குப் பதிலியாக எதையும் காணாத கூலிக்காரனைப் பற்றிய கதை 'அம்மா எனும் குரல். பசுங்கொலை என்கிற ஊர் பண்ணையார் பரங்குசத்தால் பசுக்கொலை ஆன கதை இது.பண்ணையடிமைத்தனத்துக்கு எதிராக வேறொரு கோணத்தில் எழுதப்பட்ட கதை.பசுவுக்கும் பச்சையப்பனுக்குமான உறவு உணர்வுப் பூர்வமாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது. இக்கதையின் பெரும்பகுதி யதார்த்தமாக எழுதப்பட்டுள்ளது.சோவியத்தின் கூட்டுப்பண்ணையை தமிழ்நாட்டில் கொண்டுவந்து இறக்கி வைக்கும் ஓர் கனவை இதில் தமிழ்ஒளி விதைக்கிறார்.அன்றைய இளம் கம்யூனிஸ்டுகள் கண்ட கனவு அது.மக்கள் அரசாங்கம் வந்ததும் பண்ணையார்கள் ராஜ்ஜியம் ஒழிக்கப்பட்டுக் கூட்டுப்பண்ணைகள் வந்துவிட்டதாக ஒரு கனவை இக்கதையில் விரித்திருக்கிறார். அப்படியெல்லாம் ஒன்றும் நடந்துவிடவில்லை என்பதைக்காண அவர் நீண்டகாலம் வாழ்ந்திருக்கவில்லை.

'நீதி' என்னும் கதை முற்றிலும் யதார்த்தமான கதை.பண்ணையார் மகன் நல்லவனாக இருந்து தச்சுவேலை தங்கசாமிக்கு உதவுகிறான். ஆனாலும் அப்பன்காரன் தன் நிலப்பிரபுத்துவ ஆதிக்கப்படி நீதி நிலைநாட்டப்படுகிறது.பிற கதைகளில் வரும் திடீர்த்திருப்பங்களின் குறுக்கீடுகள் இல்லாமல் யதார்த்தமாகக் கதை முடிக்கப்பட்டுள்ளது ஆறுதலளிக்கிறது.இதேபோன்ற இன்னொரு நல்ல கதையாக அமைவது ''கால்நடை வைத்தியர்''.இத்தொகுப்பின் சிறந்த கதையாக இக்கதையைச் சொல்லலாம்.

''திண்ணைப்பள்ளிகளில் ஆசிரியர்களுக்குச் சட்டாம்பிள்ளைகள் இருப்பது போன்று வைத்தியசாலைகளில் டாக்டர்களுக்குக் கம்பவுண்டர்கள் இருக்கின்றனர்.முழு உழைப்பும் அவர்களுடையதே என்று கூறலாம்.எனினும் கம்பவுண்டர்களின் நிலை ''கைவிடப்பட்ட' நிலைதான் என்று கதையின் சுருக்கத்தை முதல் பத்தியில் சொல்லிவிட்டுக் கதையை ஆரம்பிக்கிறார். கால்நடை சிகிச்சை சாலையின் கம்பவுண்டர் கந்தசாமிதான் கதை நாயகன்.அவருடைய வாழ்க்கைப்பயணத்தின் ஒரு சிறு பக்கத்தை இப்படிச் சித்தரிக்கிறார்'

''மூட்டைகளைச் சுமப்பதும், அடிகளை ஏற்றுக்கொள்வதும், துயரங்களுக்கு ஆளாவதும் கால்நடைகளின் வாழ்க்கை. வறுமையைச் சுமப்பதும், அதன் குரூர. அடிகளை ஏற்றுக்

கொள்வதும், துயரங்களில் மூழ்குவதும் கந்தசாமியின் வாழ்க்கை.மேடுபள்ளங்கள் நிறைந்த வழியில் ஓடும் வண்டி போல் அவர் வாழ்க்கை, லொட லொட்டையாய்ப் போய்விட்டது.

மனைவியும் மக்களும் அவருக்குச் சுமையாய்த் தோன்றும் அளவுக்கு வாழ்க்கை வண்டியின் அச்சுத் தேய்ந்து விட்டது. அடிக்கடி கிறீச்சிடும் சப்தம், ‘எண்ணெய் போட வேண்டும் எண்ணெய் போடவேண்டும்’ என்று வற்புறுத்தியது.

பிள்ளைகள், பசியால் அழுவதுதான் கிறீச்சிடும் சப்தம், எண்ணெய் தான், சம்பளம் !...

நூற்றுக்குமேல் ஊற்று, என்பது பழமொழி.

கந்தசாமியின் மாதச் சம்பளம் நூற்றுக்கும் கீழே ஐம்பதுக்கு வந்துவிட்டதால் அவருடைய வாழ்க்கை, பொங்கும் ஊற்றாக இல்லாமல் பொசுங்கும் பாலையாய் மாறிவிட்டது...

பாலை நிலத்தில் பிரயாணம் செய்யும் அவர், பசிய புல்வெளிகளைப் பற்றிக் கனவுகாண்பது இயற்கைதானே!

அடிக்கடி, அவருடைய செல்வங்கள், அழுது அவருடைய கனவைக் கலைத்துவிடும்... அப்பொழுதெல்லாம் அவர் கோபம் பொங்க, "எருமை மாடுங்களா, வாயை மூடுங்க! என்று கத்துவார்.

"பிள்ளெங்கெள எதுக்குத் திட்டிக் கொட்டறீங்க?" என்று அவர், சகதர்மிணி எதிர்த்தால், "புத்திகெட்ட மாடே சும்மாக் கெட ! என்று சாட்டை கொடுப்பார் !

மாடுங்களோட பழகி, மாட்டுப் புத்தி வந்துட்டுது, என்று

அவர் சகதர்மிணி சொல்லும்போது அமைதியாவார்.

இவர் வைத்தியம் பார்த்து மாடுகள் பிழைக்கும் .ஆனால் எல்லாப் புகழும் டாக்டருக்கே போகும். கதை முடிவில் கந்தசாமியின் மனைவி பிரசவத்துக்காக மருத்துவமனையில் இருக்க இவர் மாட்டுக்குப் பிரசவம் பார்க்கப் போவார்.இவருடைய கைப்பக்குவத்தில் சுகப்பிரசவமாக மாட்டுக்குட்டி உலகுக்கு வரும்.



ஆனால் அவர் மனைவியின் பிரசவத்தில் குழந்தை இறந்து விடும்.படிச்ச டாக்டருக்கு என்ன தெரியும் என்கிற கந்தசாமியின் புலம்பலை மீறி அன்று புதிதாய்ப் பிறந்த கன்றின் குரல் ஒலிக்கும் ''அம்மா..வ்'' என்று கதை முடியும். 'தாமரை'யில் 1960 இல் வந்த கதை இது.இந்தப்பாணியில் அவர் தொடர்ந்து எழுதியிருந்தால் ஜெயகாந்தனைப்போல இன்னொரு சிறுகதைப் படைப்பாளி நமக்குக் கிடைத்திருப்பார்..

"காதலுக்கு எதிரே, காதல் வென்றது ஆகிய இருகதைகளும் ஒரே கதையின் இரு பரிமாணங்கள் .முடிவு மட்டும் வேறு வேறு.கதை ஒன்றுதான். ஒரே சாதிக்குள் முகிழ்க்கும் காதலுக்கு எதிராக வர்க்க வேறுபாடு எப்படி குறுக்கே நிற்கிறது என்பதுதான் கதை.முதல் கதையில் பாதிக்கு மேல் உருவகத்துக்குள் சென்று திருக்கழுக்குன்றத்தில் புயலுக்கு நடுவே கொட்டும் மழைக்குள் காதலர் இணைவதாக முடிகிறது. இரண்டாம் கதையில் கமலாவின் அப்பா மரணப்படுக்கையில் கிடக்க, மனம் மாறிக் காதலர்களைச் சேர்த்து வைப்பதாக யதார்த்தமாக முடிகிறது. ஒரே கதைக்கு இரண்டு முடிவுகள் வைத்து ஒரு சோதனை முயற்சியாக எழுதிப்பார்க்கும் படைப்பு மனம் தமிழ் ஒளிக்கு வாய்த்திருந்தது குறிப்பிடத்தக்கது,அன்றைய தேதிக்கு இது புதுமையான முயற்சிதான்.

பூம்புகாரில் புரட்சிப்பெண் என்கிற கதை மணிமேகலை கதையை மறுவாசிப்புச் செய்து ஆணாதிக்கத்துக்கு எதிரான கதையாக மாற்றி எழுதப்பட்டது. இப்படி ஒரு முயற்சியும் தமிழ் ஒளி செய்திருக்கிறார்.அணைந்த வேள்வி என்கிற ஓரங்க நாடகமும் ஒரு மறு வாசிப்புத்தான்.ஆபுத்திரன் யாகத்தில் பசுக்களைக்கொல்லும் அந்தணர்க்கு எதிராகப் போர்க்குரல் எழுப்புவதுதான் கதை.

குறுங்கதைகள் என்று தொகுக்கப்பட்டுள்ள பதினைந்தில் பலவும் தத்துவத்தெறிப்புகளாக மட்டுமே சுருங்கி நிற்கின்றன. உதாரணத்துக்கு ஒன்று சுதந்திரம் ஆயிரம் அழகிகளை அணைவதைக் காட்டிலும் என் சுதந்திரத்தை அணைவதிலேயே நான் சுகங்கண்டேன்.

இந்த இரண்டு வரித் தத்துவத் தெறிப்பில் ஆணாதிக்கச் சிந்தனை மறைந்திருப்பதை அவரே உணரவில்லை என்று தெரிகிறது.. உலகம் என்றால் என்ன?புறாவும் டாலரும்,நிலா!நிலா! வா,வா! ஆகிய மூன்று கதைகள் குறிப்பிடத்தக்க கதைகள்.அவற்றுள்ளும்

புறாவும் டாலரும் கதை இந்த 2023 ஆம் ஆண்டிலும் கூட ஆகச்சிறந்த உருவகக் கதை என்று சொல்லத்தக்க விதத்தில் காலத்தை வென்று நிற்கும் கதையாகத் திகழ்கிறது.

பூமாதேவி சொல்லும் கதையாக அது விரிகிறது.

சமாதானத்தின் விதையை நாடு நாடாகச்சென்று விதைக்கும் புறா ஒன்று டாலர் தேசத்திலும் போய் விதைக்கிறது.அங்கே டாலர் கோபுரத்தில் இருக்கும் ஒரு தொப்பைப்பேர்வழி குறுக்கிடுகிறான்.வேலையில்லாமல் ஊர் சுற்றும் புறாவே உனக்கொரு வேலை தருகிறென் செய்கிறாயா'' என்று அதிகார தோரணையில் கேட்கிறான்.புறா சிரித்தது ''என்னை சூரியன் ஆசீர்வதிக்கிறன்.சந்திரிகாவாழ்த்துகிறாள்; எங்கே அருணோதயம் போன்ற கொடி பறக்கிறதோ, அங்கேயிருந்து நான் வாழ்த்துச் செய்திகளைச் சுமந்து செல்கிறேன்; நதிகளும் வயல்களும் என்னைப்பார்த்து மகிழ்ச்சியடைகின்றன; உலக மக்கள் எல்லாம் தங்கள் வீட்டுக் கூரைகளில் நான் வந்து உட்காரவேண்டுமென்று தவமிருக்கிறார்கள்; குழந்தைகள் என் வரவை எதிர்நோக்கியிருக் கின்றன. எனக்கு வேலை சமாதானத் தொண்டு செய்வது; நான் வேலையற்ற சோம்பேறியல்ல, பிணந்தின்னிக் கழுகல்ல" என்றது புறா.

'ஓ, ஏழைப் புறாவே! உனக்கு டாலர்க் கூண்டு கட்டித் தருகிறேன்; என் வியாபார ஒப்பந்தச் சீட்டுகளை எடுத்துக் கொண்டு போய் உலக மார்க்கட்டுகளில் கொடுத்துவிட்டு வா! வாழ்த்துச் செய்தியைவிட, மார்க்கெட் செய்திகள்தான் உயர்ந்தவை. வாழ்க்கையைவிட டாலர் உயர்ந்தது. அருணோதயத்தைவிட, லாபம் உயர்ந்தது, அருணோதயமே இல்லா தொழிந்தால்தான் என்ன? இருளில் லாபம் சம்பாதிப்பது எவ்வளவு இனிமையானது! என்று அந்த மனிதன் தன் சித்தாந்தத்தை உபதேசித்தான்.

எவ்வளவு இனிமையானது !

"சீச்சீ! உன் டாலர்க்கூண்டை நரகத்தில் போடு! அதில் பாபம் குடியிருக்கும். உன் வியாபார ஒப்பந்தச்சீட்டில் மரணம் இருக்கிறது; யுத்தம் இருக்கிறது. கொள்ளை இருக்கிறது. வெறியும் பொறாமையும் இருக்கின்றன. இவைகளைச் சுமந்து கொண்டு போக உன்னுடைய கழுகை அனுப்பு; அதுதான் அதற்கு லாயக்கு" என்று கோபமாகக் கூறியது புறா.

''ஜாக்ரதை! உன் உயிர் என் கையில் இருக்கிறது. திமிர் பேசினால் உன்னைக் கொன்றுவிடுவேன்'' என்று துப்பாக்கியை எடுத்தான் வியாபாரி.

உடனே, புறா 'ஜிவ் வென்று ஆகாயத்தில் கிளம்பி ஒரு குரல் எழுப்பியது. காற்று, அதை உலகமெங்கும் பரப்பியது.

செங்கொடியின் ஒளி வெள்ளம், புறாவைச் சூழ்ந்து நின்று ஒரு பாதுகாப்பு அரண் போன்று காட்சி அளித்தது. அருணோதயம் அரக்கு போன்ற அந்தக் கொடியின் கீழ் உலக மக்களெல்லாம் திரண்டார்கள். "வாழ்த்துச் செய்தி கொண்டு வந்த புறாவை ஒரு வியாபாரி கொல்லப் போகிறானாம்' என்ற செய்தி உலக முழுவதும் பரவியது. எல்லோரும் அந்த வியாபாரியை நோக்கிப் படையெடுத்தார்கள்.

அவன் டாலர்க் கோபுரத்தை இடித்து நரகத்தில் போடுங்கள்' என்று புறா அசரீயைப் போல் கூறிற்று.

காற்று, புறாவின் கட்டளையை நிறைவேற்ற சூறாவளி யாக மாறி, டாலர் கோபுரத்தின் மேல் மோதியது. மேகங்கள் இடிமுழக்கத்துடன் ஓடிவந்தன. டாலர்க் கோபுரத்தின்மேல் பேரிடிகளை வீசியெறிந்தன. 'டாலர்க் கோபுரம் நொறுங்கி விழப்போகிறது' என்று மின்னல் பளிச்சிட்டது. 'டாலர்க் கூண்டு ஒழிக! மரண வியாபாரி ஒழிக!! என்ற கோஷம் வான மண்டலமெங்கும் எதிரொலித்தது. இருளைக் கிழித்துக் கொண்டு மக்கள் நடந்தார்கள்; புறாவுக்கு வாழ்த்துக் கூறினார்கள்.

மதுரமான அந்த வேளை வந்தது; செவ்வானத்தில் மலர்ந்த இந்திரவில் புறாவின் சிறகுகளை முத்தமிட்டது. 'சமாதானம் வாழ்க' என்று புறா இசை பாடியது ”

50களில் உருவான சமாதான இயக்கத்தை வரவேற்று இக்கதையை தமிழ்ஒளி எழுதியிருக்கிறார்.இயக்கங்களை வரவேற்று முழக்கக்கவிதைகள் எழுதும் வழக்கத்தில் ஓர் உருவகக்கதையையே எழுதிவிட்டார்.இன்றைக்கும் பொருந்துகின்ற ஏகாதிபத்திய எதிர்ப்புக் கதையை அன்றைக்கு தமிழ்ஒளி எழுதியிருக்கிறர்.

இதுபோலத் தொடர்ந்து எழுதாமல் அகாலத்தில் அவர் மறைந்தாரே என்னும் ஏக்கத்தை இக்கதைகள் நமக்கு ஏற்படுத்துகின்றன.

❖❖❖

# தமிழ்ஒளியின் கட்டுரை இலக்கியம் - ஒரு பார்வை

**பேராசிரியர் க. பஞ்சாங்கம்**

தமிழ்ஒளி (1924-1965) இந்நூற்றாண்டில் எழுச்சி பெற்ற தமிழ்இன எழுச்சி, பாட்டாளிமக்கள் எழுச்சி, பிற்படுத்தப்பட்ட மற்றும் தாழ்த்தப்பட்ட சாதிகளின் எழுச்சி ஆகிய மூன்று எழுச்சிகளின் கூட்டுத் தொகையாக விளங்குகிறார். இம்மூன்று இயக்கங்களும் அவரது மன உலகத்தை வடிவமைத்து, பாதிக்கப்பட்டவர்கள் பக்கமாகச் சொல்லாடுவதற்கு அவரைத் தயார்ப்படுத்தி உள்ளன. இந்தக் கட்டுரை அவரது மொழியாடலில், கட்டுரை என்கிற இலக்கிய வடிவம் மூலமாக அவர் உருவாக்கும் கருத்தாக்கங்களை வெளிக் கொணர்வதற்கு முயல்கிறது. **“திருக்குறளும் கடவுளும்”(1959), “சிலப்பதிகாரம் காவியமா? நாடகமா?”(1959), “தமிழர் சமுதாயம்”(1962)** ஆகிய மூன்று கட்டுரை நூல்கள் இங்கே எடுத்துக் கொள்ளப்படுகின்றன. இவைகளை வெறுமனே “கட்டுரைகள்” என்று கூறுவதைவிட “இலக்கியத் திறனாய்வுக் கட்டுரைகள்” என்றே வகைப்படுத்திக் கொள்ளலாம். மேலும், திறனாய்வுக் கட்டுரைகள் என்பதைவிட, “விசாரணைக் கட்டுரைகள்” என்றே அழைக்கலாம். ஏனெனில், ஏற்கனவே சொல்லப்பட்டுள்ள கருத்துக்களை விசாரணைக் கூண்டில் ஏற்றி, தன் சமகாலத் தேவைக்கு ஏற்பப் புதிய கருத்தாக்கங்களை உருவாக்குபவையாக அவரது கட்டுரைகள் பலவும் அமைந்துள்ளன. தான் நம்புகிற கருத்துக்கு ஏற்ப விவாதங்களைத் தர்க்கபூர்வமாகக் கட்டுவதில் தமிழ்ஒளியின் புலமை பளிச்செனப் புலப்படுகிறது. கவிதையாக்கத்தில் உணர்ச்சி வெள்ளமாகத் தமிழின் ஒலிநயம் மூலமாகப் பாய்ந்து தாவும் தமிழ்ஒளி, கட்டுரையாக்கத்தில் நின்று, நிதானமாக, விவாதபூர்மாகச் சான்றுகளோடும் புள்ளிவிவரங்களோடும் பலவிதமான மேற்கோள்களோடும் அறிவார்ந்த முறையியலைப் பின் பற்றி எழுதிச் செல்லும் தன்மை யாரையும் வியக்கவைக்கக் கூடியதாகும்.

“திருக்குறளும் கடவுளும்” என்ற நூல் வள்ளுவரின் கடவுள் கோட்பாட்டை ஆராய்கிறது. ஏற்கனவே பரிமேலழகர் போன்ற உரைக்காரர்களால் புனைந்து கூறப்பட்டுள்ள கருத்துக்களைத் தக்க ஆதாரங்களோடு மறுத்து, தன் கொள்கையை நிலைநாட்டுகிறது. ஒரு நூல் (அ) பிரதி, காலந்தோறும் துப்பு விளக்கத்திற்கு உள்ளாகி

வருகிறது. இப்படிப் புதிய விளக்கத்திற்கு உள்ளாவதாலேயே அந்த நூல் தனது இருப்பைத் தொடர்ந்து தக்கவைத்துக் கொள்ளுகிறது. ஒருவன் தன் தேவைக்கு ஏற்பத் தன் சூழலைத் திரித்து, ஒழுங்குபடுத்திக் கொள்வது போலவே தான் வாசிக்கின்ற நூலின் அர்த்தத்தையும் தனக்குத் தகுந்தவாறு தன்காலத்திற்குத் தக்கவாறு அமைத்துக் கொள்ளுகிறான். இவ்வாறு அமைத்துக் கொள்வதால் ஒரு பிரதிக்கும் பல்வேறு அர்த்தங்கள் வந்து வாய்த்துவிடுகின்றன. எந்த அர்த்தம் மேலோங்கி ஒலிக்கிறதோ அந்த அர்த்தம்தான் அந்தக் காலத்தில் அந்தப் பிரதிக்கு. அப்படிப் பார்த்தால் திருக்குறளுக்குக் கற்பிக்கப்பட்டிருக்கும் "அர்த்தங்களின்" வரலாறே ஒரு பெரிய காவியம் எனக் கூறலாம்.

**"அருக சமயத்தினின்றும் முகிழ்த்த ஒரு**
**தத்துவச் செம்மலரே திருக்குறள்"**
(திருக்குறளும் கடவுளும், ப.22)

எனக்கூறும் தமிழ்ஒளி, திருக்குறளின் முதல் குறளுக்குப் புது விளக்கம் கொடுக்கிறார். "எழுத்துக்கள் எல்லாம் அகரமாகிய முதலை உடையன. அதுபோல் உலகம் ஆதிபகவானாகிய முதலையுடைத்து இப்பாட்டால் முதற் கடவுளது உண்மை கூறப்பட்டது" என்ற பரிமேலழகரின் உரையை மறுக்கிறார். அவர் காலத்திய சைவசமய எழுச்சியின் வெளிப்பாடு இந்த உரை என்று அற்புதமாக விளக்குகிறார். உண்மையில் வள்ளுவர் கூறுவது தன் காலத்திய சமணசமயச் சிந்தனையைத்தான் என வாதாடுகிறார். வள்ளுவர் "ஆதிபகவன்" என்று அரூபமான கடவுளைச் சுட்டவில்லை. 24 சமணசமய அறிவர்களின் முதல்வரான இடபதேவரைத்தான் சுட்டுகிறார் எனச் சான்றுடன் விளக்குகிறார். இடபதேவர்க்கான பெயர்களுள் ஒன்றுதான் "ஆதிபகவன்" என எடுத்துக் கூறுகிறார். "எழுத்துக்கள் அகரத்தை முதலாகக் கொண்டது போல், இந்த உலகம் இடபதேவரை முதலாகக் கொண்டுள்ளது" என உரை எழுதுகிறார். அதாவது பூமி இருந்தது; செடி, கொடி, விலங்கு, நீர், நெருப்பு, தீ என இந்தப் பூமி இருந்தது. ஆனால் மனிதன் மற்ற உயிரினம் போல் இல்லாமல், இந்த இயற்கையைத் தன்னில் நின்று வேறாகப் பிரித்து "ஓர் உலகமாக" உணர்ந்தது இடபதேவர் மூலமாகத்தான்" என்று உரை எழுதுகிறார். உலகம் பற்றிய பிரக்ஞை இடபதேவர் போன்றோரின் மனித முயற்சியால் கை கூடியதே ஒழிய, கருத்து முதல்வாதிகளான கடவுள்வாதிகள் சொல்வதுபோல அரூபமான தெய்வத்தால் கூடியது அல்ல என்ற பொருள் முதல்வாதத்தை முன்வைத்து உரை எழுதுகிறார். இந்த மனித உலகத்திற்கான மூலப்பொருள் மனித உழைப்புதானே ஒழிய, அரூபமான கடவுள் அல்ல என அழகாக விளக்கி உரை

எழுதுகிறார் தமிழ்ஒளி.

“மனிதன் உருவாக்கிய அறம், ஊழையும் உப்பக்கம் காண வல்லது என்பதை உணர்த்துவதே அறத்துப்பால்”(மே.நூ.ப.27) என்று அறத்துப்பாலுக்கே புது விளக்கம் தருகிறார். மனிதப் புரிதலுக்கு உட்படாத நிகழ்வுகளைக் கூட, மனித அறம் மூலம் மடக்கி ஆண்டுவிடலாம் என்று நம்பிக்கையூட்டுவதுதான் திருக்குறள் என அழகாக விளக்கம் கொடுக்கிறார்.

“பரிமேலழகரிடம் தர்க்கம் இல்லை. வாசகர்களை வழிமாற்றி அழைத்துச் சென்று விடுகிறார்” என்பது தமிழ்ஒளியின் துணிவு. வடமொழி மரபை அடிக்கடி எடுத்தாளும் பரிமேலழகருக்குப் பதில் கூறும் முகத்தான், திருக்குறளும் சிலப்பதிகாரமும் தமிழ்த் தொல்காப்பிய மரபின் “நீட்சிதான்” என விளக்குகிறார்.

“தொல்காப்பியப் பொருளதிகாரத்திற்கு இலக்கியமாய் அமைந்து, வேதங்களினின்று மாறுபடுவதையும் அதனால் தமிழர் தம் ஆற்றல் வீறுபடுவதனையும் தெரிவிக்கும் விழுமியநூல் திருக்குறள்” (மே.நூ.ப44) என்பது தமிழ்ஒளியின் கூற்று. மேலும், தனது குருதியில் கலந்த தமிழின உணர்விற்கு ஏற்ப, ஆரியம் திராவிடம் என்ற அக்காலகட்டத்துக் கருத்தாக்கச் சிந்தனைக்கு ஏற்பக் கீழ்க்கண்டவாறு எழுதுகிறார். திருக்குறளை ஒரு போர்க்குரலாகக் காண்கிறார்.

“தமிழின வாழ்வைக் குலைக்க முயன்ற பகைவர்தம் பொய் ஒழுக்கத்தினை எதிர்த்துப் போர்முரசு கொட்டியவர் வள்ளுவர்” (மே.நூ.ப.36) என எழுதுகின்றார்.


திருக்குறளில் பேசப்படும் சிந்தனைகள் கடைப்பிடிக்கத்தக்கக் கோட்பாடா? அல்லது வெறுங்கற்பனையா? என்றொரு வினாவை எழுப்பிக்கொண்டு, கடைப்பிடிக்கத்தக்க கோட்பாடுகள்தாம் அவை. ஆனால் தமிழர்வாழ்வை அழிக்க எதிரிகள் முயன்றதால் அரசர்கள் பலரும் இவ்வறநெறிக் கோட்பாட்டைக் கடைப்பிடிக்க இயலாது போயினர். எதிரிகளை அழிக்க அறநெறிசாராத நெறிகளையும் அரசர்கள் கடைப்பிடிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது என விளக்குகிறார்.

“தமிழர்க்குப் புறம்பானோர் நாட்டிற்கண் ஊடுருவி அவர்தம் பொய்யொழுக்கம் புகுத்தினமையால் அரசர் ஓரோஒரு வழிதான் அறத்தைக் கடைப்பிடித்தனர் வேளாண்மாந்தர், வணிக மாந்தர், துறவு மாந்தர் அறவழியில் ஒழுகினர்” (மே.நூ.ப51)

இவ்வாறு திருக்குறளின் கடவுள் கொள்கையை விளக்கப் புகுந்த சாக்கில், தனது மனத்திற்கு விருப்பமான பொருள்முதல்வாதக் கருத்துக்களையும், தமிழின உணர்வு சார்ந்த சிந்தனைகளையும் திருக்குறளில் ஏற்றிப் பேசுகிறார் தமிழ்ஒளி. தனது சொல்லாடலின்

வன்மை மூலம் தன் கருத்தை உண்மை எனக் கொள்ளும்படி நிலைநாட்டவும் செய்கிறார் தமிழ்ஒளி. ஒரு கட்டுரையின் (கட்டு உரைத்தலின்) வெற்றிக்கு இதற்கு மேல் என்ன சான்று வேண்டும்?

"சிலப்பதிகாரம் காவியமா? நாடகமா?" என்ற கட்டுரை நூல் தமிழ்ஒளியின் மற்றொரு ஆளுமையைப் புலப்படுத்துகின்றது. பெரும்பாலும் தமிழ்ப்படைப்பாளிகளிடம் காணாத இலக்கியத்தின் உருவம் பற்றிய பிரக்ஞை தமிழ்ஒளியிடம் எந்த அளவிற்கு ஆழமாக இயக்கம் கொண்டிருக்கிறது என்பதைக் காணமுடிகிறது. "சிலப்பதிகாரத்தின் உருவம் எது?" என்ற தேடலே ஒரு புத்தகமாக வடிவெடுத்திருக்கிறது என்றால் அவருடைய நுட்பமான புரிதலின் தன்மை வாசகனை வியப்பில் ஆழ்த்துகிறது.




இலக்கியத்தில் உருவத்தின் இன்றியமையாமையை விளக்க, சாபத்தால் பன்றியாகப் பிறப்பெடுத்த முனிவனின் கதையைப் பயன்படுத்திக் கொள்கிறார். (பாரதியும் இந்தக் கதையை எடுத்தாண்டுள்ளார்) ஒரு முனிவர் சாபத்தினால் பன்றியாகப் பிறப்பதற்கு முன்பு, தன் மகனிடம், "என்னைப் பன்றியாகப் பார்த்தவுடன் நீ வெட்டிக் கொன்றுவிட வேண்டும்" என்று சொல்லிவிட்டு இறந்து விடுகிறார். அதுபோலவே பன்றியாகப் பிறந்த தந்தையைப் பார்த்துப் பொறுக்க முடியாமல், மகன் வெட்டுவதற்கு ஓடுகிறான். ஆனால் பன்றியாக இருக்கும் தந்தையோ "மகனே! இந்த வாழ்க்கையும் நன்றாகத்தான் இருக்கிறது. பிள்ளைக் குட்டிகளோடு சாக்கடையில் கண்மூடிக்கிடக்கும் சுகம் வேறெங்கு வாய்க்கும்? நீ போய் வா" என்கிறார். மகன் துடிக்கிறான். "வேதங்கள் பலவும் கற்றுத் தெளிந்த தந்தையே! நீங்களா இப்படிப் பேசுவது? எனக்கு அவமானமாக இருக்கிறது" என்று அலறித் துடிக்கிறான். "உனக்கு அவமானமாக இருந்தால், அந்த வாளால் உன்னையே நீ வெட்டிக்கொள்! என்னை விட்டுவிடு" என்று சொல்லிவிடுகிறார். மகன் சொல்லுகிறான், "பன்றி உடலையும் பெற்றீர், இப்பொழுது பன்றியின் குணத்தையும் பெற்றீரே" என்று அழுது ஓய்கிறான். இந்தக் கதையைச் சொல்லிவிட்டுத் தமிழ்ஒளி எழுதுகிறார். "உடல் மாறினால் உயிர் மாறும்" என்று எழுதிவிட்டு மேலும் தொடர்கிறார். "இந்த உருவ அமைதியை அறியாமல் சிலபேர் சில பகுதிகளைப் (சிலம்பில்) புறம்பே ஒதுக்க வேண்டும் என்கின்றனர்" (மே.நூ.ப.22) என ரசிகமணி

டி.கே.சி அவர்களுக்குப் பதில் சொல்லுகிறார். டி.கே.சி. தனது ரசனைமுறைத் திறனாய்விற்கு ஏற்பச் சிலப்பதிகாரத்தில் வருகின்ற அரங்கேற்றுக்காதை, நாடுகாண்காதை, ஊர்காண்காதை போன்ற இலக்கிய நயம் இல்லாத பகுதிகளை எடுத்துவிட வேண்டும் எனக் கருதினார். அவருக்குப் பதில் சொல்லுவதைப் போல, "உருவ அமைதி" பற்றியே பெரிதும் பேசிய டி.கே.சி.க்கு அவர் மொழி யிலேயே பதில் சொல்லுவது போல எழுதுகிறார்.

"உருவ வேறுபாடுகளை உணர்வதே கலையின் உயிர்த்தன்மையை உணர்வதாகும். அத்தகைய ஆராய்ச்சி இன்று இல்லை. இந்நெறியில் நாம் இக்காவியத்தைக் (சிலம்பை) கற்றால்தான் நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்று சுப்பிரமணியபாரதி கூறியதன் உண்மை விளங்கும். (மே.நூ. ப.36)

சரி! சிலப்பதிகாரத்தின் உருவம் எது? உரையாசிரியர்களும் சிலம்பை வகுப்பறையில் சொல்லிக் கொடுப்பதற்கென்றே சுருக்கிவிட்ட பண்டிதர்களும் கூறுகிறபடி முத்தமிழ்க்காப்பியமா? (அ) நாடகக் காப்பியமா? (அ) உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுளா? (அ) பொருள் தொடர்நிலைச் செய்யுளா? (அ) காவியமா? எனக் கேட்டுவிட்டுத் தமிழ்ஒளி கூறுகிறார். "சிலம்பு இவற்றில் எதுவும் இல்லை! அது நிகழ்த்துக் கலை (Performing arts) இசை நாடகம். ஆங்கிலத்தில் கூறப்படும் 'opera' போன்ற ஒரு வடிவம். நாடகப் பண்பும், காவியப் பண்பும் பெற்றிருந்தும் நாடகத்திற்கும் காவியத்திற்கும் அப்பாற்பட்ட ஒரு "தனிவடிவம்" சிலப்பதிகாரம் என்று பலவிதமான சான்றுகளுடனும் மேற்கோளுடனும் விளக்கிச் சொல்லுகிறார். இப்படிச் சிலம்பின் உண்மையான உருவத்தை அறிந்து வாசித்தால்தான் அதன் மெய்யான இலக்கிய நயத்தை உணர முடியும். கூடவே, இழந்த நம் பண்பாட்டில் விளங்கிய இசை, நாடகம் என்ற வடிவத்தை மீட்டெடுக்க முடியும் என்றும் பரந்த எதிர்கால நோக்கில் தன் கட்டுரைப் பயணத்தை மேற்கொள்ளுகிறார்.

"தமிழ் மறுமலர்ச்சி என்று இன்று பேசப்படுவது பொய் உரை அன்று, பொருளுரை என்று உலகிற்கு நாம் காட்ட வேண்டுமாயின், இழந்த கலை வடிவங்களை நாம் மீட்க வேண்டும்" (மே.நூ. ப.34)

என்று மிகவும் உன்னதமாக "வடிவத்தின்" இன்றியமையாமையை வலியுறுத்துகிறார் தமிழ்ஒளி.

"தமிழர் சமுதாயம்" என்ற நூல் தமிழ்ஒளியின் தமிழ் நெஞ் சத்தைப் புலப்படுத்தும் அற்புதமான நூல். திராவிட இயக்கச் சிந்தனைகளை எந்த அளவிற்கு விமர்சனம் ஏதுமின்றி அப்படியே நெஞ்சில் ஏற்றுக் கொண்டிருக்கிறார் என்றும் காட்டக் கூடிய நூல். (அ) தமிழ்நாட்டு எல்லை, (ஆ) சமஸ்கிருத தோற்றம் (இ)

செத்த மொழி (ஈ) சமஸ்கிருத எதிர்ப்பு (உ) வடமொழியும் திசை மொழியும் (ஊ) வடுகு (எ) இந்திரன் யார்? ஆகிய கட்டுரைகளின் தொகுப்பாக அமையும் இந்நூல், ஆதிக்கமொழியாய் விளங்கிய சமஸ்கிருத மொழிக்கு எதிரான கலகக்குரலாக அமைந்துள்ளது. ஒரு கலைஞன் என்பவன் கற்பனைவாதியாக, வார்த்தைகளில் விளையாடும் சித்தனாக மட்டும் இருந்திட முடியாது. தன்காலச் சமூகக் கடமையையும் நிறைவேற்ற முன்நிற்க வேண்டும் என்ற தெளிவோடு இந்தக் கட்டுரைகளை வடித்துள்ளார் தமிழ்ஒளி.

வடமொழி ஆதிக்கத்தாலும், காலனி ஆதிக்கத்தாலும் நினைவுகளற்ற ஒரு அடிமைச் சமூகமாக மாறிவிட்ட தமிழ்ச்சமூகத்திற்குத் தமிழ்ஒளியின் கட்டுரைகள் நினைவுகளை மீட்டுத்தந்து உத்வேகம் ஊட்டுபவைகளாக அமைந்துள்ளன. இந்த வகையில் கவிதை, கதை என்று எழுத வரும் இன்றைய இளைஞர்கள் தமிழ்ஒளி யிடம் கற்றுக்கொள்ள ஏராளமான செய்திகள் இருக்கின்றன என உறுதியாகக் கூறலாம்.

❖❖❖

# கவிஞர் தமிழ்ஒளி:
# சமூகப் பார்வையின் பரிணாமம்

மயிலைபாலு

கவிஞர் தமிழ்ஒளியின் படைப்புகள் வழியாகச் சமூகம் குறித்த அவரின் பார்வையை மதிப்பீடு செய்யும் முயற்சியே இக்கட்டுரை. விரிப்பின் பெருகும் சுருக்கின் எஞ்சும் என்ற புரிதலுடனேயே இதனை எழுத முனைகிறேன். 40 ஆண்டுகளே வாழ்ந்து மறைந்தவர் கவிஞர் தமிழ்ஒளி. என்றாலும் 1944 தொடங்கி 1964 வரையிலான 20 ஆண்டுகளில் அவரின் படைப்புகளைத் தொகுத்துப் பார்த்தால் 30 நூல்களாக விரிகின்றன. இவற்றுக்குள் மூழ்கி முத்தெடுக்கும் முயற்சியாகவும் இதனைக் கொள்ளலாம். கவிஞரின் சமூகப் பார்வையை எடுத்துரைக்கும் முன்பாக சமூகம் பற்றிய எனது புரிதலைக் கூற விரும்புகிறேன். இந்தப் புரிதல் கண்ணாடி வழியாகவே தமிழ்ஒளியை நான் காண்கிறேன்; மதிப்பீடு செய்கிறேன்.

மாதுளையில் முத்துக்கள் போல் சமூகப் பார்வைக் கூறுகள் பலவாக இருப்பினும், நாரத்தை சுளைகள் போல் சிலவற்றை முன் வைக்கிறேன்.

**சமூகம் என்றால் மக்கள் சமமாக வாழ வேண்டும்**

**ஏற்றத்தாழ்வு இருக்கக் கூடாது**

**ஒருவருக்கு ஒருவர் உதவி செய்து வாழ வேண்டும்**

**பசிப்பிணி இருக்கக் கூடாது**

**தனி நபர் உரிமைகள் மதிக்கப்பட வேண்டும்**

**பெண்களுக்குப் பாதுகாப்பும் சம வாய்ப்பும் இருக்க வேண்டும்**

**ஊர் என்றும் சேரி என்றும் பிரிந்திருக்கக் கூடாது**

**தீண்டாமை ஒழிக்கப்பட வேண்டும்; சாதிப் பாகுபாடு களையப்பட வேண்டும்**

**சமயக் காழ்ப்பு நீக்கிச் சமூக நல்லிணக்கம் வேண்டும்**

**எல்லாருக்கும் எல்லாமும் என்ற பொதுவுடமை நிலை வேண்டும்**

இவையெல்லாம் தானாய் உருவாகி விடாது. இதை நோக்கித் தனியாகவும் கூட்டாகவும் செயலாற்ற வேண்டும். இந்த மன ஓட்டத்தைத் தமிழ்ஒளி தொடக்க காலத்திலேயே எழுதாக்கிப் பதிக்கிறார். 1948 முன்னணி இதழில் ஒரு கவிதை. காதலியுடன் காதலன் பேசுவதாக இது அமையும்.

**"யாரடி காதலி கேளடி உன்றன்**

**ஆசைக் குரியவன் சொல்கிறேன்**

**பாரடி மானிடச்சாதியை அவர்**

**பட்டிடும் துயரத்தைப் பாரடி"**

இளம் வயது 24ல் எழுதிய காதல் கவிதையிலும் சமூக அவலம்தான் அவரது மனதை ஆட்கொள்கிறது. "முத்தெனவே ஒளி சிந்திடும் கொடி, முல்லையை ஒத்த சிரிப்பினால், எத்தனை ஜாலங்கள் காட்டுவாய்" என்று காதலியை வர்ணிக்கிறார். அதற்குள் சமூக நிலைமை மனக்கண்ணில் விரிகிறது. "அதை எண்ணி மயங்கிடும் போதிலே, தொத்து பிணிகொண்ட ஏழைகள் படும், துன்பம் அழுகுரல் காதிலே, குத்தல் எடுக்குது தோழியே துயர், கொண்டதென் உள்ளமென் செய்குவேன்" என்று தவிக்கிறார். இல்வாழ்க்கையின் பண்பும் பயனும், அன்பும் அறனும் என்று வள்ளுவர் வரையறுக்கிறார். தமிழ்ஒளி செய்யும் வரையறை இது.

**"இக்கணம் தொட்டு நம் ஆசையும் காதல்**

**இன்பமும் மக்களின் தொண்டடி"**

மக்கள் தொண்டுதான் வாழ்க்கை இன்பம் என்ற பார்வை இளம் வயதில் எத்தனை மகத்தானது.

தமிழ்ஒளி பிறந்து வளர்ந்த 1940கள் தமிழ் மண்ணில் திராவிடச் சிந்தனை வேர் விட்டு வளர்ந்து படர்ந்த காலம். இதிலிருந்துதான் அவரது சமூகப் பார்வையும் தொடங்குகிறது. அவரின் தொடக்ககால கவிதைகளில் இதற்கான கருத்துக்கள் பட்டுத் தெறிக்கின்றன.

**" தமிழனுக்கே தமிழ்நாடு இதைத் தடுக்க**

**யார் செய்தாலும் கேடு"** (திராவிட நாடு 1944)

"செழுந்தேனை ஒத்த தமிழ் உணர்ச்சியாலே, திறல் பெற்றார் மாணவர்கள் திராவிடத்தின் முழு பொறுப்பும் அவர் ஏற்றுக் கொண்டார் ..... திராவிடத்தின் எதிர்காலம் அதோ அவர்கள் கையில் தானே" (குடியரசு 1944) என்று திடமாகக் கூறுகிறார் தமிழ்ஒளி. இதுதான் வரலாறு என்பது 1967ல் நிரூபணமானது.

திராவிடம் என்ற கருத்தாக்கத்தை மனம் கொள்ளும் போது எதிர்நிற்பது ஆரியம் என்பதும் பார்ப்பனியம் என்பதும் இன்று வரை சொல்லாமலேயே விளங்கிக் கொள்ளப்படுவதாகும்.

**" பெரும்பழிக்கு வகை தேடும் ஆரியத்தை**

**அறவே இந்நாள் அதுவும் இன்றே பாய்ந்தே**

**அழித்திடுவோம் ஆம் இதிலே ஐயமில்லை "**

என்று அதே கவிதையில் ஆவேசம் கொள்கிறார். "ஆரப்பன் நாட்டில் ஆரியம் திகழ்வது? தேரப்பா ஆரியம் வீழ்த்தியே

தீரப்பா" (புதுவாழ்வு 1946) என்று அழுத்தம் கொடுக்கிறார். "திராவிடம் உற்ற சிறுமையைத் தீய்த்திடு, தூக்குக் கயிறுனைத் தொட்டிழுத்தாலும் துளியும் அஞ்சாதே" என்று ஊக்கப்படுத்துகிறார்; உத்வேகமூட்டுகிறார்.

வீராயி காவியத்தில் ஒடுக்கப்பட்ட பறையர் சமூகத்தின் இரண்டு பிரதிநிதிகளாக வீராயியையும், அவளுக்கு ஆதரவு தரும் முதியவர் மாரியையும் நமக்கு அறிமுகம் செய்கிறார் கவிஞர். இவர்கள் சாதியக் கொடுமைகளால் நொந்தபோது நாட்டில் இருப்பதைவிட காட்டுக்குச் சென்று விடலாம் என்று நினைக்கின்றனர். ஏன்?

**"சேரியெனும் இடமில்லை காட்டினிலே**
**அதுவன்றிக் கற்பைத் தின்னும்**
**பூரியர்கள் அங்கில்லை; சட்டத்தால்**
**பொய்சொல்லிப் புன்மை சேர்க்கும்**
**ஆரியர்கள் அங்கில்லை யாவையுமே**
**பொது உடைமை"**

ஆரிய எதிர்ப்பு, கவிஞர் மனதில் நீக்கமற நிறைந்திருப்பதை இது காட்டுகிறது. ஆரிய எதிர்ப்பு அடித்தளம் என்றால் அதன் மேற்கட்டுமானங்களான சாதி, மதம், மூடநம்பிக்கைகள் எதிர்ப்பும் தவிர்க்க இயலாதவை அல்லவா? அதனையும் தமிழ்ஒளியின் பல படைப்புகளில் நேரடியாகவும் பாத்திரங்கள் வாயிலாகவும் காண்கிறோம்.

வீராயி காவியத்தில் ஒரு காட்சி மூலம் ஆரியத்தின் விளைவான இந்துமத எதிர்ப்பைக் கவிஞர் தமிழ்ஒளி பதிவு செய்கிறார். மழை வெள்ளத்திற்கு அஞ்சி வைக்கோல் போரில் தஞ்சம் அடைந்த வீராயியும் அவள் தந்தை வேடப்பனும் மயக்கமடைந்து கிடக்கின்றனர். எலும்பு தோல் இறைச்சியில் இலக்கமிடாததால் முதலில் மனித மனம் உதவி செய்ய முனைகிறது. ஆனால், அவள் சேரிப்பெண் என்று ஒருவர் கூறியதும் அனைவரின் மனமும் தடுமாறுகிறது.


**"பயப்பட்டார் பறையர்களைத் தொட்டெடுத்து விட்டால்**
**பார்ப்பவர்கள் என் சொல்வார் என்றொதுங்கிப் போனார்"**

இதற்குக் காரணம் என்ன? " தயைமிக்க இந்துமதம் வளர்த்து விட்ட எண்ணம். "

தீண்டாமைக் கொடுமையின் வேர்கள் ஆரியம் எனும் பார்ப்பனியத்திலும் அதுபெற்ற இந்து மதத்திலும் இருக்கின்றன என்பதை இக்கவிதையில் உறுதியாக உரைக்கிறார். பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்பது வள்ளுவம் வகுத்த நெறி. செவ்வியல் இலக்கியங்களில் சாதி, சமய பேதமில்லை; நால் வர்ணக் கூறு

இல்லை. இப்படியான "தமிழரிடை இத்தீமை விளைத்தவரைக் காணின், கையிரண்டும் காலிரண்டும் வெட்டி, அவர் கண்ணைக், கழுகுக்குப் பலியிடுவேன்" என்று கொந்தளிக்கிறார். இது வன்முறை எண்ணம் இல்லை. நன்றான வாழ்க்கையில் நஞ்சு கலந்ததை எண்ணியதால் ஏற்படும் மனக்குமுறல்.

“ஏழ்மையினால் காய்ந்த பூண்டாகி மாறிடினும் குலத்தன்மை மாறோம்” என்ற உறவினர்கள் கூற்றின் மூலம் சாதி நஞ்சு எவ்வாறு மூளை நரம்புகளில் புரையோடிப் போயிருக்கிறது என்பதைக் காட்டுகிறார். இப்போது முன்வைக்கப்படும் மாட்டுக்கறி பிரச்சனையை ஆனந்தனின் அப்பா வழியாக அப்போதே எடுத்துக்காட்டுகிறார். “கப்பலிலே கால் வைத்த காலிக்கு மாட்டு கறிதின்னும் புத்தியது வராதா என்ன?” ஆத்திரத்திலும் துருத்திக் கொண்டு நிற்கிறது உணவு பழக்கம் குறித்த இளக்காரம். யார் தடுப்பினும், இந்த ஊர் எதிர்ப்பினும் வீராயியைக் கைப்பிடித்து வாழ்வதில் பின்வாங்க மாட்டேன் என ஆனந்தன் உறுதி கொள்கிறான். மணமுடிக்க அவன் தெரிவு செய்த இசைக் கருவி ‘பறை’ இது மிகச் சிறப்பான குறியீடு. அதனை மையமிட்டுச் சுழல்கின்றன கவிதை வரிகள்.




**“எக்களிப்பு கொள்ளுதடா பறையோசை எங்கும்**
**எதிர் நின்ற சாதி வெறி மதவெறிகள் எல்லாம்**
**சுக்காகப் போயிற்று பறையோசை ஓடி**
**சுதந்திரத்தைச் சொல்லியுமே முழக்குதடா ஊரில்”**

சுதந்திரத்தின் அடையாளமாக, உரிமையின் குறியீடாக, ஆதிக்கத்திற்கு அடங்க மறுக்கும் முழக்கமாகப் பறையோசை இன்றும் ஒலிப்பதைக் கேட்கலாம். சாதி, மதம், தீண்டாமை எனும் சமூகப் புற்றுநோயை வளர்த்துவிட்ட வைதீகத்தை வேரறுக்கும் ஓசை பறையோசை என்பதை அடுத்தடுத்த பத்திகளிலும் பதிவிடுகிறார்.

அநியாயம் ஒன்று கூடி விட்டால் நியாயம் செத்துப் போகும்தானே! சாதி வெறி கொண்ட அநியாயக்காரர்கள் ஒன்று சேர்ந்து ஆனந்தனையும் வீராயியையும் ரத்த வெள்ளத்தில் மூழ்கடிக்கிறார்கள். நிலைபெற்ற சிலை, மே தின ரோஜா, கோசலக்குமரி, கவிஞனின் காதல் ஆகிய காவியங்களிலும் ஏற்றத்தாழ்வுகளுக்கு எதிராக நின்ற காதலர்களுக்கு அழிவே ‘பரிசாகிறது’. இக்காலத்தும் ஆணவக் கொலைகளுக்குக் கொடுவாள், அரிவாள் என ஆயுதங்களுக்குக் கூர்

தீட்டிக் கொடுப்பதும், துப்பாக்கிகளில் தோட்டாக்களை ஏற்றுவதும் சாதி வெறிதானே! இதனை அறவே மாய்த்த சமூகம்தான் தமிழ்ஒளி விரும்பிய சமூகம்.

ஆரிய, பார்ப்பனிய எதிர்ப்பு என்பது வர்ணாசிரம எதிர்ப்பும்தானே. இதற்காகவே ஒரு காவியத்தைப் படைத்துள்ளார் தமிழ்ஒளி. கோசலக்குமரி என்ற அந்தக் காவியம் வர்ணாசிரமத்திற்கு எதிராகப் புத்த மதத்தை நிறுத்துகிறது. இதற்கான கருவை ராகுல்ஜியின் வால்காவிலிருந்து கங்கை வரை நூலின் பிரபா என்ற ஒரு குறுங்கதையிலிருந்து எடுத்துக்கொள்கிறார். அதில் வரும் நாயகனான அஸ்வகோஷ் புத்த மதத்தை நாடிச் செல்லும் போது, தர்மசேனர் விளக்கம் அளிப்பதாக வரும் பகுதி வர்ணாசிரமத்தின் பிறப்புக் கோட்பாட்டைக் கேள்வி கேட்கிறது. ‘‘அந்தணர் தம்பெண்டிர் ஆணைப் புணர்கின்றார், முந்திக் கருவடைதல் முன்வயிற்றிற் பார்க்கின்றோம்! பிள்ளைப் பெறுகின்றார் பெற்று வளர்க்கின்றார், வெள்ளையாய் வீட்டில் விளக்குகின்ற உண்மை யன்றோ? இவ்வாறே அந்தணர்கள் எல்லோரும் தாய்வயிற்றில் ஒவ்வோர் உயிராய் உயிர்த்துப் பிறந்திருக்க, முன்னர்ப் பிரமன் முகத்தில் பிறந்தார் யார்? என்ன கதைகள்! இழிவுரைகள்’’ என எளிய சான்று காட்டி விளக்குகிறார்; வர்ணக் கோட்பாட்டைக் கிழித்தெறிகிறார். ‘‘படையின்றி பார்ப்பனர்கள் வெற்றி கொள்வர், பயல் அஸ்வகோஷ் எங்கே?’’ என்ற பெரிய பார்ப்பான் பாத்திரத்தின் கூற்று, சமூகம் காலகாலமாக சந்திக்கும் நுட்மான பிரச்சனை.

ஆரியத்துக்கு எதிராக முதலில் திராவிடத்தை மனம் கொண்ட தமிழ்ஒளி காலப்போக்கில் புத்த மதத்தை முன் நிறுத்தினார். இதன் விளைவே அவரது மாதவி காவியம், விதியோ வீணையோ, புத்தர் பிறந்தார், கோசலக் குமரி போன்ற காவியங்கள் எனலாம். புத்த மதக் கோட்பாட்டின் ஒரு பகுதியாகவே மூடநம்பிக்கை எதிர்ப்பும் அவரிடம் வேரூன்றியிருக்கிறது. உழைக்கிற மக்கள் உருக்குலைந்து கிடப்பதைப் பல கவிதைகளில் அவர் பதிவு செய்கிறார்.

**‘‘கால் வயிறு சாப்பிடவும் போதாக்கூலி**
**கண்ணெதிரே வறுமையிடும் கோரக்கூத்து**
**நூல் போன்ற இளைத்த உடல் மனைவி மக்கள்**
**நோய் கொண்ட பெற்றோர்கள் இளங்குழந்தைப்**
**பாலின்றி அழும் ஓசை ஐயோ இந்தப்**
**பஞ்சையர்க்குத் துயர் ஒன்றே வாழ்க்கை ஆச்சு!**
**சால்வயிற்று முதலாளி வாழ்கின்றானே**
**தன்கையால் சிறு துரும்பை அசைத்திட்டானா?**

என்று கேள்வி எழுப்பி தொழிலாளர்கள் வாழ்வு பெற வீதிக்கு

வர வேண்டும். வீறு கொண்டு போராட வேண்டும். என்பதை நகர சுத்தித் தொழிலாளர்களின் எழுச்சி பெற்ற கவிதை மூலம் எடுத்துரைக்கிறார். தொழிலாளர்களின் நிலை பற்றிக் கடுகளவும் கவலைகொள்ளாத பெருந்தனக்காரர்கள், பெரும முதலாளிகள் மூடநம்பிக்கையில் எப்படி மூழ்கிக் கிடக்கிறார்கள்? அவர்களின் சனாதனப் பாசிப்படிந்த மூளை என்ன செய்யத் தூண்டுகிறது என்பதை எள்ளல் தொனியில் இப்படிப் பதிவு செய்கிறார்.

**"கும்பாபி ஷேகம் எனச் சொல்வார்; கோயில்,**
**குளமெடுக்க மிகுந்த தொகை செலவழிப்பார்!**
**கும்பியிலே பசி நெருப்பு மூண்டெரிக்க,**
**குழந்தைகளும் மனைவியரும் துடிக்க ஏழை,**
**தெம்பின்றி விழுந்திடுவார் அவர்கள் முன்னே**
**செய்த வினை விதி என்றே சொல்லிவிட்டு**
**எம்பிரான் நாமத்தை ஜெபிப்பார் மூடர்**
**இன்ன இவர் மனிதர்களாய் வாழு கின்றார்!**

தமிழ்ஒளியின் சென்னை வாழ்க்கையும் ஜெயகாந்தன், விந்தன், குயிலன் போன்றோரின் நட்பும் அவரைப் பொதுவுடமையின் பக்கம் நகர்த்திச் செல்கிறது. பாரதியைப் போலவே சோவியத் புரட்சியை, சீனப் புரட்சியைப் புகழ்ந்து பாடுகிறார்.

**"எதுவுடைமை? எது உலகம்? என்று காணா**
**ஏழைகளும் அவர் இனத்தின் எளியோர் தாமும்**
**பொதுவுடைமை வந்தவுடன் அண்ட கோளப்**
**புதல்வர்களாய் அமரர்களாய்ப் பொலிந்து தோன்ற**
**அதுவுடைமை அறிவுடைமை சோவியத்தின்**
**அன்புடைமை எனக்கொண்டார் அஃதேயன்றிப்**
**புதுவுடைமை விஞ்ஞானம் என நவம்பர்**
**புரட்சித்தாய் கூறினாள் புவியோர்க் கெல்லாம்!**

என்று பொதுவுடைமை சமூகம்தான் புவி சிறக்க, புவியிற் பிறந்த மக்கள் சிறக்க வழி எனத் தமிழ்ஒளி உறுதியான முடிவுக்கு வருகிறார். இதனைத் தனது நண்பர் பாலசுந்தரத்திற்கு எழுதிய கடிதத்தில் மிகத் தெளிவாகக் குறிப்பிடுகிறார்.

"நமது வாழ்வின் நோக்கம் நமது சமுதாயமும் மக்களும் முன்னேற்றமடையும் முறையில் இயன்ற தொண்டு செய்வதுதான். மக்கள் அறியாமை, மூடநம்பிக்கை, வறுமை, அடிமையில் மோகம் முதலியவற்றினின்றும் நீங்கி நல்லுணர்வும் வாழ்வும் பெற ஆவன புரிய வேண்டும் என்பதுதான். அதனைத் தன்னலமின்றிச் செய்ய வழிகாட்டும் இயக்கம் பொதுவுடமை இயக்கம்தான். நான்

இப்பொழுது ஒரு கம்யூனிஸ்ட் தொண்டன் என்பதில் பெருமிதம் அடைகிறேன்.''

இந்தப் பெருமித வாழ்க்கைதான் தமிழ்ஒளியின் சமூகப் பார்வையாக உள்ளது. அவரது கவிதைகள், காவியங்கள், சிறுகதைகள், உரைநடைகள், நாடகங்கள், சிறார் பாடல்கள் வழியாகத் தொகுத்துப் பார்த்தால் கவிஞர் தமிழ்ஒளி திராவிடம், தமிழ், தமிழர், திராவிட நாடு என்பதில் பயணத்தைத் தொடங்குகிறார். இதுவே அவரது தொடக்ககால சமூகப் பார்வையாக இருக்கிறது. திராவிடச் சிந்தனை ஆரியம் பற்றிய தேடலுக்கும் புரிதலுக்கும் இட்டுச் செல்கிறது. ஆரியம் அல்லது பார்ப்பனியம் சாதி மதங்களின் பேரால் மக்களிடையே ஏற்றத்தாழ்வை ஏற்படுத்துகிறது. வர்ணாசிரமக் கருத்தைத் திணிக்கிறது. அறிவுக்குப் பொருந்தாத மூடநம்பிக்கைகளை வளர்க்கிறது. இவையெல்லாம் சமூகத்தளத்தில் இருந்து அகற்றப்பட வேண்டும் என்று சிந்திக்கத் தூண்டுகிறது.

இதற்கான தத்துவமாக முதலில் புத்த மத போதனைகளைத் தமிழ்ஒளி காண்கிறார். இதற்கும் கூடுதலான தேடல் உழைக்கும் மக்கள் தலைமையிலான அரசமைய வேண்டும் என்ற விருப்பமாக மாறுகிறது. மே தினமே வருக என்ற நெடுங்கவிதையில் 'கந்தல் மனிதரவர் கையில் அதிகாரம்' என்ற வரியில் இதன் சாரத்தைப் பதிவிடுகிறார்.

**"தமிழனே நான்உலகின் சொந்தக் காரன்**
**தனிமுறையில் நான்உனக்குப் புதிய சொத்து!**
**அமிழ்தான கவிதைபல அளிக்க வந்தேன்**
**அவ்வழியில் உனைத்திருத்த ஓடி வந்தேன்**
**இமைதிறந்து பார்! விழியே அகலமாக்கு!**
**என்கவிதைப் பிரகடனம் உலகம் எங்கும்**
**திமுதிமென எழுகின்ற புரட்சி காட்டும்**
**சிந்தனைக்கு விருந்தாகும் உண்ண வாநீ!**

♦♦♦

**உழுபவனே நிலத்திற்குச் சொந்தக் காரன்!**
**உழைப்பவனே தேசத்தின் உரிமை யாளன்!**
**புழுவைப்போல் கிடந்ததுவும் பிச்சை வாங்கும்**
**புன்மைநிலை அடைந்ததுவும் வாடைக் காற்றில்**
**அழுதுதுயர் அடைந்ததுவும் இனிமேல் இல்லை**
**அடங்காத வேகமொடும் ஆர்வத் தோடும்**
**எழுந்துவா உழைப்பவரின் போராட் டத்தில்**
**இரண்டின்றிக் கலந்துவிட இதுதான் நேரம்!**

என்ற கவிதை வரிகளைத் தமிழ்ஒளி கொண்டிருந்த சமூகப் பார்வையின் சாரமாகக் கொள்ளலாம்.

# கவிஞர் தமிழ்ஒளியின் தோழமைக்கட்டளை

**பு.பா. பிரின்சு கஜேந்திரபாபு**

அன்னிய ஆதிக்கத்தின் கீழ் இருந்த நிலப் பரப்பில் பிறந்து வாழ்ந்திருந்தாலும் இருபத்தியோரு வயது மட்டுமே சுதந்திர மனிதனாக வாழ்ந்து இரண்டரை ஆண்டுகள் சிறையில் அடைக்கப்பட்டு இருபத்திமூனறை வயதில் தூக்கிலிடப்பட்ட தோழர் பகத்சிங் அவர்களுக்கும், நாற்பது வயதில் காச நோயால் தனது வாழ்க்கை முடிவுக்கு வந்த கவிஞர் தமிழ்ஒளி என்று உலகம் அறிந்த தோழர் விஜயரங்கன் அவர்களுக்கும் பெரும் வேறுபாடு கிடையாது.

மார்க்சியம் முன்வைக்கும் இயக்கவியல் (dialectic) அணுகுமுறையே அரசியல், சமூக, பொருளாதார விடுதலையை வென்றிட வழி வகுக்கும் என்று இருவரும் உறுதியுடன் நம்பினர்.

இருவரும் தன்மானத்துடன் வாழ்வதே வாழ்க்கை என்பதைத் தங்களின் வாழ்க்கை முறை மூலம் விளங்கிடச் செய்துள்ளனர்.

பரிணாம வளர்ச்சிக் கோட்பாட்டின் அடிப்படையில் வாசிப்பு தரும் தெளிவு, தெளிவில் இருந்து உருவாகும் தத்துவப் புரிதல், அதன் அடிப்படையில் நடத்தப்பட வேண்டிய போராட்டம், அதற்கான உத்திகள் ஆகியவற்றை நன்குஉணர்ந்து செயல்பட்டனர்.

சோவியத்தைக் கட்டமைத்த, ருசியப் புரட்சிக்குத் தலைமை தாங்கிய தோழர் லெனின் கூறியுள்ளதைப் போல் வாசிப்பு, இயக்கப்பணி ஆகிய இரண்டையும் சமஅளவு மேற்கொண்டு தங்களின் செயல்பாட்டிற்குஉரிய தத்துவத்தைத் தேர்ந்தெடுத்து அதில் உறுதியுடன் இறுதி வரை நின்றுள்ளனர்.

பகத்சிங் தனது தோழர்களுக்கு எழுதிய கடைசிக் கடிதத்தில் எத்தகைய திசையை இளைஞர்கள் தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதை உணர்த்துவார். அதே பணியை நண்பர் பாலுவுக்கு எழுதிய கடிதம் மூலம் கவிஞர் தமிழ்ஒளி செய்துள்ளார்.

நண்பர் பாலுவுக்கு எழுதிய கடிதம் ஒரு பாலுவிற்காக எழுதப்பட்டது அல்ல. ஒவ்வொரு இளைஞருக்காவும் எழுதப்பட்டது.பொதுவுடைமை இயக்கத்தில் ஊழியர்கள் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை தோழர் லெனின் கூறுவார்.

அவற்றை உள்வாங்கிய தோழர் பகத்சிங் பொதுவுடைமை இயக்கத்தின் ஊழியர்கள் எவ்வாறு இருக்க வேண்டும் என்று கூறுகிறார்.

தனது சொந்த வேலையை நாள் முழுவதும் முடித்துக் கொண்டு மாலை நேரத்தில் பிரசங்கம் செய்யவரும் நபர்களால் இயக்கம் வளராது. புரட்சியை மட்டுமே தொழிலாகக் கொண்ட முழு நேர ஊழியர்கள் வேண்டும்.அவர்களால்தான் சமூக மாற்றத்தை நிகழ்த்த முடியும் என்று திட்டவட்டமாக கூறுகிறார்.

அதே கருத்தை மிகவும் ஆணித்தரமாக நண்பர் பாலுக்கு எழுதுகிறார் கவிஞர் தமிழ்ஒளி.

சமூகத்தின் முன் உள்ள சவால்களை விளக்கி, சவால்களை எதிர் கொண்டு, சமூகத்தில் சமத்துவத்தை ஏற்படுத்த, பொதுவுடைமைச் சமூகமாக நமது சமூகத்தை மலர்ச்செய்ய நம்மைப் போன்ற இளைஞர்களால் மட்டுமே இயலும் என்று கூறும் கவிஞர் தமிழ்ஒளி, தான் புலவர் படிப்படிப்பில் நாட்டம் கொள்ளாததற்குக் காரணத்தை விளக்கி, அதை விட மிக முக்கியப் பணிகள் இருப்பதை உணர்ந்து கொண்டதாகக் கூறுகிறார்.

அத்துடன் நண்பர் பாலுவிற்கு அவர் வைக்கும் வேண்டுகோள் (அது வேண்டுகோளா அல்லது தோழமைக் கட்டளையா என்பது அந்த கடிதத்தை வாசிக்கும் வாசகரின் உணர்வு நிலையைப் பொறுத்தது) மிகவும் முக்கியமானது. படிப்பை முடித்ததும் வந்துவிடுங்கள் நம்மைப் போன்ற மற்ற இளைஞர்களையும் இணைத்துக் கொண்டு அரசியல், சமூக மற்றும் பொருளாதார விடுதலையைக்காக பாடுபடுவோம் என்று தெளிவுபடக் கூறுகிறார்.

மனித குல வளர்ச்சியை விளக்கி, போராட்டத்திற்கான தத்துவத்தை அறிமுகப் படுத்துகிறார். சோசலிச எதார்த்த வாதம் என்ற இலக்கியக் கோட்பாட்டின் முக்கியத்துவத்தை விளக்குகிறார்.

கடிதத்துடன் அவர் இணைத்து அனுப்பும் அகில இந்திய முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் பிரகடனம் இன்றைய சூழலுக்கு மிகவும் பொருத்தம். நாசிசம், பாசிசம், ஆளும் வர்க்கம் இவற்றின் செயல்பாட்டால் பேச்சு சுதந்திரம், எழுத்து சுதந்திரம் மறுக்கப்படுவது, எழுத்தாளர்கள் சிறையில் அடைக்கப்படுவது, ஆளும் வர்க்கத்தின் நலன் சார்ந்து நச்சு இலக்கியம், நச்சு சினிமா எப்படிப் பரப்பப்படுகிறது என்பதை அந்தப் பிரகடனம் விளக்குகிறது.

கௌரி லங்கேஷ், நரேந்திர தபோல்கர் உள்ளிட்ட கொல்லப்பட்டவர்கள், சிறையில் அடைக்கப்பட்டுள்ள எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள் ஆகிய இன்றைய நிகழ்வுகளைக் கவிஞர் தமிழ்ஒளி அறிமுகப் படுத்தும் பிரகடனத்தை வாசிக்கும் போது நாம் உணர முடியும்.

நாம் மிகுந்த பாதுகாப்புடன் இருப்பதாகப் பலரும் நினைத்துக் கொண்டு அடுத்த வேளை உணவு எவ்வாறு இருக்க வேண்டும் என்று திட்டமிட்டுக் கொண்டு இருக்கிறோம். பாசிச சித்தாந்தம்

மக்களின் ஆழ் மனதில் பதியத் தொடங்குகிறது என்ற அபாயத்தை நாம் உணர மறுக்கிறோம்.பாசிசக் கருத்து வேர் பிடித்தால் அடுத்த நொடி நாம் உயிருடன் வாழ இயலுமா? உயிருடன் வாழ்ந்தாலும் சுதந்திர மனிதராக வாழ முடியுமா?

கவிஞர் தமிழ்ஒளி நூற்றாண்டு இந்த எச்சரிக்கையை நமக்குத் தருகிறது. கவிஞர் தமிழ்ஒளி நூற்றாண்டை நாம் அனுசரிப்பது அவரின் படைப்புகளைப் பரவலாக்க, அவரின் புகழை நிலைக்கச் செய்ய அல்ல. கவிஞர் தமிழ்ஒளி முன்வைத்த தத்துவத்தை ஏற்றுச் சமூக, பொருளாதார விடுதலைக்காக நம்மை நாமே அர்பணித்துக் கொள்ளக் கவிஞர் தமிழ்ஒளியின் நூற்றாண்டு நமக்கு உதவ வேண்டும்.

"ஒரு சமதர்ம இந்தியாவும், ஒரு சமதர்மத் தமிழகமும் அமையும் காலம் தொலைதூரத்தில் இல்லை. அது அமையும்போது கவிஞர் தமிழ்ஒளி உலகத்தில் முன்னணிக் கவிஞருள் ஒருவராகக் கட்டாயம் இடம்பெறுவார்."

என்று கவிஞர் தமிழ்ஒளி குறித்துப் பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையார் கவிஞர் தமிழ்ஒளி கவிதைத் தொகுப்பிற்கு வழங்கிய அணிந்துரையில் குறிப்பிட்டுள்ளார்.

சமதர்ம இந்தியா, சமதர்மத் தமிழகம் அமைந்தால்தானே கவிஞர் தமிழ்ஒளி உலகத்தின் முன்னணிக் கவிஞருள் ஒருவராகக் கருதப்படுவார்?

சமதர்ம இந்தியா, சமதர்மத் தமிழகம் தானாக அமையுமா?

**"தனியுடமை கொடுமைகள் தீர தொண்டு செய்யடா நீ**
**தொண்டு செய்யடா**
**தானா எல்லாம் மாறும் என்பது பழைய பொய்யடா**
**எல்லாம் பழைய பொய்யடா"**

என்று மிகவும் எளிமையாக தனது பாடல் வரிகள் மூலம் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அறிவுறுத்துகிறார்.

**"புதுமை கண்டு வாழ இன்று**
**போர் செயுந் தமிழ்நாடு-மறப்**
**போர் செயுந் தமிழ்நாடு-மிக**
**முதுமை கொண்ட மடமை வீழ**
**மோதிடும் தமிழ்நாடு"**

என்ற கவிஞர் தமிழ்ஒளியின் பாடல் வரிகள் நமக்கு உத்வேகம் தரட்டும்.

சமதர்ம உலகம் படைக்கக் கவிஞர் தமிழ்ஒளி நூற்றாண்டில் சபதம் ஏற்போம்.!

# கவிஞர் தமிழ்ஒளியின் கருத்துலகம்

கண. குறிஞ்சி

ஒடுக்கப்பட்ட மக்களைத் தன் உயிரென நேசிக்கும் ஒரு கவிஞனின் பொருத்தப்பாடு என்பது சில வருடங்களைக் கடந்து மட்டுமல்ல, நூறாண்டு கழித்தும் பேசப்படும் என்பதற்குத் தமிழ்ஒளி ( 21/09/1924 ) மிகச் சிறந்த எடுத்துக் காட்டாக விளங்குகிறார். இந்திய விடுதலைக்கு முன்பு 23 ஆண்டுகளும், விடுதலைக்குப் பின்பு 18 ( 29/03/1965 ) ஆண்டுகளும் என 41 ஆண்டுகள் மட்டுமே வாழ்ந்த கவிஞர் தமிழ்ஒளியின் பதிவுகள், கடந்த கால வரலாற்றின் ஆவணங்களாகத் திகழ்கின்றன.

மிக எளிய குடும்பத்தில் பிறந்து, முழு நேரப் படைப்பாளியாகவும், சமூகச் செயல்பாட்டாளராகவும் வாழ்வது என்பது வலி மிகுந்த சித்திரவதையாகத்தான் இருக்க முடியும். திருமணமும் செய்து கொள்ளாமல் எவ்விதப் பந்தமும் இல்லாமல் இருந்தாலும், மக்களை நேசிப்பதை மட்டும் விட்டுவிடாத வைராக்கிய நெஞ்சம் அவருடையது. தன்னைப் "போராடி வாழும் புதுயுகக் கவிஞன்" என்றே பிரகடனப் படுத்திக் கொண்டார் அவர்.

ஒன்பது காப்பியங்கள், பல நூறு தனிக்கவிதைகள், இரண்டு குறு நாவல்கள், முப்பதிற்கும் மேற்பட்ட சிறுகதைகள், இருபது ஓரங்க நாடகங்கள், மூன்று மேடை நாடகங்கள், நூற்றுக்கும் மேற்பட்ட குட்டிக் கதைகள், மூன்று இலக்கிய ஆய்வு நூல்கள், விமர்சனக் கட்டுரைகள் என எழுதிக் குவித்த தமிழ் ஒளி, விஜயரங்கம் என்ற இயற்பெயரிலும் விஜயன், சி.வி.ர., தமிழ்ஒளி, பாணன், ஜெயங்கொண்டன் போன்ற பல புனைப்பெயர்களிலும் எழுதியுள்ளார்.

ஒன்றுபட்ட கம்யூனிஸ்டுக் கட்சியில் இணைந்து தீவிரமாகப் பணியாற்றினார். பிறகு இறுதி ஆண்டுகளில் தனித்தும் செயல் பட்டார்.

கரந்தைத் தமிழ்ப் புலவர் கல்லூரியில் புலவர் வகுப்பில் ஓராண்டு மட்டும் கல்வி பயின்ற தமிழ்ஒளி, பாவேந்தர் பாரதிதாசனின் கவிப்பரம்பரையைச் சார்ந்தவராக அறியப் படுகிறார். தமிழ் ஒளி குறித்துத் தமது "நினைவலைகள்" எனும் தன் வரலாற்றுக் குறிப்பில் பாவலர் ச. பாலசுந்தரம் அவர்கள் எழுதியுள்ள குறிப்புகளில் கவிஞர் இதைத் தெளிவாகக் குறிப்பிடுகிறார்." உங்களுக்கு இவ்வளவு தமிழ் உணர்வும், கவிதைத் திறனும் எப்படி வந்தன?' என நான் கேட்டேன்.

அவர் உடனே 'பாரதிதாசனால்தான். நான் அவரிடம் அவர் எழுதும் கவிதை கட்டுரைகளைப் படியெடுக்கும் உதவியாளராக இருந்தேன். அவற்றைப் படிக்கும் போது அதைப்போல கற்பனை செய்து எழுதிப் பார்ப்பேன். அதே மெட்டில், அதே பாவில் எழுதிப் பார்ப்பேன். அவர் என்பால் ஒரு மகனைப் போல அன்பு செலுத்தினார்' எனக் குறிப்பிடுகிறார். (1) பாவேந்தர் பாரதிதாசன் அவர்களது கவிதைத் தாக்கம் தமிழ்ஒளியின் மீது இறுதி வரை தொடர்ந்தது என்பதை அவரது கவிதைகளைப் படிக்கும் எவரும் எளிதில் உணர்ந்து கொள்ள முடியும்.

" உயிரில் உணர்வில் கலந்த கவிஞன் என்/ உயிரில் உயிர் கொண்டு உலவுகின்றான் வெறும் / துயரில் நான் மூழ்கிக் கிடக்கவில்லை, அவன்/ தொண்டு சிறந்திடத் தொண்டு செய்வேன்" எனப் பாவேந்தர் பாரதிதாசன் மறைந்த பொழுது உறுதியேற்றவர்.

தமிழ் ஒளி இசைப்பாட்டும், எண்சீர் விருத்தமும் வெகு இயல்பாக எழுதக் கூடியவராகப் போற்றப் படுகிறார். கவிதையின் மீதான அவரது ஆளுமை வியக்கத்தக்கது. கவிதைகள் மட்டுமல்ல, இலக்கிய வகையினத்தில் அவர் தொடாத கூறுகளே இல்லை எனக் கருதும் வண்ணம் தனது படைப்புலகை அவர் விரிவுபடுத்தி உள்ளார்.

ஆனால், இப்படிப்பட்ட அரிய கவிஞருக்கு உரிய அங்கீகாரம் அவர் வாழ்ந்த காலத்திலும், அதற்குப் பிறகும் வழங்கப் படாதது பெரும் சோகம். அவ்வகையில் **தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கம்** அவரைத் தனது இலக்கிய ஆசான்களில் ஒருவராகப் பிரகடனப் படுத்தியதும், அவரது நூற்றாண்டு விழாவை மிகச்சிறப்பாகக் கொண்டாடி வருவதும் அனைவரும் போற்றத்தக்கதோர் அரும் பணியாகும்.

## பொதுவுடைமைக் காதல்

கவிஞர் தமிழ் ஒளி என்றாலே, பொதுவுடைமைக் கோட்பாட்டில் அவருக்கு இருந்த காதல்தான் முதலில் நம் நினைவுக்கு வரும். இது பற்றித் தமிழ்ஒளியே பாவலர் ச.பாலசுந்தரம் அவர்களுக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிடுகிறார்." நமது வாழ்வின் நோக்கம் நமது சமுதாயமும் மக்களும் முன்னேற்றம் அடையும் முறையில் இயன்ற தொண்டு செய்வதுதான். மக்கள் அறியாமை, மூடநம்பிக்கை, வறுமை, அடிமையில் மோகம் முதலியவற்றினின்றும் நீங்கி நல்லுணர்வும் வாழ்வும் பெற ஆவன புரிய வேண்டும் என்பதுதான். அதனைத் தன்னலமின்றிச் செய்ய வழிகாட்டும் இயக்கம் பொதுவுடமை இயக்கம்தான். நான் இப்பொழுது ஒரு கம்யூனிஸ்ட் தொண்டன் என்பதில் பெருமிதம் அடைகிறேன்" (2) எனும் அவரது கூற்று பொதுவுடைமை அறத்தின் மீதான அவரது ஆறாப் பற்றினை

வெளிப்படுத்தும் சத்திய வாக்காகும்.

தொழிற்சங்கங்களோடும், தொழிலாளர்களின் போராட்டங்களோடும் இரண்டறக் கலந்து நின்றார். சென்னை துறைமுகத் தொழிலாளர் சங்கத்தோடு நேரடியாகத் தொடர்பு கொண்டிருந்தார். பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நடந்த மாணவர் இயக்கத்தில் பங்கேற்றார். தவிரவும் தனது தொடக்க காலக் கவிதைகளிலிருந்து இறுதிக் காலக் கவிதைகள் வரை, பொதுவுடமைப் பாசம் என்பது நகமும் சதையுமாக அவரது படைப்புகளில் ஊடாடிப் பயணிக்கிறது.




மே நாள் குறித்துத் தமிழ் இலக்கியத்திலேயே முதன்முதலாகக் கவிதை எழுதியவர் தமிழ்ஒளி என்பது குறிப்பிடத் தக்கது. 144 வரிகளாக விரியும் இக் கவிதை, மே தினத்தின் வரலாறு, மேன்மை, போலிகளின் மீதான தாக்குதல், கவிஞரின் கனவு ஆகியனவற்றை உள்ளடக்கி "மேதினமே வருக" எனும் உணர்வுப் படைப்பாகப் பதிவாகி உள்ளது.

தொழிலாளி முதலாளி என இரு வர்க்கங்களுக்கிடையே நடுவில் ஊசலாட்டப் பாதை எதுவும் கிடையாது என்ற கருத்தை விளக்கி உலகக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் முக்கியத் தலைவராக விளங்கிய தோழர் ஓட்டோ குசினன் ( Otto Kusinen )எழுதிய "நீ எந்த பக்கம்?" எனும் கேள்வி உலகம் முழுவதும் பரவியது. அதை எதிரொலிக்கும் வண்ணம் தமிழ்ஒளி ஓர் அருமையான கவிதையைப் படைத்தார்.

**"ஏ, செந்தமிழா! என்னுடைச் சோதரா!**
**நீ, யார் பக்கம்? நிகழ்த்திட வேண்டும்!**
**கொள்ளையடித்திடும் கொடியவர் பக்கமா**
**துன்பமுற்றிடும் தொழிலாளர் பக்கமா?"**

என 'நீ யார் பக்கம்?' எனும் கவிதையில் (1948) நேரடியாகக் கேட்பதை அறிகிறோம். (3) இதைப் போன்ற எண்ணற்ற கவிதைகளில் அவரது கம்யூனிசக் காதல் பொங்கி வழிவதை எளிதில் காணமுடியும். மேலும் "நவம்பர் புரட்சிக்கு நல்வாழ்த்துகள்!" எனும் கவிதையில்,

**" அன்று தொட்டிருள்**
**வீழ்ந்து விட்டதும்,**
**அகில நங்கைதன்**
**துன்பம் கெட்டதும்,**

**தொன்றுதொட்டுறை**
**நோய்கள் பட்டதும்**
**தோன்று செங்கொடி**
**எங்கும் நட்டதும்,**
**இன்று திங்களைச்**
**சென்று தொட்டதும்**
**இசை பெறும் இலெனின்**
**கண்எனச் சுடர்**
**நின்றெறிந் திடும்**
. **நீள் விளக்கமாம்**
**நிகர்அரும் பொது**
**வுடமை ஆற்றலால்!**
( வேறு )
**மாமுனிவன் மார்க்சுடனே**
**ஏங்கெல்ஸ் என்ற**
**மாண்புமிகு அறிஞனுமே**
**கனவு கண்டார்! " எனவும், ' வல்லமை கொண்டுதர வந்தது பொதுவுடைமை"**

என்றும் தமிழ் ஒளி கொண்டாடுகிறார். (4)

மேலும் இப்பொதுவுடைமைச் சமுதாயத்தில் உழவர்களும் தொழிலாளர்களும் "விழியெதிரே நடமாடுந் தெய்வங்கள் ஆவார்" எனச் சுட்டிக் காட்டுகிறார். (5)

1946 முதல் 1954 வரை ஒன்றுபட்ட கம்யூனிஸ்டுக் கட்சியில் அவர் செயல்பட்டதாகப் பேராசிரியர் வீ.அரசு அவர்கள் சுட்டிக்காட்டுகிறார். அதற்குப் பிறகான பத்து ஆண்டுகளிலும் பொதுவுடைமைக் கோட்பாட்டிலிருந்து அவர் சற்றும் வழி பிறழவில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

கவிஞரது பொதுவுடைமை நேயம், தமிழகப் புவிப்பரப்போடோ, இந்தியத் துணைக்கண்ட எல்லைக்குள்ளோ குறுகிவிடவில்லை. அது உலகளாவி விரிகிறது. அதுதான் தமிழ் ஒளியின் தனித்தன்மை. அதன் வெளிப்பாடுதான் "திசை அதிர நடக்கிறது சீனத்துச் செஞ் சேனை" / "சியாங்குக்குப் பிரகடனம்" / "நவம்பர் புரட்சிக்கு நல்வாழ்த்து" என்பதான கவிதைகளில் அவரது பேரன்பு விரிகிறது. மோசலிச நாடுகளுக்கு மட்டுமல்ல, "பெரு" நாட்டில் நேர்ந்த அமெரிக்க முதலாளித்துவக் கொடுமைகளைக் கண்டித்தும் "விடுதலை உறவு" எனும் கவிதையைப் படைத்தார். (6) உலகம்

முழுவதும் நனைக்கும் ஈர நதியாக தமிழ் ஒளியின் பேரன்பு படர்ந்து பாய்கிறது.

**"யுகங்கள் பிரிவினி இல்லை காண்-தர்மம்**
**ஒன்று புதுயுகம் ஆகுமே**
**நகமும் சதையும் போல் மானிடர்-எந்த**
**'நாட்டினர்,தீவினர் ஆயினும்**
**சகத்தினில் ஒற்றைக் குடும்பமாய்-உயர்**
**சாந்தம் நிலவிட வாழ்ந்திடும்**
**புகழுரு தர்மம் வருகுது"** (7) எனத் தனது சர்வதேசிய உணர்வைப் பறைசாற்றுகிறார்.

## ஒடுக்கப்பட்டவர்களின் தோழன்

இந்தியத் துணைக்கண்டத்தில் இன்று சாதியம் மிகப்பெரும் சவாலாக முன்நிற்கிறது.

இன்று நேற்றல்ல, பல்லாயிரம் ஆண்டுகளாக இந்தச் சிக்கல் சமூக முன்னேற்றத்தின் தடைக்கல்லாக விளங்குகிறது. சாதியத்தின் கொடூர நீட்சியாகத் தீண்டாமை தலை விரித்தாடுகிறது. கவிஞர் தமிழ்ஒளி ஒரு தலித்தாக இருந்ததால், இதன் நச்சுப்பற்களால் இவரும் பாதிக்கப் பட்டார். பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் பரிந்துரைக் கடிதத்தின் அடிப்படையில் கரந்தை தமிழ்க் கல்லூரியில் சேர்ந்தாலும், தாழ்த்தப்பட்ட சாதிக்காரர் என்ற காரணத்தால் சக மேட்டுக்குடி மாணவர்களால் அவர் இழிவு படுத்தப் பட்டார் என்பதை அவரது வரலாறு அறிவிக்கிறது. அதனால், சாதியத்தின் கொடுமையை இளமையிலேயே உணர்ந்ததால், அதை எதிர்த்து இறுதிவரை சமரசமில்லாமல் சமர் புரிந்தார் அவர்.

அது மட்டுமல்லாமல், அரிஜனத் தொண்டர் என்ற பெயரில் ஆதிதிராவிடர்களை ஏமாற்றிப் பிழைக்கும் உலுத்தர்களைக் கடுமையாகக கண்டிக்கின்றார். அதே வேளை, ஒடுக்கப்பட்ட தலித்துகளை யாரும் இலக்கியத்தில் பதிவு செய்யவில்லை என வருந்துகிறார்."மண்ணில் மடிகின்ற மாசற்ற தியாகத்தை / எண்ண, எழுத எவருள்ளார் இந்நாட்டில்?" என்பது அவரது பதிவு.. (8) ஒடுக்கப்பட்ட தலித்துகளை யாருமே இலக்கியத்தில் பதிவு செய்யவில்லை எனும் அவரது வேதனை கருதத்தக்கது.

கழைக் கூத்தாடி, நெசவாளி, தூய்மைத் தொழில் புரிவோர் விவசாயக் கூலிகள், துணி வெளுப்போர் என உழைப்போர் எங்கெல்லாம் ஒடுக்கப்படுகிறார்களோ அங்கெல்லாம் அவர்களுக்குக் குரல் கொடுக்கிறார். சென்னைத் துறைமுகத் தொழிலாளர் சங்கத்தோடு நேரடியாகவே தொடர்பில் இருந்தார்

"இலக்கியம், கோபுரத்திலிருந்து குப்பை மேட்டுக்கு வர வேண்டும்"

என்றான் அமெரிக்கக் கவிஞன் வால்ட் விட்மன். அது போல் தலித்துகளைத் தனது காப்பிய நாயகர்களாக வடித்து, ஒடுக்கப்பட்ட அம்மக்களுக்கு இலக்கியக் கவுரவத்தைக் கொடுத்தவர் தமிழ்ஒளி. " நிலை பெற்ற சிலை" / "வீராயி" / "மே தின ரோஜா" ஆகிய காவியங்கள் அதற்கு எடுத்துக் காட்டாகத் திகழ்கின்றன.

"இந்திய சமுதாயத்தின் வளர்ச்சிக்கு இரு பெரும் எதிரிகள் சாதியம் (பார்ப்பனியம்) மற்றும் முதலாளித்துவம்" என அம்பேத்கர் அறிவித்த உண்மையைக் கவிஞர் தமிழ் ஒளியும் தனது அனுபவத்தால் கண்டறிந்திருந்தார். "கோசல குமரி" காவியத்தில் உண்மைக் காதலுக்கு எதிராக நிற்கும் கொடியவனாகப் 'பேர்வழி' எனும் பார்ப்பனனைக் கவிஞர் தமிழ் ஒளி படைத்துள்ளதை இந்த சமயத்தில் எண்ணிப் பார்த்துக் கொள்ளலாம்.

## தமிழியச் சிந்தனைகள்

கவிஞர் தமிழ்ஒளி மாணவப் பருவத்தில் திராவிட மாணவர் கழகத்தில் ஈடுபாடு கொண்டவராக இருந்தார். மேலும் பாவேந்தர் பாரதிதாசனைத் தனது வழிகாட்டியாகக் கொண்டிருந்தார். எனவே சாதி ஒழிப்பு, இந்தி எதிர்ப்பு, தேசிய இனங்களின் சுய நிர்ணய உரிமை ஆகிய தளங்களில் தனது ஆதரவினை அழுத்தமாகப் பதிவு செய்துள்ளார்.

சமூகத்தின் அடிக்கட்டுமானமாக விளங்கும் பொருளாதாரத்தை மாற்றி அமைப்பது போலவே, மேல்கட்டுமானமாக இருக்கும் சாதி, மதம் போன்றவற்றையும் மாற்றி அமைக்க வேண்டும் எனும் போக்கு தமிழகத்தில் நீண்ட காலமாக நிலவி வந்துள்ளது. அதன் முன்னோடியாக விளங்கியவர் சிங்கார வேலர் அவர்கள். ( 1860-1946 ) இந்தியாவிலேயே மே நாளை முதன்முதலாகக் கொண்டாடிய சிங்காரவேலர், பொதுவுடைமைக் கோட்பாட்டில் ஆழ்ந்த பிடிப்பு மிக்கவராக விளங்கினார். இருப்பினும், சோசலிச சமுதாயம் அமைப்பதில் சமூகநீதியின் முக்கியத்துவத்தை உணர்ந்து, தந்தை பெரியார் அவர்களோடு இணைந்து "ஈரோட்டுப் பாதை" எனும் திட்டத்தை உருவாக்கிச் செயல் பட்டார். வர்க்கமும் சாதியும் முயங்கிக் கிடக்கும் இச்சமுதாயத்தில் பொருளாதாரப் புரட்சியைப் போலவே, கலாச்சாரப் புரட்சியும் முக்கியம் என்பதைக் கவிஞர் தமிழ் ஒளியும் உணர்ந்திருந்தார். எனவேதான் இந்தித் திணிப்பு என்பது ஆதிக்கத்தின் ஒரு குறியீடு என்ற புரிதல் அவருக்கு இருந்தது. ஆகவே

**" சிந்திய ரத்தம் உணரவில்லை-எங்கள்**
**செந்தமிழ் வாழ்வு மலரவில்லை!**
**இந்தியை இங்கே அழைக்கின்றீர்கள்!-கூர்**

**ஈட்டியை நெஞ்சில் நுழைக்கின்றீர்கள்!**

...................................................................................

**நுளைபட்ட இந்திக்குப் பூமாலையா? நாங்கள்**

**நோற்ற தவத்திற்குச் சாவோலையா?" என ஆவேசத்தோடு** கேட்கிறார். (9)

**"இந்தியை எதிர்த்து நில்!**

**எவர்வரின் எதிர்த்து நில்!**

**நந்திபோல் மறிக்கும் மூட**

**நாய்களை எதிர்த்து நில்!"** எனப் போர்ப்பரணி பாடுகிறார்.(10) இந்தி ஆதிக்க எதிர்ப்பினைத் தொடக்க காலத்தில் மட்டுமல்ல, தனது வாழ்வின் இறுதிவரை அவர் எதிர்த்து நின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியின் ஆதிக்கத்தை மட்டுமல்ல, சமத்கிருதத்தின் மேலாதிக்கத்தையும் கடுமையாகச் சாடுகிறார் தமிழ்ஒளி.

"தமிழ் மரபு என்பதும், தமிழ்த் தேசிய இன உணர்ச்சி என்பதும், சமத்கிருத எதிர்ப்பைக் கொண்டவையே. இது வரலாற்றால் உருவாக்கப்பட்ட நாட்டுப் பண்பு. ( National Character )" என்பது கவிஞர் தமிழ் ஒளியின் புரிதல். (11)

தேசிய இனங்களின் உரிமை குறித்த அவரது கருத்துக்கள் புரட்சிகரமானவை.

**" தமிழருக்கு அரசு திட்டம்**
**தமிழர்செய்து கொள்ளுவோம்!**
**தகுதியின்றிச் செய்திருக்கும்**
**திட்டம்வீழச் செய்குவோம்!**
**எமதினத்தின் அரசுவேண்டும்**
**இல்லையென்று சொல்லிட**
**எவனுமிங்கு இல்லை; இந்த**
**நாடு எங்கள் நாடடா!**
**பிரிந்து வாழும் உரிமை எங்கள்**
**பிறவிதந்த உரிமையாம்!**
**பிறர்மறுக்க நியாய மில்லை**
**முரசு தன்னை கொட்டுவோம்!**
**இருந்திருந்து பொறுமையாக**
**சிறுமை வாழ்வை எய்தினோம்!**
**இரையைத் தேடும் சிங்கமாக**
**எழுந்திருந்து வருகுவீர்! "**(12)

மேலும் சிலப்பதிகாரம் குறித்தும், திருக்குறள் குறித்தும், சமசுகிருதம் குறித்தும் கவிஞர் தமிழ்ஒளியின் கருத்துக்கள் தமிழ் விழுமியங்களை உயர்த்திப் பிடிப்பதை எளிதில் காணமுடியும். தமிழுணர்வு என்பதை அவர் ஓர் அரசியல் வெளிப்பாடாகத்தாக் வரையறுக்கிறார்.

தவிரவும், மொழியுணர்வின் முக்கியத்துவத்தை அவர் இறுதிவரை வலியுறுத்தி வந்தார்." நிலப்பிரபுத்துவ சமூகம், அறியாமையை விதைத்து விட்டதன் காரணமாய், தாய்மொழிப் பயிற்சி குன்றியிருத்தல் இயற்கையே. அம்மொழி உணர்ச்சியைத் தூண்டுவதும் ஜனநாயகக் கடமையாகும். ................................ ................ இம்மொழி உணர்ச்சிக்கு எதிராக நிலப் பிரபுத்துவம் தொடுத்த தாக்குதலே ஆச்சாரியாரின் குலக்கல்வித் திட்டம்.

தாய் மொழியின் பெருமை முற்றும் மறைந்தொழிந்த இருண்ட காலமே நிலப்பரபுத்துவக் காலகட்டம்.

மீண்டும் தாய்மொழிப் பெருமை, மக்களிடையில் வீறிட்டெழுதல் இயற்கையே. இவ்வுணர்ச்சியை மேலும் மேலும் வளர்த்து உயர்ந்த கட்டத்திற்குக் கொண்டு செல்லும்போது, அறிவுத் துறையில் உன்னதப் பண்புகள் மலரும்.

மொழி வளர்ச்சியென்பது மரபின் அடியாகப் பிறக்கும் ஒரு செயல். எனவே மரபைப் புரிந்து கொள்வதும், அதைக் காப்பதும் நம் கடமைகளாகும். இவ்வாறு மரபைக் காக்கும் பணியைத் தற்காலப் "புதுமை" எழுத்தாளர்கள் சிலர், எள்ளி நகையாடுவதை நான் காண்கிறேன். உண்மையிலேயே இந்தப் பழமையாளர்கள், நிலப்பிரப்புத்துவப் பேய்க்கு உடுக்கை அடிப்பவர்கள் என்பதை மறந்து விடக்கூடாது. இவர்கள் பிரதிபலிக்கும் போக்கு நாட்டிற்கு எதிரான போக்கு ( Anti-national ) என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்" (13)

அதே போல், மூட நம்பிக்கையை எதிர்த்தும், பெண்ணடிமையை எதிர்த்தும், விதவை மணத்தை ஆதரித்தும் அந்த நாள்களிலேயே அவர் எழுதிய கவிதைகள் சமகாலப் பொருத்தப்பாடு மிக்கவை. இப்படிப் பொதுவுடைமை, சாதி ஒழிப்பு சமூக நீதி என இன்று பேசுபொருளாக இருக்கக் கூடிய கருப்பு / சிவப்பு / நீலம் ஆகியவற்றின் கூட்டிணைவைத் தனது படைப்புகளில் முன் நிறுத்திய மாபெரும் கவிஞர் தமிழ்ஒளி அவர்கள். இதனூடாகத் தமிழியச் சிந்தனைகளையும் அவர் இணைத்தது குறிப்பிடத்தக்க பரிமாணமாகும்.

**இலக்கிய நோக்கு**

தமிழ்ஒளி கட்டுரைகளில் தனது எழுத்தின் நோக்கத்தை அவர்

தெளிவு படுத்துகிறார். இலக்கியத்தில் பிரச்சாரமே இல்லை என்பது பம்மாத்து என்பதைப் பல்வேறு எடுத்துக்காட்டுகள் மூலம் அவர் நிறுவுகிறார்.

" நம் கண்ணெதிரே, நம் உடன் பிறந்தான் மாடாக உழைத்து ஓடாகத் தேய்ந்து போகிறான். அவன் குடும்பம் வறுமைப் படுகுழியில் வீழ்ந்து கதறுகிறது. இதைக் கண்டு மனமிரங்காமல் மரத்துப் போன நெஞ்சுடன் உலாவும் மானிடப் பிண்டங்களின் உடலில் 'சுரீர் சுரீர்' என்று தைக்கும்படி எழுதுவதுதான் உண்மை எழுத்தாளனின் கடமையும் நோக்கமும் ஆகும்" என்று தனது திசைவழியை அவர் பதிவு செய்கிறார். (14)

அதே சமயத்தில், தான் ஏற்காத கருத்துக்களை யார் குறிப்பிட்டாலும் அதை அவர் கடுமையாக எதிர்க்கத் தயங்காதவராக இருந்தார். அப்படித்தான் சிதம்பர ரகுநாதன் மற்றும் புதுமைப்பித்தன் ஆகியோரது எழுத்து மற்றும் கவிதைகளைத் தமிழ்ஒளி விமர்சனத்திற்கு உட்படுத்தினார். "இலக்கியத்தில் எல்லோரும் ஒன்றையே விரும்ப முடியாது, நவரசங்களில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொன்று ஒத்துப் போகும்" எனவும், " மெய்ப்பிக்கப்படுபவை எல்லாம் உண்மையாகி விடாது" எனவும், ".நூலாசிரியர்களைப் பார்த்து 'அதை எழுது, இதை எழுது' என்று கட்டளை இடக்கூடாது" எனவும் ரகுநாதன் கூறுவதை மறுத்துத் தமிழ்ஒளி விரிவாக விவாதிக்கிறார். (15)

அடுத்துச் சிதம்பர ரகுநாதன் அவர்கள் தொகுத்த புதுமைப் பித்தன் கவிதைகள் குறித்தும் தனது மறுப்பினை விரிவாகப் பதிவு செய்கிறார். புதுமைப்பித்தன் எழுதியுள்ள 19 'கவிதை'களைத் தமிழ்ஒளி கவிதை என ஏற்கவில்லை. அவை வெறும் "துணுக்குகள்" எனக் குறிப்பிடுகிறார்.

**" வட்ட முலை மின்னார்**

**வசமிழந்த காமத்தால் "** எனும் புதுமைப் பித்தனின் கவிதை எப்படித் தமிழ் இலக்கண மரபுப்படி அமையவில்லை என்பதைத் தமிழ் ஒளி விரிவாக விளக்குகிறார். யாப்பு, தாளம், சந்தம், லயம், தளை, சீர் போன்றவற்றின் பின்னணியில் புதுமைப் பித்தனது கவிதை,. தமிழ் இலக்கணப்படி பொருந்தாது எனத் தெளிவு படுத்துகிறார்.

"சிறந்த உரைநடை என்பது, உணர்ச்சிகளை எட்டிப் பிடித்துத் தொடரும் தாளமற்ற பாட்டாக இருக்கிறது. அந்த உணர்ச்சிகளுக்குத் தாளலயமும், தாளத்திற்கு அளவும் வழங்குகிறது பாடல். தாளம் கெட்டால் பாவ லயமும் கெடுகிறது. பாவ லயத்திற்குச் "சந்தங்களின் மாத்திரைகளே" அதாவது சீர்களின் அளவே பிரதானம்" எனத் தனது தரப்பைக் கவிஞர் தமிழ் ஒளி பதிவு செய்கிறார். (16)

தமிழில் புதுக்கவிதை அல்லது வசனகவிதை எனும் வடிவம் புதிதாக வந்தபொழுது, முற்போக்கு முகாமிலுள்ளவர்களே தொடக்கத்தில் அதை ஏற்றுக் கொள்ளவில்லை என்பது மட்டுமல்ல, அதைக் கடுமையாக எதிர்த்தனர். இதற்குத் தமிழ் ஒளி அவர்களே சிறந்த எடுத்துக் காட்டு. தமிழ்நாட்டில் மட்டுமல்ல அமெரிக்க ஐரோப்பிய நாடுகளிலும் வசன கவிதை ( Prose poetry ) எனும் வடிவத்திற்குத் தொடக்கத்தில் எதிர்ப்பு இருந்ததைக் காண்கிறோம். மரபார்ந்த கவிஞர்கள் மட்டுமல்ல, மிகவும் நவீனக் கவிஞர்களாக அறியப் படுகிற டி.எஸ். எலியட் போன்றவர்களே இதற்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

19 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில்தான் வசன கவிதை என்பது புதுமுயற்சியாக ஜெர்மனியிலும், பிரான்சிலும் முன்னெடுக்கப் பட்டது. குறிப்பாக 1950-60 ஆம் ஆண்டுகளில் அமெரிக்கக் கவிஞர்களது முயற்சியால், இப்புதுக்கவிதை வடிவம் ஆங்கிலத்தில் மிகப்பெரும் செல்வாக்குப் பெற்றது. தமிழ்நாட்டில் இதே காலகட்டத்தில்தான் கவிஞர் தமிழ்ஒளி இக்கவிதை வடிவத்தைப் புதுமைப்பித்தனை முன்நிறுத்தி மிகக் கடுமையாக எதிர்க்கிறார் என்பதை ஒப்பிட்டுப் பார்க்கலாம்.




1980 ஆம் ஆண்டுகளில் புதுக்கவிதை இங்கிலாந்தில் மிகப் பெரும் வரவேற்பைப் பெற்றது. தமிழ்நாட்டிலும் அதே காலகட்டத்தில் தோன்றிய வானம்பாடி கவிதை இயக்கம் ( 1971-1982 ) இலக்கிய உலகில் அழுத்தமான முத்திரைகளைப் பதித்தது. இடதுசாரிக் கவிஞர்களாக அறியப்பட்ட சிற்பி, புவியரசு, தமிழன்பன் போன்றோர் வானம்பாடி இயக்கத்தின் மூலம் புதுக்கவிதை வடிவத்தைப் புதிய உச்சத்திற்கு எடுத்துச் சென்றனர் என்பது சமகால வரலாறாகும். இவர்கள் அனைவரும் தமிழ்த் துறையில் பணியாற்றியவர்கள் என்பதும் குறிப்பிடத் தக்கது.

வசன கவிதை ( க.நா.சு. அதைப் "புதுக்கவிதை" என அழைத்தார்) என்பது கவிதையை சனநாயகப் படுத்தியது. எளிய மக்களும் தங்களது கருத்துக்களை வெளிப்படுத்தத்தக்க வாயிலாக அது அமைந்தது. கடும் இலக்கண விதிகளை அது கோருவதில்லை.

**"காரிகை கற்றுக் கவி பாடுவதினும்**

**பேரிகை கொட்டிப் பிழைப்பது நன்று"** எனப் புலவர்களே பாடத்தக்க அளவில் இலக்கண விதிகள் ஒரு காலத்தில்

கடுமையாக இருந்ததை இப்பாடல் உணர்த்துகிறது. ( காரிகை என்பது "யாப்பெருங்கலக் காரிகை" எனும் நூலைக் குறிப்பிடும். கட்டளைக் கலித்துறை எனும் யாப்பில் இயற்றப்பட்ட இந்நூல். கி.பி. 10ஆம் நூற்றாண்டில் அமிர்தசாகரர் என்பவரால் இயற்றப் பட்டதாகும்.) ஆனால் காலப் போக்கில் தமிழ்க்கவிதை வடிவில் தளர்வுகள் ஏற்பட்டதைக் காண்கிறோம். 20ஆம் நூற்றாண்டில் புதுக்கவிதையே கவிதை என்றாகி விட்டது. எனவேதான் புதுமைப் பித்தனிலிருந்து சமகாலக் கவிஞர்கள் வரை இலக்கியத்தில் ஏற்பிசைவு பெற்றுள்ளனர். **"மாறுவது மரபு. இல்லையேல் மாற்றுவது மரபு"** இதுவே வரலாற்று விதி என்பதை அறிவுத் துறை அறியும்.

புதுக்கவிதை வரவேற்புப் பெற்றுள்ள அதே சமயத்தில், மரபுக்கவிதைகளின் முக்கியத்துவமும் சிறப்பும் இன்றும் நீடிக்கிறது என்பது குறிப்பிடத் தக்கது. அதற்கான இடத்தை யாரும் குறைத்து மதிப்பிட்டுவிட முடியாது. அவ்வகையில் தமிழ் ஒளியின் புகழ் என்றும் நிலைத்து நிற்கும் என்பது உறுதி.

இலக்கியத்தில் என்னென்ன வகைகள் உள்ளனவோ, அத்தனை வகைகளிலும் தனது ஆளுமையை நிலை நிறுத்தியவர் தமிழ்ஒளி.

காவியங்கள், குறுநாவல்கள், சிறுகதைகள், ஓரங்க நாடகங்கள், மேடை நாடகங்கள், குட்டிக் கதைகள், இலக்கிய ஆய்வு நூல்கள், விமர்சன நூல்கள், குழந்தைப் பாடல்கள், கவியரங்கக் கவிதைகள் எனப் பல்வகைப் படைப்புகளை எழுதிக் குவித்தவர் கவிஞர் தமிழ்ஒளி.

"நம் குழந்தைகளிடம் ஒற்றுமையும் போராட்டக் குணமும் வலுப்படுவதற்குச் சிறந்த தூண்டுகோல்களாகத் தமிழ்ஒளியின் கதைகளைப் பரிந்துரைக்கலாம்................. முல்லா கதைகளின் அறிவுக் கூர்மையையும், பைபிள் கதைகளின் நீதி போதனையையும் குழந்தைகளுக்கானத் தமிழ்ஒளியின் குட்டிக் கதைகளில் காண்கிறோம் " (17) எனக் கவியரசு ஈரோடு தமிழன்பன் குறிப்பிடுகிறார்.

தனது இலக்கியக் கண்ணோட்டம் குறித்து தமிழ்ஒளி விரிவாகப் பதிவுசெய்துள்ளார்.

"எதிர்காலத்தைக் கணிக்கும் அறிவைத் துணைகொண்டு, மாற்றத்தை விரைவுபடுத்தும் செயல்களையும், அவற்றோடு தொடர்பு கொண்ட குணச்சித்திரங்களையும் உருவாக்குவதன் மூலம் நிகழ்காலத்தில் பெறும் தெளிவு / எதிர்காலத்தில் பெறும் நம்பிக்கை ஆகியன நிழலிடும் சிறந்த இலக்கியக் கோபுரங்களை எழுப்பமுடியும். இவ்வாறு காணும் நோக்கே முற்போக்கு நோக்கமாம்" எனவும்,

" இறந்தகாலத் தொடர்ச்சி என்பது நிலப்பிரபுத்துவம். எதிர்காலம் என்பது சமூகவுடைமை. எதிர்காலத் தொடக்கம் என்பது ஜனநாயகம். ஜனநாயகம் என்கின்ற பாதையூடு சென்றால், சோசலிசம் என்ற பொன்யுகத்தை நாம் அடைவோம்" எனவும்,

" நிலப்பிரபுத்துவ அமைப்பு முறையைக் குத்திக்

கிழித்தெறியும் நையாண்டிப் படைப்புகள், இன்றைய இலக்கியத்தில் பங்கு பெறுதல் வேண்டும்.

விந்தன் அவர்கள் எழுதிய "பசி கோவிந்தம்" அத்தகைய நையாண்டி இலக்கியமாகும். அது ராஜாஜி கிழவரின் 'பஜகோவிந்த"த்தின் மேல் வீழ்ந்த அடி.

திரு விந்தன் அவர்களைப் போன்றே எழுத்தாற்றல் படைத்தோர், நம்மிடையே இல்லாமல் இல்லை. எனினும் அவர்கள் சமூக விஞ் ஞானக் கண்ணோட்டம் அற்ற நிலையில் தவிக்கின்றனர்" எனவும் தனது இலக்கியச் செல்நெறியைச் சுட்டிக் காட்டுகிறார் தமிழ் ஒளி.

ஆனால் அதேசமயம், "இன்றைய இலக்கியம் சமூகக் கொள்கை யினின்றும் விலகி வியாபாரம் என்கின்ற மூக்கணாங்கயிற்றை மாட்டிக்கொண்டு, அக்கயிறு சுண்டுகிற பக்கமெல்லாம் துள்ளி ஓடுவதைக் காண்கிறோம்.

இவ்வாறு சந்தையை நோக்கி ஓடும் குருட்டு இலக்கியங்களிடையே டால்ஸ்டாய்கள் தோன்றுவதோ, விக்டர் ஹ்யூயோக்கள் எழுதுவதோ, செகாவ்கள் பிறப்பதோ இல்லை" என அறுபதுகளில் அவர் கொடுத்த எச்சரிக்கை, இந்தக் கார்ப்பரேட் கால இலக்கியங்களுக்கும் ஒரு எச்சரிக்கையாக உள்ளது. (18)

## காலம் அறிந்து கூவிய விடியல் சேவல்

பொது வாழ்வையே தன் திசைவழியாகத் தேர்ந்தெடுத்தவர் கவிஞர் தமிழ்ஒளி. திருமணம் செய்து கொள்ளாத அவருக்குத் தனிவாழ்வு எனப் பெரிதாக ஏதுமில்லை.

எனவே சமகாலப் பொது நிகழ்வுகளில் அவரது குறுக்கீடுகள் இடையின்றித் தொடர்ந்தன.தமிழ் திரை உலகில் புகழுடன் விளங்கிய கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன், எம். கே. தியாகராஜ பாகவதர் இருவரும் ஒரு வழக்கு காரணமாக சிறையில் அடைக்கப்பட்டனர். அவர்களை விடுதலை செய்யக்கோரித் தமிழ் மக்கள் இயக்கம் நடத்தினர் அதனை ஆதரித்துக் கவிஞர் தமிழ் ஒளியும் கவிதை படைத்தார். அதே போல், காமன்வெல்த் அமைப்பில் சுதந்திர இந்தியா கட்டுப்பட்டு இருந்ததால், போராளி மலேயா கணபதி தூக்கில் இடப்படுவதைத் தடுத்து நிறுத்த முடியாத பெருந் துயரை " அணைந்த தீபம் " என்னும் இலக்கியப் படைப்பாக வெளிப்படுத்தினார்.

இமயமலை உச்சியான எவரெஸ்ட் சிகரத்தில் ஏறி டென்சிங் வெற்றிக் கொடி நாட்டியதை "மண்ணுலகில் மானிடரின் மகிமைக்கோர் சாட்சி" எனக் கவிதை எழுதி வரவேற்றார்.

வேலை நிறுத்தம் செய்யும் " புதுவைத் தொழிலாளிக்குக் கோவைத் தொழிலாளியின் கடிதம் " என்று கவிதையில் ஒரு கடிதம் எழுதி, அவர்கள் தளர்வுறாமல் முன்னேறிச் செல்ல வேண்டும் என உத்வேகம் ஊட்டினார். அதேபோல் 'மெட்ராஸ் எலக்ட்ரிக் டிராம்வே' நிறுவனத்தில் தொழிலாளர்கள் வேலை நிறுத்த போராட்டத்தை முன்னெடுத்த பொழுது " போர்க்கொடி" எனும் பாடல் மூலம் அவர்களை ஆதரித்தார்.

இந்தியாவுக்குச் சொந்தமான கோவா, இறுதியில் போர்ச்சுகீசியர் வசம் இருந்தது.

கோவாவை மீட்கப் பல்வேறு போராட்டங்கள் மேற்கொள்ளப் பட்டன. 1955 ஆம் ஆண்டு இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் இருந்த கம்யூனிஸ்டுகளும் சோசலிஸ்டுகளும் கோவாவை மீட்க அங்கு அதிகாரத்திலிருந்த போச்சுக்கீசிய அரசுக்கு எதிராகப் போராட்டத்தில் குதித்தனர். போராட்டத்தில் குறைந்தது 20 பேர் போர்ச்சுக்கீசிய இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டில் படுகொலை செய்யப்பட்டனர். அதனால் கொந்தளித்த கவிஞர் தமிழ்ஒளி "கோவாவில் கொடுமை!"எனும் கவிதை மூலம் கோவா விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவாகக் குரல் கொடுத்தார்.




1959-ஆம் ஆண்டு சோவித் இரசியா ஸ்புட்னிக் என்ற விண்கலத்தை வானில் செலுத்தி, சந்திரனில் செங்கொடியைப் பதித்த சிறப்பினைக் கூறும் "நிலவைப் பிடித்தார்" எனும் பாடல் மூலம் வரவேற்றார் தமிழ்ஒளி. (19)

"சோவியத் அதிகாரம் + மின்சாரம் = கம்யூனிசம்" என்றார் மாமேதை இலெனின். அதற்கேற்ப கவிஞர் ஒளியும் மின்விசைக்கு ஆதாரமாய் விளங்கும் நிலக்கரிச் சுரங்கத்தை வரவேற்று "நெய்வேலி நாம் பெற்ற பேறு" எனக் கொண்டாடினார்.

இப்படிச் சமூகப் பரிணாமத்தில் ஏற்பட்ட பல்வேறு பிரச்சனைகள் குறித்துத் தமிழ்ஒளி தொடாத பகுதி ஏதும் இல்லை என்றால் அது மிகையல்ல.

**சமாதானப் புறா**

தமிழ் ஒளி கருத்துலகில் மற்றுமோர் முக்கியக் கூறு போர்களின்

மீது அவருக்கு இருந்த ஒவ்வாமை. தொடக்கத்திலிருந்தே இந்தக் கருத்தை அவர் பல படைப்புக்களிலும் வெளிப்படுத்தி உள்ளார்.

**" யந்திரங்கள் சூழ்வதற்கும்**
**ஆகாயமேல் வாழ்வதற்கும்**
**சந்திரனை நாம்பிடிக்கும் போதிலே-போர்**
**தலையெடுக்க லாமோ மண்மீதிலே?**

**பிள்ளை, குட்டி வாழ்வதற்கும்**
**பேதம் யாவும் வீழ்வதற்கும்**
**கொள்ளைப் போரை நாம் தடுக்கவேண்டுமே"** (20)

எனவும், போரைப் பூண்டோடு ஒழிக்க வேண்டும் எனவும், தனது நிலைபாட்டைத் தெளிவாக்குகிறார். அதே போல் "கோலம் அழித்திடும் யுத்தம் எனிற், சினம் கொண்டு (நெஞ்சு) சமாதானத் தொண்டு நினைக்குது" எனவும்,

**"சாந்த உலகமதாம்-அது**
**தன்னுடை வாசலிலே**
**ஏந்திப் பறக்கவிடும்-கொடி**
**இன்பச் சமாதானமாம்!**

**அந்தக் கொடிதனையே-மக்கள்**
**யாவரும் ஏந்திடுவார்!**
**எந்தப் புயல் வரினும்-அதை**
**என்றைக்கும் காத்திடுவார்!"** (21)

எனவும் பிரகடனப் படுத்துகிறார்.

அதே போல், போரை எதிர்த்து அஞ்சாமல் நின்ற ஒரு முக்கிய ஆளுமையை விதந்தோதுகிறார் தமிழ் ஒளி. இட்லரின் யுத்தமேகங்கள் சூழ்ந்து வரும் வேளையில், நாசிசத்தின் பயங்கர கர்ஜனையைக் கண்டு நடுங்காமல், அதைக் கண்டு ஏளனமாகச் சிரிக்கிறார் அம்மனிதர். இட்லர் கூடத் திகைக்கிறான். யார் சிரிப்பது எனத் தேடுகிறான். அந்தச் சிரிப்பு ஹாலிவுட்டிலிருந்து வருகிறது. அதற்குச் சொந்தக்காரர், **சார்லி சாப்ளின்.** சர்வாதிகார இட்லரை முதன் முதலில் சந்தி சிரிக்கச் செய்த அதிசய ஆற்றல் படைத்த முதல் மனிதரும் அவர்தான் என்று போருக்கு எதிரான நாயகனாக அவரைத் தமிழ் ஒளி கொண்டாடுகிறார். (22)

### காலத்தை வென்ற கவிஞன்

சாதியால் தாழ்ந்தவர் ; நிரந்தர வேலை இல்லாதவர்; சொத்து

ஏதும் அற்றவர்;

ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர்; பெரும் பட்டங்கள் பெறாதவர் இத்தகைய எதிர்மறைப் பின்னணியில் இருந்து பீனிக்ஸ் பறவைபோல் கிளர்ந்தெழுந்தவர் கவிஞர் தமிழ்ஒளி. அவரிடம் இருந்த ஆயுதம், பொதுவுடைமை. அவரைக் காக்கும் கேடயம்,தமிழ்.

இருப்பினும் அந்த மகாகவிக்கான அங்கீகாரம் உரிய அளவில் கொடுக்கப் படவில்லை. அந்தக் குற்ற உணர்வு தமிழ்ச் சாதிக்கு இருக்கிறது ; இருக்க வேண்டும்.

அவரது படைப்புகள் மூலம் அவர் நம்மோடு தோழமை உறவு கொண்டிருப்பார்.

"ஒரு சமதர்ம இந்தியாவும், ஒரு சமதர்மத் தமிழகமும் அமையும்போது கவிஞர் தமிழ் ஒளி உலகத்தில் முன்னணிக் கவிஞருள் ஒருவராகக் கட்டாயம் இடம் பெறுவார்" எனும் அறிஞர் கா.அப்பாத்துரையின் கனவுதான் நமக்கு ஒரே ஆறுதலாக உள்ளது.

**பார்வை நூல்கள்.**


*(1) தமிழ்ஒளி கடிதம் பக்.78, ஒருங்கிணைப்பு வீ.அரசு மாற்று வெளியீடு, சென்னை.*

*(2) மேலது பக்கம் 80.*

*(3) தமிழ்ஒளி கவிதைகள் தொகுதி 2 பக்கம் 38, "நீ யார் பக்கம்?"கவிதை புகழ் புத்தகாலயம், சென்னை.*

*(4) மேலது பக்கம் 112, " நவம்பர் புரட்சிக்கு நல்வாழ்த்துகள்" கவிதை.*

*(5) மேலது பக்கம் 34, "சுதந்திரம்" கவிதை.*

*(6) மேலது பக்கம் 26, விடுதலை உறவு கவிதை.*

*(7) மேலது பக்கம் 55, "நான் கிங் எல்லையில் " கவிதை.*

*(8) தமிழ்ஒளி கவிதைகள் தொகுதி 1 புகழ் புத்தகாலயம் பக்கம் 63, "மாசற்ற தியாகம்" கவிதை.*

*(9) தமிழ் ஒளி கவிதைகள் தொகுதி 2 பக்கம் 118, "இந்தி எதிர்ப்புப் போர்"கவிதை.*

*(10) மேலது பக்கம் 124, "எதிர்த்து நில்" கவிதை.*

*(11) தமிழர் சமுதாயம் கவிஞர் தமிழ்ஒளி*

*90 ஆம் ஆண்டு பிறந்தநாள் நினைவு வெளியீடு, புகழ் புத்தகாலயம், சென்னை பக்கம் 32, "சமஸ்கிருதம்" கட்டுரை.*

*(12) தமிழ்ஒளி கவிதைகள் தொகுதி 2 பக்கம் 20: "முரசு கொட்டி சொல்லடா" கவிதை.*

*(13) தமிழ்ஒளி கட்டுரைகள் புகழ் புத்தகாலயம், சென்னை பக்கம் 129/130*

*" இலக்கியம் எங்கே?" கட்டுரை.*

*(14) மேலது பக்கம் 82 "வீராயி" நூலுக்கு எழுதிய முன்னுரை.*

*(15) மேலது ரகுநாதனின் " இலக்கிய விமர்சனம் " குறித்த கட்டுரை பக்கம் 92.*

*(16) மேலது, பக்கம் 120 வ.வே.சு. கண்ட வழி அக்டோபர்,1955.*

*(17) வனமலர்கள் தமிழ்ஒளியின் குட்டிக் கதைகள் புகழ் புத்தகாலயம் ஈரோடு தமிழன்பன் முன்னுரை.*

*(18) தமிழ்ஒளி கட்டுரைகள் 123 / 131 / 136 / 137.*

*(19) தமிழ்ஒளி கவிதைகள் தொகுதி 2 பக்கங்கள் 107 / 108.*

*(20) மேலது பக்கம் 110 "சமாதானக் குரல்" கவிதை.*

*(21) மேலது பக்கம் 73, " சர்ச்சிலுக்கு " கவிதை*

*(22) குருவிப்பட்டி தமிழ்ஒளி புகழ் புத்தகாலயம், பக்கங்கள் 172 / 173.*

♦♦♦

# இடதுசாரி திராவிட தமிழியக்க முன்னோடி கவிஞர் தமிழ்ஒளி

ஜமாலன்

**போகும்வழி நீளமென்று**
**புத்தி உணர்ந்தாலும்**
**போகும்வழி யெனது**
**போக்குக் கிசைந்தவழி!**

- கவிஞர் தமிழ்ஒளி

"தொல்காப்பியர், வடமொழி வராது தடுக்க வேலிகள் அமைத்தார். எனினும் பரந்த தமிழ்நிலம் ஆரியர்தம் கலப்புக் கொள்கையால் சிதைந்தது! ஐயாயிரம் ஆண்டுகட்குப் பின் நின்று திரும்பிப்பார்த்தால் தமிழ்ச் சமூகத்தின் எலும்புக் கூடுகளை ஆரியப்பேய், தன் கையில் ஏந்தி நடந்து செல்வதைக் காணலாம்."

-கவிஞர் தமிழ் ஒளி

## முன்னுரை

2023 செப்டம்பர் 21இக் கட்டுரை எழுதப்படும் அன்று, தமிழ் ஒளி நூற்றாண்டு துவங்குகிறது. தலித் சமூகத்தைச் சேர்ந்த, சாதிய எதிர்ப்பு திராவிட இயக்க உணர்வும், இடதுசாரி முற்போக்குச் சிந்தனையுமுள்ள ஒரு படைப்பாளியைத் தமிழ் சமூகம் புறக்கணித்தும், கண்டும் காணாமலும் இருந்துள்ளது. பொதுவுடமை இயக்கங்களின் பல இலக்கிய அமைப்புகள்கூட அவரைப் பரவலாக மக்களிடம் கொண்டு சேர்க்கவில்லை. குடியேற்ற நாடாக இருந்த இந்திய ஒன்றியத்தில் சுதந்திர வேட்கை உருவாக்கிய 'இந்திய தேசியம்' என்ற கருத்தியல் அடையாளத்தில் தமிழக இலக்கியத் தளத்தில் மூன்று முக்கிய போக்குகள் விளை(ழை)ந்தது. ஒன்று பாரதியால் அடையாளப்பட்ட 'இந்திய தேசியம்'. இரண்டாவது பாரதி தாசனால் அடையாளப்பட்ட 'திராவிட (தமிழ்) தேசியம்'. மூன்றாவது போக்கை நாம் தமிழ் ஒளியால் அடையாளப்பட்ட 'இடதுசாரி போக்கு' எனலாம். இப்போக்கைத் தமிழ் ஒளி குறித்த அறிமுகமற்ற நிலையில் இன்குலாபால் அடையாளம் பெற்ற போக்காக கருதி ஏற்கனவே, நான் ஓர் ஆய்வுக்கட்டுரை எழுதியுள்ளேன். தமிழ் ஒளியை முழுமையாக வாசித்தபின் இன்குலாப்கூட தமிழ் ஒளியின் மரபில் கிளைத்தவர் என்பதை அறியமுடிகிறது. அந்த அளவிற்குதான் நவீனத் தமிழ் இலக்கியத்துடன் தொடர்புடைய என்னைப் போன்ற, தமிழ் இலக்கியத்தை முழுமையான பாடமாக எடுத்து படிக்காதவர்களின், அறியாமை உள்ளது என்பதை

சுயவிமர்சனமாக இங்கு பதிவு செய்கிறேன். காரணம், தமிழ் ஒளி போன்றே இன்குலாப் அவர்களும் திராவிட இயக்கக் கருத்தியலில் இருந்து பொதுவுடமைக் கருத்தியலுக்கும், இலக்கியத்திற்கும் பயணித்து, இறுதியில் தமிழியக்கம் நோக்கித் திரும்பியுள்ளதை அறியமுடிகிறது. தமிழ் ஒளியின் ஆய்வுக் கட்டுரைகளை வாசிக்கும் போது அவர் திராவிட, பொதுவுடமை, தமிழியக்கம் என்ற முப்பரிமாணங்களில் இன்குலாபிற்கு முன்னோடியாக இயங்கியிருப்பதை அறிய முடிகிறது. புரட்சிக் கவிஞர் பாரதி தாசன், எழுத்தாளர் விந்தன் ஆகியோரை வாசித்து, அவர்களது தொடர்ச்சியாக இன்குலாபை எழுதிய நான், தமிழ் ஒளியை வாசிக்காமல் போனதின் குறையை உணர்கிறேன். உண்மையில், தமிழ் இடதுசாரி மரபின் ஒரு முழுமையான வெளிப்பாடாகத் தமிழ் ஒளி இருந்துள்ளார் என்பதுடன், இன்குலாப் போன்றே அவரது அரசியல், கருத்தியல் பயணம் அமைந்திருப்பதும் வியப்புமிக்க ஒற்றுமையைத் தருவதாக உள்ளது.

## வாழ்வும், படைப்பும்

"கூவுவாய் குயிலே" குவலயத் தினி மேல் மேவும் சமநிலை மேவிடும்' என்றே!" என்று பாடிய கவிஞர் தமிழ் ஒளி தமிழ் இலக்கியப் பரப்பில் பொதுவுடமை, தலித் மற்றும் விளிம்புநிலை மக்கள் இலக்கியத்தின் முன்னோடிகளில் ஒருவர். புரட்சிக்கவிஞர் பாரதிதாசனின் சீடராகத் துவங்கி, திராவிட இயக்கப் பெரியார் வழியில் நடைபயின்று, பின் மார்க்சியப் பொதுவுடமைக் கொள்கையை ஏற்று அதன்வழி தனது தமிழியக்கம் சார்ந்த இடதுசாரிச் சிந்தனையில் படைப்புகளைப் படைத்தவர். ஒருவகையில் தமிழ்ப் பொதுவுடமைச் சிந்தனை சார்ந்த இலக்கியப் படைப்பின் முன்னோடியாக விளங்கியவர். தமிழ் மரபுக் கவிதைகளில் ஒன்பது காவியங்கள், பல்வேறு நிகழ்வுகள் குறித்த கவிதைகள், சிறந்த ஆய்வுநூல்கள், கதைகள், குறுநாவல்கள், நாடகங்கள், பத்திரிக்கைகள் என எழுத்தின் பல பரிமாணங்களில் இயங்கியவர். மேதினம், நெய்வேலி பழுப்பு நிலக்கரி, அணு உலை, இமயமலை சிகரந்தொட்ட டென்சிங், மகாகவி பாரதியார், நாவலாசிரியர் கல்கி, திரைப்பட நடிகர் என்.எஸ். கிருஷ்ணன், ரஷ்யப் புரட்சியின் நாயகன் ஸ்டாலின் என வரலாற்று நிகழ்களையும், மாந்தர்களையும் சமகாலத்தில் பாடிய ஒரு யதார்த்தக் கவிஞர் தமிழ் ஒளி.

ஆனால், அவரது வாழ்வோ தமிழ் இலக்கியச் சூழலில், ஒரு நுண்ணுணர்வுள்ள எழுத்தாளன் உயிர்ப்புடன் இருப்பதில் உள்ள பேரவலத்தைச் சொல்லக்கூடியதாக உள்ளது. சமகாலத்தில் பல புறக்கணிப்புகளுக்கு ஆளான அவரை ஒரு புரவலராக, பாதுகாவலராக செ. து. சஞ்சீவி அவர்கள்தான் காத்து வந்துள்ளார்.

இந்தப் புறக்கணிப்பிற்கு அவர் ஒரு தலித் என்பது காரணமாக இருந்திருக்குமா என்கிற கேள்வி மனதில் எழுவதைத் தவிர்க்க முடியவில்லை. இளம் வயதிலேயே கவிதை புனையும் ஆற்றலைப் பெற்றவராக உள்ளார். திருமணம் செய்து கொள்ளாமல், தனக்கென ஒரு குடும்பமோ, சொத்துக்களோ இன்றி ஒரு பற்றற்ற அறவாணர் போல, சங்ககால பாணர் போல அவரது வாழ்க்கை இருந்துள்ளது. அவரது வாழ்வின் சில நிகழ்வுகளைப் படிக்கும்போது வாசிப்பவர் நெஞ்சை அடைப்பதாக உள்ளது, இப்படியான ஒருவரை நண்பராக இருந்து, அவரைக் காத்து, அவரது நூல்களை அச்சிட்டு, இன்றுவரை தமிழ் ஒளியை அணைக்காமல் பாதுகாத்துள்ள சஞ் சீவி அவர்கள் தமிழ் இலக்கியத்தின் பெருமதிப்புக்கு உரியவராக உள்ளார். சாகித்ய அகாதமியின் ‘இந்திய இலக்கியச் சிற்பிகள் வரிசை’யில் தமிழ் ஒளி வாழ்க்கை வரலாற்றை அவர் எழுதியுள்ளார். அந் நூலை வாசிக்கும்போது, ஒரு படைப்பாளியாகத் தமிழ் ஒளி அவர்களின் படைப்பு மனத்தையும், நாடோடி வாழ்க்கையையும், கட்டற்ற சுதந்திரத்தைத் தனது வாழ்வாக அமைத்துக் கொண்ட போக்கையும் உணர முடிகிறது. அவர் ஏன் பொதுவுடமை இயக்கத்தையும், அதன் சிந்தனையையும் ஏற்றார் என்பதை அறிய முடிகிறது. பாரதியைப்போல, பாரதிதாசனைப்போல காணும் இடம் எல்லாம், காட்சி எல்லாம் கவிதைகளாக மாறியுள்ளது அவரிடம்.

ஒரு ஏழை தலித் குடும்பத்தில் பிறந்த அவர், தமிழ் இலக்கியத்தில் தலித்துகள் மற்றும் விளிம்புநிலை மக்களின் பேரவலங்களை தனது இலக்கியமாகப் பதிவு செய்துள்ளார். 1945இல் எழுதுப்பட்ட ‘நிலைபெற்ற சிலை’ என்ற காவியத்தில் இன்றுபோல் அன்றே உயர்சாதி இளைஞன், தலித் பெண்ணைக் காதலித்துத் திருமணம் செய்யமுடியாமல் சாதி அவர்களைக் கொன்றுவிடுகிறது. இன்றைய மொழியில் சொன்னால் அது ஆணவக் கொலை. 1945இல் எழுதப்பட்ட ‘வீராயி’ என்ற காவியத்தில், தலித் பெண்ணான வீராயி புலம்பெயர வேண்டிய சூழல், அப்படிப் புலம் பெயர்ந்த மக்களின் அவலம், அதிலும் கலப்புமணம் செய்பவர்கள் சேரியுடன் கொழுத்தப்படுவது என இன்றைய சூழலைக் கண்முன் கொண்டு வருகிறது அக்காவியம். ’கோசலக் குமாரி’ என்ற காவியத்தை ராகுல சாங்கிருத்தியாயனின் ‘வால்கா முதல் கங்கை வரை’ நாவலில் வரும் ஒரு துணைக்கதையை எடுத்து குறுங்காப்பியமாக்கியுள்ளார். புத்தமதத்தை தழுவிய மஹா கவிஞரான அஷ்வகோஷின் கதை. அதில் பார்ப்பனர்கள் எப்படி சூழ்ச்சி செய்து தங்கள் உயர்சாதியத் தன்மையை காக்கிறார்கள் என்பதைக் கூறுகிறார். இப்படிச் சாதியும், வர்க்கமும் இணைந்த ஒரு நிலையில் அவரது காவியங்களும் கவிதைகளும், கதைகளும், நாடகங்களும் உருவாகி உள்ளது.

பொதுவுடமைச் சிந்தனையின் நீட்சியாக அவர் புத்தரின் வாழ்வைக் காவியமாக்கி, அதனை முடிக்க இயலாமல் புத்தரின் பிறப்புடன் நிறுத்தியுள்ளார். ஒருபுறம் முடிப்பதற்கான அமைதியான சூழல் இல்லை என்றால், மற்றொருபுறம் வாழ்வைத் தேடி ஓடவேண்டிய நிலை. 'மாதவி காவிய'த்தைச் சஞ்சீவி அவர்களின் அங்காடியில் இரவுகளில் மட்டும் தங்கி எழுதியுள்ளார். அதனை அங்காடி காவியம் என்று அங்கதமாக அழைப்பாராம்.

குற்றப் பரம்பரையினர் சட்டத்தால் பாதிக்கப்பட்ட நரிக் குறவர்கள் வாழ்வைச் சித்தரித்து 1940இல் 'குற்றப் பரம்பரை' என்றொரு கதை எழுதியுள்ளார். அதில். "பணக்காரன் ராஜ்யத்தில் ஏழைகள் எல்லோரும் 'குற்றப் பரம்பரை'யைச் சேர்ந்தவர்கள்தான்" என்று எழுதுகிறார். இப்படி தலித், விளிம்பநிலை மக்களை சாதிரீ தியாக மட்டுமின்றி வர்க்கரீதியாக அணுகும் போக்கை அவரது படைப்புகளில் வாசிக்க முடிகிறது. "பொட்டல் மண்ணை திருத்தி பயிர் செய்தால், அதில் 'வாரம்' கேட்கிறார்; உரிமையைக் கேட்டதற்காக கருப்புக் கோனார் கொலை செய்யப்பட்டார்." என்று 1949இல் 'நினைவு நட்சத்திரம்' என்ற கதையில் குறிப்பிடுகிறார். கதையின் நாயகன் தனது தந்தையைத் தேடி வருகிறான், தந்தையோ கொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டுள்ளார். நிலவுடமையின் கொடூரங்கள், சாதியத்தை பயன்படுத்தி ஆதிக்கம் செய்வது என இவரது கதைத்தளங்கள் விரிவடைகிறது.

படைப்பு மனம் விகசிக்கும்போது, அதன் ஆழத்தில் ஏற்படும் ஒரு பரவச நிலையில் அவரது படைப்புகளும், வாழ்வும் பல அலைக்கழிப்புகளைச் சந்தித்துள்ளது. அவரது படைப்பையும், வாழ்வையும் ஒருசேர வாசிக்கும்போது அதனுள் அலையும் ஒரு மனதையும் அதன் நிலைகொள்ளாத் தவிப்பையும் உணர முடிகிறது. தமிழ் மரபறிவும், யாப்பும் அறிந்தவர் என்பதால் பலவேறு யாப்பு செய்யுள்களைத் தற்கால மொழியில் பாடியுள்ளார். தனது படைப்புகளில் குருவிக்காரர்கள் எனப்படும் நரிக்குறவர்கள், கழைக் கூத்தாடிகள், குற்றப் பரம்பரையினர், தலித்துகள் என விளிம்புநிலை மக்கள் குறித்து எழுதிச் செல்கிறார். ஆனால், படைப்புகளின் உள்ளடக்கம் அனைத்திலும் ஒரு நிலைகொள்ளா சோகம், துயரம் படிந்திருப்பதைக் காணமுடிகிறது. சமத்துவமற்ற உலகில் சமத்துவத்தையும், சுயமரியாதையையும் முன்வைக்கும் ஒரு படைப்பாளியாக, ஒடுக்கப்பட்ட, விளிம்புநிலை மக்கள் குறித்த அவலநிலைகளைப் பதிவு செய்பவராக இருந்துள்ளார். அவரது சொந்த வாழ்வின் புறக்கணிப்புகள், காதல் தோல்வியால் உருவான சோகம், நிலைகொள்ள முடியாத வாழ்வு, வறுமை, பசி, பட்டினி, நோய் என அனைத்தும் அவரது படைப்புலகின் பகைப்புலத்தில்

ஒரு கற்பனையான உலகாக, ஒரு சமத்துவ உலகிற்கான ஏக்கமாக வெளிப்படுவதைக் காணமுடிகிறது.

கவிதைகளில் இயற்கையைப் பாடினாலும், அதற்குள் தொழிலாளர்கள் பிரச்சனை, உழைப்பு, வறுமை ஆகியவற்றைக் கொண்டு வந்துவிடுகிறார். பழந்தமிழ்க் காப்பியங்களில் ஆபுத்திரன் கதையை நாடகமாக்கும்போது, பார்ப்பனர்களின் வேள்வி சார்ந்த ஒடுக்குமுறை, பசுக்களைக் காப்பதற்காக ஆபுத்திரனைத் தண்டிப்பது என்று மணிமேகலையில் உள்ள அப்பகுதியை எடுத்து, அதனை வைதீக சமயத்திற்கு எதிரான பிரதியாக வெளிப்படுத்திக் காட்டுகிறார். சிலப்பதிகாரத்தையும், மணிமேகலையையும் இணைத்து அதில் உள்ள மாதவி நிகழ்வுகளை தனியாகத் தொகுத்து ‘மாதவி காவியம்’ என்ற ஒன்றைப் படைத்துள்ளார். பெண்ணிற்கான பிம்பங்களாக தமிழ் சமூக நனவிலியில் இருத்தப்பட்டுள்ள கண்ணகி பத்தினி, மணிமேகலை துறவி என்றால் இவர்களை இணைக்கும் கண்ணியான மாதவி ஒரு கணிகை. அவளை நாயகியாக வைத்துச் சிலப்பதிகார வடிவில் 3 காண்டங்கள், 27 காதைகள் என 1150 பாக்களால் மாதவி காவியம் எழுதி உள்ளார். மாதவியைக் காவிய நாயகியாக்கும் எண்ணம், அவரது படைப்பு உளவியல் எப்படி விளிம்புநிலை மாந்தர்கள் மீது குவிந்துள்ளது என்பதை உணர்த்துவதாக உள்ளது.

## ஆய்வுகளும், அரசியலும்

தமிழ் ஒளியின் தமிழியல் சார்ந்த ஆய்வுகளை வாசிக்கும்போது அவரது ஆழ்ந்த தமிழறிவும், அது உருவாக்கியுள்ள தமிழியம் சார்ந்த சிந்தனையும் எவ்வளவு நவீனம் அடைந்துள்ளது என்பதை அறியமுடிகிறது. இதுவரை வெளிவந்துள்ள மூன்று ஆய்வு நூல்கள் குறித்த குறிப்புகளை செ.து. சஞ்சீவி அவர்கள் குறிப்பிடுகிறார். அவரது வெளிவராத கட்டுரைகள் இனி தொகுக்கப்பட்டு வெளிவரும் என்றும் ஒரு குறிப்பினைத் தருகிறார். அதன்பின் ‘தமிழ் ஒளி கட்டுரைகள்’ என்ற ஒரு தொகுப்பு வெளிவந்துள்ளது. ‘சிலப்பதிகாரம் காவியமா? நாடகமா?’ என்ற நூலில், சிலப்பதிகாரம் குறித்து விரிவாக ஆய்வு செய்து, அது காப்பியமோ நாடகமோ அல்ல ஒரு நிகழ்த்துக் கலைக்கான நாட்டிய நாடகம் என்பதை நிறுவுகிறார். சிலம்பில் வரும் கானல் வரி, குரவை கூத்து முதலியன இசையுடன் பாடப்பெறும் அரங்குகளின் நிகழ்த்துகலையாக இருப்பதைச் சுட்டிக்காட்டி, சிலம்பில் அரங்கு உள்ளது ஆனால் அது கதையாக உள்ளது, அதில் உள்ளார்ந்து அமைந்ததே அரங்கு என்பதைச் சுட்டிக் காட்டுகிறார். சிலம்பின் கதையை அதன் சூத்ரதாரியே நடத்திச் செல்கிறான் என்பதைக் கூறும் போது, அது ஒரு அரங்காற்றுக்கலை என்பதை நிறுவிவிடுகிறார். “நாடகப்

பண்பு பெற்றிருந்தும் நாடகத்திற்கும் அப்பாற்பட்ட ஒரு கலை வடிவைச் சிலப்பதிகாரம் கொண்டுள்ளது என்பதைத் தெரிந்து கொள்கிறோம்.'' என்று குறிப்பிடுவதைச் சுட்டிக்காட்டுகிறார் சஞ் சீவி.

அவரது சிலப்பதிகார ஆய்வின் முடிவில் தரும் ஒரு வியப்பான செய்தி, கிரேக்க நாடக மரபுடன் சிலம்பை ஒப்பிட்டு, கிரேக்க நாடக மரபு சிலப்பதிகாரத்திலிருந்து பெறப்பட்டதே என்பதை முன்வைக்கிறார். எதிர்கால ஆய்வாளர்கள் இதனை ஆழ்ந்து ஆராய்ந்து நிரூபிப்பதற்கான புள்ளிகளைத் தருவதாக உள்ளது. 'ஒபேரா' (Opera) என்கிற நாட்டிய நாடக வகைக்கு சிலப்பதிகாரமே முன்னோடி என்றும், சேர மன்னர்கள் கிரேக்கத்தை ஆண்டதாக சிலம்பு குறிப்பிடுவதாக அவர் எடுத்து வைக்கும் தரவும், மேலதிக விவாதத்திற்கு உரிய ஆய்வுப் புள்ளிகள் என்பதைப் பதிவு செய்யலாம். பண்டைய தமிழகத்தில் பல்கிப் பெருகியிருந்த இசைநாடகங்கள் (ஒபேராக்கள்) அருகி அதன் கடைசி வடிவமாக மிஞ்சியுள்ளதே சிலப்பதிகாரம் என்கிற அவரது கருத்து இன்றும் ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய ஒன்று. அதோடுகூட தமிழ் ஒளி அவர்களே பல இசை நாடக வடிவங்களை உருவாக்கி அம்மரபை இன்று புத்தாக்கம் செய்ய முயன்றுள்ளார். "தமிழில் மறுமலர்ச்சி என்று இன்று பேசப்படுவது பொய்யுரையன்று, பொருளுரையென்று உலகிற்கு நாம் காட்ட வேண்டுமாயின் இழந்த கலை வடிவங்களை நாம் மீட்க வேண்டும்.'' என்று கூறிய தமிழ்ஒளி, அதனை நடைமுறையில் 9 காவியங்கள் எழுதி மீட்டெடுக்க முயன்றுள்ளார்.

அவருடைய மற்றொரு ஆய்வுநூல் "திருக்குறளும் கடவுளும்''. 1959இல் எழுதப்பட்ட இந்நூல் தற்காலத்தில் இந்துத்துவ அரசியல் திருவள்ளுவரைத் தங்களது அரசியலுக்கு உள்ளிழுக்க முயலுவதற்கான மறுப்புகளை வாசிக்க முடிகிறது. அன்று திருக்குறள் குறித்து நடந்த சர்ச்சைகளின் அடிப்படையில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது என்றாலும், அன்று முதல் இன்றுவரை உள்ள விவாதங்கள் இரண்டுதான்: (1.) திருவள்ளுவர் ஒரு 'இந்து' (2.) திருக்குறள் கடவுள் நம்பிக்கை உள்ள வைதீக நெறியை ஏற்றுக் கொண்ட நூல் என்பதே. இரண்டிற்கும் இந்நூல் பதில் அளிக்கிறது. முதல் பிரச்சனை திருவள்ளுவர் இந்து அல்ல ஒரு சமணர் என்பதை நிரூபிக்கும் அருகநெறிக்கும் குறளுக்கும் உள்ள உறவை ஆராய்கிறார். அதற்கு ஆதாரமாக உள்ள 'ஆதி பகவன்' யார்? என்பதைத் தெளிவுற விளக்கி, அவர் சமணர்களின் 24 அறிவர்களில் முதலாமவரான 'இடபதேவரே' என்பதை ஆதாரங்களுடன் எடுத்து உரைக்கிறார். இடபதேவரே விவசாயத்தைக் கண்டறிந்து மக்களிடம் கொண்டு சென்றவர்

என்பதால்தான் அவருக்கு 'காளைச் சின்னம்' தரப்பட்டது என்பதை விளக்குகிறார். "அவர் இறைவன், எண்குணத்தான், வாலறிவன், அறவாழி அந்தணன், பொறிவாயில் ஐந்தவித்தான் என்று அருக சமயத்தவரால் போற்றப்படுவார். அவ்வழுக்காற்றிற் கியைபவே வள்ளுவரும் ஆதிபகவனை வாழ்த்தினார்." என்கிற அவரது நுண்மாண் நுழைபுலம் வியப்பளிப்பதாக உள்ளது. இரண்டாவது கருத்தான வைதீக நெறியை ஏற்றது என்பதற்கு பரிமேலழகர் உரையை வைத்தும், அவரது பின்னணியையும் வைத்து மறுக்கிறார். மிகவும் பிற்காலத்தவரான பரிமேலழகர், சைவ ஆகமங்கள் தோன்றிய பிறகு பாயிரத்திற்கு உரை எழுதியதால், தனது கொள்கை நிலைக்கேற்ப எழுதிவிட்டார் என்பதை சுட்டிக்காட்டுகிறார். 'ஆதிபகவன்' என்பதை இருபெயரொட்டுப் பண்புத்தொகையாக ஆக்கி, ஆதிபகவன் என்பதை ஆதி பகவன் என்ற இரு பெரையும் ஆதியில் இருந்த கடவுள் என்ற பொருளில் பிரித்து பொருள் கொள்கிறார் என்ற தமிழ் இலக்கணத்தைப் பயன்படுத்தி கூறுகிறார். ஆதிபகவன் என்பது ஒரு பெயர்ச்சொல் அதை பண்புச் சொல்லாக மாற்றியது பரிமேலழகரின் சைவச் சார்பினால் வந்தது என்பதாக இதனைப் புரிந்து கொள்ளலாம். பொதுவாக, பரிமேலழகர் வைதீக நெறியைச் சேர்ந்தவர் என்ற முறையில் சைவ ஆகமங்களின் வைதீகச் சார்பிலிருந்து இக்கருத்தை அவர் முன் வைத்திருப்பார் என்ற தமிழ் ஒளியின் கருத்தை புரிந்துகொள்ள முடிகிறது. அதனால், அவரது உரையை "தமிழ் நூன் முடிபுக்கும், தருக்க வியலுக்கும் முரண்படும் உரை, உரையன்று" என்று மறுக்கிறார்.

இதன் தொடர்ச்சியாக உள்ளது அவரது அடுத்த ஆய்வு நூலான 'தமிழர் சமுதுயம்' என்ற நூல். இந்நூல் மானுடவியல் ஆய்வாளரான மார்கனை அடியொற்றி ஏங்கல்ஸ் எழுதிய 'குடும்பம் தனிச்சொத்து அரசு ஆகியவற்றின் தோற்றம்' என்ற நூலின் அடிப்படையில் தமிழ் சமூதாயத்தை அறிவியல் முறையில் மார்க்சிய வரலாற்று பொருள்முதல்வாத அடிப்படையில் ஆய்வதே தனது நோக்கம் என்பதைக்கூறி, தொல்காப்பியம் தொடங்கித் தமிழர் சமுதாயத்தை ஆராய்கிறது இந்நூல். 1961இல் வெளிவந்த இந்நூல், தமிழியம் குறித்த சிந்தனையில் ஒரு முன்னோடி நூலாகவும், பிந்தைய மார்க்சிய ஆய்வுமுறைக்கு ஒரு ஆரம்பம் என்றும் கூறத்தக்கது. அவரது கீழ்கண்ட கூற்று இன்றுவரை எத்தனை தற்காலத் தன்மை வாய்ந்ததாக உள்ளது என்று பாருங்கள். "ஆரியர் இந்தியாவில் நுழைந்து வட இந்தியக் குடிகளை வென்று, அரசு கண்டு, பின்னர் இனக்கலப்பிற்கு ஆளாகித் தெற்கே தமிழகம் போந்து, முடிமன்னர்களை அணுகித் தமிழ்ச் சமுதாயத் தலைமைபெற

முயன்றபோது, புராணங்கள் புகுந்தன. கட்டுக்கதைகள் கிளம்பின நிலத்தலைவர்கள் ஆற்றிய பண்டையப் போர்களின் சரித்திரத்தன்மை ஒதுங்கிக் கற்பனைத் தன்மை மேலோங்கியது.'' மேலும், ''ஆரிய மரபு தமிழ் நிலத் தலைவர்களைக் கடவுளர்களாய் ஏற்றுக் கொண்டதன் காரணமாய்த் தமிழ் நிலத்தில் உறுதிபெறத் தொடங்கியது.'' என ஆரியர்களின் வருகையால் அழிக்கப்பட்ட தமிழ்ப் பண்பாடு, தமிழ் சிந்தனைமுறை, வாழ்வியல் என அனைத்தையும் ஆராய்கிறார் இந்நூலில். தமிழ்ச் சமூகம் அடிப்படையில் பொருண்மைத்தன்மை வாய்ந்தது. அதனிடம் உள்ள பொருண்மையாக வழிபாடுகள், உண்மை நோக்கும் பண்புகளை ஆரிய மரபான 'எண்ண முதல் கருத்து' (கருத்து முதல்வாதம் என்று இன்று கூறப்படும்) ஆட்கொண்டு தமிழின் பொருள்முதல்வாதச் சிந்தனை மரபை மாற்றிவிட்டது என்கிறார். இது அடிப்படையில் தமிழர் சிந்தனை மரபு பொருள்முதல்வாதம் என்பதற்கு தொல்காப்பிய ஐம்பூதக் கொள்கையை முன்வைப்பதை சான்றாக முன்வைத்து ஆய்வைத் தொடர்கிறார். ஆக, தமிழியம் குறித்த தனித்தன்மையான சிந்தனை மரபை முன்வைப்பதாக அவரது பார்வை அமைந்துள்ளது. இடதுசாரி மரபில் இத்தகைய ஆக்கபூர்வமானப் பார்வை வியப்பளிக்கிறது. காரணம், வெறும் வர்க்கரீதியானதாக அமையாமல், பண்பாட்டுத் தளத்தில் பொருள்முதல்வாத ஆய்வை இவர் நிகழ்த்தியிருப்பதுதான்.

### தமிழும் சமஸ்கிருதமும்

குறிப்பாக, அவர் குறித்த விரிவான ஆய்வும், அவரது உள்ளார்ந்துள்ள இடதுசாரி / திராவிட / தமிழியம் சார்ந்த பார்வையை, நோக்குநிலையை அவரது எழுத்துக்கள், படைப்புகள் வழி விரிவாக எழுதப்படுவது அவசியம் என்பதை பதிவு செய்து, இங்கு அவரது ''தமிழும் சமஸ்கிருதமும்'' என்ற ஒரு குறுநூல் அல்லது நீண்ட கட்டுரையைக் குறித்து எனது பார்வையைப் பகிர்கிறேன். இந்நூல் 1960இல் அவரால் எழுதி குறுநூலாக வெளி யிடப்பட்டது. பிறகு, 1962இல் 'தமிழர் சமுதாயம்' என்ற நூலில் இணைக்கப் பட்டுள்ளது. அப்போது மொழியியல் அறிஞர் டாக்டர் கால்டுவேல் அவர்களின் 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' நூல் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு வெளிவந்துள்ளது. அதனை வாசித்த தமிழ் ஒளி அதனை உள்வாங்கி, அதனால் பாதிப்புற்று எழுதியக் கட்டுரையே இக்குறுநூல். இந்நூலை கால்டுவேலுக்கே சமர்பித்துள்ளார். இந்நூல் தமிழ், திராவிட மொழிகள், வடமொழிகள் (பாலி, பிராகிருதம், பைசாசம் ஆகியவை) மற்றும் ஆரிய மொழியான சமஸ்கிருதம் ஆகியவற்றை ஆய்வு செய்கிறது.

முதலில் தமிழ் எல்லைகளை ஆய்வு செய்கிறார், அதன்பின்

சேரநாடு, மலையாள நாடாகத் துண்டாடப்பட்டதை குறிக்கிறார். மலையாள மொழித் தோற்றம் குறித்தும், அது எப்படி இடைக்காலத்தில் ‘எழுத்தச்சன்’ என்பரால் தோற்றுவிக்கப்பட்டது என்பதையும் கூறுகிறார் (ப.6). இதனை காரணமாக காட்டி, சமஸ்கிருதம் பாணினியால் எப்படி ஒழுங்குபடுத்தப்பட்டது என்பதையும், அதற்கு முன் அது ஒரு மொழிவடிவம் பெறவில்லை என்பதாக செல்கிறது அவரது ஆய்வு. சமஸ்கிருதம் வரம்பின்றி நுழைந்தால் தமிழ் வேறுமொழியாகிவிடும் (ப.7) என்பதற்கு சான்று மலையாளம் என்பதைச் சுட்டுகிறார். மலையாளக் கவிஞர்கள் சங்கம்புழையின் கவிதை வரிகளில் துள்ளியோடும் தமிழ் சொற்களைக் காட்டுகிறார். கேரள கிராமங்கள் செல்லச் செல்ல தமிழும், நகரங்களில் மலையாளமும் மிகுதிப்படுவதைச் சுட்டிக்காட்டுகிறார்.

சைவநெறியைப் பின் பற்றியவர்கள் முற்காலத்தில் நாட்டுப் பற்றுடன் இருந்தனர், பிற்காலத்தில் சமயப்பற்றாளர்களாக மாறி விட்டனர் என்கிறார் (ப.9). சைவம் தமிழை கையிலெடுத்ததற்கு காரணம், வைதீக நெறி சமஸ்கிருதத்திலும், சமண, புத்த நெறிகள் பிராகிருதம், பாலி உள்ளிட்ட வடமொழிகளிலும் இருந்ததே என்கிறார். சமணம் நலிந்ததற்கு காரணம் சமஸ்கிருத பற்று (ப.11) என்கிற இவரது கருத்து ஆழ்ந்து நோக்கத்தக்கது. சைவம் அடிப்படையில் தமிழ் மேன்மை என்று பக்தி இலக்கிய காலத்தில் உருவாக்கிய கருத்துநிலையின் பின் ஒரு மொழி அரசியல் செயல்பட்டது. ஓரிடத்தில் புத்தர் எப்படி பாலி மொழியை வடமொழிக்கு எதிராக பயன்படுத்தினார் என்பதைச் சுட்டுகிறார். அதேபோல் சைவர்களும் தமிழை முதன்மைப்படுத்தினர். பிற்காலத்தில் வேத முதன்மைக்காக அவர்கள் சமஸ்கிருதமயமாதலில் சிக்கினர் என்பதே வரலாறு. ஆனால், வைணவநெறி குறித்து தமிழ் ஒளி அவர்கள் எந்த பதிவும் செய்யவில்லை. ஒருவேளை அதனை பார்ப்பனிய நெறி என்று இந்நூலில் முற்றாக ஒதுக்கியிருக்கலாம் என்றே தோன்றுகிறது. தேவார, திருவாசகங்களுக்கு நிகரானதும், அதைவிடக் கூடுதல் தமிழ் இனிமையை வெளிப்படுத்தக் கூடியவை பிரபந்தங்கள் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். அறிவார்ந்த தமிழை உணர்வார்ந்ததாக மாற்றியதில் பக்தி இயக்கத்திற்கும் நாயன்மார்கள், ஆழ்வார்களுக்கு முக்கியப் பங்கு உண்டு. ஆனால், அவர்கள் தமிழ் நிலவுடமை ஆதிக்கத்தின் குரலாக ஒலித்தனர் என்கிறது கோ. கேசவனின் ஆய்வுகள். (பார்க்க “பக்தி இயக்கமும், இயக்க பக்தியும் கோ. கேசவனின் மார்க்சியத் திறனாய்வு”, ஜமாலன்)

“சைனஞ் சார்ந்த சமத்கிருத மந்திரங்கள், தமிழகம் எங்கும்

ஒலித்தபோது, ஞானசம்பந்தர் தமிழ் மக்களிடையே தேசிய உணர்ச்சியைத் தூண்டி, 'ஆரிய ஊளையை அடித்துத் துரத்துக' என்று முரசறைந்தார்.'' என்றும், ''ஆரியன் கண்டாய், தமிழன் கண்டாய்'' என்று ஞானசம்பந்தர் போர்க் கொடி உயர்த்தியபோது சைனம் நிலைகுலைய வேண்டிய நிலை தோன்றியது.'' (ப.11) என்றும் குறிப்பிடுகிறார். சமணரை ஆதரிக்கும் தமிழ் ஒளி, தமிழை வளர்த்த சமணம், பின்னாளில் சமஸ்கிருதப் பற்றால் அழிந்தது என்கிறார். "சைன நெறி உயர்வுற்றதாயிருந்துங்கூட, சமஸ்கிருத பற்றின் காரணமாய்த் தமிழகத்தில் நலிவுற்றது!'' (ப.11) என்கிறார். சமணம் நலிவுற்றதற்கு காரணமான மார்க்சிய வர்க்கப்பார்வை, பொருளியயல் அடிப்படைகளை கோ. கேசவன் "மண்ணும் மனித உறவுகளும்'' நூலில் குறிப்பிடுகிறார். தமிழ் ஒளி இத்தகைய வர்க்கம்சார்ந்த ஆய்வை தவிர்த்து, பண்பாட்டு மேற்தளத்தில் நிகழ்ந்தவற்றை இலக்கியங்கள் வழி ஆய்வு செய்கிறார். சமணத்தை திராவிடம் உருவாக்கிய சமயம் என்கிறார். காரணம் தமிழ் ஒளி கால்டுவெல் நூலை அடிப்படையாகக் கொண்டு தனது விவாதங்களை இதில் வளர்த்தாலும், இந்தியா முழுவதற்குமானது திராவிடம் என்ற கருத்துநிலையை கால்டுவெலைத் தொடர்ந்து முன்வைக்கிறார். திராவிடர்கள் வட இந்தியாவிலிருந்து தென்னிந்தியாவிற்கு வந்தனர் என்பதை கால்டுவெல் அவர்களும் குறிப்பிடுகிறார். (ப.158162, கால்டுவெல் ஒப்பிலக்கணம், கழக வெளியீடு, 1941) ஆரியத்தின் சமஸ்கிருத மொழி மேலாண்மை சூழ்ச்சியை எதிர் கொண்டு நின்று போராடி அதனை தெற்கில் அண்டவிடாமல் செய்ததில் தமிழுக்கு பெரும் பங்கு உண்டு என்பதை இந்நூல் உள்ளுரையாகக் கொண்டு தெட்டத் தெளிவாக எழுதப்பட்டுள்ளது. காரணம், தமிழ் மொழி சமஸ்கிருதத்தைவிட மேம்பட்ட மக்கள் பேச்சு மொழியாக இருந்ததே காரணம்.

தமிழ் ஒளி இந்திய ஒன்றியத்தை திராவிட ஒன்றியமாகவும், சமணம், பௌத்தம் ஆகியவை ஆரிய எதிர்ப்பில் உருவான திராவிட சமயங்கள் என்ற கருத்தையும் தனது உள்ளார்ந்த பிம்பமாக வைத்து இந்நூலை ஆக்கியுள்ளார் (ப.43). அதற்கான சான்றுகளை இலக்கியங்கள் வழி முன்வைக்கிறார் இந்நூலில். அவருக்கு இந்தியா, சுதந்திரம் அடைந்த காலங்களில் முகிழ்த்த இந்திய பெருந்தேசியப் பார்வைக்கு மாற்றாக, பிராந்திய தேசிய இனம், அதன் தனித்தன்மை குறித்த புரிதல் இருந்துள்ளது (ப.13). மேற்சொன்னதைப் போல சமஸ்கிருதம் மக்கள் பேச்சு மொழியாக இல்லாததால் அதனை செத்தமொழி என்று அழைக்கிறார். "ஒரு தேசிய இனத்தின் தாய்மொழியாய் நின்று நிலவாது பண்டு வழங்கி, இன்று அருகிப் பேச்சு வழக்கற்ற எம்மொழியும் 'செத்த மொழி'

என்றே அழைக்கப்பெறும்.'' (ப.13) ஏன் சமஸ்கிருதம் தேசிய மொழியாகவில்லை என்பதையும், அது பல்வேறு மொழிகளுடன் கலந்து தனது தனித்தன்மையை இழந்ததால், மக்களின் பேச்சு வழக்கில் இருந்து அழிந்துவிட்டது என்கிற இவரது கருத்து ஒரு புதிய கோணத்தைத் தருவதாக உள்ளது. இதுவரை இப்பிரச்சனையை இந்த நோக்கில் யாரும் ஆராய்ந்ததாகத் தெரியவில்லை. நாவலந் தீவு எனப்படும் இன்றைய இந்தியா ஒன்றியத்தில் புகுந்த பல பழங்குடிகளின் மொழியுடன் கலந்து கலப்பு மொழிகளை, கலப்பினங்களைத் தோற்றுவித்தனர் என்கிறார். இதற்கு பெரிய சான்றுகள் அவசியமில்லை. அதனால்தான் மலையாள மொழி குறித்த ஆய்வில் தொடங்குகிறது இச்சிறுநூல். அதேபோல் தெலுங்கு, கன்னடம் தொடங்கி இன்றைய இந்திவரை எல்லா மொழிகளிலும் சமஸ்கிருதம் கலந்து பல தேசிய மொழிகள் உருவாகி, தன்னை இழந்தது என்கிறார். மற்றொரு காரணம், வந்தேறிகளான ஆரியர்கள், தங்களுக்கென்று ஒரு நிலமோ, தேசியத் தன்மையோ இல்லாததால், அவர்களது மொழி வழக்கொழிந்து வெறும் வேதாந்தம் மற்றும் மந்திரங்களின் மொழியாகவும் நின்று போய்விட்டது.

இன்று ஆரியர்கள் அதனால்தான் இந்திய தேசியம் என்ற பெயரில், பாரதம் என்று ஒரு ஆரிய தேசத்தை உருவாக்க முனைகிறார்கள். இதற்கான மூல ஊற்றை இந்நூல் மொழிவழி ஆராய்ந்து முன்வைக்கிறது. அத்தோடு சமஸ்கிருத சிவபெருமான் உடுக்கை அடித்து உருவான கதையையும், பாணினி குறித்த தெய்வீகப் பொய்களையும் கட்டுடைக்கிறது இந்நூல் (ப.14). அடுத்து, சமஸ்கிருதம் கடவுள் மொழி என்பதை மறுத்து எந்த மொழியும் கடவுளால் பிறப்பதில்லை (ப.15) என்பதையும் விளக்குகிறார் தனது பொருள்முதல்வாதப் பார்வையில். 'கடவுளாற் படைக்கப்படுவதல்ல மொழி; மனிதர் பேச முற்படும் முயற்சிகளிலேயே, மொழிகள் பிறக்கின்றன' எனும் உண்மையைத் தமிழ் இலக்கண நூற்கள் நன்கு உணர்த்துகின்றன.'' (ப.15) என்று கூறுவது முக்கியமான கூற்றாகும். மிகச்சரியாக மொழி நிலம் தேசியம் என்ற முக்கூட்டுத் தன்மைக் கொண்ட நவீனப் பார்வை இவரிடம் ஆழ்ந்திருப்பதைக் காணமுடிகிறது. இப்படி மொழியைக் கலந்துவிட்டு ஆரியர்கள் என்று கலப்பின மொழி மக்கள் கூறுவது ஒரு ஆரிய சூழ்சிக்கு அடிமையாகுந்தன்மை என்பதை அம்பலப்படுத்துகிறார். சமஸ்கிருதத்திற்கு வரிவடிவை அமைத்தவர்தான் பாணினி. அதுவரை அது எழுத்துமொழியாக இல்லை என்பதைச் சுட்டிக் காட்டுகிறார். அடுத்து சமஸ்கிருதம் பேச்சு வழக்கற்ற அறிஞர்கள் மொழி என்பதை வன்மையாக

மறுத்து, ஆரியர்களின் மேன்மை என்பதை தகர்க்கிறார்.

அடுத்து, சமஸ்கிருதம் தோன்றிய வரலாற்றை ஆராய்கிறார். அதில் ''நாவலந் தீவிற் புகுந்த பின்னர், அத் தீவக மக்களின் தொன்மொழிகள் சிறப்புற்ற நிலையில் வழங்கி வருவதனைக் கண்டனர் ஆரியர். பைசாசம், தமிழ், பிராகிருதம், பாலி, பிராமி போன்ற தொன்மொழிகளே அவை.'' (ப.16) என்றும், இவையே திராவிட மொழிகள் இவை செப்பமுற்று விளங்கியவை என்பதையும் சுட்டுகிறார். இத்தகைய அழிவிலிருந்து காத்து நின்றது 'திராவிடக் கூறு' என்கிறார். அதுதான் உயிர்க் கூறு என்றும், அதனில் புல்லுருவியாக உறிஞ்சி வளர்ந்ததே சமஸ்கிருதம் என்கிறார். இன்றைய பார்வையில் இது வழமையாக அனைவரும் கூறும் கருத்துதான் என்றாலும், இவர் இதனை எழுதிய ஆண்டு முக்கியமானது. திராவிடக் கூறு என்ற சொல்லாட்சி ஒரு கருத்தாழம் மிக்கது. '''திராவிடக் கூறு' என்பது, காலங் கடந்த பேராற்றலை உயிர் ஆற்றலாய்க் கொண்டு பிழைத்தது.'' (17) இவர் பயன்படுத்தும் உயிர் ஆற்றல் என்ற சொல் நேரடியாக பூஃக்கோ போன்ற தற்காலத்தில் பிரபலமாகியுள்ள பின் அமைப்பியல், பின் நவீனச் சிந்தனையாளர்கள் கூறும் கருத்தாக்கத்தின் பொருள் பொதிந்ததாக உள்ளது. பூக்கோ இன்றைய இறையாண்மை என்பது உயிராற்றலை (bio-power) அடிப்படையாகக் கொண்டது என்கிறார். அரசு அதிகாரம் மனித உடல்களின் உயிராற்றலைக் கசக்கி பிழிந்தெடுப்பதாக உள்ளது. இந்த உயிராற்றலை உருவாக்க தனிமனிதர்களைக் குழுவாக மாற்றி, குழுவை ஆள்வதற்கான நுட்பத்தை உருவாக்குவது. சான்றாக, சாதி, மதம், மொழி என்பதெல்லாம் மனித உடல்களை ஒரு குழுவாகக் கட்டமைப்பதன் வழியாக ஒரு மொத்த உடலாக மாற்றி அவர்களது உயிராற்றலை உறிஞ்சுகிறது. அதனை பூக்கோ உயிரரசியல் (biopolitics) என்கிறார். தமிழ் ஒளி அவர்கள் இங்கு பயன் படுத்தும் திராவிடக் கூறு என்பதை திராவிட மொழிப் பேசும் இனக்கூட்டத்தின் உயிர் ஆற்றலாக புரிந்துள்ளார். இது நவீனக் கோட்பாட்டுடன் தொடர்புடையவர்களுக்கு ஒரு தரவாக அமைகிறது என்பதே இதன் சிறப்பு. இதன்பொருள் பூஃக்கோவியச் சிந்தனையை தமிழ் ஒளி கூறுகிறார் என்பதல்ல. அவரது புரிதல் படைப்பிலக்கிய உளவியலின் ஆழத்தில் இப்படியான ஒரு கருத்தை வந்தடைகிறது என்பதே.

''முற்றிலும் அழிந்த மொழிகள், செத்த மொழிகள் ஆகா. ஏட்டில் மட்டும் நின்று, பேச்சு வழக்கற்ற மொழிகளே 'செத்த மொழி'களாம்'' (18) என்று செத்த மொழிகள் என்பதற்கு அவர் வரையறுக்கும் வரையறை முக்கியமானது. சமஸ்கிருதம் ஏன்

செத்தமொழி என்கிறோம் என்றால், அது பேச்சு வழுக்கற்ற மொழி என்பதால்தான். ஆனால், இன்றைய இந்துத்துவ அரசு அதற்கு உயிர் கொடுக்க, ஒரு சில கிராமங்களில் மக்களிடம் பேச்சுமொழியாக்க முயல்கிறது. பொதுவாக, சமஸ்கிருதத்தை வடமொழி என்று பயன்படுத்துவது எதனால் என்று அதன் பெயர்க்காரணத்தை ஆராய்கிறார். (ஆனால், கோவையைச் சேர்ந்த பெயல் ஆசிரியர் நண்பர் மு. செந்தில் குமார் நான் ஒரு கட்டுரையில் சஸ்கிருதம் என்பதற்கு பதிலாக வடமொழி என்று எழுதியபோது, அந்த சொல்லாட்சி திட்டமிட்டு பரப்பப்டுகிறது. உண்மையில், அது ஆரியமொழி. எந்த வகையிலும் அது வடமொழி அல்ல என்பதை நினைவுபடுத்தினார். அவ்வகையில் வடமொழி என்பது பாலி, பிராகிருதம், பைசாசம் மற்றும் உள்ள குஜராத்தி, மராட்டி, பெங்காலி, பஞ்சாபி போன்ற இன்னபிற மொழிகளையே குறிக்கும். எக்காலத்திலும் சமஸ்கிருதத்தை வடமொழியாகக் கருதக்கூடாது. தொல்காப்பியம் கூறும் வடசொல் என்பதை இந்நோக்கில் நாம் புதிய கோணத்தில் புரிந்துகொள்ள முயலவேண்டும்.) தமிழ் ஒளி வடமொழி என்ற சொல்லாட்சிக்கு காரணம் வடக்கே வென்று பல மொழிகளில் கலந்து தின்று செரித்ததால்தான் அதனை வடமொழி என்கிறோம் என்பதை சுட்டுகிறார்.

இதன் தொடர்ச்சியாக நன்னூல் ஆசிரியர் பவணந்தி சமணர் என்றாலும், ஆரிய சமஸ்கிருத சார்பு உள்ளவர் என்கிறார். அவர்கள் சமஸ்கிருத இலக்கணத்திலிருந்து, தற்சமம், தற்பவம் என்ற வடமொழி இலக்கணத்தை தமிழில் கொண்டுவந்து குளறுபடி செய்கிறார்கள் என்று கண்டிக்கிறார். இதன்மூலம் பழந்தமிழ் சொற்களை ஆரிய சொற்கள் என்று காட்டும் கூத்தை நிகழ்த்துவதாக கடுமையாக அவ்விலக்கண நூல்களைக் கண்டனம் செய்கிறார். திசைமொழி, வடமொழி வேறுபாடுகளைக் கூறி, ஆரிய மொழியை பிரித்தறிய உருவானதே வடமொழி என்பதைக் கூறுகிறார். அந்நத அளவிற்கு நுட்பமாக மொழி அரசியலை தனது ஆழமான தமிழ் அறிவால் கண்டுணர்ந்துள்ளார் தமிழ் ஒளி. இதன் தொடர்ச்சியாக "பழந்தமிழிற் சமத்கிருதம் புகுந்ததால் எழுந்தவையே 'வடுகர் நாட்டு' மொழியாம் தெலுங்கும், எருமை நாட்டு மொழியாம் கன்னடமும், மலைநாட்டு மொழியாம் மலையாளமும்." (ப.24) என்று முத்தாய்ப்பாக தனது ஆய்விற்கு ஆதாரமாக முன்வைக்கிறார்.

அவரது இந்த ஆய்வில் தேசியம் என்பது எப்படி மொழி வழியில் ஒரு கூட்டு நனவிலியாக கட்டமைகிறது என்பதை உளவியல் அடிப்படையில் அன்றைக்கான மொழியில் ஆராய்கிறார். ஒருமித்த உளப் பண்பு என்று 'சைக்காலிஜக்கல் மேக்கப்' (psychological make-up) என்று ஆங்கிலத்தில் இதனை

சுட்டுகிறார். 'ஒரு தேசிய இனத்தின் எப்பகுதியேனும் சிறிதோ, பெரிதோ ‘ஒருமித்த உளப்பண்பு’ கொண்டிராவிடில், நாளடைவிற் சிதறுண்டுவிடும்.'' (ப.25) என்று தேசிய உளப்பாங்கு ஒருமித்ததாக அமைய வேண்டும் என்ற தேசிய வரையறையின் உளவியலைப் பேசுகிறார். ஒருமித்த உளப்பண்பில் இருந்த தென்னகம் சிதறுண்டுப் போனது ஆரிய மொழிக் கலப்பால் என்கிறார். இதற்குள் இன்றுள்ள திராவிடர், தமிழர் சர்ச்சைக்கான பதில் உள்ளது. இங்கு தமிழில் சமஸ்கிருத மொழிக் கலப்பினால் திராவிட தேசியம் சிதறுண்டு மலையாளம், தெலுங்கு, கன்னடம், தமிழ் என்று சிதறிவிட்டது என்கிறார். ‘‘கடல் பிரித்தாலும் கருத்தில் ஒருமித்த உளப்பாங்கைக் கொண்ட ஈழத்தமிழர்கள்'' தாய்மொழியாக தமிழைக் கொண்டிருப்பதை சுட்டுகிறார். ஈழத்தமிழில் சமஸ்கிருத கலப்பு நிகழவில்லை என்பதால், தமிழின் தொன்மை வடிவமாக அது இருப்பதும், தமிழ்நாடு தமிழர்களிடமிருந்து வேறுபட்ட உச்சரிப்பும், சரியான தொன் தமிழ் சொற்களும் பயின்று வருவதைக் காணலாம். ஒரு தேசிய இனத்தின் ‘ஒருமித்த உளப்பண்பை’ உருவாக்கும் கருவியாய் இருப்பது மொழிதான் (ப.26) என்பதை அறுதியிட்டுக் கூறுகிறார். மொழித் திரிந்தால் உளம் திரியும் என்று கூறும்போது, புறநிலையான மொழி அகநிலையான மாற்றத்தை உருவாக்கும் மார்க்சிய பொருள்முதல்வாதப் பார்வை வெளிப்படுவதைக் காணலாம்.

அடுத்து அயோத்திதாசர் தொடங்கி இன்றும் தீர்க்கப்படாத சர்ச்சையாக உள்ள இந்திரன், இந்திரதேசம் என்ற தொன்மங்கள் குறித்துப் பேசுகிறார். ‘‘கம்பரில், கைக்கிளையிலிருந்த இந்திரன், வெ.ப.சு. அவர்களில் பெருந்திணைக்கு வந்து விடுகிறான்.'' (27) என்று ரசிக்கும்படி எழுதும்போது அவரது படைப்பாளுமை, தமிழ் இலக்கண அறிவு செய்தியை எளிமையாக கொண்டு சேர்த்துவிடுகிறது. இந்திரன் அகலிகைப் பிரச்சனையை ஆராய்ந்து ‘‘இவ்விரு சாராருடன் இணையாத ஓர் அபூர்வக் கருத்தையும் நாம் தமிழ் இலக்கியத்திற் காண்கிறோம். அக் கருத்திற்குரியவர் மோகன ஆற்றலைப் பெற்றுள்ள புதுமைப் பித்தன் என்பவர் ஆவார்.'' (ப.28) என்று குறிப்பிடும்போது, சமகால இலக்கியத்தில் அவருக்குள்ள தொடர்பும், அதனை சரியாக எடுத்து பொறுத்திப் பார்க்கும் தன்மையும் விளங்குகிறது. இன்றைய இந்துத்துவம் ஆதிக்கம் வகிக்கும் சூழலில், புதுமைப் பித்தனின் ‘சாபவிமோசனம்’ அவரது தலைக்கு பல இந்திய சாமியார்களின் பயணத்தொகை பரிசளிப்பால் தலைவெட்டப்படும் பாப விமோசனமாக மாறியிருக்கும். இங்கு கூறவருவது, தமிழ் ஒளி அவர்கள் தமிழ் இலக்கியத்தின் இந்திரன் குறித்த பதிவாக இதனை எடுத்து பதிவு செய்வதன்மூலம் உருவாகும்

ஆரிய எதிர்ப்பு தமிழின் ஆழ்தள உளவியலாக அமைந்திருப்பதை சொல்வதாகிறது.

இந்திரனை இவர் தமிழின் ஐந்திணையில் தீம்புனல் உலகைச் சேர்ந்த கடவுள் என்பதால், காவிரி பூம்பட்டினம் இந்திர விழா எடுத்தது உட்பட சான்றுகளைக் காட்டி, “தவத்தால் உயர்ந்த தமிழகத்தின் இந்திரன், வேதங்களுக்கும் முற்பட்டவன். இமயத்தின் வடபால் உள்ளோராலும் வணங்கப்பெற்றவன்.” (ப.30) என்கிறார். ஆக, இந்திரன் என்ற ஆரிய வேதமுதல்வனை தமிழ் மரபில், தொன்மத்தில் வைத்துப் பார்க்கும் பார்வை அன்றைய தலித்திய அறிஞரான அயோத்திதாசர் வழி மொழிக்குள் புழங்கிய ஒன்றா? என்பதற்கான தடமாக இக்கருத்தைப் புரிந்துகொள்ளலாம். முழுக்க ஆரிய மேன்மையைப் பேசும் புராணக் கதைகளை தலைகீழாக்கும் ஒரு முயற்சியின் விளைவே இது. இதனை நவீனக் கோட்பாட்டில் மொழி விளையாட்டு (Language Game) என்பார்கள். உங்கள் மொழியில் எங்கள் கருத்தை வைப்பதன் மூலம், உங்கள் மொழியின் பொய்மையை அம்பலப்படுத்துவது. உங்களது பெருங்கதையாடலை இத்தகைய சிறு, நுண் கதையாடல்கள் வழி செயலிழக்கச் செய்வது. அதாவது. ஆதிக்க கருத்துருவாக்கத்தில் சொல்லப்பட்ட இந்திரன் என்கிற கடவுளை, தமிழக இந்திரனாக்கி அவனை ஒரு பொருள்முதல்வாதியாக முன்வைப்பது. அதற்கான கதைகளை உருவாக்குவது. அதனை தமிழ் ஒளி தமிழ் இலக்கிய தரவுகள் வழி முன்வைக்கிறார் இதில். ”அவன் பொருண் முதன்மைத் தத்துவ நூலுக்குப் பெயர், ‘ஐந்திரம்’ என்பதாகும்.” (ப.30) இந்த இந்திரன், இந்திரதேசம் என்கிற அயோத்திதாசர் முதல் இன்றுவரை தலித்தியர்கள் முன்வைக்கும் கருத்திற்கு அடிப்படையாக அமைவது தமிழின் மூல முதல் நூலில் ஒன்றான ஐந்திரம் பற்றியதே. அதனை அடிப்படையாக் கொண்டு இந்திரன் குறித்த கருத்தை வளர்த்தெடுக்கிறார். ஆரியர் வேதகால இந்திரன் வேறு, ஐந்திரம் உருவாக்கிய, சிலப்பதிகாரத்தில் கவுந்தியடிகள் கூறும் கப்பத்திந்திரன் வேறு என்பதை தரவுகளுடன் கூறி, இந்த கப்பத்திந்திரனை பின்பற்றிய தொல்காப்பியர் பொருள்முதல்வாதி என்று நிறுவுகிறார். ஆனால், பரிமேலழகர் இந்திரனுடன் இந்த கப்பத்திந்திரனை சேர்த்து குழப்பிவிட்டார் என்கிறார். இப்பகுதியில் ஒரு தெளிவின்மை இருப்பதைக் காணமுடிகிறது. இதனைத் துறைசார்ந்த ஆய்வாளர்களே தீர்க்கமுடியும். காரணம், இந்திரனை தமிழ்த் திணைக்கடவுள் என்று கூறும் தொல்காப்பியர், ஆரியக் கடவுளைக் கூறவில்லை என்றும், தமிழில் கப்பத்திந்திரனைத்தான் கூறுகிறார் என்கிறார். மற்றொரு இடத்தில் ஆரியக் கடவுள் இந்திரனும், தமிழ்க் கடவுள் ஆன கப்பத்திந்திரனும் ஒன்றல்ல

என்கிறார்.

## தமிழ் மொழி வரலாறு

தமிழ் மொழியின் ஆற்றலைப் பற்றிப் பேசும் அடுத்த பகுதியில், தமிழ் பொருண்முதன்மைக் கருத்து (ப.32) என்பதை விவரிக்கிறார். அதன்பின் தமிழ் என்ற சொல்லை கால்டுவேல் சொல்லாய்வு அடிப்படையில் ஆராயந்து, கால்டுவெலின் கருத்தில் உள்ள குறைகளைச் சுட்டுகிறார். நூலின் இப்பகுதி மிக முக்கியமான தற்கால தமிழ் விவாதத்தை தலைகீழாக்குகிறது. அதாவது, இதுவரை திராவிடம், தமிழ் சர்ச்சையில், திராவிடம் என்ற சமஸ்கிருத சொல்லே தமிழ் என்ற சொல்லிற்கு மூலம் என்கிற கால்டுவெல் கருத்தையே அடிப்படையாகக் கொண்டு பேசிவருகிறோம். ஆனால், தமிழ் ஒளி அவர்கள் அதில் புதிய ஒளியைப் பாய்ச்சி அவரது கட்டுடைப்பு பாணி, தலைகீழாக்கும் முறையியலைப் பயன்படுத்தி, தமிழ் என்ற சொல்லே 'த்ரமிட்' என்று சமஸ்கிருதத்தில் மாறியது (ப.39) என்பதை விரிவான இலக்கண மொழியியல் வேர்ச்சொல் ஆய்வுகள் வழி நிறுவுகிறார். இலங்கை 'மகாவம்சம்' தொடங்கி, பல்வேறு ஐரோப்பிய நாடுகளின் பழங்காலத்தில் பயன்படுத்திய சொற்கள் என விரிகிறது இவ்வாய்வு. கால்டுவெல் அவர்கள் திராவிட என்ற சொல்லே சமஸ்கிருதத்தில் 'த்ரமிள' என்பது திரிந்து தமிழ் என்று வந்தது என்று பிறழ உணர்கிறார் என்கிறார். காரணம் தமிழின் சிறப்பு 'ழ'கரம் வேறு மொழிகளில் இல்லாததால் தமிழ் என்பதிலிருந்தே திராவிட என்பது மறுவியுள்ளது என்பதை விவரிக்கும் பகுதிகள் மொழியில் இவரது ஆழ்ந்த புலமையை வெளிப்படுத்துவதாக உள்ளது. "உண்மையில் பார்க்கப் போனால், 'தமிழ்' என்பதே, சமத்கிருத ஒலி முறைப்படி, 'த்ரமிட.' என்று மாறியது." (ப.39) என்ற முடிவிற்கு வாசிப்பவரை கொண்டு வந்துவிடுகிறார். தமிழ் என்பதன் பொருள் "தனித்து நின்று 'ழ'கரம் பெறுதல் அல்லது தனித்து நின்று 'ழ'கரம் பெறும் மொழி." (ப.40) என்ற முடிவிற்கு வருகிறார். இப்படித் தனித்தன்மையான ஒரு பார்வையை முன்வைப்பதால்தான் தமிழியம் குறித்த ஆய்வில் இவரது நோக்கும், போக்கும் முக்கியமானதாக உள்ளது.

மேலும், இரண்டு கேள்விகளை முன்வைக்கிறார். (1.) திராவிடத் திலிருந்து தமிழில் வருவிப்பதைப்போல தெலுங்கிற்கு ஏன் வருவிப்பதில்லை (2.) தமிழ் என்பதே திராவிடம் என்பதற்கான மூலச் சொல் என்பதை கால்டுவெல் தவறவிட்டுவிட்டார் என்று கூறி, கால்டுவெலைத் தலைகீழாக்கும் பணியைச் செய்கிறார் தமிழ் என்ற சொல்லாய்வில். திராவிடம் என்பதன் மூலம் தமிழே என்று கூறுவது, இன்றுள்ள திராவிட தமிழ் சர்ச்சைக்கான பதிலாக உள்ளதை அறியலாம்.

## புராணக்கதைகள், கீதை, புத்தர்

"வட இந்தியாவில் பாண்டவர், கவுரவர், ஆயர்குலக் கண்ணன் ஆகியோர் உறுதிசான்ற அரசுகளை நிறுவி, வாழ்ந்த முப்பெரும் பிரிவினர் ஆவார். அவ்வாறே தென்னகத்தில் சேர, சோழ, பாண்டியர் என்பாரும் உறுதிசான்ற அரசுகளை நிறுவி ஆண்ட முப்பெரும் பிரிவினர் ஆவர்." (41) என்று ஓர் ஒப்புமையைத் தருகிறார். வட இந்தியாவில் ஆண்ட அந்த மூவேந்தர்களுக்கு எந்த வரலாற்று அக, புற சான்றுகள் இல்லை ஆனாலும், தமிழ் ஒளி அதனை ஒரு வரலாற்று நிகழ்வாக, மாந்தர்களாக கருதுவது சற்றே நெருடலான ஒரு பார்வையை தருவதாக உள்ளது. இதன்வழி, அவர் கூற வருவது அனைத்து பண்டைய மன்னர்களும் திராவிடர்களே என்பதே. ஐந்திணைக் கடவுள்கள் எப்படி ஆரியக் கடவுள்களுடன் பொருந்துகிறார்கள் என்பதைக் கூறும் தமிழ் ஒளி, "விந்தங்காடு தொடங்கி, வடமதுரை வரை காணப்பட்ட காட்டுலகிற்கு மாயோன் தலைவன்" என்றும், கோவிந்தம் என்பதை கோ + விந்தன், மாயோன், விந்தக் தலைவன் (ப.42) என்று பொருள் கூறுகிறார். அதைத் தொடர்ந்து கண்ணனுக்கு முன்னவன் மாயோன் என்றும், கண்ணனை ஆரியர் தன்வசப்படுத்தினர் என்றும் குறிப்பிடுகிறார். "அவனே பாண்டவர், கௌரவர் இரு தரப்பினருக்கும் அழிவைத் தேடியவன்" என்பதையும் பகவத் கீதை உரைத்த கண்ணன் தமிழ் கடவுள் அவனை வைத்து ஆரியர்கள் தங்கள் பாரதப்போரை நடத்தினர் என்று கூறும் கருத்துகள், அவரது ஊகங்களாக மட்டுமே உள்ளது. அதாவது, ஒரு மாதிரியைக் கட்டி, அயோத்திதாசரைப்போல கட்டுக் கதைக்கு ஒரு முட்டுக் கதை உருவாக்கியதைப் போல அமைந்துள்ளது. இது மகாபாரதம் குறித்த புதிய மாற்று வாசிப்பாக உள்ளது. இது எதிர்மறை விளைவைத் தரும் சமூக அரசியல் தன்மைக் கொண்டதாக மாறிவிடும் அபயாத்தைக் கொண்டது என்பதை பதிவு செய்வது அவசியம்.

அடுத்து, பாண்டவர்கள், கேளவரவர்கள் திராவிடர்கள்தான், அவர்களை ஆரியர்கள் மோதவிட்டு அழித்தனர். அதற்கு கண்ணன் என்கிற தமிழ்க் கடவுளைப் பயன்படுத்திக் கொண்டனர் என்கிறார். இது ஒருவகை எதிர் வாசிப்பு எனலாம். அதாவது, ஒரு மாதிரியைக் கட்டுதல் அதை வைத்து எதிர்க் கதையாடலை உருவாக்குதல் பிறகு அதன் அதிகாரத்தை தனதாக்குதல. ஆனால், அவரது ஆய்வில் ஒரு முடிவு சரியானது. அது ஆரியக் கொள்கைப் போர்க் கொள்கை (ப.42) என்பது. அவர்கள் தொடர்ந்து போர்களை நடத்தி வடநாடுகளை பிடித்தனர். அதன்பின் தென்னிந்தியாவில் மூவேந்தர்களிடையே போரை மூட்டி தென்னிந்தியாவைப்

போர்க்களமாக்கினார்கள் என்கிறார். இக்கூற்றில் உள்ள உண்மையை மறுக்க முடியாது. ஆரியர்கள் சாளுக்கிய, பல்லவ படையெடுப்புகளைப் பயன்படுத்தி தென்னிந்தியாவில் ஆரிய மேலாதிக்கத்தை நிறுவினார்கள் என்பதே வரலாறு.

'ஆரியவர்த்தம்' பண்டைய திராவிட மொழிகளைப் பேசிய மக்கள் வாழ்ந்தனர் என்பதற்கு ஆதரமாக "'பிரகத்கதை'யை யாத்த குணாட்டியார் போன்றோர் ஆரிய ஒடுக்கு முறையை எதிர்த்துக் காடு புகுந்து, அக்காட்டு மக்களின் மொழியாகிய பைசாச மொழியிலேயே தம் பெரு நூலை இயற்றினார் என்று கொள்வதில் பிழைபாடு நேராது என்றே கருதுகின்றேன்." (ப.43) என்ற கருதுகோளை முன்வைக்கிறார். அடுத்து, புத்தர் மரபை திராவிட மரபு என்கிறார். இவரது இத்தகைய வாதங்கள் நிலைபாடுகள் பெரும்பாலும் அயோத்திதாசரை ஒட்டி இருக்கிறது. ஆனால், ஓரிடத்தில்கூட அயோத்திதாசரைப் பற்றிய குறிப்பு ஏதும் இல்லை. இந்த அடிப்படைகளில் இருந்தே திராவிடத்தை ஒன்றிய முழுமைக்குமான சிந்தனையாகக் கொள்கிறார் (ப.44). வடபுல திராவிடரை வீழ்த்திய ஆரியர், தென்புல திராவிடரை வீழ்த்த முடியவில்லை (ப.45) என்றும் "எங்கெல்லாம் திராவிடக் கூறு காணப்பெறுமோ, அங்கெல்லாம் ஆரிய எதிர்ப்பும் காணப்பெறுதல் இயற்கை!" (ப.43) என்பதை தனது முடிவாக முன்வைக்கிறார். இவரது 'திராவிடக் கூறு' என்ற கருத்தாக்கம் முன்பே சுட்டியதைப்போல ஒரு விரிந்த தளத்தில் பொருள்கொள்ளத் தக்கதாகவும், அதனை நவீன கோட்பாட்டு சிந்தனையில் உயிரரசியல் சார்ந்தும், உடலரசியல் சார்ந்தும் விரிவுபடுத்துவதற்கான அடிப்படைகளைக் கொண்டிருக்கிறது எனலாம்.

### மூவேந்தர்கள்

இறுதியாக, இவர் கவனம் குவிப்பது கால்டுவெல்லின் மூவேந்தர்களின் பெயர்கள் ஆரிய சமஸ்கிருதப் பெயர்கள் என்பதை மறுத்து அதற்கான எதிர்நிலைக் கருத்தை கட்டமைப்பது. முதலில் சோழர் என்ற சொல்லை எடுத்துக் கொண்டு 'சோ' என்று மழைபெய்யும் மருத நிலத்தை ஆண்ட மன்னர்கள் என்பதால் இவர்கள் சோழர்கள் எனப்பட்டனர் என்றும், புராணத்தில் வாணாசுரன் நகரம் "சோ" எனப் பெயர்பெற்றது (ப.46) என்பதைத் தரவாக முன்வைக்கிறார். "வீழ்" என்பதில் வீழ்தற் பொருள் பெறும் 'ழ்' 'சோ' என்ற ஒலி, தரையை நோக்கி என்றும் வீழ்வதாக, அவ்வொலியை முற்பட ஏற்றும், 'அம்'விகுதி எய்தியும், 'சோ ழ்+அம்' என்று இணைந்து, 'சோழம்' ஆனது." (ப.46) என்பதாக முன்வைக்கிறார். அவ்வாறே சேயோனின் மைவரை உலகு சேர்வோர், சேரர் ஆயினர். பாண்டியன் குறித்து பல புராணங்கள்,

திருவிளையாடல்கள் கதைகள் வழி மதுரை சிவன் பாண்டியன் எனச் சொல்லாய்வை (ப.47) நீட்டிச் செல்கிறார். 'பாண்டு' என்பது வெண்மையைக் குறிக்கும் என்று தொடங்கி, கொளரியர் என்ற தாய் தெய்வத்துடன் இணைத்துச் செல்கிறது இவ்வாய்வு. சுருக்கமாக, அவர் கால்டுவெலின் பெயர்க்காரணத்தை மறுத்து அது தமிழ் சார்ந்த பெயர்தான் என்பதை நிறுவ முயன்றுள்ளார். இது வலிந்தேற்றலா? அல்லது அதற்கு ஏதெனும் ஆதாரங்கள் அல்லது ஆய்வு முறையிலான எடுத்துரைப்பா? என்பதை இனிவரும் ஆய்வாளர்கள்தான் சொல்ல வேண்டும். அல்லது ஏற்கனவே இதில் ஆய்வுகள் நடந்துள்ளதா என்பது தெரியவில்லை.

"திராவிடர்களின் சமயங்களாகிய சைவம், வைணவம், சமணம், புத்தம் ஆகிய நான்கும் சிவன், முருகன், மாயோன், இந்திரன் ஆகிய நால்வரையும் ஏற்றுக் கொண்டுள்ளன. பிற்காலத்து வந்து நிலைபெற்ற ஆரியர் இந்திரனை ஏற்றுப் புகழ்ந்தனர்; பின்னர் இகழ்ந்தனர்; முரண்பாட்டின் இறுதி எல்லையை எய்தினர்" (ப.50) என்கிறார். இக்கருத்து மேற்சொன்னவகையில் விவாதிற்குரியதாக உள்ளது. இது மேற்கண்ட அவரது உரையாடலின் ஒரு நீட்சியாக இருந்தாலும், சமணம், புத்தம் போன்றவைற்றின் கடவுளாக குறிக்கப்படுபவை திறனாய்விற்கு உரியவை என்று பதிவு செய்வது அவசியம். இந்நூலுக்கு இரண்டாம் பகுதி வருவதாக ஒரு அறிவிப்பு இந்நூலில் உள்ளது. அது வெளிவந்ததா எனத் தெரியவில்லை.

## முடிவுரை

தனது ஆய்வுமுறையை விஞ்ஞான முறை (ப.47) என்று கூறும் தமிழ் ஒளி நூல் முழுவதும் அகச்சான்றுகளாக உள்ள இலக்கியங்கள், புராணங்களை மட்டுமே எடுத்தாளுகிறார். அதைவிட்டால் புறநிலையில் மொழியை, பண்பாட்டை, வழிபாடுகளை ஆய்விற்கு உடபடுத்துகிறார். ஒருவகையில் இவ்வாய்வை 'பண்பாட்டு ஆய்வு' (Cultural Study) என்று கூறலாம். ஆனால், பண்பாட்டு ஆய்வு என்பது பிற்கால மார்க்சியர்கள், குறிப்பாக இங்கிலாந்தைச் சேர்ந்த ரெய்மாண்ட் வில்லியம்ஸ் முன்வைக்கும் 'பண்பாட்டுப் பொருள்முதல்வாதம்' (Cultural Materialism) என்ற கோட்பாட்டு நிலையில் வெளிப்படும் ஓர் ஆய்வு முறையே 'பண்பாட்டு ஆய்வு' என்பது. அது மக்கள் பண்பாட்டை ஒரு பொருண்மைத் தன்மைக் கொண்ட தரவாகக் கொண்டு ஆய்வு செய்து, மக்கள் வரலாற்றை அறிய முற்படுவது. இதன் நீட்சியே அமெரிக்கக் கோட்பாடான 'புது வரரலாற்றுவாதம்' அல்லது 'புது வரலாற்றியம்' (New Historicism) என்பது. இச்சிறு நூல், தனிப்பட்ட முறையில் எனக்கு ஏற்படுத்திய உணர்வு என்பது, இப்படியான நவீனக் கோட்பாடுகள்

வழி புரிந்து கொள்வதற்கான ஒரு வாசிப்பின்பத்தை தரக்கூடியதாக அமைந்தது என்பதே. அவ்வகையில் தமிழ் ஒளியின் அனைத்து எழுத்துக்களையும் வாசித்து அவரது பொருள்முதல்வாத நோக்கை வெளிப்படுத்த வேண்டிய தேவையை உணர்த்துவதாக அமைந்துள்ளது.

மார்க்ஸ், அம்பேத்கர், பெரியார் என்கிற ஒரு கூட்டு கருத்தியலுக்கான படைப்பு புலமாக தமிழ் ஒளியின் படைப்பு உளவியல் செயல்பட்டுள்ளதை இவ்வாசிப்பின் வழி உணர முடிந்தது. தலித்திய சிந்தனையின் உயிர்நாடியாக இருப்பது ஆரிய (பார்ப்பன) எதிர்ப்பு, தாய்மொழிப்பற்று, மொழிநிலத் தேசியப்பற்று, பொருள்முதல்வாதப் பார்வை, ஆகியவற்றை தமிழ் ஒளி இயல்பில் கொண்டிருப்பதை அறிய முடிகிறது. இச் சிறுநூல் சமஸ்கிருதம், தமிழைவிட உயர்ந்தது என்ற கருத்தை தலைகீழாக்கி, சமஸ்கிருதத்தின் அடிப்படைகளை தகர்த்து தமிழை முதன்மைப்படுத்தும் ஒரு தகர்ப்பமைப்பு நூலாக அமைந்துள்ளது என்றால் மிகையாகாது.

தமிழ் ஒளி அவர்களுக்கு நாம் செய்யும் மரியாதை, நினைவு என்பது எப்படி அமைய வேண்டும் என்பதற்கான கீழ்கண்டக் கோரிக்கைகளுடன் இக்கட்டுரையை முடிக்கிறேன்.

(1.) முழுமையாக தமிழ் ஒளி அவர்களின் படைப்புகளைத் தொகுப்பாக வெளியிட வேண்டும். அவரது படைப்புகளை வெளிக்கொண்டுவருவதை தனது வாழ்நாள் பணியாக செய்து மதிப்பிற்குரிய செ. து. சஞ்சீவி மற்றும் தமிழ் ஒளி குடும்பத்தைச் சேர்ந்த யாரிடமாவது காப்புரிமை இருந்தால் அதைப் பெற்று நாட்டுடைமை ஆக்க தமிழக அரசு ஆவன செய்ய வேண்டும்.

(2.) தமிழக அரசு தொடக்கக் கல்விப் பாடத்திட்டத்தில் தமிழ் ஒளி கவிதைகள், பாப்பா பாடல்கள் போன்ற படைப்புகள் வைக்கப்பட வேண்டும். ஏற்கனவே வைக்கப்பட்டுள்ளது என்று செ. து. சஞ்சீவி குறிப்பிடுகிறார். அது இன்னும் அதிகக் கவனப்படுத்த வேண்டும்.

(3.) கல்லூரிப் பாடத்திட்டத்தில் தமிழ் ஒளியின் காவியங்கள், ஆய்வு நூல்கள் வைக்கப்பட வேண்டும்.

(4.) முற்போக்காளர்களின் படைப்பு எழுத்துக்களுக்கு அரசு தமிழ் ஒளி பெயரில் விருதுகள் வழங்கலாம்.

**நூல் குறிப்பு:** தமிழும் சமஸ்கிருதமும் (ஆராய்ச்சி நூல்), கவிஞர் தமிழ் ஒளி, 1960, வள்ளுவர் பண்ணை, சென்னை1. வெளியிட்டோர்: மக்கள் நூலகம், சென்னை-29

♦♦♦

# தமிழ்ச் சமூகம் குறித்த தமிழ்ஒளியின் பார்வை

சதீஷ்குமார்

சித்தாந்தப் பிடிமானத்தில் இம்மியளவும் பிசகாமல் வாழ்ந்த கவிஞர்கள் மூவரைக் கூறுங்கள் என்று கேட்டால் பாரதி, பாரதிதாசன், தமிழ்ஒளி என்று சட்டெனச் சொல்லிவிடலாம். முப்பெரும் கவிஞர் மரபில் தன்னைப் பொருத்திக்கொண்ட மனிதனான தமிழ்ஒளி, மானுட குலத்திற்காகக் கூவிய பொதுவுடைமைக்குயில். 40 வயதில் மரணித்தமையால் பாரதியையும், தன் எழுத்துவல்லமையால் பாரதிதாசனையும் நகலெடுத்திருந்த தமிழ்ஒளி, புதுமைப்பித்தனைப் போல் பல்வேறு வாழ்வியல் நெருக்கடிகளைக் கண்டவர். அவரது நூற்றாண்டு விழாத்தருணத்தில் தமிழ்ச்சமூகம் குறித்த அவரது பார்வை பற்றிய புரிதல் எல்லோருக்கும் அவசியமாகிறது.

**இன்னல் வாழ்க்கை**

பொதுவான ஊகங்களுக்கு அப்பாற்பட்டது தமிழ்ஒளியின் வாழ்வு. சின்னய்யா-செங்கேணி தம்பதிக்கு மகனாகப் பிறந்த (21.09.1924) அவரது இயற்பெயர் விஜயரங்கம். புதுச்சேரி சாமிப்பிள்ளைத் தோட்டமே அவர் குடும்பத்துக்குப் பூர்வீக வசிப்பிடம். ஆரம்பக்கல்வியை அரசுப் பள்ளியிலும் உயர்நிலைக் கல்வியைக் கல்வே கலாசாலையிலும் பயின்ற தமிழ்ஒளி, புதுவை திராவிடர்கழகத்தில் மன்னர் மன்னனுடன் (பாரதிதாசன் மகன்) உற்ற தோழனாக இணைந்து செயல்பட்டார். சுயமரியாதைக் கருத்துகளைப் பரப்ப "முரசு" எனும் கையெழுத்துப்படி ஏட்டைத் தொடங்கி நடத்தினார். அது பரவலான கவனத்தைப் பெற்றது. பாரதிதாசன் முரசு இதழைப் படித்துவிட்டு வெகுவாகப் பாராட்டினார். இதன் மூலம் பாரதிதாசனுடன் தமிழ்ஒளிக்கு ஆழமான நட்பு ஏற்பட்டது. தான் இயற்றிய "பாண்டியன்பரிசு" நாடகத்தின் கையெழுத்திலான படியை நகலெடுக்கும் பொறுப்பைத் தமிழ்ஒளி யிடம் வழங்கினார் பாரதிதாசன். சரியான வருவாய் இல்லாத தமிழ்ஒளி, பாரதிதாசனிடம் முறையிட அவரைக் கரந்தைத் தமிழ்க் கல்லூரியில் தமிழ் படிக்க அனுப்பிவைத்தார். முதன்முதலில் கரந்தையில் அவருக்குச் சாதிய ரீதியாக மனஅழுத்தம் உயர்சாதி மாணவர்களால் ஏற்படுத்தப்பட்டது. படிப்பைப் பாதியில் விட்டு விட்டுப் புதுவைவந்த தமிழ்ஒளி மீண்டும் கரந்தையில் காலடி எடுத்துவைக்கவில்லை. தொடர்ந்து திராவிடர்கழகச் செயல்பாடுகளில் தீவிரமாகத் தன்னை இணைத்துக் கொண்டார். திராவிடநாடு,

குடிஅரசு முதலான ஏடுகளில் தமிழ்ஒளியின் கவிதைகள் வெளியாகிக் கவனம் பெற்றன. தொடர்ந்து கவிஞனின் காதல், சிற்பியின் கனவு, வீராயி, நிலைபெற்ற சிலை போன்ற படைப்புகளை இயற்றினார். தொடர்ந்து கவிஞர் குயிலன் அவர்களோடு ஏற்பட்ட தொடர்பு அவரை முழுமையான பொதுவுடைமையாளராக மாற்றியது. குயிலன் அவர்களின் தலைமையில் உருவான ‘‘முன்னணி‘‘ ஏடு 48 இதழ்கள் வெளிவந்தது. இவ்வேட்டின் துணை ஆசிரியராகத் தமிழ்ஒளியும் எஸ்.ஆர்.எஸ். ராஜனும் செயல்பட்டனர். முன்னணியில் தமிழ்ஒளி எழுதிய மேதின வாழ்த்துப் பாடலும் சீனப்புரட்சி வாழ்த்துக் கவிதையும் குறிப்பிடத்தக்கவை. தொடர்ந்து சோவியத் அதிபர் ஸ்டாலின் வாழ்க்கை வரலாற்றை நாடகமாக்கும் முயற்சியில் இறங்கி வெற்றியும் பெற்றார். தொடர்ந்து சென்னை வந்த தமிழ்ஒளிக்கு சுப்ரமணியம், சஞ்சீவி போன்றோர் இருப்பிட ஏற்பாடு செய்தனர். சிறிதுகாலம் மனச்சிதைவு நோய்க்கு ஆளாகி இருந்த தமிழ்ஒளி பின்னர் அதிலிருந்து மீண்டார். தொடர்ந்து இயற்கைச்சூழலில் (செனாய்நகர் வயல்பரப்பு) பல நாட்கள் முயன்று மாதவி காவியத்தை எழுதினார்.

பௌத்தம் தொடர்பான நூல்களைத் தேடித்தேடி படிக்கத் தொடங்கினார், தமிழ்ஒளி. கடும் பொருளாதார நெருக்கடியிலும் ஒன்பது காவியங்கள், பலநூறு தனிக்கதைகள், இரண்டு குறுநாவல்கள், முப்பதுக்கும் மேற்பட்ட சிறுகதைகள், இருபது ஓரங்க நாடகங்கள், மூன்று மேடை நாடகங்கள், மூன்று இலக்கிய ஆய்வு நூல்கள் என ஒரு படைப்பாளராக உச்சம் தொட்டார். விஜயன், சிவி.ர., தமிழ்ஒளி, பாணன். ஜெயங்கொண்டான் எனப் பல பெயர்களில் எழுதினார். கடுமையான ஆஸ்துமாவினால் பாதிக்கப்பட்டிருந்த தமிழ்ஒளி பாண்டிச்சேரி ஜிப்மர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார். இல்லறவாழ்வைப் பற்றிச் சற்றும் நினையாத தமிழ்ஒளி சரியாகச் சிகிச்சைக்கும் ஒத்துழைக்கவில்லை. பத்துமாத காலம் நோயுடன் போராடி மனஉழல்வுக்கு ஆளான தமிழ்ஒளி 29.03.1965 அன்று மரணமடைந்தார். ஏழைகளுக்காக, வறுமைக்காக எழுதிய கவிஞன் இறுதிக்காலத்தில் வறுமையாலே மாண்டார்.

**தமிழ்ச் சமூகவியலும் தமிழ்ஒளியும்**

தமிழ்ச் சமூகத்தின் மீது ஆழமான அக்கறையும் புரிதலும் கொண்டிருந்த படைப்பாளியாக விளங்கினார் தமிழ்ஒளி. நம் பழம் பிரதியான தொல்காப்பியம் குறித்து,

‘‘பண்டைய தமிழ்ச் சமூகத்தைப் படம் பிடித்துக்காட்டும் ஒப்புயர்வற்ற ஓவியச் சாலையாகத் திகழ்வது தொல்காப்பியம். அது மொழிக்கு இலக்கணம் இயம்ப வந்ததேயாகும். அம் மொழிதான் மக்கள் குழுவினரால் பயிலப்படுவததொன்றாம். அம்

மக்கட்குழுவினரும் வாழும் நிலத்திற்கேற்ப, வழக்காற்றிற்கேற்ப மொழிபவர் ஆதலாலே மொழியைக் கற்கப்புகும் ஒருவன் அம்மரபு பேசும் மக்களின் வாழ்க்கை முறைகளையும் கற்றறிய வேண்டும்'' என்கிறார். (தமிழ்ஒளி கட்டுரைகள்:பக்:15)

தொல்காப்பியப் பொருளதிகாரம் குறித்தும் அது பண்டைத் தமிழ்ச் சமூகம் மீது கட்டமைத்த வினைகள் குறித்தும் ஆய்வுப்பூர்வமாக விவாதிக்கிறார்.

தமிழ்க்கவிஞர்கள் குறித்த அவரது பார்வை மாறுபட்டது. கவிஞன் ஒரு குடிகாரன் எனும் தன் கட்டுரையில், ''நமது புலவர்கள் பலர் கவிதையைப் புகலிடமாகக் கொள்ளும் (Escapism) போதை வழி யில்தான் சென்றுவிட்டனர். இத்தகைய கஞ்சாக் கவிதைகளைச் சிருஷ்டிப்பது சமூகத்திற்கு நல்லதல்ல'' (தமிழ்ஒளி கட்டுரைகள் பக் 104) என்று வலியுறுத்துகிறார்.

அழகுணர்வுக்காகவும் வார்த்தை அலங்காரங்களுக்காகவும் எழுதப்படும் கவிதைகள் மீது காத்திரமான விமர்சனத்தை முன் வைக்கும் தமிழ்ஒளி ரசனைக்கு எதிரானவரல்லர், மாறாக ''கலை மக்களுக்காக'' எனும் மார்க்சியச் சித்தாந்தமுள்ளவர். இதனைத் தாம் எழுதிய வீராயி காவியத்தின் முன்னுரையில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

''தமிழ்நாடு இன்றைக்கு எதிர்பார்ப்பது வாழ்க்கையை வளப்படுத்தும் கலையைத்தான். கலை கலைக்காகவே என்று சொல்லும் கற்பனைச் சித்தாந்தை அல்ல. சிறுபிள்ளைகளிடம் பலூன்களை ஊதவிட்டு வேடிக்கை காட்டுவதைப் போல வெறும் உவமைப் பிதற்றலும் கனவுலக மாயாவாதக் கதைகளும் இன்றைய தமிழ்நாட்டை சாவுப்படுக்கையில் வீழ்த்தும் கொடிய தொத்து நோய்களைப் போன்றவை. நம் கண்ணெதிரே நம் உடன்பிறந்தவன் மாடாக உழைத்து ஓடாகத் தேய்ந்து போகிறான். அவன் குடும்பம் வறுமைப்படுகுழியில் வீழ்ந்து சிதறுகிறது. இதைக்கண்டு மனமிரங்காமல் மரத்துப்போன நெஞ்சுடன் உலாவும் மானிடப் பிண்டங்களின் உடலில் '' சுரீர் ! சுரீர் !!'' என்ற அடிக்கும்படி எழுதுவதுதான் உண்மை எழுத்தாளனின் கடமையும் நோக்கமும் ஆகும்'' (வீராயி முன்னுரை பக் 2)

மேற்கண்ட அவரது எழுத்தில் வழியும் தமிழ்ப் பெருங்குடி மீதான மானுடக் காதலை எளிமையாகப் புரிந்து கொள்ள முடியும். கவிஞன் எனும் தலைப்பிலான கவிதை ஒன்றில்..

**''ஊரை எழுப்பிடவே துயர்**

**ஒன்றை நொறுக்கிடவே**

**தாரை முழக்கிடுவேன் தமிழச்**

**சாதி விழித்திடவே!**

என்று உணர்வு மேலிடக் கூறுகிறார். தமிழர் உரிமைப் பொங்கல்

எனும் கவிதை ஒன்றில்

**“காடு கரம்புகள் கொத்தித் திருத்திக்**
**கழனிக ளாக்கியவர் அவர்**
**வீடு சிறப்புறப் பொங்குக பொங்கல்**
**விளைந்திட நல்லுரிமை?”**

என்று பாடுகிறார். தமிழரின் அடையாளங்களைப் பதிவு செய்வதில் அவர் எங்கும் தவறியதில்லை. தமிழில் சமசுகிருதச் சொற்கள் கலந்துள்ளமை பற்றிய தம் கட்டுரை ஒன்றில்.

‘‘கிராமங்களில் செல்லச் செல்ல தமிழ் விழுக்காடு மிகுதிப்படும். பட்டணங்களிற் செல்லச் செல்ல சமஸ்கிருதம் விழுக்காடு மிகுதிப்படும்‘‘ (தமிழும் சமஸ்கிருதமும் கட்டுரை பக் 4) என்ற மாறுபட்ட கருத்தை முன்வைக்கிறார். இதன்மூலம் மொழியை அதன் பாரம்பரியத்தைப் பாதுகாக்கும் தன்மையில் கிராமங்களே முன்நிற்கின்றன எனும் தமிழ்ஒளியின் ஆய்வியல் உண்மையை அறியலாம். தமிழர்கள் ஒற்றுமையுடன் விளங்கினால் மட்டும்தான் பேராபத்திலிருந்து தப்பிக்கமுடியும் என்ற கருத்தைத் தனது வடுகு எனும் மொழியாய்வுக் கட்டுரையில் குறிப்பிடுகிறார்.

‘‘ஒரு தேசிய இனத்தின் எப்பகுதியேனும் சிறிதோ, பெரிதோ ஒருமித்த உளப்பண்பு (Psychological Make-up) கொண்டிராவிடில் நாளடைவில் சிதறுண்டு விடும். தென்னகம் முழுவதுமான பெருநிலப்பரப்பில் வாழ்ந்த தமிழ் இனம் ஒருமித்த உளப்பண்பை இழந்த நிலையில் சிதறுண்டு இன்று வேங்கடத்திற்கு இப்பால் குறுகிக் கிடக்கிறது‘‘ (வடுகு கட்டுரை பக் 3) இதன்மூலம் ஒரு தேசிய இனமாகத் தமிழினம் தடுமாறும் சிக்கலை உள்வாங்கியுள்ள தன்மையைப் புரிந்து கொள்ளமுடியும். நிலப்பிரபுக்களைப் பார்த்து கேள்வி கேட்கும் விதமாகத் தாம் எழுதிய கவிதை ஒன்றில்,

**ஆறுசுவையோடு கறி**
**அத்தனையும் படைத்து**
**நூறு விருந்தோடு தொந்தி**
**நொந்திட உண்பதெல்லாம்**
**சேறு சகதியோடு வயல்**
**திட்டின் பனையடியில்**
**சோறல்ல, கூழ்குடிக்கும் ஏழை**
**சொட்டிய வேர்வையன்றோ!”**

என்று உணர்வு பொங்கப் பாடுகிறார். ஏற்கனவே நாம் குறிப்பிட்ட ‘‘கலை மக்களுக்காக‘‘ எனும் சிந்தனையியலுக்கு மேலும் ஓர் எடுத்துக்காட்டாக இக்கவிதையைச் சுட்ட முடியும். தஜகிஸ்தான்

கவிஞரான ரசூல் கம்சதோவ்,

“கவிதை என்பது பயணிகளுக்கு வழிகாட்டும் பட்டியல் அல்ல. மனிதனை அறிவதாகும். பூவுலகின் நிலவியல் நூல் அல்ல. மண்ணில் பிறக்கும் மனிதனின் தணியாத ஆர்வமுள்ள இதயத்தின் மன இயலைக் கூறுவதாகும்“ என்று தன் கவிதை தொகுப்புக்கான முன்னுரை ஒன்றில் குறிப்பிடுகிறார்.

**தமிழ்ச் சமூகக் காவியம் வீராயி**

ஒடுக்கப்பட்ட (பறையர்) இனமக்களின் காவியமாக வீராயியைப் படைத்தார் தமிழ்ஒளி. ஒரு பெருவெள்ளத்தில் சிக்கி மீண்ட சிறுமி வீராயி, பறையர் சமூகப் பெண்ணாவார். அவளை வீரண்ணன் எனும் சிறுவனின் குடும்பம் மீட்டு வளர்க்கிறது. வீரண்ணனும் வீராயியும் சகோதரத் தன்மையுடன் வளர்க்கப்படுகிறார்கள் . இருவரும் ஜமீன்தார் பண்ணையில் தினக்கூலிகளாக வேலை செய்கிறார்கள். பருவப் பெண்ணான வீராயியை ஜமீன்தார் பாலுறவுக்கு உள்ளாக்கி நாசப்படுத்துகிறார். தன் தங்கைக்கு நேர்ந்ததை அறிந்த வீரண்ணன் ஜமீன்தாரைக் கோடாரியால் வெட்டிக் கொன்று தூக்குத் தண்டனை பெறுகிறார். வீராயியும் அவள் தாத்தா மாரிக்கிழவரும் ஒரு கங்காணி மூலம் ஆப்ரிக்க நாட்டிற்கு அடிமைகளாகப் போகிறார்கள். அங்கு ஆனந்தன் என்பவனைக் காதலித்து மணம்புரிய முயலும்போது அவள் பறைச்சமூகத்தைச் சேர்ந்தவளாகையால் காதலர் இருவரும் எரித்துக்கொல்லப் படுகின்றனர். தமிழ்ச் சமூகத்தில் இன்றும் நிலவும் ஆணவக்கொலை குறித்த காவியத்தை 85 ஆண்டுகளுக்கு முன்பே தமிழ்ஒளி பதியவைத்துள்ளார்.

**“காதெல்லாம் கிழியும் வணம்**
**பறையடித்து விட்டான்**
**கவுண்டருக்கும் பறைச்சிக்கும்**
**கலியாணம் என்று!**
**எக்காளிப்புக் கொள்ளுதடா**
**பறையோசை எங்கும்**
**உதிர்கின்ற சாதிவெறி**
**மதவெறிகள் எல்லாம்**
**சுக்காகப் போயிற்று**
**பறையோசை ஓடிச்**
**சுதந்திரத்தைச் சொல்லியுமே**
**முழக்குதடா ஊரில்!”**

என்று முழங்குகிறார். தமிழர் இசைக்கருவியான பறை கொண்டு சாதீய எதிர்ப்பைத் தனது உக்கிரமான வரிகள்மூலம் காட்டுகிறார், தமிழ்ஒளி. தான் வாழும் வரை போராடியே மரித்த ஒரு கவிஞனாக,

ஆளுமையாக, மனிதனாக நம்முன் நிற்கிறார். மேதினம் பற்றிப் பாடிய முதல்கவிஞன் தமிழ்ஒளியே. அவர் குறித்த தனது மதீப்பிட்டைத் தோழர். ஆர் நல்லக்கண்ணு,

''பாரதியையும் பாரதிதாசனையும் போல் தமிழ்ஒளியும் கவிதையை வாழ்வாகக் கொண்டவர். வாழ்க்கையையும் கவிதையாகக் கொண்டவர். தனக்கென வேறு வாழ்க்கையை அமைத்துக்கொள்ளாதவர். கவிஞனாகவே வாழ்ந்து முடித்தவர்''. (தமிழ்ஒளி குறுநூல் பதிப்புரை) என்று மதிப்பிடுகிறார்.

தமிழ்ஒளியின் இறுதிக் காலத்தில் அவரோடு பயணித்தவர் அறிஞர் சஞ்சீவி.

''இத்தனை படைப்புகளுக்காகவும் தமிழ்ஒளி ஈட்டிய பொருட்செல்வம் போதுமானதாக இருந்ததா எனில் இல்லை என்பதே உண்மை. போதுமான அளவுக்குப் பொருள் ஈட்டாமலே வாழ்நாள் முழுவதும் விரக்தியுடன் வாழ்ந்தே மறைந்தவர் தமிழ்ஒளி'' (இந்திய இலக்கியச் சிற்பிகள் தமிழ் ஒளி பக் 41) என்கிறார், சஞ்சீவி அவர்கள்

மேற்கண்ட சஞ்சீவி அவர்களின் கருத்து அவர் தமிழ்ஒளியோடு பயணித்த அனுபவத்திலிருந்து உருவானது. எனவேதான் நாம் கட்டுரையின் தொடக்கத்தில் தமிழ்ஒளியைப் புதுமைப்பித்தனோடு ஒப்பிட்டோம்.

தான் வாழ்ந்த காலத்திலும் மறைந்த பின்பும் சரியாகக் கவனிக்கப்படாத மனிதனாகத் தமிழ்ஒளி இருந்திருக்கிறார். ஆனாலும் சமூகத்துக்காக மரித்தவர்கள் அச்சமூகத்தாலேயே வெளிக்கொணரப்படுவார்கள் என்ற வரலாற்று உண்மை தமிழ்ஒளிக்கும் பொருந்தும். ஏனெனில் அவர் தமிழ்ச் சமூகத்தில் பிறந்த மனிதன் மட்டுமல்ல. தமிழ்ச் சமூகத்துக்காவே வாழ்ந்த மனிதன். மரணித்த மனிதன்.

**பயன்பட்டவை**


*1. இந்திய இலக்கியச் சிற்பிகள் தமிழ்ஒளி செ.து. சஞ்சீவி மு.ப 2004 சாகித்ய அகாடமி வெளியீடு புது டெல்லி 1*

*2. தமிழர் சமுதாயம் மு.ப. 2006 கவிஞர் தமிழ் ஒளி புகழ் புத்தகாலயம் வெளியீடு, சென்னை 30*

*3. தமிழ்ஒளி கவிதைகள் புகழ் புத்தகாலயம் வெளியீடு, சென்னை 30*

*4. தமிழ்ஒளி கட்டுரைகள் மு.ப. 2009 பாரதி புத்தகாலயம் சென்னை 18*

*5. கவிஞர் தமிழ்ஒளி காவியங்கள் கவிஞர் தமிழ்ஒளி நூற்றாண்டு விழாக்குழு, மார்ச் 2010. சென்னை 01*


◆◆◆

# உங்கள் மனஓசை

உலகப் படிப்பினை , இந்திய நிலைமைகள் குறித்த ஆழமான பகுப்பாய்வுடன் எதிர்கால சோசலிசம் எவ்வாறு அமைய வேண்டும் என்பது பற்றிய நல்ல கட்டுரையாக அமைந்துள்ளது யமுனா ராஜேந்திரன் அவர்களது கட்டுரை.

ஒரே ஒரு சிறு விடுபடல் தேசிய இனச் சிக்கல் குறித்தும், இந்திய தேசியத்தின் நீட்சியாய் உருப்பெற்றிருக்கும் பாசிசம் பற்றியும் குறிப்பிட்டிருக்கலாம்.

**குமரன், மதுரை**

காலத்தின் தேவையறிந்து எழுதப்பட்டுள்ளது யமுனா அவர்களின் கட்டுரை.

இடதுசாரிகளுடன் இணைந்துவரக்கூடிய நேச சக்திகளுடன் கரம் கோர்க்காமல், தனித்து யாதொரு மாற்றமும் சாத்தியமில்லை என்ற புரிதலை நன்கு பதிய வைக்கும் பதிவு. விரிவான நூலாக வருவது சிறப்பு.

**ப.பா. ரமணி, கோவை.**

யமுனா ராஜேந்திரன் கட்டுரை, இன்றைய போக்கைச் சொல்வதாக இருந்தது எனக்குப் புதிய அனுபவம். உண்மையாகவே பலரும் அடுத்தகட்ட நடவடிக்கை அமைத்துக் கொள்வது எப்படி, பல்வேறு நாடுகளின் நிலமை என்ன என்று தெரிந்து கொள்வதற்கு இக்கட்டுரை பெரிதும் உதவியது.

யமுனா ராஜேந்திரன் தொடர்ந்து புதுமலரில் எழுத வேண்டும்.

**"நிழல்" அரசு, சென்னை**



**வழக்கறிஞர்**

**கே.கே. செல்ல பாண்டியன்.**

**புத்தக ஆர்வலரைப் பாராட்டுவோம்.**


கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரனார் பற்றி அறிஞர்கள் பலர் எழுதிய கட்டுரைகளைத் தொகுத்துப் **புலவர் துரை. மதிவாணன்** அவர்கள், **"செம்மாப்புத் தமிழர் சிதம்பரச் செம்மல்"** எனும் நூலை வெளியிட்டுள்ளார்.

துரை. மதிவாணன் அவர்களது தன்னலமற்ற பொதுப்பணிகளை அறிந்தவர் புதுக்கோட்டை வடக்கு மாவட்டத் திராவிட முன்னேற்றக் கழகச் செயலாளர் வழக்கறிஞர் கே.கே. செல்ல பாண்டியன் அவர்கள்.


வ உ சிதம்பரனார் பற்றிய நூல் வெளியிடப்படுவதை அறிந்த வழக்கறிஞர் செல்ல பாண்டியன் அவர்கள், புலவர் துரை. மதிவாணன் அவர்களைத் தமது வீட்டிற்கு அழைத்து, ரூபாய் 60,000 கொடுத்து வ.உ.சி. குறித்த நூல்களைப் பெற்றுக் கொண்டுள்ளார்.

புத்தகத்தின் மீதும், அதை வெளியிட்ட துரை. மதிவாணன் அவர்கள் மீதும் கொண்டுள்ள பெருமதிப்பின் காரணமாக ஒரே தருணத்தில் 200 நூல்களைப் பெற்றுக் கொண்ட புதுக்கோட்டை வடக்கு மாவட்ட தி.மு.கழகச் செயலாளர் வழக்கறிஞர் கே.கே. செல்ல பாண்டியன் அவர்களைப் **புதுமலர்** இதழ் பாராட்டி மகிழ்கிறது.

இப்படிப்பட்ட புத்தகப் புரவலர்கள் தமிழ்நாட்டில் பெருக வேண்டும்.



# புத்தகப் பேழை




தொகுப்பாசிரியர்கள்

முனைவர் இ. சுந்தரமூர்த்தி

சிகரம் ச. செந்தில்நாதன்.


பக்கங்கள் 294

விலை ரூ. 325.

வெளியீடு

கவிஞர் தமிழ்ஒளி
நூற்றாண்டு விழாக்குழு,
சென்னை.

94440 82180..




தொகுப்பு
துரை. மதிவாணன்
பக்கங்கள் 304
விலை ரூ.300.
பூஞ்சோலைப் பதிப்பகம்
புதுக்கோட்டை.
98420 37480, 94864 02984.

## இதழுக்கு ஆதரவு நல்கியோருக்கு நன்றி

| திருவாளர்கள் | உருபா |
|---|---|
| பொன். சந்திரன்,<br>கோவை | 2,000 |
| ஜான் வின்செண்ட்<br>மதுரை | 2,000 |
| பொன்முடி சுப்பையன்<br>கண்ணம்பாளையம், கோவை | 2,000 |

# புதுமலர் இதழ் கிடைக்கும் இடங்கள்

| | |
|---|---|
| பாரதி புத்தகாலயம்,<br>சென்னை. | 72995 79627 |
| ஈரோடு. | 92454 48353 |
| டிஸ்கவரி புக் பேலஸ்<br>சென்னை. | 87545 07070 |
| பனுவல் புத்தக நிலையம்<br>சென்னை. | 97890 09666 |
| விஜயா பதிப்பகம்<br>கோவை. | 90470 87058 |
| என் சி பி ஹெச்<br>மதுரை. | 94430 44106 |
| திருச்சி | 94425 88495 |
| கோவை. | 94427 64286 |
| ஈரோடு. | 90475 71857 |
| எதிர் வெளியீடு<br>பொள்ளாச்சி | 98650 05084 |
| பாலம் புத்தக நிலையம்<br>சேலம் | 94432 22007 |
| நூல் அங்காடி<br>மதுரை | 74021 09000 |

❖❖❖